


University of Jaffna
954.9302
LOK
246021(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லே வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லே —நல்லதிரு
கோணமலே கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டார வன்னியன்

# விழா மலர்

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

954.9302
LOK

ஆசிரியர் :

கே. சி. லோகேஸ்வரன் S. L. A. S.
அரசாங்க அதிபர், வவுனியா.

AR

ARCHIVES

வெளியீடு :

வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை,
வவுனியா.

246021

1982 ஆடி

246021

University of Jaffna
246021
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் நிலைத்த நீறும்,
நீள்கரம் பிடித்த வாளும்,
வெற்றியைக் குறித்த நோக்கும்,
வீரத்தை விளைத்த நெஞ்சும்,
உற்றவெம் பகையை வென்று
உயர்கொடி யுடன், அடங்காப்
பற்றினை ஆண்ட வீரப்
பண்டார வன்னித் தோற்றம்.

தோற்றலும் வெற்றிப் பாதை
தொடர்வதும் உலக நீதி.
ஆற்றலும் புகழும் பண்பும்
அவனியில் நிலைத்து நிற்கும்.
காற்றிலா விடினும் வாழ்வோங்
கனவிலும் அடிமைத் தாழ்வை
ஏற்றிடோம் எனப்போர் செய்த
ஏந்தல் பண்டார வன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை பூமியாம் அடங்காப்பற்றின் விண்ணுயர் தலைவன் பண்டாரவன்னியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய சாம்
ராச்சியத்தை எதிர்த்துப்
போரிட்ட ஈழத்தின் கடைசித்
தமிழ் இராச்சியம் வன்னி இராச்சிய
மாகும். அடங்காப்பற்று எனப் பெயர்
கொண்டிருந்த வன்னி இராச்சியத்தை அரசாண்டு
அந்நியரை எதிர்த்துப் போர்செய்த பண்டார வன்னியன்
என்னும் மன்னனே வன்னியின் கடைசி மன்னனாவான். அம்
மாவீர அரசன் பற்றியும், அவன் அரசாண்ட வன்னி இராச்
சியம் பற்றியும், திருப்திகரமான ஆய்வுகள் இதுவரையில் நிகழ்த்
தப்படவில்லை என்பது, மிகவும் வேதனைக்குரிய உண்மையாகும்.

வன்னி பற்றியும், பண்டார வன்னியன் பற்றியும், ஆய்வு
களை மேற்கொள்ள இருக்கும் ஆய்வாளர்களுக்கும், "வெற்றி
இன்றேல் வீர மரணம்" எனத் தன்மானப் போர் புரிந்த
அம்மாவீரன் பண்டார வன்னியனின் வீரத்தையும்,
தன்மான இலட்சியத்தையும், பேணி முன்
னெடுத்துச் செல்ல இருக்கின்ற, இளஞ்
சந்ததிகளுக்கும் இம்மலர் . . . .

# சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. J. P. LEWIS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Prime Minister of Sri Lanka*

To give honour where honour is due is a moral imperative. It is the duty of all of us to pay tribute to the memory of those who have laboured and fought for our country. We have recognised, in a worthy manner, the long line of patriots who have worked for the political independence of our country. But for those who fought against the subjection of the country in the early years of British rule recognition has come but tardily.

The gallant rebellion led by Keppetipola Dissawa has been of course, recognised from the earliest days. For Puran Appu recognition and fame have come only recently. And now the people of the Wanni have come together to honour a former local Chieftain who is equally worthy of honour.

I am sure the decision to erect a statue in honour of the hero Pandara Vanniam is a correct one. His memory still lingers in song and story in the hearts of the people of the Wanni and this commemorative volume should help to foster and cherish it still further.

PRIME MINISTER

6th July, 1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ பிரதம மந்திரி அவர்களின்

# ஆசிச் செய்தியின் தமிழாக்கம்

கௌரவிக்க வேண்டியவர்களைக் கௌரவிப்பது தார்மீக ஒழுக்க நெறியாகும். எமது நாட்டிற்காக அயராது உழைத்த பெரியார்களை நினைவு கூர்வது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும். எமது நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்காக உழைத்த தேசாபிமானிகள் அனைவரையும் தகுந்த முறையில் நினைவு கூர்ந்து வந்துள்ளோம். ஆனால் பிரித்தானிய ஆட்சியாளர்களின் ஆரம்ப காலத்தில் அவர்களது ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்களைக் கௌரவிப்பது கால தாமதமாகவே நடைபெற்றது.

கெப்பட்டிப்பொல திசாவ அவர்களின் தலைமையில் நடாத்திய போராட்டம் ஆரம்ப காலத்திலிருந்தே நினைவு கூரப்பட்டு வந்துள்ளது. புரான் அப்பு அவர்கள் புகழை நினைவு கூர்வது சமீப காலத்திலேயேற்பட்டது. இவர்களுக்குச் சரிநிகராக கௌரவிக்கப்பட வேண்டிய பிரதேச தலைவரை வன்னி மக்கள் ஒன்றிணைந்து கௌரவிக்க இன்று முன்வந்துள்ளார்கள்

மாவீரன் பண்டாரவன்னியனைக் கௌரவிக்க சிலை எடுக்கும் தீர்மானம் முற்றிலும் சரியான செயல் என்பதை நான் அறுதியாகக் கூறுகிறேன். இன்னும் பண்டாரவன்னியன் வன்னி மக்களின் இதயங்களில் இசையாகவும், கதையாகவும் வாழ்ந்து வருகிறான். அன்னாரின் இனிய நினைவுகளை மக்கள் மேலும் பேணுவதற்கும், போற்றுவதற்கும் இந்த ஞாபகார்த்த மலர் உதவும்.

பிரதம மந்திரி,
**ஆர். பிரேமதாசா**

6, ஜூலை 1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி முதல்வரின் ஆசிச்செய்தி

பாராளுமன்றம்,
கோட்டே,
10-7-1982.

**வ**ன்னிமா நகரில் மாவீரன் பண்டாரவன்னியனுக்கு சிலை எடுத்து முத்தமிழ் விழா கொண்டாடும் வேளையில் அதனையொட்டி வெளியிடவிருக்கும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மனம் மிக மகிழ்கிறேன்.

ஆங்கிலேயரின் படையெடுப்பினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் தங்கள் இறைமைகளை இழந்தபோதும், இறுதிவரை தமது ஆட்சிக்குட்பட்ட மக்களின் இறைமையை நிலைநாட்ட முழுமூச்சாக நின்று போராடியவன் வன்னியின் கடைசி மன்னன் மாவீரன் பண்டார வன்னியன். அவனது வீழ்ச்சிக்கு ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு மட்டுமல்ல, கூடப் பிறந்தே கொல்லும் வியாதிபோல் விளங்கிய காக்கை வன்னியனால் காட்டிக்கொடுக்கப்பட்ட இழிசெயலும், முக்கிய காரணமாக இருந்தது.

தமிழும் சைவமும் சிறப்புற்று விளங்கிய இம் மன்னன் காலத்தில், நெல்வளம் நிறைந்திருந்தது. நல்லாட்சி கண்ட வன்னி வளநாட்டில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயமும், முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலும் மன்னன் வழிபடுதலமாக சிறப்புற விளங்கியன. பண்டாரி குளம் மறைந்த மாவீரனின் நாமத்தை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறது.

பல சிறப்புக்களுடனும் வாழ்ந்து வீர சுவர்க்கம் அடைந்த இம் மாவீரனுக்கு வன்னியில் சிலை எடுப்பது சாலவும் சிறந்த நற்பணி. அவனது சிலை திறப்பு விழாவுடன் முத்தமிழ் விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. இப் பெரு முயற்சியில் ஈடுபாடுகொண்டு விழா சிறப்புற அமைய உழைக்கும் அமைப்பாளர்கள் பணி மெச்சத்தக்கது.

மாவீரன் பண்டாரவன்னியன் சிலைத் திறப்புவிழா சிறப்புற அமையவும், முத்தமிழ் விழா வெற்றிபெறவும், உள நிறைவுடன் வாழ்த்துகிறேன்.

**அ. அமிர்தலிங்கம்**
எதிர்க் கட்சி முதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின்

# ஆசிச் செய்தி

**வ**ன்னி நாடாகிய அடங்காப்பற்றின் மாளங்காக்க அந்நியருடன் இறுதிமூச்சுவரை போராடிய மாவீரன் பண்டாரவன்னியன். மக்கள் நலனை மனதிற்கொண்டு தேசப்பற்றுடன் ஆண்டவன் அவன். ஆங்கிலப் படைத் தளபதி வொண்டிறிபேக் தன் புகழை நிலைநாட்டக் கற்சிலைமடுவில் பண்டாரவன்னியனுக்கு நினைவுச்சிலை அமைத்தான். அவனின் வீரத்தைப் பறைசாற்ற வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபையினர் வவனியாவிற் சிலை எழுப்புகின்றனர்.

வன்னிப் பிரதேசத்து மக்களுக்கு மட்டுமன்றி, நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் ஈழத்துத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும், தேசப் பற்றும், உரிமைக் குரலும் ஓங்க இச் சிலை அமையும் என எதிர்பார்க்கலாம். நல்ல தலைவர்களை மக்கள் விரும்பவும், இனங்கண்டுகொள்ளவும், நல்ல தலைவர்கள் தோன்றவும் இச்சிலை வழிவகுப்பதாக.

பண்டாரவன்னியன் விழா சிறப்பாக அமைய எமது வாழ்த்துக்கள்.

பேராசிரியர்
**கலாநிதி சு. வித்தியானந்தன்,**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர்

கலைஞர் கருணாநிதியின்

# ஆசிச் செய்தி

தமிழகத்தில் எந்த அளவிற்கு வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்துப் போராடி தன் உயிரைத் தியாகம் செய்தானோ — அதைப்போலவே இலங்கை வன்னிநாட்டில் "உண்டேல் சுதந்திரம்; இன்றேல் இல்லை வாழ்வு!" என்ற கோஷத்தை முன்வைத்துத் தன் இறுதி மூச்சுவரை போராடி உயிர்விட்ட தியாகி—மாவீரன் பண்டாரவன்னியனுக்கு வவுனியா நகரில் சிலை எடுத்து—அதனையொட்டி முத்தமிழ் விழா ஒன்றினையும் வரும் ஆடித்திங்கள் 16, 17, 18 ஆகிய தேதிகளில் கொண்டாட அருமை நண்பர், பாராளுமன்ற உறுப்பினர் தா. சிவசிதம்பரம் உள்ளிட்ட குழுவினர் முடிவுசெய்து—அதனையொட்டி விழாமலர் ஒன்றினையும் வெளியிடவிருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தியாகத்திற்கு நிகழ்காலம் உரிய மதிப்பு தரத் தவறினாலும் எதிர்காலம் நிச்சயம் மதிப்புத்தந்தேதீரும் என்பதற்கு அடையாளமாக இச் சிலை திறப்புவிழா நடைபெறுவது போற்றுதற்குரியதாகும்.

விழா சிறப்புடன் நடைபெறவும், வெளியிடப்படும் மலர் நல்ல பல கருத்துக்களைத் தாங்கி வெளிவரவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

மு. கருணாநிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர்

## திரு. க. இராசாராம் அவர்களின்

# ஆசிச் செய்தி

அன்புடையீர்,

மாவீரன் பண்டாரவன்னியன் சிலைத் திறப்பு விழாவும், முத்தமிழ் விழாவும் வரும் ஜூலைத் திங்களில் வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட இருப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். இவ்விழாவினை யொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பட இருப்பது கேட்டு மகிழ்ச்சி யடைகிறேன். விழா சிறப்புடன் நடைபெற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள்,

க. இராசாராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரின்

# ஆசிச் செய்தி

வன்னியின் மானங்காத்த மாவீரன் பண்டாரவன்னியனுக்குச் சிலை எடுக்க வவுனியாமாவட்ட அபிவிருத்திச்சபை தீர்மானித்த செய்தி கேட்டே மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அந்தக் கனவு நனவாகும் இந்தநாளில் எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. உண்மைக்குப் புறம்பான வரலாற்று ஆதாரமற்ற சரித்திரங்களை ஒரு சாரார் கட்டியெழுப்ப, புனைகதை எல்லாம் சரித்திரமாக மாறிவரும் இக்காலகட்டத்திலே சரித்திரரீதியாக தன் பகுதியின் இறைமையையும் சுதந்திரத்தையும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு பறிகொடுக்காது உயிருள்ளவரை அப் பகுதியின் சுதந்திரத்திற்காகப் போராடிய ஒரு மாவீரனை அப்பகுதி மக்கள் நினைவில்கொண்டு அந்தச் சுதந்திர வீரனுக்குரிய இடத்தைக் கொடுத்து அப் பகுதியின் தன்னிகரில்லாத் தலைவனாக ஏற்றிப் போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும்,

ஆயுதத்தால் ஆட்பெலத்தால் வலிமை குறைந்தவனாக இருந்தாலும், வெள்ளையரை எதிர்த்துச் சமர்புரியும் வசதிகள் அற்றவனாக இருந்தாலும், இறுதிப் போரைத் தவிர்ந்த ஏனைய சமர்களிலே அவர்களைப் புறமுதுகிட்டு ஓடவைத்தது பண்டாரவன்னியனின் உடல் வலிமையல்ல, உள்ளத்தின் உறுதியே. உரிமைக்காகப் போராடும்போதுதான் வீரத்தின் அழகு தெரியும். இதெல்லாம் கண்கூடாகக்கண்டு நிற்கின்ற புண்ணிய பூமியிலே எடுக்கப்படும் விழா பெருவிழாவாக அமையவேண்டுமென்றும், ஆண்டுதோறும் சிறப்பாக எடுக்கப்படவேண்டுமென்பதும் என் ஆசை.

ஏகாதிபத்தியம் எதுவாக இருந்தாலும் அந்த ஏகாதிபத்தியம் ஒரு இனத்தின் இறைமையைப் பறிக்க முற்படும்போது அந்த இனம் விறுகொண்டு எழுந்து தனது உரிமைக்காகப் போராடும் என்பதை பண்டாரவன்னியன்வாழ்க்கை எமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. பண்டாரவன்னியன் வாழ்ந்த மண்ணிலே அவனின வாரிசுகளாக வாழ்ந்துவரும் மக்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் சுதந்திர தாகம் கொண்ட மக்களாக, தங்கள் அரசியல் உணர்வை வெளிப்படுதியதை இச் சந்தர்ப்பத்திலே குறிப்பிடுவதில் நான் பெருமையடைகிறேன். இன்று அளிக்கப்படும் கௌரவம் மாவீரன் பண்டாரவன்னியனுக்குத்தான் உடையதல்ல. இன்று கௌரவிக்கப்படுவது அவனுடைய இலட்சியமும், சுதந்திர வேட்கையும்தான். அந்தப் பாதையை இன்றுவரை கடைப்பிடித்துவரும் அப்பகுதி மக்கள் எடுக்கும் இச்சிலைத் திறப்புவிழா வெற்றிகரமாக அமையவேண்டுமென்றும், பண்டாரவன்னியன் நாமமும், அப்பகுதி மக்கள் அவர்மேற்கொண்ட பாசத்தால் எடுத்த சிலையும் காலத்தால் அழியாததாக இருக்கவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

மு. சிவசிதம்பரம்

*பாராளுமன்ற உறுப்பினர், நல்லூர்.*

*தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர்

குமரி அனந்தன் அவர்களின்

# ஆசிச்செய்தி

பண்பாட்டுச் சுரங்கமாகத் திகழும் பண்ணுர்ந்த, தமிழ் இலக்கியத்தில் ஏற்றமிகு இடத்தைப் பெறும் வரலாற்று நாயகன், பண்டார வன்னியனுக்குச் சிலைஎடுக்கும் பெருமக்களைப் போற்றுதல் தமிழை மொழியாகக் கொண்ட அனைவரதும் தலையாய கடமையாகும்.

வீரஞ்செறிந்த பண்டார வன்னியனின் சீர்மிகு வாழ்க்கையினை எண்ணும் போதெல்லாம்! தமிழர் நெஞ்சம் கிளர்ந்து எழும்; சிறுமை கண்டு சீறி எழும்!

'' உன்னைத் தமிழனகப் பெற்றுள்<br>ஊட்டி வளர்த்த முலைப்பால் எங்கடா ?<br>தென்னைக் குலைகள் என்னப் பகைவர்<br>சென்னிதிருகடா ! செருவில் எழுகவே !

என்ற உணர்வோடு உயர் தமிழர் உயர்வு பெறவே எழுமாறு சிலை எழும்பி நிற்கட்டும்.

ஊனில், உணர்வில் உயிரில் ஊறிநிற்கும் எந்தாய்மொழி எங்கெல்லாம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் துடித்தோடி நிற்கிறது எம் இதயத்துடிப்பு ! அதுவன்றோ பாசப் பிணைப்பு !

மதத்தால், பணத்தால், ஒன்றுபடமுடியாது, மனமயக்கும் மதுரத்தமிழ் மொழியால் ஒன்றுபடலாம் !

குன்றன்ன புகழ் நமக்குண்டு அந்தக்காலத்தில் என்று சொல்வதோடு அமையாது எந்தக்காலத்தும் எம் தமிழ்மொழி வளர்ப்போம்; எமக்கீடு இணையில்லையென இறுமாந்து நிற்கும் நிலை காண்போம், எனச் சூளுரைத்துப் புறப்படுவோம்.

தமிழ் மகனே ! பார்...........

தங்கத் தமிழுக்கு நம் உயிரின்......... உணர்வான குருதித் தொடர்பால் உறவெணக்கொண்ட நம்மவர்கள் எடுக்கும் விழாவினைப் பார்......

வாழ்த்து.........!

ஆம் வாழ்த்து ! வையகமெங்கும் வாழும் தமிழரே ! வாழ்த்துவீர் !

அன்புடன்<br>குமரி அனந்தன்.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.<br>தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின்

# ஆசிச் செய்தி

உலகிலேயுள்ள ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் சரித்திரம் ஒன்று உண்டு. நாடு, பிரதேசங்கள், பண்டைப்பழம் பெரும் சரித்திரத்தைக் கொண்டவை.

வன்னி வள நாட்டிற்கு தனிச் சிறப்பை வன்னியர் ஆட்சிக் காலம் தருகின்றது. இப் பிரதேசத்திற்குரிய "அடங்காப்பற்று" என்ற சிறப்புப் பெயர் 1803ஆம் ஆண்டையும் அதற்குமுன் உள்ள குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தையும் சிந்திக்கவைக்கின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆக்கிரமிப்புக்காலம் எம் மனக்கண் முன் தோன்றுகின்றது.

கண்டிராட்சியம், கோட்டைராட்சியம், யாழ்ப்பாணராட்சியம் அந்நிய ஆக்கிரமிப்பினுல் அசைந்ததின் பின்பும், ஆண்டுபல அந்நியனுக்கு அடிமைப்படாது சுதந்திரப் போரிட்ட சிற்றரசர்களில் தேசிய மாவீரன் பண்டாரவன்னியன் குறிப்பிட்ட ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிருன். யாழ் பரவு கடல் தொடங்கி — அருவியாறுவரை, திருமலை தொடங்கி — மன்னுர்வரை அந்நியனுக்கு அடங்காது 1803ஆம் ஆண்டுவரை ஆக்கிரமிப்புக்கள் அத்தனையும் எதிர்த்து "அடங்காப்பற்ருக" சுதந்திரத்துடன் நிலைத்திருக்கின்றது.

இனத்தின் சுதந்திரத்திற்காக, இறுதி மூச்சுவரை போராடி தன்னுயிரையே நீத்த தலைவனுக்கு சிலைஎடுக்க வன்னிவள நாடு இத்தனை காலமும் தாமதித்துவிட்டது. வன்னிவள நாட்டின் சரித்திரத்தை துருவி ஆராய்ந்து உரிய ஆராட்சி நூல் படைக்க ஆராட்சியாளர்களும், சிந்தனையாளர்களும், இன்னும் முனையவில்லை.

தேசிய மாவீரன் பண்டாரவன்னியன் வாள்க்கொடி வவுனியா மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடியானதும் — வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபையின் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினை தேசிய வீரனின் உருவத்தைப் பிரதிபிம்பிப்பதும் — வவுனியாக் கச்சேரி முன்றலிலே தேசிய மாவீரனுக்குச் சிலை எடுப்பதும் தொடர்ந்து மூன்று தினங்கள் முத்தமிழ் விழா சிறப்புற நடாத்துவதும், சரித்திர விழிப்புணர்ச்சியை, சுதந்திர வேட்கையை, இலட்சிய ஒற்றுமையை, தியாகசிந்தையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

தா. சிவசிதம்பரம்,
பா. உ. வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு (காமராஜ்) காங்கிரஸ் தலைவர் அவர்களின்

# ஆசிச் செய்தி

'' தாய்த் தமிழகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனும், வீரமருது சகோதரர்களும், வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டிய அதேவேளையில், சேய்த் தமிழகமாம் ஈழநாட்டில் பேராற்றல் படைத்த பெருவீரன் பண்டாரவன்னியன் போர்க் கொடி உயர்த்தினன். அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்தான் என் பது வியப்பளிக்கும் செய்தியாகும்.

தமிழன் மானங்காத்த மாவீரன் பண்டாரவன்னியனுக்குச் சிலை எடுப்பது கண்டு மகிழ்கிறேன். அந்த வீரனின் வழித்தோன்ற லான கெழுதகை நண்பர் திரு. தா. சிவசிதம்பரம் முன்னின்று நடத்தும் சிலைத் திறப்புவிழா சீரோடும் சிறப்போடும் நடைபெற வாழ்த்துகிறேன்.

ப. நெடுமாறன் M. A., M. L. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் பாராளுமன்ற உறுப்பினரின்

# ஆசிச் செய்தி

பாரதமெங்கும் சுதந்திரக்கனலைச் சுடர்விட்டெரிய வைத்த பாரதிக்கு ஒரு தமிழன் அகிலத்தில் எங்குளனே அங்கெல்லாம் நூற்றாண்டு விழாவெடுத்து மகிழ்கின்றனர். வீரசுதந்திரம் வேண்டிநின்ற அந்த மகாகவியை ஏற்றிப் போற்றுகின்றனர். "தொண்டுசெய்யும் அடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச் சொல்லுவேன், குத்திக் கொல்லுவேன்" என்று ஆங்காரமாய் உரைத்த ஆங்கிலேயனுக்கு "சதையைத் துண்டுதுண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ ? ஜீவன் ஓயுமோ ?" என்று சூளுரைத்தவன் பாரதி.

பாரதி பாட்டாலே சூளுரைக்குமுன் ஆணவம் பிடித்த ஆங்கிலேயனுக்கு வன்னிநாட்டிலே வாளாலே சூளுரைத்தவன் பண்டாரவன்னியன். பாரதிக்கு விழா வெடுக்கும் வேளையிலே மாவீரன் பண்டாரவன்னியனுக்கு விழாவெடுப்பதும் மலர் தொடுபபதும் சாலவும் பொருத்தமானதே. அடங்காத் தமிழனாக வளங்கொழிக்கும் வன்னிப்பகுதியின் காவலனாய் அதன் சுதந்திரத்தைக் கட்டிக்காத்துக் கடைசித் துளி இரத்தம்வரை ஆங்கிலேயனை எதிர்த்துப் போராடி வீரசொர்க்கம் அடைந்தவன் பண்டாரவன்னியன்.

தமிழ் ஈழம் காணத் துடிக்கின்ற தமிழ் இனம், துடிப்பை மென்மேலும் தூண்டிவிட உதவுவது வீரவணக்கம். பண்டாரவன்னியனின் வீரம், ஒவ்வொரு தமிழனதும் நாடி நரம்புகளிலும் பெருக்கெடுத்தோடவேண்டும். ஓடும் அவ்வேகத்தில் சூழ்ச்சி, சுயநலம், பதவிமோகம் என்பன அகன்று, ஒற்றுமை, ஒற்றுமை என்ற நாதம் இசைக்கவேண்டும்.

செயற்கரிய இப்பெரும்பணியை முன்னின்று நடத்தும் தங்கள் பணிசிறக்க என் மனமார்ந்த நல்லாசி உரித்தாகுக.

வாழ்க வன்னி வளநாடு ! வாழ்க பண்டாரவன்னியன் !!

வளர்க எம் ஒற்றுமை.

**பி. சோ. சூசைதாசன்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பா நிலவின்
# ஆசிச்செய்தி

ஆண்டவர் நகர்
சென்னை.

## வன்னியன் வாழ்த்து

அந்நியர்கள் நாட்டில் அடிவைத்த காலத்தில்
வன்னியர் களேஎங்கும் வாளேந்தி — முன்நின்ருர்
பெற்றதாய் நாட்டைப் பிறர்க்கடிமை ஆக்காமல்
உற்றதாய்க் கீர்ந்தார் உவப்பு.

உண் ணிஎன ஒல்லாந்தர் உட்புக, பண்டார
வன்னியனே சிரிலங்கை வாழ்வோங்க — எண்ணிஞன்
வந்தேறி கட்டெல்லாம் வாட்படை காட்டிஞன்
முந்தேறி ஞன்வெற்றி முன்.

விழாதிருக்க வேண்டி வவுனியா வீரன்
தொழாதிருந்தான் மாற்றலர் தோளே — விழாஎடுப்பின்
பண்டார வன்னியன்போல் பண்டைத் தமிழ்வீரம்
கொண்டாட வேண்டும் கொடுத்து.

எவன் எடுத்தான் எந்தமிழ் வீரன் விழாவை?
சிவசிதம்ப ரன்தான் சிலிர்த்தான் — உவந்தான்
அவனருமை வாழ்த்தி அவன்பெருமை நூக்கி
உவகையுறும் மக்கள் உளம்.

கலாநிதி. த. கோவேந்தன்.
(தமிழ்ப்பா நிலவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை பா. உ. இன்
# ஆசிச்செய்தி

எம் நாட்டுமக்களின் இறைமையைக் காப்பதற்காகப் போராடி, உயர்ந்த மாவீரன் பண்டார வன்னியனுக்கு சிலையெடுப்பது, இன்றைய நிலையில் மிகவும் பொருந்தமானதும்அவசியமானதுமாகும்.

ஈழத்தின் பல மன்னர்களும், ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட பின்பும், தனித்துநின்று இறைமைகாக்கும் புனிதப்பணியில் தன் வாழ்வை முடித்துக்கொண்ட மாவீரன் பண்டாரவன்னியனின் விடுதலை வீறுகொண்ட வாழ்க்கைபற்றி இன்றைய தலைமுறையும், நாளைய தலைமுறையும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமே.

தமிழாட்சிகாக்க தனித்துநின்று போரிட்டு தன்னுயிரையிழந்தாலும் – தன்னகத்து விடுதலையுணர்வை மக்கள் மனதில் விதைத்தும், வளரவும், வழிசெய்த மாவீரன் பண்டார வன்னியனின் சாதனை விடுதலை விரும்பிகளை விழிப்புறச் செய்யவும், செயற்படவும், அடிநாதமாக இருப்பதை மறக்கமுடியாது, அந்நியராட்சியில் அவனது வீரவரலாறு மூடிமறைக்கப் பட்டாலும், அவனது வீரவரலாறும், சாதனைகளும், பாட்டாக, பாட்டிக்கதையாக, கூத்தாக இன்றும் மக்கள் மனதில் நிறைந்திருப்பதை நோக்குங்கால், அவனது அஞ்சாமை, அரசுடமை, விடுதலை வேட்கை எத்தகைய மேம்பாடுடையதாயிருந்திருக்கும் என்பதை உணரலாம்.

அத்தகைய விடுதலை வீரனுக்கு சிலை சமைப்பதும், விழா எடுப்பதும், அவன் விட்டுச்சென்ற விடுதலையுணர்வை மேலும் மெருகூட்டி வளர்ப்பதற்கு வழிசமைக்கும்.

இத்தகைய வீரனுக்கு சிலையெடுக்கும், விழாக்காணும், வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் நண்பன் திரு. தா. சிவசிதம்பரத்திற்கும், வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபையினருக்கும் என் வாழ்த்துக்கள்.

வன்னி வீரன் பண்டாரவன்னியன் சிலை வவுனியாவில் கொலுவுற்றுலும் அவனது விடுதலை நாதம் திக்கெட்டும் ஒலிக்கிறது.

மாவீரன் கண்ட, காட்டிய விடுதலை வழியில்
நாம் மறுமலர்ச்சி காண்போம்.

இரா. சம்பந்தன்
பாராளுமன்ற உறுப்பினர். திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு பாராளுமன்ற உறுப்பினரின்

# ஆசிச் செய்தி

வன்னி நாட்டின் கடைசி மன்னன் மாவீரன் பண்டாரவன்னி யனுக்கு வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை அலுவலக முன்ற லில் சிலை நிறுவுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

1803 ஆம் ஆண்டு ஆவணி 25ந் திகதி முல்லைத்தீவுக் கோட் டையில் இருந்த ஆங்கிலேய படை வீரர்களை அடித்துத் துரத்தி, முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றிய பண்டார வன்னியனை ஆங்கிலேயர் மீண்டும் மும்முனைத்தாக்கல் செய்து எட்டப்பர்களின் உதவியுடன் அவரை 1803 ஆம் ஆண்டு ஐப்பசி 31ந் திகதி கற்சிலை மடுவில் தோற்கடித்த போதிலும் மாவீரன் அவர்கள் கையில் அகப் படவில்லை.

அக்காலத்து ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அறிக்கையில்இருந்து பண்டாரவன்னியன் தொடர்ந்து 6, 7 வருடங்களாக கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் இருந்து ஆங்கிலேய ஆட்சியாளருக்கு அடிக்கடி எதிர்ப்புக்காட்டி வந்திருக்கிறுன். ஆன காரணத்தினுல் கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் இருக்கும் வவுனியா நகரில் பண்டார வன்னியன் சிலை நிறுவுவது மிகப் பொருத்தமாகின்றது.

அதே நேரத்தில் பண்டார வன்னியனுக்கு 150 வருடங்களுக்கு முன்னர் பனங்காமத்தை தலைநகராகக் கொண்டு மேற்கு வன்னியை ஆண்டு வந்த கயிலை வன்னியனையும் நாம் நினைவு கூர வேண்டியி ருக்கிறது. 12 ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பகுதியை ஆண்டு வந்த ஒல்லாந்தருக்கு தலைகவிழாது, திறைகொடாது, அவர்களை எதிர்த்து சுயேச்சை ஆட்சி நடாத்தி வந்த இவரும் ஈற்றில் எட்டப்பர்களின் நயவஞ்சகத்தினுல் மடிய ஏற்பட்டது. இவ்விரு தலைவர்களின் முடி விலிருந்து வன்னி நாட்டு மக்கள் எவ்விடயத்திலும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

முன்னுள் பா. உ. வவுனியா | சே. மா. செல்லத்தம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரின்

# ஆசிச் செய்தி

வவுனியா நகரில் மாவீரன் பண்டாரவன்னியனுக்குச் சிலை யெழுப்பிப் பெருவிழாக் கொண்டாடுவதை எண்ணும் போது உள்ளம் பூரிக்கிறது. ஆங்கிலேய ஆட்சியாளருக்கு அடிபணியாது சுதந்திர வீரனாக, அடங்காப்பற்றின் தனிப் பெருந் தலைவனாக, வீர மன்னனாக வாழ்ந்தவன் பண்டார வன்னியன். அம் மாபெரும் மன்னனைத் தோற்கடித்ததை, தமது பெருமைக்குச் சான்றாக கல்வெட்டில் பதித்தனர் ஆங்கிலேயர். வொன்றிபேக் என்ற ஆங்கிலப் படைகளின் கப்ரின் பண்டார வன்னியனைக் கற்சிலை மடு என்னும் இடத்தில் தோற்கடித்ததாக கற்சிலை மடுவில் அமைந்திருக்கும் நடுகல்லு இன்றும் சான்று பகருகின்றது.

ஆங்கிலேயரை எதிர்த்து அடிபணிய மறுத்துத் தனிராச்சியமாக வாழ்ந்த பண்டாரவன்னியனை தேசிய வீரனாக எல்லோரும் போற்ற வேண்டும் என்பது எனது பேரவா. அந்தப் பணியை ஊக்குவிக்கும் முகமாக வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை பண்டாரவன்னியனுக்குச் சிலை நிறுவுவது பாராட்டத்தக்க செயற்பாடாகும்.

பண்டார வன்னியனைப் பற்றியும், வன்னி இராச்சியம் பற்றியும், தகவல்களைத்தர இருக்கின்ற விழாமலருக்கு ஆசிச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்வு கொள்வதோடு, அம்மன்னன் கட்டிக்காத்த ஒற்றுமை, நேர்மை, தன்மானம் என்பவற்றை இன்றைய, இனிவரப் போகின்ற சந்ததிகளும் கட்டிக்காக்க வேண்டுமென்று ஆசை கொள்கின்றேன்.

**வி. ஆனந்தசங்கரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர பிதாவின் நல்லாசிகள்

அந்நியரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து, போராடி, கண்டி இராச்சியமும், கோட்டை இராச்சியமும், யாழ்ப்பாண இராச்சியமும் வீழ்ந்ததன் பின்பும், வன்னி மண்ணிற்காக, மக்களுக்காக, தன் மானத்திற்காக, சுதந்திரத்திற்காக, ஆண்டுபல அந்நியரை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த தியாகச் செம்மல் மாவீரன் பண்டாரவன்னியனின் வழித் தோன்றல்கள் நாம் என எண்ணும்போது விடுதலை வேட்கை உள்ளத்தில் வீறிட்டு எழுகின்றது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை முன்றலில் அமைக்கப்பட இருக்கின்ற மாவீரனின் சிலை வன்னிப் பகுதி மக்களின் நீண்ட நாளைய இதய தாகத்தை தீர்த்துவைப்பதாக அமையும் என நம்புகிறேன்.

பண்டார வன்னியன் சிலைதிறப்புவிழாவோடு நிகழ இருக்கின்ற முத்தமிழ் விழாவிற்கு பலவகையிலும் எமது நகரசபை உதவியளித்து வருவது எல்லோருக்குந் தெரிந்த விடயமே.

ஒற்றுமை பேணி, நேர்மைவழியில், பண்டார வன்னியனின் பாதையிலே நாமும் அடியெடுத்து வைத்துச் செல்ல இவ்விழா தூண்டுகோலாக அமையட்டும். இதனையொட்டி வெளிவருகின்ற மலருக்கு ஆசிச் செய்தி தருவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஐ. கேதீஸ்வரன்**
நகர சபைத் தலைவர்.

நகரசபை, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

ஈழநாட்டினைச் சோழப் பெருமன்னர் தம் சாம்ராஜ்யத்தின் ஒரு அங்கமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த கால கட்டத்தினை ஒட்டி வன்னி ராஜ்யங்கள் கால் கொள்ளத் தொடங்கி இருக்கலாம் என்று கருதச் சான்றுகளுள. சோழப் பெருமன்னர் ஆட்சியினை அடுத்துப் பொலநறுவையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர் ஆதிக்கம் நிலை தளர்ந்தபோது வன்னி ராஜ்யங்கள் மேலாதிக்கம் பெற்றன. வடக்கிலே ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி பதினுன்காம் நூற்றுண்டிலே ஆரம்பித்த போது வன்னி ராஜ்யங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் தம் ஆணைக்குள் கொண்டுவர முற்பட்டனர். பதினேழாம் நூற்றுண்டுக்கு முன்பு தோன்றுத வையா பாடல் முதலான நூல்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே தான் வன்னி ராஜ்யங்கள் உருவாகின என்று பிழைபடக் கூறுகின்றன.

ஆரியச்சக்கரவர்த்திகளின் வடநாட்டு ராஜ்யத்திற்கு முன்பு சிறப்புறத் தொடங்கிய வன்னி ராஜ்யங்கள், வடக்கே ஆரியச் சக்கரவர்த்திகளுக்கும், தெற்கே கண்டி அரசுக்கும், பின்பு மேனுட்டினருக்கும் ஈடு கொடுத்து அடங்காப்பற்றுகத் திகழ்ந்து பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதற் தசாப்தத்திலே ஒடுக்கப்பட்டது.

வன்னி ராஜ்யங்களின் சிறந்த கடைசி மன்னனுக விளங்கி ஆங்கிலேயரை பல முறை எதிர்த்து அடங்காப்பற்றின் பெருமையைக் காத்தவன் பண்டாரவன்னியன்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் படையெடுப்புகளாலும் கண்டியரசனின் படையெடுப்புகளாலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆம், அந்நியரின் படையெடுப்புகளாலும் அழிந்து சிதைந்த வன்னிநாடு பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வனநாடாகத் தன் பூவிழந்து பொட்டழிந்து நின்றது.

வன்னி நாட்டினர் மறந்து விட்ட தம் வரலாற்றிலே, தம் பாரம்பரியத்திற்குச் சிறப்பும் பெருமையும் தரக்கூடிய தலைவன் ஒருவனை இனங்கண்டு கொண்டனர். இதனுல் உண்டுபட்ட பெருமிதம் பலருக்கும் ஊக்கம் அளித்து அவர்களை இயக்கும் சக்தியாக மாறியது. இச் சக்தியின் மகிமையை நேரிலே கண்டுணர்ந்தவர்கள் பலர்.

பண்டாரவன்னியன் சிலை தமிழ் மக்களுக்கு அவர்தம் பாரம்பரியத்தின் சிறப்பமிசத்தினை அந்நியருக்கு அடிபணிய மாட்டாத உள்ளத்தினை—உணர்த்தி என்றும் மானமுள்ள இனமாக வாழ வழி செய்யட்டும்.

இவ் விழாவினை ஒழுங்கு செய்து செவ்வனே ஒப்பேற்ற முன் வந்திருக்கும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபையினருக்கு என் உளங்கலந்த நன்றி.

**கலாநிதி பொ. பூலோகசிங்கம்,** B. A. (Hons), D. Phil. (Okon.)
*சிரேஸ்ட விரிவுரையாளர்*
*பேராதனைப் பல்கலைக் கழகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாயின் ஆசி....

| | |
|---|---|
| ஐம்பெருங் | காப்பியங்கள் |
| அளவில்லாக் | காவியங்கள் |
| தம்பெருங் | காதலாலே |
| தந்தனர் | எனக்குமைந்தர். |

| | |
|---|---|
| இந்தவோர் | மலரைத்தந்த |
| இவ்வன்னி | மக்களுக்குச் |
| சொந்தமாய் | ஆசிநல்கிச் |
| சுகம்பெற | வாழ்த்துகின்றேன். |

தமிழ்த்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගරු වවුනියාව දිසා ඇමති හා කැකිරාව පාර්ලිමේන්තු මන්ත්‍රී

පී. ඩී. මහින්දසෝම මැතිතුමාගේ පණිවුඩය.

# විදේශාධිපත්‍යයට එරෙහිව සටන් කළ ජාතික වීරයා.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# විදේශාධිපත්‍යයට එරෙහිව සටන් කල ජාතික වීරයා.

18 වන ශත වර්ෂය අග භාගයේ දී ශ්‍රී ලංකා ද්වීපයේ මුහුදු බඩ ප්‍රදේශ බ්‍රිතාන්‍යයන් යටතට පත්වීමත් සමගම සෙංකඩගල මැද මහනුවර රාජධානිය කේන්ද්‍ර කොට ගෙන රට ඇතුළත ඇරඹි ජාතික විමුක්ති ප්‍රවණතා ප්‍රකට කරමින් වඩාත් උත්සන්න වූ බව ඓතිහාසික සාධක අනුව පැහැදිලි වේ. පරසතුරු ආක්‍රමණ වලින් හා විදේශ ආධිපත්‍යයෙන් රට බේරා ගැනීමේ කාර්යයෙහි ලා කන්ද උඩරට රජකම් කළ කවරම හෝ රජකෙනෙකුට සහාය දීමට එම රජු යටතේ අධිපතිකම් කළ ප්‍රාදේශීය ජන නායකයෝ එකා වන්ව බැඳී සිටි හ. එය තමන්ගේ 'රාජකාරියෙහි' අනිවාර්ය හා අත්‍යවශ්‍ය අංගයක් කොට සලකන්නට ප්‍රාදේශීය අධිපතිවරු මෙන්ම සෙසු රටවැස්සෝද පුරුදු පුහුණු වී සිටියහ. 19 වන ශත වර්ෂය ආරම්භ වන විට කන්ද උඩරට රජුන් ප්‍රමුඛ කොට පගන ප්‍රාදේශීය දිසාපතිවරුන් හා සෙසු අධිපතීන් විසින් බ්‍රිතාන්‍ය ආක්‍රමිකයාට එරෙහිව දියත් කරන ලද සටනේ පතාක යෝධයකු ලෙසත් පුරෝගාමී වීර භටයකු ලෙයත්, එවක වන්නි දේශයට අධිපතිව සිටි බංඩාර ක්‍රියා කල බවට ඉතිහාසය දෙස් දෙයි.

වන්නි දේශයේ ද්‍රවිඩ ජනතාව විසින් පංඩාර වන්නියන් යන අපර නාමයෙන් හඳුන්වනු ලබන වන්නි බංඩාර නම් වූ ප්‍රාදේශීය ජන නායකයා වටා ගෙතුනු අතිශය රසවත් සිද්ධි රාශියක් මුඛ පරම්පරාගතව එයි. සිංහලයන් මිසින් ගණ දේවියන් වශයෙන් හඳුන්වනු ලබන දෙවිතුමන් ද්‍රවිඩ ජනතාව අතර "පුල්ලේයාර්" යන ගෞරව නාමයෙන් හැඳින්වෙන්නා සේම වන්නි බංඩාරයන් ද ද්‍රවිඩ ජනතාව අතර, පංඩාර වන්නියන් යන ආදර නාමයෙන් හඳුන්වනු ලැබේ. මුඛ පරම්පරාගතව එන තවත් ජනප්‍රවාදයක් අනුව වන්නි බංඩාර වනාන්තරයට අධිපති දෙවිතුමන්ය. වැවේ බංඩාර, වෙලේ බංඩාර, හිඟුරක රත්තරං බංඩාර, ප්‍රකාශ බංඩාර වන්නියේ බංඩාර, යාපා බංඩාර යන සත් බෑයන් රුහුණ ම ගම සිට අනුරාධපුරය බලා වන ගමනේ දී අතරමග ජනාවාස ඇතිකොට මඩම් පිහිටුවා 'සෙල්ලම් දුව' නැමති ස්ථානයට පැමිණි බවත්, එතැන් සිට රිටිගල ප්‍රාන්තයෙහි ජනපද පිහිටු වූ බවත් එතැන් සිට අනුරාධපුරයට වනාන්තරය යැදින් වැටුන මග ඔස්සේ ගමන් කරද්දී හමුවුනු 'රජ මිය'; (මෙය රජ කෙනෙකුගේ රුව ඔටුණු කඩු කස්තාන ආදී රාජාභරණයෙන් සැරසුම් ලද රජකෙනෙකු ගේ ස්වරූපය අනුව බදිනා ලබන විශාල ප්‍රමාණයේ මිවදයක් බවත්, එය කොටා මී පැණි ලබා ගන්නා තැනැත්තා ඉතා වාසනාවන්තයෙකු බවත් ගම්වැස්සෝ විශ්වාස කරති) වන්නි බංඩාර යන් විසින් කොටා පැණි කළ 49 ක් ලබා ගත් බවත්. එයින් සතුටට පත් සත් බෑයන්ගේ වැඩිමහලු සහෝදරයා වූ සහෝදරයන්ට නායක) අයිසනායක විසින් වන්නි බංඩාර යන් ජනාවාස ඇති කිරීම සඳහා උමාලයට යවන ලද බවත්, පුරා වෘත්ත වල සඳහන් වේ. වන්නි දේශයේ ගැමියන් විසින් හිඹාලය යනුවෙන් අදත් හඳුන්වනු ලබන්නේ මිනිස් පිය නොගැවුනු මහා ඝන වනාන්තරයයි. ඉහත සඳහන් කල සත් බෑයන්ගේ ප්‍රධානියා අදත් වන්නි දේශයේ ජනතාව අතර අයියනායක දෙවියන් වශයෙන් පුද පූජා සත්කාර ලබන පෙනේ. මෙම අයියනායක දෙවියන් ද්‍රවිඩ ජන කොටස් අතර යේද්රාසන් යන නමින් හඳුන් වේ ඉහත සඳහන් කළ සත් බෑයන්ගේ ප්‍රධානයා 'හත් රජ්ජුරුවන් යන නමින්' සිංහල ජන කොටස් අතරත් යේද්රාසන් යන නමින් ද්‍රවිඩ ජන කොටස් අතරත් හඳුන්වනු ලැබීමෙන් පැහැදිලි වන්නේ එකම පුද්ගලයා විවිධ ජන කොටස් අතර

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වෙනස් වෙස් නම වලින් හඳුන්වනු ලැබූ බව යි. ඒ අනුසාරයෙන් බලන විට සිංහලයින් 'වන්නියේ බාවාර' නමින් හැඳින් වූ ප්‍රාදේශීය ජන නායකයා ද්‍රවිඩ ජන කොටස් අතර 'පංඩාර වන්නි යන්' යන නමින් පුද පූජා ලැබීම අසාමාන්‍ය නොවන සිද්ධියක් බව පැහැදිලි වේ.

ඉහත සඳහන් කරන ලද පැරිණි රජ මී වදයේ පැණි යන් බැයන් අතර බෙද ගැනීමෙන් අනතුරුව වන්නියේ බංඩාර වන්නි දේශයට පිටත් කර හරිනු ලැබුවා සේම සිඟුරක බංඩාර සිඟුරක ප්‍රදේශයටත්, සිඟුරක් ගොඩ ප්‍රදේශයටත්, යාපා බාඩාර යාපා පටුනටත්, හත් රජ්ජුරුවන් විසින් ප්‍රාදේශීය අධිපතීන් වශයෙන් පත්කොට යවන ලද බව මුඛ පරම්පරාගත ජනප්‍රවාද වල කියැවේ.

ජනතා හිතසුව පිණිස වැඩ කළ පැරණි රජ දරුවන් පසු කලෙක බද්ධාන්තවශයෙන් පිදීම ලාංකිකයන් විසින් ප්‍රගුණ කරණ ලද චාරිත්‍රයක් බව මහසෙන් රජ්ජුරුවන් මින්නේරි දෙවියන් කොට සැලකීමෙන් ද පැහැදිලි වේ. ඒ අයුරින්ම ජනප්‍රවාදයෙහි එන අන්දමට වන්නි දේශයේ ජනාවාස පිහිටුවා ජනතා පිණිස වැඩ කළ වන්නියේ බණ්ඩාරයන් ද 'ඉලන්දරි දෙවි යන්' යනුවෙන් හඳුන්වා පිදීමට වන්නිදේශයේ වැසියන් පුරුදු වීම අසාමාන්‍ය නොවන සිද්ධියක් සේ සැලකිය හැකි වේ. ජනප්‍රවාද අනුව ම වන්නි බංඩාරයන් වන්නි දේශයටත්, යාපා බංඩාරයන් යාපා පටුනටත්, පිටත් කර හැරීමෙන් පසු ඉතිරි වූ බැයන් 'ඇව් බැඳි රාජ්‍යයේ' ප්‍රාදේශීය අධිපතීන් ලෙස අසියනායක විතාන් පත් කොට යවනු ලැබූ බව නැවතද කියැවේ

දැනුදු වන්නියේ බංඩාර, කැලෑ බංඩාර වන්නියන්, යන නම් වලින් හඳුන්වනු ලබන මෙම ජන නායකයා වෙත දේවත්වය ආරෝපණය කරන ලදුව ඔවුන් විෂයෙහි කරනු ලබන පුද පූජා සත්කාර සම්මාන් වන්නිදේශයේ සිංහලයන් අතර ප්‍රචලිතව පවතී. විශේෂයෙන්ම පැණිමාලු (මී පැණි) එකතු කිරීම සඳහා වනාන්තර ගත වන අවස්ථා වලත්, දඩයම් සොයා කැලෑ පිරණ අවස්ථා වලත්, ගොයම් කපා පාගා ගෙට ගන්නා අවස්ථා වලත්, කිසියම් සතුරු උවදුරු පැමිණි අවස්ථාවලත්, කිරි උතුරවා පුද පඬුරු පූජා කොට වන්නි බංඩාරයන් පිදීම ප්‍රදේශ වාසීහු සිරිතක් කොට ගෙන සිටිති.

ඓතිහාසික ලේඛණ මූලාශ්‍රය කොට ගෙන වන්නි දේශයේ වර්තමාන ඉතිහාසය ගොඩ කල ඉහත සඳහන් ජනප්‍රවාද තුල ඉතිහාසගතව ඇති මෙම ප්‍රාදේශීය අධිපතියා වන්නියේ බංඩාර නමිනුත්, පංඩාර වන්නියන් යන නමිනුත් අද අප ඉදිරියෙහි ජීවමානව සිටී. ලේඛණගත ඓතිහාසික සාධක අනුව 19 වන සියවස මුල් භාගය වන විට වන්නි බංඩාරයන් නුවර කලාවිය හා තමන්කඩුව යන ප්‍රත්‍යන්ත ජනපද වලට උතුරින් පිහිටි කන්ද උඩරට සිංහල රජුගේ ආධිපත්‍ය යටතේ පැවති වන්නි දේශයේ ප්‍රාදේශීය අධිපතියාව සිටි බව පැහැදිලි වේ.

විසිවන සියවස මුල් භාගයේ දී ශ්‍රී ලංකා ද්වීපයේ උතුරු පලාතේ දිසාපතිව සිටි ජේ. පී. ලුවිස් මහතා විසින් සංග්‍රහකොට රචනා කරනා ලද "වන්නි සංග්‍රහය" (The Manul of the Vanni) නමැති ග්‍රන්ථයේ වන්නි බංඩාරයන් පිළිබඳව ඉතිහාස ගත කරුණු රාශියක් සඳහන් කොට තිබේ. ඔහු දක්වන අන්දමට 1796 දී ශ්‍රී ලංකා ද්වීපයේ ශවාධිපත්‍යය බ්‍රිතාන්‍යයන් අතට පත් වූවත්, බ්‍රිතාන්‍යයන්ට එරෙහිව ගෙන ගිය ජනතා අරගලය ජාතික විමුක්ති ව්‍යාපාරයක ස්වරූපය ගනිමින් රට අභ්‍යන්තරයෙහි බුබුරා ඇවිලෙමින් තිබින. මුල් අවධියේ දී බ්‍රිතාන්‍ය අධිරාජ්‍යවාදීන්ට විරුද්ධව කැරලි ගැසූ වන්නි බංඩාර පසු කලකදී බ්‍රිතාන්‍යයන් විසින් සමාව දෙනු ලැබ නුවරකලාවිය ප්‍රාන්ත රාජ්‍ය සීමාවේ පිහිටා ඇති වන්නි දේශයේ අධිපති ලෙස පත් කරන ලද බව සඳහන් වේ. වර්ෂ 1803 දී බ්‍රිතාන්‍යයන් විසින් කන්ද උඩරට සිංහල රජු සමඟ විවෘත ලෙස සටනක් වුනු වේලේ පංඩාර වන්නියන් ඔහුගේ ප්‍රදේශයෙන් බ්‍රිතාන්‍යයන් පලවා හැරීමට දැඩි අධිෂ්ඨානයකින් යුක්තව සටන් වැදුනේය. නුවර කලාවියේ දිසාවගේ ආධාරද, කන්ද උඩරටින් ලබා ගත් සේනාංකයක් ද සමඟ 1803 අගෝස්තු 25 වෙනි දින මුලතිවු හී පිහිටා තිබුන ඉංග්‍රීසි රජයේ කාර්යාලයට මහත් බලපරාක්‍රමයෙන් යුතුව පහර දුන්නේය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එහි සිටි කපිතාන් 'ට්‍රිබර්ග්' ගේ හමුදා සේනාංකය පලවා හැර, වන්නි බණ්ඩාර මුලතිවු බලකොටුව ජය ගත්තේය. ඉන් අනතුරුව වන්නි බණ්ඩාරයන් අත්අඩංගුවට ගෙන යාපනයට ගෙන ඒම සඳහා යවන ලද බෙදාවිටුවල නැගී කපිතාන් ට්‍රිබර්ග් යාපනය දක්වා පසු බැස්ස බවද, ජේ. පී. ලුවිස් මහතා සඳහන් කරයි. ඉන්පසු කප්තාන් එඩ්වඩ් මැජ් යටතේ ත්‍රිකුණාමලයේ සිට එවන ලද සේනාංකයක් මගින් මුලතිවු හි සිටි 'කැරලි කරුවන්' පලවා හරින ලදී. ලුතිනන් ජෝන් ජෝවෙල් යටතේ යාපනයේ සිට එවන ලද තවත් සේනාංකයක් විසින් කැරලි කරුවන් විසින් රැදී කරන ලද බලකොටු විනාශ කොට ගඩපවිට්ට රාශියක් පැහැර ගන්නා ලද බවද කියැවේ. කපිතාන් ට්‍රිබර්ග් පැමිණි 3 වෙනි සේනාංකයක් කච්චිලමඩු හී කඳවුරු බැඳ සිටි වන්නි බණ්ඩාර ගේ පිරිසට හදිසියේ පහර දී විශාල සංඛ්‍යාවක් මරා දමන ලද බවත්, සුබ සිරකරුවන් වශයෙන් 46 දෙනෙකු අත්අඩංගුවට ගත් බවත්, කරත්තයක නංවා තිබුණු කන්ද උඩරට සදන ලද තුවක්කුවක් සහ රාත්තල් $1\frac{1}{2}$ පමණ බර වෙඩි උණ්ඩයක්, තවත් තුවක්කු 55 ක් හා කෝම්ප 12 ක් කඩු යගද 2 කක් බයිනෙත්තු 1 ක්, වෙඩි බෙහෙත් පුරවන ලද විශාල බැරලයක් හා පණිවිටු දෙකක් කපිතාන් ට්‍රිබර්ග් විසින් පැහැර ගන්නා ලදී. බණ්ඩාර වන්නියන් ගේ සේනාංකය සතු භාණ්ඩ හා යුද අවි තැන්පත් කොට තිබු ගෙවල් 16 ක් ගිණි තැබීමෙන් අනතුරුව ඔහුගේ පිරිස පලවා හරින ලද බව "වන්නි සංග්‍රහයේ" සඳහන් වේ. මෙසේ වන්නි දේශයේ අධිපතින් ගේ බලය බ්‍රිතාන්‍යයන් විසින් සදාකාලිකව විනාශ කරන ලද බව ජේ. පී. ලුවිස් වැඩිදුරටත් සඳහන් කරයි.

මුලින් දක්වනු ලැබූ මුඛ පරම්පරාගත ජනප්‍රවාද වල එන කරුණුත්, වන්නි බණ්ඩාරයන් ජීවමානව සිටි වන්නි ජනතාව තමා වටා රාශි භූත කොට ගෙන විදේශ ආධිපත්‍යයට එරෙහිව ගෙන යන ලද සටනත් ලේඛණ ගත ඓතිහාසිකමය වූ කරුණුත්, ශ්‍රී ලංකාවේ ඉතිහාසඥයන්ගේ, විද්වතුන්ගේ, ප්‍රාඥයන් ගේ හා ජාතිහිතෛෂී කැමැත්තන් ගේ අවධානයට යොමු වනු ඇතැයි මම විශ්වාස කරමි.

මෙම ඉතිහාසගත සාධක වලින් පැහැදිලි වන්නේ මෙම ප්‍රාදේශික ජන නායකයා එවක රට අභ්‍යන්තරයේ පැණ නැගුණු අධිරාජ්‍ය විරෝධී අරගලයෙහි පුරෝගාමියකුව සිටි බවත්, ප්‍රාදේශීය වශයෙන් එම අරගලය දියත් කොට ජනග්‍රහනය කරා එය මෙහෙය වීමට වන්නි දේශයෙහ සිටි ද්‍රවිඩ, සිංහල සියළු ජන කොට්ඨාස වල සහය වන්නි බණ්ඩාරට ලැබුණු බවත්, එම ජන කොටස් සවකීය නායකත්වය වටා රාශි භූත කරගනීමට ඔහුට හැකි වූ බවත්ය. එසේම, වන්නි බණ්ඩාරයන් කන්ද උඩරට රාජධානියේ රජු සමග දැඩි සමීප සම්බන්ධකමකින් යුක්තව සිටිබවත්, විදේශීය ආක්‍රමනිකයාට එරෙහිව ගෙනයන ලද සටනේ දී කන්ද උඩරට සිංහල රජුගේ මනාම නුවර කලාපීය වන්නි යාබද ප්‍රදේශවල සිංහල අධිපතීන්ගේ ද සහයෝගය හා ආධාර උපකාර නොඅඩුව ලැබුණු බවත්, එවැනි ආධාර උපකාර ලබා ගැනීම වන්නි බණ්ඩාරයන් ප්‍රතිපත්තියක් කොට ගෙන සිටි බවත්, ඉහතින් දක්වුණු කරුණු අනුව වඩ්දුරටත් පැහැදිලි වේ. එමනක් නොව ද්‍රවිඩ සිංහල සමගියේ ප්‍රබල සංකේතයක් මෙන් ඔහු අද අප ඉදිරියේ නැගී සිටී. එහෙයින්ම, අධිරාජ්‍ය විරෝධී සටනේ පතාක යෝධයකු ලෙසින් ද සුළු ජාතියම භක්තියෙන් සිහිපත් කොට නාමය කරනු ලබන ජාතික වීරවරයන් අතුරෙහි ප්‍රබල නායකයෙකු වශයෙන් ද ඔහු අද අප ඉදිරියේ නැගී සිටී.

වවුනියාව දිසා සංවර්ධන සභාවේ අනුග්‍රහයෙන් අද දින නිරාවරණය ලබන වන්නි බණ්ඩාර් වීරයානන් ගේ පිළිරුව මෙතුවක් කල් වන්නි දේශයේ ජනතාව විසින් ප්‍රකට කරන ලද ජාතික ආගමික සමගිය ඉදිරි කාලයේ දී වඩාත් මනා ලෙස මූර්තිමත් කරනු ලබන සංකේතයක් මෙන්ම පැහැදිලි කැඩපතක් ද වනු නොඅනුමානය.

භූගයේ අවශ්‍යතාවක්ව ඔහු අප ඉදිරියේ විරාජමානව සිටිනු ඇත!

ප්‍රාදේශීය අවශ්‍යතාවක්ව ඔහු අප ඉදිරියේ ජීවමානව රැදී සිටිනු ඇත!

කාලීන ජාතික අවශ්‍යතාවක්ව ඔහු ජනතාව සමග සදා ජීවත් වනු ඇත!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழை வாயில்....

வவுனியா மாவட்டசபை தனது முதலாண்டு காலத்திலேயே சாதித்த விடயங்களுள் தலையாயது பண்டார வன்னியனுக்கு சிலை எழுப்ப வேண்டும் என்று எடுத்த முடிபும், தொடர்ந்து அதற்காய வேலை ஒழுங்கை செய்தமையுமாகும். பல இனங்கள் வாழும் இம்மாவட்டத்தில் தற்போதைய சமூக, அரசியல், பொருளாதார பின்னணியில் யாவரும் போற்றும், ஏற்கும் சின்னத்தைக் கண்டு பிடிப்பது கடினமான தொன்றாகும். அடங்காப்பற்று என்று பெருமிதத்துடன் இன்றும் அன்றும் பேசப்படுகின்ற வன்னிப் பிரதேசத்தினை ஆட்சிபுரிந்த குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் வன்னிமக்களின் மனத்தில் இசைவடிவிலும் கதை வடிவிலும் வாழ்ந்து வருகின்றான் என்று பிரதமர் தமது ஆசியுரையில் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

**18**-ம் நூற்றாண்டின் இறுதிக்காலம் **19**-ம் நூற்றாண்டின் தொடக்க காலம் ஆகிய காலப்பகுதியில் வாழ்ந்த பண்டாரவன்னியன் தம்மவர்க்குரிய பண்புக்கமைய தன் மண்ணின் இறைமையைக் காத்தான், மற்றெவர்க்கும் இல்லாத வீரத்துடன் மாற்றாரை எதிர்த்தான் என்னும் உணர்வு இப்பகுதிவாழ் மக்கள் மனதில் மட்டுமல்லாது சரித்திர உணர்வு கொண்ட இலங்கைவாழ் மக்கள் பலரின் மனத்திலும் ஆழ்ந்து பதிந்துள்ளது. தற்போது மன்னார், முல்லைத்தீவு, வவுனியா என்று அழைக்கப்படுகின்ற மாவட்டங்களை வன்னித்தொகுதி என்று இப்போது அரசு அங்கிகரித்துள்ளது. மேற்கூறிய இந்த வன்னிப்பிரதேசத்தில் தான் பண்டார வன்னியனுடையஆட்சி செல்வாக்கு, போர்வெற்றிகள் நிகழ்ந்தன.

**1803**-ம் ஆண்டு நிகழ்ந்த போரில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதும் வன்னியருடைய ஆட்சியும் செல்வாக்கும் அணைந்தன. ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சியினை அகற்றவேண்டும் என்ற அவாக்கொண்ட இவ்வீரன் தற்போதைய வவுனியா மாவட்ட பிரதேச எல்லையில் இருந்து அம்முயற்சியில் ஈடுபட்டான் என்பதை வரலாற்று ஏடுகள் குறிக்கின்றன. அந்த வகையிலே இவ்வுருவச்சிலை இன்றைய வன்னிப் பிரதேசத்தின் மத்தியஸ்தானமாகிய வவுனியாவில் நிறுவப்படுகிறது. **1803**-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போரில் தனது படைகளுடன் பக்க பலமாக கண்டி இராச்சியத்தின் நுவரகலாவிய திசாவையின் படைகளையும் பாவித்தான் என்னும்போது, பண்டாரவன்னியன் இந்நாட்டினுடைய இறைமையைக் காக்க முன்வந்த ஒரு தேசிய வீரனாகத் திகழ்கின்றான். இன்னோரன்ன பல சரித்திர சான்றுகளை பரிசீலித்த ,இலங்கை அரசின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பண்டார வன்னியனை தேசிய வீரன் வரிசையில் வைத்துள்ளது. இலங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் கப்பிற்றிபொல திசாவை, புரான் அப்பு போன்ற தேசிய வீரன் பண்டார வன்னியன் என்று மாண்புமிகு பிரதமர் வேறோர் இடத்தில் கூறியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

பண்டார வன்னியனுடைய போரும் வாழ்வும் கர்ணபரம்பரைக் கதைகளில் இருந்தபோதிலும், முதன்முதலாக விஞ்ஞானரீதியில் ஆராய்ந்து அவனைப்பற்றிய தகவல்களை உலகுக்கு எடுத்துக்கூறியவர் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் சேவைசெய்த வடமாகாண அரசாங்க அதிபர் ஜே. பி. லூயிஸ் ஆவர். அவரின் வழித்தோன்றல்களாகப் பல சரித்திர ஆய்வாளர்கள் இலங்கையிலுள்ள பல்கலைக் கழகத்துள்ளும், வெளியிலும் இருக்கின்றார்கள். வன்னி நாட்டின் புராதன கால வரலாறு சமூக பொருளாதார அமைப்பு, சமீபகாலத்து வளர்ச்சி, ஆகியவற்றுள் ஈடுபாடு கொண்ட இந்நாட்டு அறிஞர்களுக்கும் பண்டாரவன்னியனின் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்கின்ற இளஞ்சந்ததிகளுக்கும் இம் மலர் சமர்ப்பணமாக்கப் படுகின்றது.

இம்மலரினை அச்சேற்றவேண்டும் என்கின்ற தீர்மானம் எடுக்கப் பட்டு மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள்ளாகவே அறிஞர்களிட மிருந்து கட்டுரைகள் வரப்பெற்றன. இவர்கள் அனைவர்க்கும் அமைப்புக் குழுவின் சார்பாகவும், மலர்க்குழுவின் சார்பாகவும் நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகின்றோம். இம்மலருக்கு பலர் ஆசியுரை வழங்கியுள் ளார்கள். இந்நாட்டினுடைய பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், துணை வேந்தர், வவுனியா மாவட்ட அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா நகரசபைத் தலைவர், தமிழ்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர், சட்ட சபை உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், போன்றோர் ஆசியுரை வழங் கியமை எமது முயற்சிக்கு அளித்த ஊக்கமாகும்.

இம்மலரின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த அகளங்கன் என்று புனைபெயர் கொண்ட திரு நா. தர்மராசா அவர்கள் இம்மலர் சம்பந்தப் பட்ட எத்தனையோ கடினமான பொறுப்புக்களை ஏற்றமைக்கு நன்றிக் கடன் உடையவராக இருக்கின்றோம்.

இம்முயற்சியில் எம்மை ஊக்குவித்த வவுனியா மாவட்ட சபைக் கும் நன்றியைத்தெரிவித்து அவர்களுடன் சேர்ந்து நாமும் பண்டார வன்னியனுக்கு அஞ்சலி செய்கின்றோம்.

நன்றி.

கே. சி. லோகேஸ்வரன் S L A.S
*மலர் ஆசிரியர்.*

*அரசாங்க அதிபர்,*
வவுனியா,
**16-7-1982.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லெனத் திரண்ட தோளுங்
கடலென விரிந்த மார்பும்,
'நில்'லென எதிரி தம்மை
நிறுத்திடும் வீர வாளுங்,
'கொல்'லென வருவேல் காக்கக்
கொடுத்த கேடயமுங் கொண்டு,
'செல்'லென எதிர்த்து வெள்ளைச்
சேனையைக் கலைத்த வீரன்.

★ ★ ★

THIS STATUE WAS ERECTED

**ON 16TH JULY 1982**

IN HONOUR OF

## THE NATIONAL HERO

# PANDARAVANNIAN

WHO FOUGHT VALIANTLY AGAINST
FOREIGN INVASION IN THE EARLY
NINETEENTH CENTURY.

சிலைப் பீடத்தில் பொறிப்பதற்கென
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட வாசகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பண்டார வன்னியன் சிலையை உருவாக்கியவர்,
சிற்பக் கலாநிதி : செ. சிவப்பிரகாசம் அவர்கள்.
(சித்திர ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.......


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வன்னிப் பிரதேசமும் நாட்டார் பண்பாட்டியலும் ... | 1 |
| 2. | கிறீஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னிநாடும் தொல்லியற் சான்றுகளும் | 5 |
| 3. | நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னி வரலாற்றுக் குறிப்புகள் | 14 |
| 4. | வன்னிப்பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும் | 18 |
| 5. | புகழ்பூத்த வன்னி மண்ணின் காவலர்கள் ... ... | 33 |
| 6. | வன்னிவள நாடு ... ... ... ... | 39 |
| 7. | வன்னி மக்களின் மரபும் பண்பாடும் ஓர் ஆய்வு ... ... | 42 |
| 8. | வன்னி மண்ணின் முதல் விடுதலை வீரன் பண்டாரவன்னியன் ... | 60 |
| 9. | விடுதலை முரசொலிக்கும் வீரவரலாற்றைப் படைத்தவன் ... | 66 |
| 10. | ஐயனுர் வழிபாட்டில் வன்னியின் சடவங்குள ஐயனுர் கோயில் | 70 |
| 11. | அடங்காப்பற்று வன்னிமைகள் ... ... ... | 77 |
| 12. | பண்டார வன்னியன் கழகம் ... ... ... | 87 |
| 13. | எம் வன்னி மன்னனே இறுதி மன்னன் ... ... | 89 |
| 14. | கனவில் வந்த வன்னியனுர் ... ... ... | 91 |
| 15. | பண்டாரவன்னியன் கொடிக்கீதம் ... ... ... | 92 |
| 16. | விரியும் பிரபஞ்சம் ... ... ... ... | 93 |
| 17. | இலங்கை வேந்தன் இராவணன் ... ... .. | 96 |
| 18. | பாதகம் பொறுக்காப் பாவலர் ... ... ... | 101 |
| 19. | Some Reflection on past agricultural development in Vavuniya District | 105 |
| 20. | Two celebrated reservoirs of the Vanni | 108 |
| 21. | Adankapattu and Pandaravanniyan. | 110 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழு

கே. சி. லோகேஸ்வரன் S L. A S.
அரசாங்க அதிபர் வவுனியா

த. லங்கா நேசன் S L. A. S.
திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா.

''அகளங்கன்''
பம்பைமடு. வவுனியா,

கே. லோகசிங்கம் B. A. Dip in ed
அதிபர் ஓமந்தை. மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியும்
# பண்டாரவன்னியனும்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேசமும் நாட்டார் பண்பாட்டியலும்

— பேராசிரியர் க. கைலாசபதி
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

அண்மைக் காலத்திலேயே— குறிப்பாக நாடு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற காலப்பகுதியை அடுத்தே - நமது சமூகத்தில் நாட்டார் பண்பாட்டியல் ஆய்வுகள் குறிப்பிடத்தக்க வகையில் நடைபெறத் துவங்கின எனலாம். ஆங்கிலேயர் ஆட்சியிலேயே சமூகவியல் நோக்கில் அமைந்த ஆய்வுகள் நம்மவர்க்கு அறிமுகம் செய்யப்பட்டன. ஆயினும் அந்நியர் நம்மை நோக்குவதற்கும் நாம் நம்மை நோக்குவதற்கும் வேறுபாடுகள் உண்டு. பொதுவில் அந்நியர் கீழைத்தேய சமூகங்களை ஆட்சிசெய்த காலத்தில் அச் சமூகங்களை இயன்றவரை ''சமூகமாக நிர்வகிப்பதற்கும், அச் சமூகங்களிலே பரம்பரையாக நிலவிவந்த அதிகார முறைமைகளைத் தமக்குச் சாதகமான முறைகளிற் பயன்படுத்துவதற்கும், பயன்படத்தக்க வகையிலேயே மானிடவியல், சமூகவியல், வரலாற்றியல், மொழியியல் முதலிய ஆய்வுத்துறைகளை வளர்த்து வந்தனர். பயனுள்ள பல தரவுகள் பெறப்பட்டபோதும் அடிப்படை நோக்கு குறைபாடுகளுடையதாகவே இருந்தது. ஆங்கிலக் கல்வியின் வழிவரும் நமது இன்றைய ஆய்வாளரும் முற்கூறிய அணுகுமுறைகளிலிருந்து முற்றாக விடுபட்டுள்ளனர் என்று கூறிவிடமுடியாது. எனினும் நாட்டில் ஏற்பட்டு வந்திருக்கும் அரசியல், பொருளாதார, சமூக இயக்கங்களின் விளைவாக ஆய்வுமுறைகளில் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதில் தவறில்லை.

இலங்கையிலே தமிழ் மக்கள் வாழும் பாரம்பரியப் பிரதேசங்களைப் பற்றி எண்ணும்போதும், பேசும்போதும், தவிர்க்க இயலாவாறு வன்னிப் பிரதேசம் நினைவிற்கு வரும். பொதுவாகத் தமிழ்ப் பிரதேசம் என்ற வகையில் வன்னி குறிப்பிடப்படுவதாயினும், அதற்குச் சில தனித்துவமான சிறப்பியல்புகள் உண்டென்பதும் மனங்கொள்ள வேண்டியதேயாகும். சமூகங்களை வேறுபடுத்திக் காட்டும் அம்சங்களில் பொருளியலும், அதன் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறையும், முக்கியமானவை எனக் கொண்டால், வன்னிப் பிரதேசம் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதிலும், வனத்தின் சூழலில் அமைந்திருப்பதிலும், தனித்தன்மை கொண்டதாய் விளங்குகின்றது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் மட்டக்களப்புப் பிரதேசமும் மன்னார்ப் பிரதேசமும் ஒப்பிடத்தக்கனவாய் இருப்பினும், வனம் சார்ந்த வாழ்க்கைமுறை வன்னிப் பிரதேசத்திற்குப் பிரத்தியேகமான பண்புகளை வழங்கியிருக்கின்றது. முல்லையும் மருதமும் கலந்து முதுபெரும் பூமியாகத் திகழ்வது வன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடிப்படையான புவியியற் செய்தியையும், அதனால் நிர்ணயிக்கப்பெற்ற வாழ்க்கை முறையையும் கணக்கில் எடுக்கும்பொழுதுதான் நாட்டார் பண்பாட்டு ஆய்விற்கு வன்னிப்பிரதேசம் முக்கியமாய் இருப்பது முனைப்பாகத் தோன்றும். நாட்டார் பண்பாட்டியல் அடிப்படையில் நாடு சம்பந்தமானது. அச் சொற்றொடர் மிகவும் விரிந்த பொருட்பரப்பை உடையது. மொத்தத்தில் வாய்மொழி இலக்கியம், நாட்டார் கலைகள், கைப்பணிகள், நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள் நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நாட்டுமக்களின் பேச்சு வழக்குகள் முதலியவற்றை அத்தொடர் குறிக்கும். அவற்றுள் வாய்மொழிப் பாடல்களே பெரும்பாலும் முதலிலே பலரது கவனத்தை ஈர்க்கின்றன. நாட்டார் பண்பாட்டியல் வரலாற்றை நோக்குமிடத்து, பொதுவான ஒரு வளர்ச்சிப் போக்கு தெளிவாகும். கலை இலக்கியங்களில் அக்கறையும் ஆர்வமும் கொண்டோர் நாட்டார் பாடல்களையும் இசையையும் சேகரிக்கத் தொடங்குவதே நாட்டார் பண்பாட்டியற் பரிணமத்தின் முதற்படி நிலை எனலாம். அதற்கேற்ப வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள் ஆராய்ச்சியாளர் சிலரின் கவனத்தைப் பெற்றுள்ளன.

நாட்டார் பண்பாட்டியல் ஆய்வுகள் உலகின் பல பாகங்களிலும் வளர்ந்து வந்திருக்கும் தன்மையை நோக்குவார்க்கு ஒரு உண்மை புலப்படும். நகரம் கிராமம் என்ற பாகுபாடு முனைப்படையத் தொடங்கிய பின்னரே நாட்டார் வழக்கியல் தனித்த ஒரு ஆய்வுத்துறையாக உருவாகியது. அந்த வகையில் கிராமிய வாழ்க்கையைக் கூடுதலாகப் பெற்று விளங்கிவந்துள்ள வன்னிப் பிரதேசம் நாட்டார் பண்பாட்டின் உறைவிடமாகவும் இருந்து வந்துள்ளமை தருக்கத்தின் பாற் படுவதேயாகும். அது விவசாயத்தில் இடையீடின்றி முன்னிலையில் இருந்து வந்திருப்பதைப் போலவே வாய்மொழி இலக்கிய வளத்திலும் தனிச் சிறப்புடன் திகழ்ந்து வந்துள்ளது. உண்மையில் விவசாயம் தழைத்தோங்கும் பிரதேசங்களில் வாழும் உழைக்கும் மக்கள் மத்தியிலேயே வாய்மொழிப் பாடல்கள் வீறார்ந்த நிலையிற் காணப்படும். உலகப் பொதுவான நியதிக்கு இயையவே வன்னிவள நாட்டிலும் வாய்மொழிஇலக்கியம் வாழிப்பாக வளர்ந்து வந்திருக்கிறது.

நாட்டார் பாடல்கள் சிறுச்சிறு கிராமங்களிலே தோன்றி மலர்பவையாயினும் உலக முழுதளாவிய பொதுத் தன்மையும் உடையவை. மனுக் குலத்தின் போராட்டங்கள், வெற்றிகள், தோல்விகள், கனவுகள், நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், முதலியவற்றை ஆதாரமாய்க் கொண்டு எழுந்தனவாகையால், அவற்றுக்குச் சர்வவியாபகமான தன்மைகள் இயல்பாக உண்டு. ஒரு வகையிற் பார்த்தால் உலகப் பொதுவான இலக்கியம் வாய்மொழி இலக்கியமே என்பதில் எது வித ஐயமுமில்லை. ஆனால் அதே வேளையில் தனிப்பட்ட, குறிப்பிட்ட, பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் மட்டுமேயுரிய செய்திகளும் நுணுக்க விவரங்களும், மொழி விகற்பங்களும், நாட்டுப் பாடல்களிலேயே இடம் பெறுகின்றன. சுருங்கக் கூறுவதானால், மிகப் பொதுவான உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களிலேயே, வரையறுத்துக் குறிக்கப்படும் தனிச் செய்தி சார்ந்த விவரங்களும் காணப்படுகின்றன. அண்டத்தில் பிண்டமும் பிண்டத்தில் அண்டமும் அடங்கியிருப்பன போல என்று வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம். மேலோட்டமாய்ப் பார்ப்போருக்கு இது முரணாகத் தோன்றக் கூடும். ஆனால் உயர் இலக்கியத்திற்கு இவ்வியங்கியல் பண்பு இன்றியமையாததாகும். நுணுகி நோக்கினால் அநுபவங்களே இலக்கிய ஆக்கத்திற்கு மூலப்பொருள். அநுபவங்கள் தனிமனித அநுபவமாகவும் இருக்கலாம்; சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கையிற் பெறப் படும் அநுபவங்களாயும் இருக்கலாம். நாட்டார் பாடல்களில் பெரும்பாலும் கூட்டு வாழ்க்கையின் அடியாகத் தோன்றும் அநுபவங்களே சிறப்பிடம் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இலக்கிய ஆக்கம் என்ற ரஸவாதத்தின்போது, அநுபவம் என்ற மூலப் பொருளாம் முழுமையிலிருந்து தற்செயலான, மேற்போக்கான அம்சங்கள் நீங்கப் பெற்று அடிப்படையான சாராம்சம் அக உணர்வுடன் கலந்து,பொருத்தமான வடிவங்களில் வெளிவருகிறது. வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்குமுள்ள இயங்கியல் ரீதியான உறவு இதுதான். வன்னிப் பிரதேசத்து நாட்டார் பாடல்களை நாம் நோக்குமிடத்து, அவை வன்னிப் பகுதி மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் அதே வேளையில், பொதுப் படையான பல உணர்வுகளையும் அப்பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. வன்னிப் பகுதியில் - சிறப்பாக முல்லைத்தீவுப் பகுதியில் - வழங்கும் சிந்துப்பாடல் வகைகளைக் கவனித்தால் அவற்றில் வாழ்க்கையும் வரலாறும் பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

இப்பொழுது நம்மிடையே நாட்டார் பண்பாட்டியல், கற்றோரைக் கவரும் துறையாகப் பரிணமித்து வருகிறது. பல் துறை ஆய்வுகளும் தாய் மொழிகளிற் பெருகப் பெருக சமூகவியலுக்கு மூலாதாரங்களாயுள்ள நாட்டார் பண்பாட்டியற் கூறுகள் முக்கியத்துவம் பெற்று வருவதைக் காணலாம். மானிடவியல், சமூகவியல், உளவியல் வரலாற்றியல், மொழியியல், இசை, நடனம் இலக்கியம், ஓவியம் முதலிய பல துறைகளைச் சார்ந்தவர்களும் தவிர்க்க இயலாதபடி நாட்டார் பண்பாட்டியலை நாடி நிற்கின்றனர். அத்தகைய ஒரு போக்கின் விளைவாகவே கடந்த சில காலமாக வன்னிப்பிரதேசத்தின் பற்பல அம்சங்கள் ஆய்வாளரின் கவனத்தை ஈர்த்துள்ளன. பழமொழிகள் முதற் ''பள்ளு'' பாடல்கள் வரை, கும்மி முதல் காதல்வரை, பலதரப்பட்ட நாட்டுப் பாடல்கள் வன்னிப்பிரதேசத்தில் வழங்கி வந்துள்ளன. பெரும்பாலான சிந்துக்கள் சமயச் சார்புடையவை. விவசாயத்தோடு சம்பந்தப்பட்டவை. இலங்கையில் தனிச்சிறப்பியல்புகளோடு உருவாகி வந்திருக்கும் இந்து மதத்தை ஆய்ந்து தெளிய விரும்புவோர்க்கு இச் சிந்துப் பாடல்கள் அரும்பெரும் ஆதாரங்கள் எனலாம்.

உதாரணமாக கடந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலத்துள் குறிப்பாக கிறிஸ்தவ மதங்களின் வருகைக்குப் பின் புத்துயிர் பெற்று சீர்திருத்தம் பெற்ற சைவம்- ஆகம நெறிப்பட்ட நெறிமுறைகளையும் சடங்குகளையும் கிரியைகளையும் கொண்டது என்பர். அதுவே நீண்ட நெடு நாட்களாக இலங்கைத் தமிழரிடையே நிலவிவந்தது எனக் கூறுவோரும் உளர். ஆயினும் வன்னிப்பிரதேசம் உட்பட்ட பல பகுதிகளை நோக்கும்பொழுது சிறு தெய்வ வழிபாடு பெருவழக்காக இருந்தமை தெற்றெனப் புலனாகும். அண்மைக்கால ஆய்வுகள் சில இதற்கு அரணாய் உள்ளன. வீர வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு,இயற்கைவழிபாடு முதலியன சிறு தெய்வ வழிபாட்டின் வெளிப்பாடுகளாக அமைந்திருப்பதை வன்னிப் பகுதியில் தெய்வ நம்பிக்கைகளை ஆராய்வோர் கண்டு கொள்வர். இந்த முறையில் ஆராய்ச்சி செய்தாலன்றி ஈழத்துச் சைவத்தின் பரிணாமத்தைப் பூரணமாக அறிந்துகொள்ள இயலாது.

சமயக்கூறுகளை வரலாற்று அடிப்படையில் நன்கு விளங்கிக்கொள்வதற்கு நாட்டார் வழக்காறுகள் பெருந்துணை புரிவதைப் போலவே உயர் இலக்கியக்கூறுகள் பலவற்றை உணர்ந்துகொள்ளவும் நாட்டார் இலக்கியக்கூறுகள் ஒளிபாய்ச்சுகின்றன.

உதாரணமாக, நாட்டார் பாடல்களிலிருந்து '' உயர் '' இலக்கியத்துக்குச் சென்றடைந்த பள்ளு, சிந்து, கும்மி, குறவஞ்சி, காதல் முதலிய வடிவங்களுக்குப் பாட்டியல் ஆசிரியர்கள் — பிரபந்த இலக்கணகர்த்தாக்கள்—விசித்திரமான பல விளக்கங்களையும் வரைவிலக்கணங்களையும் கூறிச் சென்றுள்ளனர். தத்தம் புத்திக்கூர்மையையும், ஏட்டுக் கல்வியையும் துணைகொண்டு அவர்கள் கருத்துரைத்தனர். உரைகள் பெருகினவேஅன்றி, உண்மை துலக்கமடையவில்லை. வன்னிப்பகுதியில் வழங்கும் இப் பாடல்களை வாழ்க்கையின் பின்னணியில் வைத்து நோக்கும்பொழுது அவற்றின் உள்ளூரமும் உளதாம் தன்மைக்குக் காரணமும் தெளிவுறத் தெரியவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக, நாட்டுப்பாடல்களில் ஒன்றான 'பள்ளு' எழுதா இலக்கியத்திலிருந்து இடம்பெயர்ந்த ஏட்டில் எழுதப்பெற்ற — புலனெறி வழக்குச்சார்ந்த இலக்கியவடிவமாயும் உருமாற்றம் பெற்றுள்ளது. பழைய பாட்டியல்காரர்முதல் நவீன பதிப்பாசிரியர்கள் பரியந்தம் 'பள்ளு' இலக்கியத்துக்குத் திருப்திகரமான வரலாறு கூறவில்லை. வன்னிப் பிரதேசத்தில் வழங்கும் பல்வகை 'பள்ளுப்' பாடல்களை நோக்குவோர்க்கு அவை முற்றிலும் வேறுபட்டனவாய்த் தோன்றக்கூடும். பள்ளு இலக்கியங்களிற் பரிச்சயமுள்ளவர்களுக்கு இப் பள்ளுப்பாடல்கள் விசித்திரமாகவும் தோன்றக்கூடும், வன்னிக்குரிய 'பண்டிப்பள்ளு' 'குருவிப்பள்ளு' என்பன 'பள்ளு' இலக்கியத்தின் மூலப்படிவத்தைக் காட்டுகின்றன எனக் கொள்ளினும் தவறாகாது. கூர்ந்து நோக்கினால் பள்ளு நூல்கள் அனைத்துக்கும் அடிநாதமாய் அமைந்தது யாது என்பது புலப்படும். விவசாய வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களையே சகல பள்ளுகளும் விவரிக்கின்றன. புறநிலைப்பட்ட யதார்த்தம் அகநிலைப்பட்ட யதார்த்தமாகப் பள்ளுகளில் உருமாற்றம் பெற்றுள்ளது. இவ்வாறே ஏனை இலக்கிய வடிவங்களுக்கும் விளக்கம் காணலாம்; கூறலாம்.

ஆனால் ஒன்றுமட்டும் இவ்விடத்தில் கூறுதல் பொருந்தும், வரலாற்றையும் வாழ்க்கையின் வளத்தையும் பல கோலங்களில் நமக்குக் காட்டும் இத்தகைய நாட்டார் பாடல்கள் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப்படியிலே, ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நிலையிலிருந்த மக்களால் ஆக்கப்பெற்றவை என்பதை நாம் மறந்துவிடலாகாது, அந்த வரலாற்றுநிலையும் வாழ்க்கைநிலையும் மாறாமலிருக்கும் வரை அவ்விலக்கியம் மெல்ல மெல்ல இயங்கிவரும். ஆனால் அதனை அப்படியே எக்காலத்தும் செயற்கையாகப் பேணிப் பாதுகாக்க இயலாது, நமது கண் முன்னே எத்தனையோ மாற்றங்கள் நடைபெற்றுவருகின்றன. ஏற்றக்காரனுக்குப் பதிலாக நீர் இறைக்கும் இயந்திரம் வேலைசெய்கின்றது. பூச்சிநாசினிகள் பயிர்களைப் பாதுகாக்கின்றன, எருதுகளுக்குப் பதிலாக 'டிராக்டர்' உழுது விதைத்து அறுவடை செய்கிறது. கூட்டு வாழ்க்கை சிதறுண்டு தனி மனித வாழ்க்கை உருவாகி வருகிறது. இவற்றினிடையே பல பழைய பாடல்கள் மறைவது இயற்கையே. அவ்வாறாயின் நாட்டுப் பாடல்களை நாம் முற்றாக இழந்துவிடுவோமா?

அது எமது சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சியைப் பொறுத்துஇருக்கிறது. ஏகாதிபத்திய தாக்கமும், பன்னாட்டுக் கம்பனிகளும் பாதிப்பும், விதேசிய மோகமும் பெருகி நமது வாழ்க்கைமுறை முற்றிலும் மாறினால் கலாசாரமும் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாததே. ஆனால் நாட்டுப் பாடல்கள் சென்ற காலத்தின் சின்னமாக மட்டுமன்றி, உழைக்கும் மக்களின் வாழும் இலக்கியமாக—நவ நவமானஉருவம் பெறுமானால் அவை நிச்சயமாக வாழும். எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்துவளரவேண்டுமாயின், அது பேரியக்கம் ஒன்றின் அங்கமாக இருத்தல் அவசியம். நாட்டுப் பாடல்கள் வளர்ச்சி இதற்கு—இவ்விதிக்கு—விலக்கன்று. உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டார் பாடல்கள். பன்னெடுங்காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும், உரிமைக்குரலும், எதிர்பார்ப்புகளும் நாட்டுப்பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு. ஒப்பாரிகளிற்கூட நன்னம்பிக்கை தொனிப்பதுண்டு. இன்பதுன்பங்களைச் சிந்திக்கும் பாடல்களின் ஆதார சுருதியாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை பற்றுக்கோடாகக் கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதலியவற்றை ஈடுபடுத்தினால் அவை நிச்சயம் புதுவாழ்வுபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரீஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னிநாடும் தொல்லியற் சான்றுகளும்

— கலாநிதி சி. க. சிற்றம்பலம்
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*

ஈழ வரலாற்றில் கி. பி. 13-ம் நூற்றாண்டு ஒரு திருப்புமுனையாக அமைகின்றது. இக்காலத்தில்தான் தற்போதைய வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தமிழரசு வளர்ச்சி பெற்றதோடு, போர்த்துக்கேயர் இவ்வரசை அழிக்கும்வரை ஒரு செல்வாக்குள்ள அரசாகவும் விளங்கியது. யாழ்ப்பாண அரசு அழிந்தாலும் பின்வந்த டச்சுக்காரர் ஆங்கிலேயர் காலத்தில் தமிழரின் சுதந்திரத்தைப் பேணி அதற்காகப் போரிட்ட பிரதேசமாக வன்னிநாடு திகழ்ந்தது. இவ்வாறு மத்திம கால, பிற்கால ஈழ வரலாற்றில் ஒரு முக்கிய பிராந்தியமாக இது விளங்கினாலுங்கூட, இலக்கியம், தொல்லியற் சான்றுகளை உற்று நோக்கும்போது ஈழத்தின் ஏனைய பிராந்தியங்களைப் போன்று இதுவும் தமிழ்ப் பழங்குடிகள் வாழ்ந்த பிரதேசமாக விளங்கியதும் தெளிவாகின்றது. இச் சான்றுகள் பண்டைய தமிழர் கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பேயே இங்கு வாழ்ந்தனர் என்பதையும் பறைசாற்றுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் வன்னிநாடு ஒரு பரந்த பிரதேசமாக இருந்தாலும் எமது ஆய்வில் யாழ் குடாநாடு தவிர்ந்த தற்போதைய வட மாகாணத்தை உள்ளடக்கிய பிரதேசம் மட்டுமே முக்கியம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேசம் பற்றிய மிகப் பழைய சான்றுகளைத் தரும் இலக்கியமாக சிங்கள வரலாற்று நூலாகிய மகாவம்சம் அமைகின்றது. மகாவம்சத்தில் இப்பகுதி ''நாகதீப' என அழைக்கப்பட்ட பிராந்தியமாகக் காணப்படுகிறது. இந் நாகதீப பிராந்தியத்தில் தற்கால வடமாகாணம், அநுராதபுர மாவட்டம், புத்தள மாவட்டங்கள் ஆகியவை அடங்கின. நாகநாடு பற்றிய மகாவம்சம் தரும் செய்திகள் கி. மு. 5-ம், 6-ம் நூற்றாண்டைக் குறிப்பனவாக அமைகின்றன. விஜயன் வருகைக்கு முன்பு புத்தபிரான் இந் நாட்டிற்கு மேற்கொண்ட விஜயத்தைக் குறிப்பிடும்போதே நாகநாடு பற்றிய தகவலை மகாவம்சம் தருகிறது. இச் செய்தியில் நாக அரசர்கள் இருவர் பற்றிப் பேசப்படுகிறது. இராசநாய முதலியார் போன்றோர் இவ்வரசர்கள் ஆட்சி யாழ் குடாநாட்டில் தான் பரந்திருந்தது என நம்புகின்றனர். இதனால் வன்னிபற்றிய தகவல்கள் இக் கதையிலிருந்து கிடைக்காவிட்டாலும் கூட, நாகநாடு ஒரு பரந்த பிரதேசமாக அக்காலத்தில் விளங்கியதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்று காணப்படுவதும், மகாவம்சத்திலன்றி மணிமேகலையிலும் இதுபற்றிக் குறிப்பிடப்படுவதை நோக்கும்போதும், வன்னிப் பிரதேசத்திலும் நாகசிற்றரசர்கள் வாழ்ந்தவர் எனக் கொண்டால் பிழையாகாது. இத்தகைய ஒரு நம்பிக்கையை வவுனியா மாவட்டத்தில் உள்ள நாமிக் கல்வெட்டொன்றில் நாக இளவரசன் பற்றிவரும் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது. (Paranavitane. s. 1970) அத்துடன் மகாவம்சம் போன்ற பாளி நூல்களில் நாகர்கள் 'அமானுஷ்யர்கள்'' என விளிக்கப்பட்டாலும் கூட ஈழ மன்னர்களின் பெயர் அட்டவணையை நோக்கும்போதும் இப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியற் சான்றுகளை மதிப்பீடு செய்யும்போதும் நாகர்கள் மனுஷர்கள் மட்டுமன்றி இப் பிராந்தியத்தில் ஆதியில் வாழ்ந்த நாகரீகமுள்ள குடிகள் என்பதும் தெளிவாகிறது.

ஈழத்திற்கு நாகரிகத்தை இட்டுவந்தவர்கள் வட இந்தியாவிலிருந்து இங்கு வந்த தற்காலச் சிங்கள மக்களின் மூதாதையரான ஆரியரே என்ற கருத்து தற்போதைய தொல்லியல் ஆய்வில் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகவே காணப்படுகின்றது. இதனால் இற்றைவரை இந் நாட்டில் ஏற்பட்ட ஆதிக் குடிகள் வட இந்தியாவிலிருந்தே இங்கு புகுந்தனர் என்ற கருத்தும் ஆட்டங்கண்டுள்ளது. இதற்கு மாறாக வரலாற்று உதய காலத்தில் நாகரிகத்தை உருவாக்கியவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்குவந்த பெருங் கற்காலப் பண்பாட்டை உருவாக்கிய திராவிடரே என்ற கருத்து மேலோங்கி இருக்கிறது. (Sitampalam. S. K, 1980) ஈழம் முழுதும் வியாபித்துக்காணப்படும் தொல்லியற் சான்றுகள் இக் கருத்தினை உறுதிப்படுத்துகின்றன. இப் பெருங் கற்காலப் பண்பாட்டின் அச்சாணியாக ஈமச் சின்னங்களே அமைந்தன. இவ் ஈமச் சின்னங்கள் பெரிய கற்களை உபயோகித்து இறந்தோர் அடக்கங்கள்மீது எழுப்பப்பட்டன. இருந்தும் இச் சின்னங்களில் பல வகைகள் காணப்பட்டன. இறந்தோர் எச்சங்களைக் கல்லறையில் அடக்கம் செய்தல், கல்வட்டங்களில் அடக்கம்செய்தல், தாழிகளில் அடக்கம் செய்தல், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் இவற்றுட் சிலவாகும். இக் கல்லறைகள் சதுரமாக அல்லது நீள் சதுரமாக நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட பெரிய கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டவையே. இவற்றுள் சில நிலத்துள் மறைந்திருக்க, ஏனையவற்றின் பக்கக்கற்கள் நிலத்தின்மேலே காணப்படுவதும் வழக்கு.

பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் மேற்கூறிய ஈமச் சின்னங்களை அமைத்ததோடு, குளங்களை அமைத்து நீர்ப்பாசன விவசாயத்திலும் ஈடுபட்டவர்களாகும். மந்தைவளர்ப்பும் விவசாயமும் இவர்களின் பிரதான தொழில்களாக அமைந்தன. அன்றாட தேவைகட்கு இரும்பாயுதங்கள், கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். பெரும்பாலும் இவர்கள் குடியிருப்புகள் குளங்களை அண்டி அமைய இவற்றுக்கருகில் விவசாயக் காணிகள் விளங்க, உழவுக்குப் பயன்படாத அண்மித்த தரிசு நிலங்களில் இறந்தோரை அடக்கஞ்செய்து ஈமச் சின்னங்களை எழுப்பினர்.

தென்னிந்தியாவில் வரலாற்று உதய காலப் பண்பாடாகப் பெருங்கற்காலப் பண்பாடு விளங்குகிறது. ஈழத்திலும் அநுராதபுரம், கந்தரோடை, மாதோட்டம், பொம்பரிப்பு, திசமகாராம, கதிரவெளி ஆகிய இடங்களில் பரவிக் காணப்படும் இப் பண்பாட்டுச் சின்னங்கள் ஈழத்து நாகரிகத்துக்கு வித்திட்டவர்கள் வரலாற்றுதய காலத்தில் சிறந்து விளங்கிய இப் பெருங்கற்காலப் பண்பாட்டினரே என்பது தெளிவாகிறது. இதனால் ஈழமும் தென்னகமும் வரலாற்று உதய காலத்தில் ஒரே கலாச்சார அமைப்பில் திகழ்ந்தன என்பது தெரிகிறது. தென்னகத்தில் இதன் தோற்றம் கி. மு. 1000 எனக் கொள்ளப்பட்டு, சங்கத்தமிழர் இலக்கியங்களே இப் பண்பாட்டை விபரிக்கும் திராவிடரின் ஆதி இலக்கியங்கள் எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பப்படுகிறது. இதனால் இப் பண்பாட்டை உருவாக்கியவர்கள் திராவிடர் என்பதை மொழியியல், மானிடஇயல், தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஈழத்திலும் அனுராதபுரம், பொம்பரிப்பு, கந்தரோடை ஆகிய ிடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதன் தோற்றம் கி. மு. 500 ஆண்டுகளாக அமைந்திருக்கலாம் என எடுத்துக்காட்டியுள்ளன. சுருங்கக் கூறின் கட்டுக்கதையான விஜயன் சகாப்தத்தில்தான் பெருங்கற்காலப் பண்பாடு ஈழத்தில் பரவியது எனலாம் (Seneratne S. P. F. 1969)

ஆதியில் வன்னிப் பகுதியும் இப் பண்பாடு தழைத்த பகுதிகளில் ஒன்ருகும். மகாவம்சம், மணிமேகலை, ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் கூறும் நாகர்கள் வாழ்ந்த இடம் இதுவாகும். நாகர்கள் சகாப்தமும் அநேகமாக இப் பண்பாடு இங்கு புகுத்தப்பட்ட காலமாக இருப்பதால், இந் நாகரை இதன் வழிவந்தவர்கள் எனவும் கூறிவிடலாம். வவுனியாவிலுள்ள மாமடுவ மன்னுரிலுள்ள மாதோட்டம் ஆகிய பகுதிகளில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கான தடயங்கள் காணப்படுகின்றன. இன்னும் இப் பிராந்தியத்தின் ஆதிக் குளங்களை அண்டியுள்ள பகுதிகளில் தக்க மேலாய்வு செய்யின் இப் பண்பாடு பற்றிய பல புதிய தகவல்கள் கிட்டும். பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த ஈமச்சின்னங்கள் காணப்படும் மாமடுவ என்ற கிராமம், மாமடுவ குளத்திற்கு அண்மித்து காணப்படுகிறது. ந்ற்காலத்தில் வன பரிபாலனப் பகுதி இப் பகுதியில் காட்டுமாங்களை நாட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, பல ஈமச்சின்னங்கள் அழிக்கப்பட்டாலும், கட்டுரையாசிரியர் இப் பகுதியில் மேலாய்வில் ஈடுபட்டிருந்தபோது ஓரளவுக்கு இவைபற்றிய தகவலை அவரால் பெறமுடிந்தது. பெரும்பாலும் கல்லறைகளின் வெளித்தோற்றம் நிலத்திற்குமேல் தென்பட்டன. பொதுவாக நான்குபக்கக் கற்கள் உள்ள கல்லறைகள் எண்ணிக்கையில் குறைந்து காணப்பட்டன. சில நிலத்துள் மறைந்து காணப்பட ஏனையவற்றின் பக்கக்கற்கள் அயல் கிராமவாசிகளால் சூறையாடப்பட்டும் விட்டன. சிலகல்லறைகள் $1\frac{1}{2}$ தொடக்கம் 2 மீற்றர் நீள அகலம் உள்ளவையாக அமைய இன்னும் சில $2\frac{1}{2}$ மீற்றர் நீளமாகவும் காணப்பட்டுள்ளன. வழக்கமாக இக் கல்லறையின் பக்கங்கள் $1\frac{1}{2}$, 2 மீற்றர் அளவுள்ளனவாக அமைந்தன. இக் கல்லறைகளில் இறந்தவர்களின் எலும்புகளும்அவர்கள் உபயோகித்த பொருட்களும் புதைக்கப்படுவது வழக்கம். சில கல்லறைகளின் மூடிகள் நகர்த்தப்பட்டும் காணப்படுகின்றன. இச் சின்னங்களுக்கு அண்மையில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களின் இன்னெரு பிரிவாகிய கல்வட்டங்களும் காணப்படுகின்றன. இக் கல்வட்டங்களில் பெரிய கற்கள் கிணறு போன்ற தோற்றத்தில் அடுக்கப்பட்ட நிலையில் உள. இவற்றின் நடுவில் இறந்தோரை தாழ்த்தல் மரபாகும். சாதாரணமாக இவ் வட்டங்களின் விட்டம் 3 மீட்டராக உள்ளது. இவ் வட்டங்களில் அகழ்வு மேற்கொளின் வவுனியா மாவட்டத்தின் ஆதிமனித எச்சங்கள் கிடைக்கப் பெறலாம்.

மாதோட்டம் ஈழத்தின் ஆதித் துறைமுகமாகும். இந்திய - ஈழ மக்கள் நடமாட்டத்தில் ஒரு மையப் பிரதேசமாக இது அமைந்திருந்தது வரலாறு. ஈழத்திற்கு வந்த விஜயன் கூட்டத்தினர் முதல் அமைத்த (தம்பபண்ணி என்ற) குடியேற்றம் இப் பகுதியிலே அமைந்தது என்பர் அறிஞர். (Maloney 1968) காலகதியில் தம்பபண்ணி ஈழம் முழுவதற்கும் உரிய பெயராக மாறியதென்பர். தம்பபண்ணி அல்லது தாம்ர வர்ணி என்பது தென்பொன்னி அல்லது தண்பொன்னியின் பிராகிருத சமஸ்கிரித வடிவங்களே. எனவே பாண்டி நாட்டிலிருக்கும் பொன்னி ஆறே இவ்வாறு வடமொழியில் தாம்ரபர்ணியாக மாறியது என்பர் அறிஞர். இதனால் பொன்னிநதி தீரத்திலிருந்து ஈழம் வந்தவர்களும் வந்திறங்கிய பகுதிக்கு தாம்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்ணி அல்லது தம்பபண்ணி எனப் பெய ரிட்டார்கள் எனக்கொள்ளலாம். பாண்டி நாட்டில் இவ்வாறு அமைந்திருந்ததும், பாண்டிநாட்டுடன் ஆதியில் விஜயன் போன் ேறார் கொண்டிருந்த தொடர்பு பற்றிய கர்ண பரம்பரைக்கதைகளும். மன்னருக்கு அண்மித்து பாண்டி நாட்டிலுள்ள புகழ் பூத்த தாழிக்காடாகிய ஆதிச்சநல்லூரின் நேரெதிரில் ஈழத்திலுள்ள புத்தள மாவட் டத்தின் பொன்பரப்பு காணப்படுவதும் பாண்டி நாடு ஆதியில் ஈழக் குடியேற்றத் தில் பெற்ற பங்கு தெளிவாகிறது. மகா தீர்த்த என்ற பாளி வடிவம் கூட மாதோட் டம் அல்லது பெருந்துறையின் பிராகிருத வடிவமே. பெருந்துறைகூட தமிழ் நாட்டி லுள்ள திருப்பெருந்துறையை நம் மனக்கண் முன்னே நிலைநிறுத்துகிறது.

மாதோட்ட அகழ்வுகள் 19-ம் நூற்றுண் டிலேயே தொடங்கிவிட்டன. (Boake. 1887) போக் என்ற அறிஞரே இப்பகுதியில் அகழ்வை மேற்கொண்டிருந்தார். இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் யாழ் குடா நாட்டில் சேர்போல் பிலிஸ் மேற்கொண்ட அகழ்வுகள் போன்றே இவரது அகழ்வும் முக்கியம் பெற்றிருந்தது. இருவரும் முறை யாக அகழ்வில் பயிற்சி பெற்றிருக்காவிட் டாலும் கூட, இவர்கள் அன்று தீர்க்கதரி சனத்துடன் கூறிய கருத்துக்களை இப்பகுதி களின் பின்பு மேற்கொள்ளப்பட்ட அகழ் வுகள் உறுதிப்படுத்தியதை நோக்கும் போது ஈழத்தின் ஆதிக் குடியேற்றம்பற்றி இவர்க ளிடமிருந்த தெளிவான சிந்தனை வெளிக் காட்டப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தின் ஆதிக் குடியேற்றத் தமிழக மக்களால், விஜயன் பிறப்பதற்குப் பல நூற்றுண்டு கட்கு முன்பே, அதுவும் அவர்கள் கடல் பிரயாணம் பற்றிப் பயிற்ச்சி பெற்றதுடன் தமிழக மக்களால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது எனப் போல் பீரிஸ் கூற, போக்கும் தென் னிந்தியாவுக்கு அண்மித்துள்ள மாந்தை இப்பகுதி மக்களால் மிக ஆதி காலத்திலேயே குடியேறப்பட்ட பிரதேசம் என எடுத்துக் காட்டினர். இப்பகுதியில் மலிந்து கிடந்த முத்து. சங்கு வளம் இப்பகுதியை ஒரு ஈர்ப்புப் பிரதேசமாக வைத்தது. போக்கின் ஆய்வு மூலம், எலும்புகள், மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், இரும்பு. வெண்கல உபகரணப் பொருட்கள், மணிகள், அம்மி-குழவிகள், ஆகியன வெளிக் கொணரப்பட் டன. இங்கு கிடைத்த மட்பாண்டங்களையும் ஏனைய சின்னங்களையும் போக், சமகாலத் தில் பாக்கரால் (Parker. 1885) திஸமகா ராமாவில் வெளிக்கொணரப்பட்ட தொல் லியற் சின்னங்களோடு ஒப்பிட்டு, இவற் றுக்கிடையில் இளைவிட்டோடும் ஒற்றுமை யும் இவரால் உணரப்பட்டது. இவரைத் தொடர்ந்து கோகாட் என்ற அறிஞர் இப் பகுதியில் அகழ்வை மேற்கொண்டு பலவித மட்பாண்ட வகைகள் பற்றி விவரித்துள் ளார். இருந்தும் இவரது ஆய்வறிக்கை பூரணமாக வெளிவராத நிலையில் இவை பற்றிய விவரம் நமக்குக் கிட்டவில்லை. இருந்தும் மாதோட்டம்பற்றிய பல புதிய தகவல்கள் இந்நூற்றுண்டின் நடுப்பகுதி யில் வெளிவந்துள்ளன. இவ்வாய்வுக்கும் பொறுப்பாக இருந்தவர் மறைந்த திரு. சண்முகநாதனே. (Vaithianathan K. 1960) -1951—3 ம் ஆண்டுகளில் இவர் மேற் கொண்ட ஆய்வு மூலம் மனித எலும்புக் கூடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பூரணமான நிலையில் அமைந்திருந் தது. இவ் எலும்புக்கூடு நிலத்திலிருந்து 1·4 மீற்றர் ஆழத்தில் அகழ்ந்தெடுக்கப் பட்டது. இதன் தலை மேற்குத் திசைநோக் கியும், கால்கள் கிழக்குத் திசைநோக்கியும் புதைக்கப்பட்டிருந்தன. இதன் இருபகுதிக ளிலும் காணிக்கைப் பொருட்களாக மட் பாண்டங்கள் காணப்பட்டன. சுமார் 6 அடி இதன் நீளமாகும். இவ் எலும்புக் கூட் டின் சிறப்பம்சம் யாதெனில் இதன் கைகள் இரண்டும் உடம்பின் அரைப்பகுதி யில் கைகட்டிய நிலையிலிருப்பதே. இதற் கும் அண்மையில் யாழ். பல்கலைக்கழக வர லாற்றுத்துறையினரால் ஆனைக்கோட்டைக் கும்பிகளொன்றில் அகழ்ந்தெடுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ இலக்கமுடைய எலும்புக் கூட்டுக்குமி டையே காணப்படும் ஒற்றுமை கட்டுரை யாசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. (Sitrampalam 1982). எவ்வாறுயினும் மாதோட்ட எலும்புக்கூடுபற்றிச் சண்முக நாதன் சரியான தகவல் தராவிட்டாலும் கூட, இதன் அமைப்பைப் பார்க்கும்போது ஆனைக்கோட்டை போன்று பெருங்கற்கா லப் பண்பாட்டு அடக்க முறைகளில் ஒன்று னதும், சங்க இலக்கியங்கள் பேசும் 'தொடுகுழிப்படுத்தல்' முறையே இது எனக் கொள்ளுவதும் பொருத்தமானதாகும். இக் கருத்தையே இவ்வெலும்புக் கூட்டினை ஆராய்ந்த பேராசிரியர்களாகிய சண்முகம், ஜெயவர்த்தனு ஆகியோரும் வெளியிட்டுள் ளனர். இவர்கள் இது தென்னிந்திய மக்களது எலும்புக் கூடென்றே அறிதியிட் டுக் கூறியுள்ளனர் (Chanmugam and Jayawardene 1954) இவ்வாறு நோக்கும் போது வட மாகாணத்தில் கிடைத்த முதல் எலும்புக்கூடாக மாந்தை எலும்புக்கூடு அமைவதோடு, அதுவும் தென்னிந்திய மக் களுடையதாக இருந்ததை மாலிட இயல் வல்லுனர்கள் கூறுவதுஇலக்கிய ஆதாரங்களை நிரூபிக்கும் சான்றுகவும் அமைந்துள்ளது. ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பில் கிடைத்த எலுப்புக் கூடுகள் பெருங்கற் காலப் பண்பாட்டை உருவாக்கிய திராவிட ருடையதே என்று கென்னடி கூறியுள்ளார் Kennedy 1975). பண்டைய நாகதீபப் பிராந்தியத்தில், புத்தளமாவட்டமும் அடங் கியிருந்தது. எனவேதான் நாகர் என மகாவம்சம் விளக்கும் மக்கட் கூட்டத்தி னர் பெருங்கற்காலப் பண்பாடு வழிவந்த மனுஷர்களே ஒழிய, மகாவம்சம் குறிப் பிடுவது போல் அமா னுஷ்யர்கள் அல்லர் என மேலே கண்டோம். தொல்லியற் சான்றுகளான பெருங்கற்கால ஈமச்சின்னங் கள் கானப்படும் கந்தரோடை, அநுராத புரம், பாதோட்டம், பொம்பரிப்பு ஆகி யவை வரலாற்றுதய காலத்தில் ஆதிக் குடியேற்றங்கள் அமைந்த பிரதேசங்க

ப. வ். 2

ளாகும். பொதுவாக ஆதிக்குடியேற்றங்கள் கடற்கரைப்பகுதியிலமைவதும், நீர், நிலவ சதி, ஏனைய பொருளாதார வாய்ப்புக்களை நோக்கிக் காலகதியில் இவை உள்நோக்கி நகர்வதும் வரலாற்று நியதிகள். இவ்வாறே ஈழத்தின் ஆதிக்குடியேற்றங்களும் கடற்க ரையை அண்டிய பகுதிகளிலமைந்தன. மாந்தை பொம்பரிப்பு, ஆகியவை இவற் றில் குறிப்பிடத்தக்கது. மாந்தைக்கும் பூநகரி மாவட்டத்திலுள்ள கல்முனைக்கு மிடைப்பட்ட பகுதிகளும் ஆதியில் முக்கி யம் பெற்ற பிரதேசங்கள். கல்முனை பற்றி கிரேக்க அறிஞர்கள் குறிப்புக்களும் உள. இவற்றுக்கிடைப்பட்ட பிரதேசங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தால் நல்ல பயன் கிடைக்கும்.

கரையோரக் குடியேற்றத்தின் அடுத்த கட்டமாகவே உள்நாட்டுக் குடியேற்றங்கள் அமைந்தன. இவற்றில் ஈழத்தின் ஆதித் தலைநகராகிய அனுராதபுரம் குறிப்பிடத் தக்கது. இவ்வாறே வவுனியாவும் அமைந் ததை இங்கு கிடைத்துள்ள பெருங்கற் காலச் சின்னங்கள் எடுத்துக்காட்டுகின் றன. இவற்றை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் இம்மாவட்டத்திலுள்ள பிரா மிக்கல் வெட்டுக்கள் அமைந்துள்ளன. பிராமிவரி வடிவம் ஈழத்தின் ஆதி வரி வடிவமாகும். இதிலிருந்தே தற்கால சிங்கள, தமிழ் வரிவடிவங்கள் வளர்ச்சி பெற்றன. இப்பிராமி வரிவடிவம் இரு அலைகளாக ஈழத்துக்கு இந்தியாவிலிருந்து புகுத்தப் பட்டது. ஆதிவடிவம் தென்னகத்திலிருந் தும், பின்வந்த வரிவடிவம் வட இந்தி யாவிலிருந்து பௌத்தம் இங்கு கால் வைத்தபோதும்,புகுத்தப்பட்டன. இருந்தும் பௌத்த அலை காலகதியில் தென்னகத்தி லிருந்து புகுந்த ஆதி வரிவடிவத்தை விழுங் கியது வரலாறு. எவ்வாறுயினும் வவுனியா மாவட்டத்தில் பிராமிக்கல் வெட்டுக்கள் மகாகச்சக் கொடி, எருப்பொத்தானை, பெரிய புளியங்குளம், வெடிக்கனுரிமலை ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமாக இவற்றில் 51 கல்வெட்டுக்கள் உள. இவற்றின் காலத்தை கிமு. 2 ம் நூற்றுண்டாகக் கொள்ளலாம்.

இக்கல்வெட்டுக்களில் பெரியபுளியங்குளத்தில் காணப்படும் இருகல்வெட்டுக்கள் பல விதத்திலும் முக்கியமானவை. இவற்றில் முதல் முதலாக 'தமிழ' என்ற சொல்லுக்காணப்படுகிறது. இதேகாலத்தில் 'சிங்கள' என்ற சொல்லு, ஒரு மொழிக் கூட்டத்தினரைக் குறிப்பதே இதன் முக்கியத்துவமாகும். சிங்கள என்ற வடிவம் கி. பி. 3 ம் நூற்றுண்டுக்குப் பிந்தியதே. அதுவும் ஒரு மொழிக் கூட்டத்தினருக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக முதலில் நாட்டிற்கு இடப்பட்ட பெயராகவும் காலக்கதியில் ஒரு மொழிக் கூட்டத்தினருக்கு இடப்பட்ட பெயராகவும் இலக்கியங்களில் காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் வவுனியாவில் 'தமிழ' எனக் குறிக்கும் இக் கல்வெட்டுகளின் முக்கியம் வெள்ளிடை மலே. இதில் முதலாவது கல்வெட்டு 'இல்வாழ்வானுன தமிழ் வணிகன் விசாகன் குகை' எனக் குறிக்க, அடுத்த கல்வெட்டு தமிழ் வணிகனுகிய விசாகன் (பௌத்த) குகை ஒன்றுக்கு அமைத்த படிக்கட்டுக்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்குகைகள் பௌத்த மதப்பிரிவினரதே. எனவே விசாகனது குகை என்று நோக்கும் போது தமிழ்வணிகன் பௌத்த நாமத்துடன் பௌத்தனுக விளங்கியது தெளிவாகிறது. விசாகன் அமைத்த படிக்கட்டுகள் கூட தமிழ் வணிகர் பௌத்தத்துக்கு ஆற்றிய தொண்டினைப் பறைசாற்றுகிறது. இவனும் பௌத்தனுக இருந்ததால்தான் இவ்விதம் பௌத்த மதத்திற்கான பணிகளில் ஈடுபட்டிருக்கமுடியும். எவ்வாருயினும் இவ்விரு கல்வெட்டுகளும் தமிழர் பௌத்தர்களாக இருந்ததை எடுத்துக்காட்டுவதோடு பௌத்த மதச் செல்வாக்கால் தமது பெயர்களையும் மாற்றியமையையும் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் இக்கல்வெட்டுக்களில் வரும் 'தமிழ' என்ற பதத்தில் உள்ள 'ழ' எழுத்து மிக முக்கியமானது. இவ்வெழுத்து தமிழுக்கே தனிச் சிறப்பாக அமைந்தது. இவ்வாறு நோக்கும் போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட சில நூற்றுண்டுகளில் தமிழைப் பேசும் மக்கட் கூட்டத்தினர் இப்பகுதியில் வாழ்ந்தது தெளிவாகிறது. தமிழ் நாட்டிலும் மாங்குளம் போன்ற இடங்களில் இத்தகைய 'ழ' வடிவம் கல் வெட்டுக்களில் வருவது ஈண்டு நோக்கற்பாலது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட சில நூற்றுண்டுகளில் தமிழைப் பேசிய மக்கட் கூட்டத்தினர் ஆதி ஈழத்தில் வகித்த பங்கினைப் பற்றி மகாவம்சம் போன்ற சிங்கள வரலாற்று நூல்களும் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்று பகருகின்றன. மகாவம்சம் தமிழகத்தைச் சேர்ந்த சேனன், குட்டிகன் ஆகிய குதிரை வணிகர் ஆட்சியைக் கைப்பற்றியதையும், பின்னர் தமிழ் மன்னனுகிய எல்லாளன் அநுராதபுரத்தைத் தலைநகராக வைத்து ஈழம் முழுவதையும் ஆண்டதையும் குறிப்பிடுகிறது. அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றும் தமிழ் வணிகக் குழுவினரது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நோக்கும் போது தமிழ் நாட்டிலிருந்து மக்கள் குழுவினர் வியாபாரம் அல்லது அரசியல் ஆதிக்கம் வேண்டி ஈழத்துக்கு வந்து செல்வாக்குப் பெற்றதும் புலனுகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் நடைபெற்ற குடியேற்றங்களும் இத்தன்மை வாய்ந்தனவே. வன்னி நாட்டின் ஆதிக்குடியேற்றத்தில் வியாபார நோக்கும் ஒரு முக்கிய பங்கினை வகித்ததை இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பிராமிக் கல்வெட்டுக்களில் சில குறியீடுகள் காணப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் ஈழத்துப் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களிலும் காணப்படுவது பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் இப்பிராமிக் கல்வெட்டுக்களை எழுதிய மக்களுக்கும் இடையே இணைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே வன்னிநாட்டில் ஆதியில் சிற்றரசுகள் இருந்தது எனக்கண்டோம். இத்தகைய அரசியலமைப்பில் பிரமுகர்கள் என வடமொழியில் பின்பு வழக்கில் வந்த "பெருமகன்" போன்ற நிர்வாகக்குழுவினர் முக்கியம் பெற்றதையும் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்திலும் தமிழகத்திலும் ஆதி நிர்வாகத்தில் இக் கூட்டத்தினர் முக்கிய பங்கினை வகித்தனர் இத்தகையதொரு அமைப்பு வன்னி நாட்டிலிருந்ததை நோக்கும் போது தமிழகத்தைப் போன்று 'பெருமகன்' எனப்பட்ட பிரபுக்கள் கூட்டம் அக்கால அரசியலில் முக்கியம் பெற்றது தெளிவாகிறது. இவர்களோடு பல குலங்களும் வன்னி நாட்டில் வாழ்ந்தன. இக்கல் வெட்டுக்களில் 'வேள்' 'பரதவர்' போன்ற குலங்கள் குறிக்கப்படுகின்றனர். பரதவர் பாண்டிநாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து முத்துக்குளித்தல், வியாபாரம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டதைச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இதனுல் வியாபார நோக்கிற்காக இவர்கள் ஈழத்துக்கும் வந்தது புலனுகின்றது. மன்னுர் குடாவில் செழித்து வளர்ந்த முத்துக்குளிப்பு, சங்குக் குளிப்பு இவர்களுக்கு ஏற்ற தொழில்களாக அமைந்தன. அடுத்து முக்கியம் பெறுவதுதான் 'வேள்கள்'. சங்க இலங்கியங்கள் இவர்களை விவசாயப் பெருமக்களாகவும், குறுநிலமன்னர்களாகவும் விளிக்கின்றன. வன்னிநாட்டிலும் இவர்கள் ஆதியில் விவசாயிகளாகவும், நிலக்கிழார்களாகவும் வாழ்ந்ததை இக்கல் வெட்டுக்கள் குறிக்கின்றன எனலாம்.

வன்னி நாட்டின் ஆதிக்குடியேற்றத்தில் தமிழர் பெற்ற செல்வாக்கை மேற்கூறிய சான்றுகளோடு இங்கு காணப்படும் தூய தமிழ் இடப்பெயர்களும் எடுத்துக் காட்டுகின்றன. இடப் பெயர்கள், ஆறுகள் ஆகியவற்றில் இவ்வாருன பழைய பெயர்களைக் காணலாம். அத்துடன் சங்க இலக்கியங்களில் வன்னி நாட்டின் பெயர் பெற்ற துறைமுகமாகிய மாந்தை பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. சேரர் இதில் கொண்டிருந்த ஆதிக்கத்தை இவ்விலக்கியங்களில் வரும் குட்டுவன் மாந்தை போன்ற தொடர்கள் எடுத்துக்காட்டுகின்றன. சேரர்கள் கடற்படை வலிமைபடைத்தவர்கள். எனவே ஆதியில் இப்பகுதியில் தமது ஆதிக்கத்தையும் செலுத்தியிருக்கலாம் எனக் கொண்டால் பிழையாகாது. இதன் ஆதிக்கத்துக்காக இதற்கு நேரெதிரிலிருந்த பாண்டியரும் சோரும் பொருதும் இருக்கலாம்.

மன்னுர் குடாவில் கலக்கும் ஆற்றை இன்று மல்வத்து ஓயா என அழைக்கின்ருேம். மகாவம்சம் போன்ற இலக்கியங்களில் இது கடம்பநதி என அழைக்கப்படுகின்றது. கடம்பர்கள் இப்பகுதியில் குடியேறியதாலோ அன்றி முருகனுக்குச் சிறப்பான மரமாகிய கடம்ப மரங்கள் செறிந்து காணப்பட்டதாலோ இது இப் பெயரால் இவ்வாறு அழைக்கப்பட்டதோ தெரியவில்லை. இருந்தும் கடம்ப நதி என்ற பெயர் முக்கியமானது. தமிழ் நாட்டில் கடம்பர்கள் இங்கு வாழ்ந்த சாதிக் குழு மக்களில் ஒருவராகப் புறநானூற்றில் குறிப்பிடப் படுகின்றனர். இதனுல் ஒரு சமயம் இக் குழுவினர் ஆதியில் ஈழத்துக்கும் வந்தனர் எனவும் கொள்ளலாம். கடம்ப மரங்களால் இந்நதி பெயர் பெற்றதெனில் இது இங்கு செல்வாக்குப் பெற்றிருந்த முருக வழிபாட்டிற்கு அசையாத சான்ருகும்.

இப்பிராந்தியத்தில் அமைந்த பொம்பரிப்பிலும் முருகனது வேல் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தாழிகளில் கண்டெடுக்கப்பட்டதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்நாட்டு இலக்கியங்களிலும் முருகன், உப்புலவன் எனப் பாளி மொழியில் அழைக்கப்பட்ட சங்கத்தமிழன் முதல் தெய்வமாகிய மாயோனுக்கு அடுத்ததாக முக்கியம் பெற்ற கடவுளாகப் பண்டைய ஈழமக்களால் வழிபடப்பட்டான். இதே போன்றுதான் சிவவழிபாடும். பிராமிக்கல் வெட்டுக்களில் வரும் 'சிவ' என்ற பதங்கள், மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம் போன்ற நூல்களில் சிவ வழிபாடு பற்றி வரும் செய்திகள், ஆதியில் பௌத்தம் இங்கு கால் வைக்க முன்பே சிவவழிபாடு ஒரு முக்கிய வழிபாடாக இருந்ததை உணர்த்துகின்றன. இதனால் திருக்கேதீஸ்வரத்திலும் காணப்படும் சிவஸ்தலம் கிறிஸ்தவ சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பே முக்கியம் பெற்ற ஒரு தலமாக வளர்ச்சி பெற்றுவிட்டது எனக் கொள்ளலாம். இவற்றைவிட வன்னிநாட்டில் சுடுமண்பாவைகளிலமைந்த ஆதி வழிபாட்டுச் சின்னங்கள் கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம் வவுனியாவிலுள்ள மாமடுவ ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இப்பாவைகளில் பிரதானமானவை பெண்பாவைகளே. ஆதியில் மக்கள் நிலமகளைத் தெய்வமாக உருப்படுத்தி வழிபட்டதை இது எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய வழிபாட்டுக்கான சான்றுகள் ஈழத்தின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இவற்றோடு லிங்க வழிபாட்டைக் குறிக்கும் வ்தத்திலமைந்த லிங்கங்களும் காணப்படுகின்றன.

வன்னி நாட்டில் பழமையை எடுத்துக் காட்டுவதில் முல்லைத்தீவு மாவட்டம் பின் நிற்கவில்லை. முல்லைத்தீவில் வரும் 'முல்லை' என்ற பதம் சங்க இலக்கியங்களில் வரும் முல்லை நிலத்தை — காடடர்ந்த பகுதியை ஞாபகப்படுத்துகின்றது. இங்கும் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு தென்னந் தோட்டத்தில் ஈழத்தின் ஆதி நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இத்தகைய நாணயங்கள் மாதோட்டத்திலும் உள. இவற்றை அறிஞர் 'புராண' அல்லது அச்சுக்குத்திய நாணயங்கள் (Punch marked coins) என அழைப்பர். ஈழத்திலும் இந்தியாவிலும் வழக்கிலிருந்த ஆதி நாணயங்கள் இவையாகும். கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பே சில நூற்றாண்டுகளாக இவற்றை மக்கள் உபயோகித்தனர். இந்நாணயங்களில் 51 புராண நாணயங்களும் 16 செம்பு நாணயங்களும் கண்டெடுககப்பட்டன. (Parker 1909). செம்பாலா நாணயங்கள் காலத்தால் அச்சுக்குத்திய (புராண) நாணயங்களுக்குச் சற்றுப் பிந்தியவை. பழைய புராண நாணயங்களில் வழக்கமாக யானை, எருது, சூரியன், நாய், மலை, மீன் போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன. இவை வெள்ளியால் செய்யப்பட்டவை. இத்தகைய நாணயங்களில் ஈழத்தின் வடபகுதியிலுள்ள கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அண்மையில் கட்டுரை ஆசிரியர் மேலாய்வில் ஈடுபட்டபோத, இக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான திரு. ஆ. தேவராசன் இத்தகைய நாணயம் ஒன்றை வல்லிபுரக் கரையிலுள்ள குடத்தனையில் கண்டெடுத்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் இத்தகைய ஆதி நாணயங்கள் முல்லைத்தீவில் கண்டெடுக்கப் பட்டமை இந்பிராந்தியத்தின் ஆதி வரலாற்றுக்கு ஒரு அசையாத சான்றாக அமைந்துவிடுகிறது.

எனவே கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முந்திய வன்னி பற்றி நாம் இன்று ஆராயும்போது இப் பிராந்தியம் பற்றி பல அரிய தகவல்களைத் தந்த லூயிஸ் (Lewis J. P. 1895) நவரத்தினம் (Navaratnam 1960) போன்றோர் காலத்தைவிட பலபடிகள் முன்னேறிய நிலையில் உள்ளோம். ஈழத்தின் ஆதிக்குடியேற்றம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களாலேயே ஆரம்பமாகியது. இதற்கான சான்றுகள் வவுனியாவில் காணப்படுகின்றன. பாளி நூல்கள் விவரிக்கும் நாகர்கள் மனிதர்கள். இவர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை உருவாக்கிய திராவிடர்கள். இவர்கள் மனிதரே என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் மாதோட்டம், பொம்பரிப்பு போன்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் அமைகின்றன. இந்நிகழ்ச்சிகள் யாவும் வரலாற்றுதயகால நிகழ்ச்சிகளே. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த குறுணிக்கற்களால் அமைந்த ஆயுதங்கள் மாங்குளம் போன்ற இடங்களில் காணப்படுவதால் திராவிடர் இங்கு வரமுன்பு நாகரீக நிலையில் தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்திருந்த வேடர்களின் முன்னோடிகளாகிய குறுணிக்கற்கால மக்களும் இங்கு வாழ்ந்தது புலனாகின்றது.

வரலாற்றுக் காலத்திலும் வன்னி மையப் பிரதேசமாக விளங்கியது தெளிவாகின்றது. மாதோட்டம் பற்றிய இலக்கிய தொல்லியல் தகவல்கள் வவுனியாவிலுள்ள பெரிய புளியங்குளத்திலமைந்த தமிழ என்ற பெயர் கொண்ட பிராமிக்கல் வெட்டுக்கள், முல்லைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட ஆதி நாணயங்கள். கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னிநாடு ஈழத்தின் ஏனைய பகுதிகள் போன்று நாகரிக நிலையில் வளர்ச்சிபெற்றதையும், இங்கு சிற்றரசுகள் தளைத்ததையும் எடுத்துக்காட்டுகின்றன.

பொதுவாக வன்னியர் குடியேற்றத்தை மையமாக வைத்தும், வன்னிச் சிற்றரசுகளின் எழுச்சியைக் கொண்டும் வன்னி நாடு மத்தியகால ஈழவரலாற்றில் முக்கியம் பெற்றாலும் கூட தமிழர்களின் ஆதிக் குடியேற்றம் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பே பல நூற்றாண்டுகட்கு முன்பே இப்பிராந்தியத்தில் ஏற்பட்டுவிட்டது. இக்கூற்றினை இலக்கியச் சான்றுகளை விட நம்பகரமான சான்றுகளைத் தரும் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

---

## Bibilography


BOAKE : W. J. S. 1887 Tirukketiswaram Mahatirtha, Matoddam or Mantoddai *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*. Vol X No. 35, pp. 107—114

CHANMUGAM P. K. &
JAYAWARDENE F. L. W. 1954 "Skeletal remains from Tirukketiswaram" *Ceylon Journal of Science Section G.* Vol. V. Part 2. pp 62—68

KENNEDY K. A. R. 1975 *The Physical Anthropology of the Megalith builders of South India and Sri Lanka* (Canberra)

LEWIS J. P. 1895 *Manuel of the Vanni*

Maloney. C. T. 1968 *The effect of Early coastal Traffic on the development of Civilization in South India* Unpublished Ph. D. Thesis, University of Pennysylvania, Psnnysylvania.

NAVARATNAM C. S. 1960 *Vanni and the Vanniyas* (Jaffna).

PARANAVITANE S. 1970, *Brahmi Incriphous of Ceylon Archaeological Survey of Ceylon*, Celombo.

PARKER H. 1885. Report of t e Archae logical dis coveries of Tjssamaharama in the Southern Province *Journal of the Ceylon Branch of the Royal Asiathic Society* Vol VIII No 27 pp 95—192.

PARKER H. 1909. *Arcieut Ceylon* (Lorb)

SENARATNE S. P. E. 1969. *Pre-histrory Archaelogy of Ceylon* (Colombo).

SITRAMPALAM S. K. 1980. *The Megalithic Culture of Sri Lanka* Unpublished Ph. D. Theses University of Poona, Poona.

SITARAMPALAM S. K. 1980. Rexue excavatious at Anaikkoddai *Tribune* March 27, and April 3.

VAITHIANATHAN K. (ed 1960. *Tirukketiswaram papers.* (Colombo).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட

# வன்னி வரலாற்றுக் குறிப்புகள்

— கலாநிதி க. செ. நடராசா
கொழும்புப் பல்கலைக் கழகம்

ஈழ நாட்டின் ஆதித் தமிழ்ப் பிரதேசங்களுள்ளே, வன்னி நாடும் ஒன்ருகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட எல்லாள மன்னன் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே தமிழ் மக்கள் ஈழத்திலே குடி கொண்டு வாழ்ந்திருந்த போதும், அதற்கான வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் யாராலும் குறித்து வைக்கப்பட வில்லை. ஆங்காங்கு காணப்படும் புதை பொருள் ஆதாரங்களைக் கொண்டு அவ்வுண்மை இப்பொழுது நிலைநாட்டப்பட்டு வருகிறதே தவிர, வேறு வரலாற்று ஆதாரங்களைக் காட்டி அதனை நிறுவுதல் மிகவும் கடினமான காரியமாயிருக்கிறது. ஆனல் வன்னி நாட்டைப் பொறுத்த அளவில், அதன் வரலாற்றினை அவ்வப்போது அறிஞர்கள் ஆங்காங்கு குறித்து வைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

வன்னிப் பிரதேசத்தின் வரலாறு பெரும்பாலும் வையா பாடலிலும், ஓரளவு கோணேசர் கல்வெட்டிலும், மட்டக்களப்பு மான்மியத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றியும், கல்வெட்டு, 'செய்யேடு' என்ற வேறு இரு நூல்களும் அதன் வரலாற்றைக் குறிப்பிடுவனவாகும். கோணேசர் கல்வெட்டைப் போல, வன்னி வரலாறு குறிக்கும் ஒரு கல்வெட்டு நூலும் இருந்திருக்கிறது. அதனைக் கல்வெட்டு எனறே வழங்கி வந்தனர். செய்யேடு என்பது, அக் கல்வெட்டினை விளக்கி உரைத்துச் செய்யப்பட்ட நூலா, அன்றி வன்னி வரலாறு கூறும் மற்ருெரு நூலா என்பது இப்பொழுது தெளிவாயில்லை. இக் கல்வெட்டுப் பற்றியும் வையா வசன நூல்களிலே குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அக் கல்வெட்டும் செய்யேடும் இப்பொழுது கிடைத்ததில்லை. எனினும், குறித்த கல்வெட்டிலே காணப்பட்ட சில குறிப்புக்களை, இலங்கை சிவில் சேவிசில் இருந்த ஜே. பி. லூயிஸ் என்பவர் 1895 ஆம் ஆண்டு பிரசுரித்து வைத்த வன்னிக் கைந்நூல் (Manual of vanni) என்ற புத்தகத்தில் காணக் கூடியதாயிருக்கிறது. அதன்படி,

"இலங்கை மன்னர்களுள் ஒருவனுன வாலசிங்க என்பவன், மதுரை மன்னுன சிங்ககேது என்பானது மகளாய சமதுதி என்பவளை மணக்க விரும்பினுன். அதையறிந்த சிங்ககேது மன்னன், தன் மந்திரிமார்களாய 60 வன்னியர்களை அழைத்துத் தன் மகளை இலங்கை மன்னனுய வாலசிங்க மகாராசாவிடம் அழைத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அவ் வன்னியர்கள் இலங்கையை அடைந்ததும், அவர்களுக்கு என்ன வெகுமதி வேண்டுமென வாலசிங்க மன்னன் கேட்க, அவர்கள் தமக்கு அடங்காப் பற்றைத் தருமாறு கேட்டனர், அப்படியே அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னன் அவர்களை அடங்காப்பற்றுக்கு அனுப்பி, அங்குள்ள துட்டர்களை அழித்துக் குடியேற்றி அடங்காப் பற்றை அரசாண்டு, யாழ்ப்பாண மன்னனுன கூழங்கைக் சக்கரவர்த்திக் குத் திறை கொடுத்து வாழுங்கள் என்முன். அந்த 60 வன்னியருள் ஒருவன் அனுராதபுரத்திலே திசையாக (Disawa) நியமிக்கப்பட்டான். ஏனைய 59 வன்னியரும் அடங்காப்பற்றுக்குச் சென்றனர்' இது கல்வெட்டிற் காணப்பட்டதாகும்'. என்று ஜே. பி. லூயிஸ் தன் நூலிலே குறித்திருக்கிறுர். இந்த விபரம், வையா பாடலிலே உள்ள வன்னியர் வரலாற்றேடு பெரிதும் ஒத்திருக்கிறது. ஆனுல், ஒரு விடயத்தில் மட்டும் குறித்த கல்வெட்டின் இக்குறிப்பும் வையாபாடலும் சற்று வேறு படுகின்றன. கல்வெட்டுக் குறிப்பின்படி, வன்னியருள் ஒருவன் திசையாக அனுராத புரம் சென்முன் எனக் காணப்படுகிறது. ஆனுல் வையா பாடலோ, அந்த 60 வன் னியருள் ஒருவன் திசையாகக் கண்டிக்குச் சென்முன் என்று கூறுகிறது. அவ்வளவு தான் அவ்விருவாயிலான வரலாற்றுக் குறிப்புகளிலே உள்ள வேறுபாடு. அதனுல் வன்னி வரலாறு பற்றிய வையாபாடற் குறிப்பும் கல்வெட்டுக் குறிப்பும் பெரிதும் ஒத்து நடக்கின்றன என்று கொள்ளலாம். இரு வேறுவாயிலாகப் பெறப்படும் வரலாற் றுக் குறிப்புகளில் ஒற்றுமை காணப்படும் போது, அவ்வரலாற்றில் உண்மையுண்டு என்று கொள்ள இடமேற்படுகிறது.

வையா பாடலின்படி, முதல் 60 வன்னியர்களும் இலங்கைக்கு வந்து அடங்காப்பற் றிலே குடியேறிய காலம் கி. மு. 50 ஆம் ஆண்டளவிலாகும் என எமது வையா பாடல் மதிப்பிலே காட்டியுள்ளோம். மட்டக்களப்பு மான்மியத்தின்படி, வன்னியர் இலங்கையிற் குடியேறிய காலம் கி. பி. 100 வரையிலெனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூற் கணிப்புக்களுக்கு மிடையே 150 ஆண்டு வித்தியாசமே காணப்படுகிறது. அப்பொழுது இலங்கைக்கு வந்த 60 வன்னியருள் 54 வன்னியர் அடங்காப்பற்றிலிருந்த அசுரரோடு செய்த போரிலே பட்டொழிந் தனர் என்றும் திசையாகச் சென்ற ஒரு வன்னியனைவிட, எஞ்சிய 5 வன்னியரும் அடங்காப்பற்றை ஐந்து பற்றுகப் பிரித்து அரசாண்டனர் என்றும் வையா பாடல் கூறும். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னிருந்த வன்னி பற்றி லூயிஸ் குறிப் பிட்டிருப்பதாவது :

"வன்னி மாவட்டம் 10 பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன கிழக்கு மூலை தெற்கு, கிழக்குமூலை வடக்கு, நடுச் செட்டி குளம், சின்னச் செட்டிகுளம் மேற்கு, சின்னச் செட்டி குளம் கிழக்கு, மேற்கு மூலை, பனங்காமம், உடையாவூர், மேல்பற்று தெற்கு, மேல் பற்று கிழக்கு என்பனவாம். கிழக்குமூலை தெற்கு என்பது வன்னியின் தென்பாகமாகும். அங்கு வவுனியா என்ற கிராமம் உண்டு. ஆகக் கூடுதலான சனத்தொகை கொண்ட அக் கிராமத்திலே 2000 பேர் வாழ்கிறுர்கள். மிகவும் குறைந்த சனத் தொகை கொண்ட பகுதி மேல் பற்று தெற்காகும். அங்கு 200 க்கும் குறைந்த தொகையினரே வாழ்கிறுர்கள். வவுனியா என்ற பெயர், 1750 ம் ஆண்டளவில் அங்கு வாழ்ந்த ஒரு கோயில் முகாமையாளனுயிருந்த வவுனியன் என்ற வன்னியன் ஒருவன் பெயரிலிருந்து தோன்றிய தாகும். அவனே வவுனியன் பெரிய குளத்தைச் சீர்ப்படுத்தியவன்.''

மேலும் லூயிஸ் தெரிவிப்பதாவது :

வவுனியா மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் சேர்ந்த பகுதியே அப் பொழுது வன்னி என்று அழைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் 76% தமிழரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 92% தமிழரும் வாழ்ந்தனர். 1891 ஆம் ஆண்டிலே நடத்திய குடிசனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, வவுனியா மாவட் டத்தில் 970 சிங்களமக்களே இருந்தனர். மூல்லைத்தீவு வட்டாரத்தில் இரண்டு சிங் களவர் வியாபாரத்தின் பொருட்டு மட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் காலியிலிருந்து சென்றிருந்தனர். இக் கணக்கெடுப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள கரைவெட்டியிலிருந்து நெசவுத் தொழிலாளர் நூற்றுக்கு மேற்பட்டோர் முள்ளியவளையிற் சென்று குடியேறினர் என்று காட்டுகிறது. மண்டுக்கோட்டை அல்லது மடுகந்தை என்று வழங்கப்படும் ஊரிலேயே முதற் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது. 1810ஆம் ஆண்டில் அங்கு 30 சிங்களக் குடிகளே இருந்தன. வவுனியாவில் அப்பொழுது 4 தமிழ்ப் பௌத்தர்களும் 3 சிங்கள இந்துக்களும் இருந்தன ரெனக் கணக்கெடுப்புக் காட்டுவதாக லூயிஸ் கூறுகிறார்.

இந்தியாவிலுள்ள மருங்கூரிலிருந்து வந்து வன்னிப்பகுதியை அரசாண்ட வன்னியர்களின் பரம்பரையினரே வன்னியர் என்பது லூயிஸ் அவர்களின் கருத்து. அவர் காலத்திலே பனங்காமத்தில் 2 வன்னியர்கள் இருந்தனர் எனக் குறிப்பிட்டிகிறார். பண்டார வன்னியன் இறந்தபின், அவ்விருவருமே வன்னியரெனக் கணிக்கப்பட்டனர் என அவர் கூறுவதிலிருந்து, வன்னிப் பகுதியில் வாழும் எல்லோருமே வன்னியர் என்று கருத இடமில்லையெனத் தெரிகிறது. அக்காலத்திலுள்ள வன்னியின் எல்லைகளை அவர் பின்வருமாறு காட்டியிருக்கிறார்:

'வடக்கே யாழ்ப்பாணக் குளம், தெற்கே அருவி ஆறும் நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே திருகோணமலை மாவட்டமும், மேற்கே மன்னார் மாவட்டம்; இந்த எல்லைக்குட்பட்டது வன்னியாகும் இதிலே ஏறத்தாழக் கீழ் அரைப் பகுதி வவுனியா மாவட்டமும், மேல் அரைப் பகுதி முல்லைத்தீவு மாவட்டமுமாகும். வடக்குத் தெற்காக வன்னி நாட்டின் கூடிய நீளம் 71மைலும், கிழக்கு மேற்காக அதன் கூடிய அகலம் 60 மைலுமாகும்.

வன்னியர் ஆட்சியில் இருந்தமையாலே அதற்கு வன்னிநாடு என்று பெயராயிற்று. அதற்கு முன் அப் பிரதேசம் அடங்காப்பற்று என்றே குறிக்கப்பட்டது. யாழ்ப்பாண ஆட்சிக்குள் அடங்காமலும், அனுராதபுரி ஆட்சிக்குள் அடங்காமலும் இருந்த பிரதேசமாகையால் அது அடங்காப்பற்று என்று வழங்கப்படலாயிற்று என்பதுலூயிஸ் என்பவருக்கு முற்பட வாழ்ந்த 'ரெனென்ற்' என்ற ஆங்கிலேயன் குறித்துள்ள கருத்தாகும்.

மேலும் வன்னிப் பகுதி அனுராதபுரப் பகுதி பற்றிய சில குறிப்புகளை ருெபேட் நொக்ஸ் எழுதிய நூலிலும் காணலாம். ருெபேட் நொக்ஸ் என்ற ஆங்கில மாலுமி 1657 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது அப்பொழுதிருந்த கண்டி மன்னனாற் சிறைபிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டான். அவன் பின்னர் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், 1679 ஆம் ஆண்டு வரை கண்டி இராச்சியப் பகுதியிலேயே வாழ வேண்டியிருந்தது. 1679 இல் அவன் இலங்கையை விட்டுத் தப்பிச் செல்வதற்காக வடக்கு நோக்கிச் சென்றபோது, மல்வத்து ஓயாவைக் கடந்து அனுராதபுரம் சென்றான். அனுராதபுரப் பகுதியில் அப்பொழுதிருந்தவர்களுடன் சிங்களத்திலே பேச முடியவில்லையென்றும், அவர்கள் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட இனத்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும், மலபார் மொழியிலேயே அவர்கள் தன்னிடம் கேள்விகள் கேட்டார்கள் என்றும், ருெபட் நொக்ஸ் தன் நூலிலே குறித்து வைத்திருக்கிறார். தான் அவர்களுடன் சிங்களத்திலே பேசிய பொழுது அங்குள்ளவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லையாம். அனுராதபுரத்திலே கண்டி மன்னனின் அதிகாரியாக இருந்தவனோடு கூடத் தான் சிங்களத்திலே பேச முடியாமற் போனதென்றும், மொழிபெயர்ப்பாளர் மூலமே தான் அந்த அதிகாரியிடம் பேச முடிந்தது என்றும் ருெபேட் நொக்ஸ் எழுதி வைத்திருக்கிறார்.

அனுராதபுரத்துக்கு அப்பால் வடக்கே சென்றால், மலபார் அரசனிடம் அகப்படவேண்டிவரும் என்று பயந்து, அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குப் பக்கமாக மல்வத்தை ஓயாக்கரை மார்க்கமாக டச்சுக்கார கோட்டையை அடையும் நோக்கத்துடன் சென்ற போது கனதர (Kanadara) ஓயா என்ற அருவிக் கரையை அடைந்தானும். அந்த அருவி கண்டியரசன் இராச்சியத்தையும் டச்சுக் காரருக்குத் திறைகொடுக்கும் மலபார் அரசன் இராச்சியத்தையும் பிரிக்கும் எல்லையென்று அப்பொழுது தெரியவந்ததாம். அதனால் கரையோரமாக மேற்கே சென்று அரிப்பு என்ற இடத்தை அடைந்தானும்.

மலபார் மொழி யென்பது, தமிழ் மொழி யென்றும், மலபார் அரசன் என்பது, தமிழ் பேசிய வன்னி அரசன் என்றும் கொள்ளலாம். கனதர ஓயா என்பது எந்த அருவியைக் குறிக்கிறது என்று கண்டு கொண்டால், ரொபேட் நொக்ஸ் எழுதிவைத்த மேற்காட்டிய செய்திகளிலிருந்து 1679ஆம் ஆண்டில் அனுராதபுரத்தின் மொழி நிலையையும் வன்னி இராச்சியத்தின் தெற்கெல்லையையும் தெரிந்துகொள்ளலாம்.

மல்வத்தை ஓயா மற்றொரு அருவியுடன் சென்று சேருகிறது. அது மதவாச்சிக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் அமைந்திருக்கிறது. அதுவே கனதர ஓயாவென அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்விரண்டும் சேர்ந்து அப்பாற் செல்வதே அருவி ஆறு. அதன்முகத்துவாரத்தை அண்டியே அரிப்பு என்ற இடமிருக்கிறது. லூயிஸ் அவர்களின் கூற்றின்படியும் அருவி ஆறே வன்னியின் தெற்கெல்லையாகிறது எனவே, அருவியாற்றின் கிளையாய கனதர ஓயா வன்னியின் தெற்கெல்லையாயிருந்தது என்று நொக்ஸ் சொல்வது பொருத்தமாகவே யமைகிறது. எனவே, அன்றைய வன்னியின் தெற்கெல்லை அனுராதபுரத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

## உழுந்து பயறு

வன்னியின் மேட்டு நிலங்களில் உழுந்து, பயறு போன்றவை பயிரிடப்பட்டு வருகின்றன. உழுந்து பயறுபோன்ற தானியங்கள் தமிழரின் வாழ்வில் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே தொடர்புகொண்டுள்ளன.

குறுந்தொகை என்னும்நூலில் அள்ளூர் நன்முல்லையார் என்னும் புலவர் உழுந்துபற்றிப் பாடியுள்ளார்.

பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையின் கவரும்...

குறுந்தொகையில் பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர் பயறு பற்றிப் பாடியுள்ளார்.

செழும் பயறு கறிக்கும் புன்கண் மாலை
பின்பனிக் கடைநாள் தண்பணி அற்சிரம்.

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப்பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும்

வித்யா பூஷணம் நா. சுப்பிரமணியம் M. A.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

— அ —

'வன்னி' என்ற சொல் புவியியலடிப் படையில் ஈழத்தின் வரண்ட பிரதேசத் தைச் சார்ந்த முல்லைத்தீவு – வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பைக் குறிக்க வழங்கப்படுகின்றது. வரலாற்றுத் தரவுகளின் படி கி. பி. 13 ஆம் நூற்றுண்டு தொடக்கமாக 'வன்னிமை' என்ற குறுநில ஆள்புலத் தலைமைகளால் மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை முதலிய மாவட் டங்களையுள்ளடக்கிய பரந்த நிலப்பரப்பு ஆளப்பட்டுவந்துள்ளதென அறியமுடிகிறது. 1.ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோருடைய நிர்வாகத்திலே வன்னி எனக்குறிப்பிடப் பட்ட பிரதேசம் வடக்கில் யாழ்ப்பாணக் கடலேரியும் தெற்கில் 'நுவரகலவிய' எனப் படும் வடமத்திய மாகாணப் பிரதேசத்தை யும் அருவியாற்றையும், கிழக்கிலும் மேற் கிலும் முறையே திருகோணமலை மன்னார் மாவட்டங்களையும், எல்லைகளாகக் கொண் டுள்ள ஏறத்தாழ 2000 சதுர மைல் பரப் புள்ள பிரதேசமே வன்னி எனச் சுட்டப் பட்டது என்பதை ஆங்கில நிர்வாக சேவை யாளராகப் பணிபுரிந்த ஜே. பி. லூவிஸ் அறி யத்தருகிறுர். 2.மேற்படி பிரதேசப்பரப்பின் பெரும் பகுதி இன்றைய வவுனியா – முல் லைத்தீவு மாவட்டங்களுக்குள் அடங்கியுள் ளது. இம் மாவட்டங்களின் நிலப்பரப்பைக் குறிக்க வழங்கும் இன்னெரு பெயர் 'அடங் காப்பற்று' என்பதாகும். தமது பிரதேசத் தின் தனித்தன்மையைப் பேணுவதில் உறுதி பெற்றவர்களாய் நீண்டகாலம் பிறருக்கு அடிபணியாதிருந்த வன்னியரின் வீரம் செறிந்த பற்றுறுதியை உணர்த்தும் இச் சொல், பிறதேசங்கள் வன்னி என்ற பெயர் வழக்கை இழந்த நிலையிலும் தன்னை மட்டும் வன்னி என்று குறிப்பிட்டுக் கொள்வதில் உறுதி பூண்டு நிற்கும் மண்ணின் ஆத்மா வையும் எமக்குப் புலப்படுத்துகின்றது.

இந்த அடங்காப்பற்று வன்னியின் சமூக ஒழுங்கமைப்பையும் அதன் நாட்டார் வழக் கியல் தொடர்பான வெளிப்பாடுகளையும் ஆராய முற்படும்போது நாம் எதிர் கொள் ளும் பாரிய பிரச்சினைகளில் ஒன்று ஏறத் தாழ 2000 சதுரமைல் கொண்ட அதன் பிரதேசப்பரப்பகலமாகும். இன்றைன்று இதுவரையில் புவியியல், வரலாறு, மானிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியல், சமூகவியல் முதலியன தொடர்பான ஆழமான ஆய்வுகள் நிகழ்த்தப்படாதுள்ள இருண்ட நிலை.

பிரதேசப்பரப்பிலே யாழ்ப்பாணத்துப் பிரதேச எல்லைத் தொடர்புள்ள வன்னிப் பகுதிக்கும்,வடமத்திய மாகாணப் பௌத்த சிங்களக் கிராமப்புறங்களுடன் தொடர்புடைய வன்னிப் பகுதிக்குமிடையிலே சமூக அமைப்பிலும் பண்பாட்டு நோக்கிலும் வேறுபாடுகள் காணப்படுவது தவிர்க்க முடியாதது. இந்துக்கள். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய சமயப் பண்பாட்டினர் கலந்து வாழும் கிராமங்களும், தனிப் பெரும்பான்மையுடன் வாழும் கிராமங்களும் வன்னியில் உண்டு. பௌத்த சிங்கள மக்கள் பாரம் பரியமாக வாழும் கிராமங்களும் உண்டு. (மாமடு, மடுக்கந்தை, ஈரற் பெரியகுளம் முதலிய கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேறி வாழ்கின்றனர். மாமடுவை சிங்கள மாமடு என அழைக்கும் வழக்கமும் வன்னியை தமிழ்வன்னி சிங்கள வன்னி என பாகுபடுத்தி உணரும் பண்பும் தமிழ் வன்னியரிடம் காணப்படுகின்றது. சிங்கள வன்னி எப்படும் பிரதேச வாசிகள் தம்மை வன்னியர் என்று கருதுகின்றனரா என்பது ஆய்வுக்குரியது.) இத்தகைய சமூக – சமய பண்பாடு வேறுபாடுகட்கு ஊடாக இவர்களனைவரையும் இணைத்து 'வன்னியர்' என்ற சமூக பண்பாட்டுணர்வுச் சுட்டு எவ்வாறு தொழிற்படுகின்றதென்பதை இனங்கண்டு கொள்வது இந்த ஆரம்ப ஆய்விலே கடினமானதொன்றுகவே அமைகின்றது.

வன்னியைப் பற்றி எழுதப்பட்டனவாக எமக்குக் கிடைக்கும் நூல்களில் மிக முக்கியம் வாய்ந்ததான

The Manual of Vannidistricts என்ற, மேற்கூறிய ஜே. பி. லீவிஸின் நூல் ஒரு நூற்றுண்டுக்கு முற்பட்ட வன்னியின் சமூக பொருளாதார அம்சங்கள் தொடர்பான பல்வேறுபட்ட தகவல்களையும் திரட்டித்தரும் ஒரு நிர்வாக வியலாளரின் அறிக்கை; ஆய்வை மேற்கொள்பவர்கட்கு அரிய பல தகவல்களைத் தரும் களஞ்சியம் எனலாம். **வன்னியர்** என்ற தலைப்பில் கலாநிதி சி. பத்மநாதன அவர்களும் **கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்** என்ற தலைப்பில் கலாநிதி செ. குணசிங்கம் அவர்களும் எழுதிய நூல்களும் பேராசிரியர் கா. இந்திரபாலா எழுதிய வன்னிபற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வுக்குறிப்புகளும், 3 வன்னியின் வரலாற்றை இலக்கிய சாசன தொல்பொருட் சான்றுகள் மூலம் அணுகும் பணியைச் செய்துள்ளன. சி. எஸ். நவரத்தினம் எழுதிய THE VANNI AND THE VANNIYAS என்ற நூலும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. வரலாற்றுத்தரவுகளை இலக்கியச் சுவையுடன் இணைத்துப்பிணையப்பட்ட அண்மைக் கால நூல்களான முல்லைமணியின் **பண்டாரவன்னியன்**, கரவைகிழாரின் **தணியாத தாகம்** ஆகியன அரசியல் வரலாற்றுக்கான சில குறிப்புக்களைத்தருகின்றன. **வையா பாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை** முதலிய பழைய நூல்கள் வன்னியர் குடியேற்றம் பற்றியவரலாற்றை அமைத்துக் கொள்ளப் பயன்படுவன. வன்னிப்பிரதேசத்தின் சமூக – பண்பாட்டு வரலாற்றை மானிடவியல், சமூகவியல் ஆகிய ஆய்வுத் துறைகளின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளமுயலும் ஆய்வு மாணவனுக்கு மேற்படி நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் 'கைவிளக்கு'களாக அமைந்து துணைபுரிவன வெனினும், ஆய்வின் முழுமைக்கு மக்கள் மத்தியிற் சென்று அவர்களது உணர்வுகள், உலகநோக்கு, வாழ்க்கைமுறை என்பவற்றை உணர்ந்து மதிப்பீடு செய்வது அவசியமாகின்றது. இத்துறையில் ஒரு ஆரம்ப முயற்சி என்ற வகையிலே இக்கட்டுரை அமைகின்றது.

— ஆ —

வன்னி என்ற சமூக பண்பாட்டுணர்வின் அடிப்படையாது? என்பதே இந்த ஆய்வில் எழும் முதலாவது வினு. பிற பிரதேசமாந்தரின் சமூக பண்பாட்டிலிருந்து தன்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துணரும் வகையிலும் தனது பிரதேசம் சார்ந்தவரோடு தன்னை இனங்கண்டு இணைந்து கொள்ளும் வகையிலும் முல்லைத் தீவு வவுனியா மாவட்டங்களின் பாரம்பரிய குடும்பங்களைச் சார்ந்த ஒருவர் தன்னை 'வன்னியான்' என்று குறிப்பிட்டுக் கொள் வார். ஆயின் இதே வன்னிக் குடிமகன் முல்லைத்தீவுப் பட்டினத்தையோ அல்லது நகரமயப்பட்டு வரும் தண்ணீரூற்று நெடுங் கேணிக் கிராமங்களையோ சார்ந்தவரானல் தனது ஊரை விட நாகரிக வளர்ச்சியில் பின் தங்கிய கிராமங்களையே வன்னி என் றும், அக்கிராமத்தின் பாரம்பரிய குடும்பம் சார்ந்தவனை 'வன்னியான்' என்றும் குறிப் பிடுவார். எனவே வன்னி என்ற சொல் மூலம் அவர் எதனை உணர்த்துகிருர் ? பொதுவகையில் அடங்காப்பற்று பிரதே சம் முழுவதையும், சிறப்பு வகையில் கிரா மியத்தின் 'கன்னிமை' கழியாத விவசாயக் களங்களையும் அவர் கருத்திற் கொள்கின் ருர் என்பதே தெளிவாகின்றது.

குளம், அதைச் சார்ந்த வயற்புலம், அயலிலுள்ள மேட்டுநிலக் குடியிருப்பு, சூழவுள்ள மரங்களடர்ந்த காட்டுப் பிர தேசம்,என்றிவ்வாறு முல்லையும் மருதமும் மயங்கிய ஒரு புவிச் சூழலே வன்னிக் கான புறவுருவம். உழவுக்குப் பயன்படும் எருமைக் கடாக்கள், பால் தரும் பெண் எருமைகள், பசுக்கள், வண்டி இழுக்கப் பயன்படும் எருதுகள், வேட்டைக்கும் வீட்டுக்கும் காலனுக்குமுரிய நாய் ஆகிய இவை வன்னியின் கருப்பொருட்கள். ஓலையால் வேயப்பட்ட வீட்டுக் கூரை, சாணம் அல்லது முருக்கமிலைச்சாறு ஆகிய வற்ருல் மெழுகப்பட்ட திண்ணை, மால் பகுதிகள் இத்தனையும் பிரதிபலிக்கும் இயற்கைச் சூழலின் டகைப்புலத்தின் மண்ணை நம்பியே வாழ்ந்து, அந்த மண் ணிலே வருடந்தோறும் பாடுபட்டு, வாழ்க்கையின் தேவைகளனைத்தையும் அதற்குள் நிறைவு செய்துகொள்ளும் தன்னிறைவான சமூகப் பண்பாட்டு மனிதனையே 'வன்னியான்' என்ற சொல் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

வன்னியர் என்ற சொல்லுக்கு தமிழ் நாட்டின் வன்னியர் என்ற வீரமரபினரின் வழிவந்தவர்கள் என்ற பொருளும் வன்னி என்ற சொல்லாற் குறிப்பிடப்படும் அக்கி னியின் மரபில் உதித்தவர்கள் என்ற கருத் தும் பொதுவாக வழங்கினுலும் வனம் சார்ந்த வாழ்க்கை வாழ்பவர்கள் என்ற பொருளே பொருத்தம் போல் தெரிகிறது. காடு எனப் பொருள் தரும் வன என்ற வடமொழிச் சொல்லினின்று உருவான வன்ய என்ற சொல்லே தமிழில் வன்னி அல்லது வன்னியர் என்பதற்கு மூலம் என லாம். வனங்களாற் சூழப்பட்ட வயற்பிர தேசங்கள் தமது கிராமிய அம்சங்களை அடங்காப் பற்றுடன் பேணி வந்தன என் பதை 'வன்னி' என்ற சமூக – பண்பாட்டு ணர்வு புலப்படுத்துகின்றதெனலாம்.

> "இலங்கைத் தீவு முழுவதினையும் சமூக. பண்பாட்டுப் பிரதேசங்களாக வகுக்கும் பணியில் முதன் முதலில் ஈடுபட்ட 'ப்றைஸ் றயான்'

என்னும் சமூகவியலாளர், இயைபுடைய சமூகக் குழுக்கள் என்ற அடிப்படையில் பிரித்த பொழுது, யாழ்ப்பாணத் தீபகற் பத்தை ஒரு பிரதேசமாகவும், முஸ்லீங் களும் தமிழரும் இணைந்து வாழும் கிழக் குப் பகுதியை ஒரு பிரதேசமாகவும், வடபகுதியைச் சார்ந்த வன்னிப்பகுதியை ஒருபிரதேச மாகவும் பிரித்துக் கொண் டார்." 4

என்று எடுத்துக் காட்டும் பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் வடபகுதியின் வன்னிப்பிரதேசம் என்னும் சமூகப்பண் பாட்டுப் பிரதேசம் மன்ஞர், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி நிற்பதாக அமைந்துள்ளது என்பர். 5 வன்னி என்ற சமூகப் பண்பாட்டுப் பிரதேச எல்லைக்குள் மன்ஞர் மாவட்டத்தை அடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமா என்பது விரிவான ஆய்வின் பின்னரே தீர்மானிக்கப்படத்தக்கது. முதலில் வன்னி எனப்படும் சமூக – பண்பாட்டுணர் வடிப்படையிலான சமூக ஒழுங்கமைப்பை முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களான அடங்காப்பற்று வன்னியின் பிரதேசங்களில் இனங்காண முயலுவோம்.

வன்னிப் பிரதேச சமூக அமைப்பின் நிலைக்களன் விளைநிலம். வன்னியின் குறிப்பிடத்தக்க பகுதி கடற்றொழிலுக்குரிய கடற்கரையாக விருந்தாலும் வன்னி பற்றிய உணர்வு விளை நிலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. விளை நிலத்தில் மிகப் பெரும் பகுதி குளங்களைச் சார்ந்தவை. வன்னியின் மிகப் பல கிராமங்கள் குளப் பெயரையும் நீர் நிலையைக் குறிக்கும் மடு, மோட்டை, கேணி, முறிப்பு வாய்க்கால், கட்டு முதலிய பெயர்களையும் தாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1890 ஆம் ஆண்டில் வன்னியிலே 711 குளங்கள் அறியப்பட்டிருந்தன. 6. இக்குளங்களின் தோற்றத்துக்கும் மக்கள் குடியேற்றத்துக்கும் தமிழ் நாட்டிலிருந்து காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் முக்கிய காரணங்களாகின்றன, அநுராதபுரத்திலும் பொலநறுவையிலும், ஈழத்தின் ஆட்சித் தலைமை நிலவிய காலகட்டங்களில் இங்கு படைகொண்டு வந்த தமிழகத்து குறுநில வேந்தரும், படைத்தலைவர்களும், தம்மொடு வந்த வீரர்களை இம் மண்ணில் நிலையாகவே தங்கவிட்டனர். 'பல்லவராயன் கட்டு' 'முத்தரையன் கட்டு' (இது இன்று முத்து ஐயன் கட்டு எனத் தவருக வழங்குகின்றது) என்பது தமிழகத்து அரச மரபினரும் குறுநிலவேந்தர் மரபினரும் இங்கு தங்கிப் புரிந்த நீர்ப்பாசனப் பணியை உணர்த்துவன. வையாபாடல்,யாழ்ப்பாண வைபவமாலை முதலிய நூல்களிற் குறிப்பிடப்படும் 'அடங்காப்பற்றில் வன்னியர் குடியேற்றம் 7, குளக்கோட்டன் வருகையும் ஆட்சியும் 8 ஆகியன தொடர்பான செய்திகள் காலத்துக்குக்காலம் பல்வேறு குழுக்களாக வன்னியில் நடைபெற்ற குடியேற்றங்களை உணர்த்துவன எனலாம். இவ்வாறு முற்பட்ட காலப்பகுதியில் வன்னியில் குடியேறியவர்களை வன்னியின் பாரம்பரிய குடிகள் என்று கொள்ளலாம். இன்று வன்னியில் வாழ்பவர்களில் எத்தனை சதவிகிதத்தினர் வன்னியின் பாரம்பரிய குடிகள் என்பதும், கடந்த சுமார் ஒரு நூற்றாண்டுக்குட்பட்ட காலப் பகுதியில் வன்னியிற் குடியேறி வாழ்ந்தவர்கள் எத்தனை சதவிகிதத்தினர் என்பதும், வன்னியின் சமூக பண்பாட்டு அடிப்படை இத்தகைய அண்மைக்கால குடியேற்றங்களால் எத்தகைய மாற்றங்களை அடைய நேர்ந்தது என்பதும் இன்னும் தெளிவாகவில்லை. கடந்த கால் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தொழில் தேவைகளின் நிமித்தம் வன்னியிற் குடியேறிய மலையகத் தமிழரையும் கடந்த சில தசாப்தங்களில் புதிய நீர்ப்பாசன குடியேற்றங்களை நாடியும் அரசபணி நோக்கிலும், வன்னியில் காலூன்றிய யாழ்ப்பாணப் பிரதேசத்தவரையும் தவிர்த்து வன்னியில் நிலையான மண்ணின் மக்களை வன்னியர் என்று கொண்டு அவர்களது சமூக அமைப்பை ஆராயலாம்.

விளை நிலத்தை அடிப்படையாகக்கொண்ட வன்னியின் சமூக அமைப்பிலே குடும்பங்களே முக்கிய கிராமிய நிறுவனங்களாக அமைந்தன. ஒவ்வொரு குளக்கட்டையும் சார்ந்து ஒன்றிரண்டு அல்லது நான்கைந்துக்கு மேற்படாத குடும்பங்கள் வாழ்ந்த நிலையே வன்னிச் சமூதாயத்தின் பழைய நிலையாகும். காலப் போக்கில் குளக் கட்டைச் சார்ந்து வாழ்கின்ற நிலை மாற்றமடைந்து பல்வேறு வாழ்க்கை வசதிகளை நாடி நான்கைந்து மைல் தொலைவிலுள்ள மேட்டு நிலத்திற் சென்று குடியேறி வாழத்தலைப்பட்ட போது அத்தகைய சமூக அமைப்பிற் குடும்பங்களின் தொகை விரிவடைந்தன.

சமூகவியலடிப்படையில் குடும்பம் என்ற நிறுவனம் இருவகை நிலைகளைக் கொண்டது. ஒன்று கணவன் மனைவி குழந்தைகள் என்ற வகையில் ஒரே இல்லத்தில் வாழும் குடும்பம். இதனை மூலக்குடும்பம் NUCLIER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAMILY எனலாம். இன்னென்று இரத்த உறவைச் சார்ந்தவர்களாக கிராமத்தில் வாழும் அத்தனைபேரும் ஒரு குடும்பம் என்ற நிலை. இது கிராமத்தைக் கடந்தும் விரிவடைவதுண்டு. இதனை விரிநிலைக்குடும்பம் EXTENDED FAMILY என்பர். இலங்கையின் பாராம்பரிய சமூக அமைப்பிற் காணப்படுவது போன்றே, வன்னிப்பிரதேசத்தில் ஒரு குடும்பம் என்பது ஒரு வீட்டுக்குள் வாழும் கணவன், மனைவி, குழந்தைகள் கொண்ட மூலக்குடும்ப அமைப்பைச் சுட்டுவதாக இல்லாமல், கிராமம் முழுவதிலும் பரவியுள்ள ஒரே இரத்த உறவைச் சேர்ந்த அனைவரையும் இணைத்துச் சுட்டும் விரிநிலைக்குடும்ப நிலையையே குறிப்பிடுகின்றது. இந்நிலை இந்திய நிலவுடமை அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும் இந்தக் குடும்பத்துக்குரிய தலைமைப் பொறுப்பை மூத்த ஆண் (அவர் தமையன், தந்தை, பாட்டனர் ஆக இருக்கலாம்) உறுப்பினரே வகிப்பார். இரத்த உறவு சார்ந்தவர்கள் தத்தம் பொருளாதாரத் தனித்தன்மைகளைப் பேணிக் கொண்டு மனைவி குழந்தைகளுடன் மூலக்குடும்ப நிலையில் இல்வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், குடும்ப உறவுகள் சார்ந்த முக்கிய நிகழ்ச்சிகளிலும் அதாவது திருமணம், கோவில் திருவிழா பிற கொண்டாட்டங்கள் ஆகியவற்றிலும் அரசியல் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான அணுகுமுறைகளிலும் விரிநிலைக் குடும்பத்தின் தலைவரான மூத்த ஆண் உறுப்பினரின் அநுபவத்துக்கும் ஆலோசனைக்கும் முன்னுரிமை அளிப்பர். இவ்வகையில் ஒரு குடும்பமே ஒரு கிராமமாக அமைந்துள்ளமையும் கிராமத்துக்கு அப்பாலும் கிளை விட்டுப் படர்ந்துள்ளமையையும் காணலாம். ஒரு கிராமத்திலே ஒரே சாதியைச் சார்ந்த — ஒரே தொழிலைச் செய்கின்றவர்களிடையே ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதையும், வன்னியில் அவதானிக்கலாம். உதாரணமாக, முள்ளியவளைக் கிராமத்திலே வெள்ளாளரிடையே முக்கியமான மூன்று குடும்பப் பிரிவுகள் உள. இக்குடும்பங்கள் ஒன்றோடொன்று உறவுகள் வைத்துக் கொள்ளாமல் தம் தனித்தன்மையைப் பேணமுயல்வதையும் திருமண உறவுகளில் அயற்கிராமங்களில் தம்மோடு தொடர்பு கொள்ளக் கூடிய குடும்பங்களுடன் இணைந்து இயங்குதையும் அவதானிக்கலாம். வெவ்வேறு காலகட்டத்தில் குடியேறியவர்கள் என்பதோ அல்லது கல்வி அதிகாரம், ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகியனவோ இத்தகைய குடும்ப வேறுபாடுகளுக்கு அடிப்படையாக இருக்கலாம்.

ஒரே தகுதிவாய்ந்த குடும்பங்கள், தம்முள் திருமண உறவுகளை மேற்கொள்ளும் போது அவற்றின் இணைப்பிலே ஒரு புதியஉறவுணர்வு உருவாகின்றது. இக்குடும்பங்கள் எந்தச்சாதி அல்லது சாதி உபபிரிவு சார்ந்தனவோ அதன் பெயரில் அவ்வுறவு சுட்டப்படுகின்றது. இத்தகைய பலகுடும்பங்களின் இணைப்புக்களது தொகுதியே வன்னியின் பெரிய கிராமங்களான புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தண்ணீரூற்று முதலியவற்றில் சமூகங்களாக அமைந்துள்ளன.

திருமண உறவுகள் ஒரே குடும்பம் சார்ந்த உள்ளூர் அல்லது அயலூர் உறுப்பினர்களிடையே தீர்மானிக்கப்படுவது வழக்கம். இது கைகூடாத நிலையிலேயே அயற்பிரதேசத்தில் சாதியும், தகுதியும் பொருந்திய தொடர்புகள் நாடப்படும். உதாரணமாக முள்ளியவளை வெள்ளாளருக்கு தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி முதலிய அயற்கிராமங்களில் திருமண உறவுகள் அமையத் தவறினல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மட்டுவில், இடைக்காடு முதலிய கிராமங்களில் அவ்வகை உறவு ஏற்படும். அதே போல் செங்குந்தருக்கு யாழ்ப்பாணத்தில் கற்கோவளம், கல்வியங்காடு முதலிய கிராமங்களிலும் தச்சருக்கு தெல்லிப்பழை, சாவகச்சேரி முதலிய கிராமங்களிலும், கோவியருக்கு தெல்லிப்பழையிலும் வேறு சில கிராமங்களிலும் திருமண உறவுத் தொடர்பு நிலவுகின்றது. பள்ளர். நழவர் முதலியவர்களுக்கு யாழ்ப்பாணத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த அல்வாய் அச்சுவேலிப்பகுதிகளில் தொடர்பிருப்பதாக அறியமுடிகிறது. செம்மலையைச் சேர்ந்த கரையார் தெற்கே திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம், தென்னமரவடி கிராமங்கள் தொடக்கம் வடக்கே புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாண மாவட்டம் சேர்ந்த வல்வெட்டித்துறை வரை திருமண உறவைக் கொண்டுள்ளனர். இத்தகைய திருமண குடும்ப உறவுகளின் வரலாற்றுப் பழமை அறியப்படவில்லை.

இத்தகைய திருமண உறவுகள் பெரும்பாலும் ஆண் அல்லது பெண் கொள்வதாகவே அமையும். உடலுழைப்பை மூலதனமாகக் கொண்டு நிலத்தை நம்பி வாழும் வன்னியில் ஆண் தலைமைகொண்ட சமுதாய அமைப்பிலே அந்த ஆண்மகனை வெளியே இன்னொரு பிரதேசத்துக்கு அனுப்ப அந்த சமூகம் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. கல்விச் சூழ்நிலைகள் காரணமாக புலப்பெயர்ச்சிகள் தவிர,ஆண் மண்ணை விட்டு வெளியேறுவது அரிது. எனவே பிறபிரதேசத்தைச் சேர்ந்த பெண் திருமணமாகி வன்னியில் வந்து குடியேறிவிட்டால் அவளும் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் வன்னியராகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடுகின்றனர். வன்னியில் பெண் எடுக்க வரும் பிறபிரதேசத்தினர் பலரும் அப்பெண்ணின் பொருளாதார வளத்தைக் கருத்திற் கொண்டு வன்னியிலே தங்குவதே பொதுவான வரலாறு, இவர்களின் பரம்பரையும் வன்னியர் ஆகிவிடுகின்றனர். சுருங்கக்கூறுவதானல் வன்னியின் சமூக பொருளாதார அடிப்படையான விளைநிலம் தனது பயன்பாட்டுத்திறனல் வன்னி என்ற சமூக பண்பாட்டு அம்சங்களைத் தனித்தன்மையுடன் பாதுகாத்து வருகின்றது எனலாம்.

வன்னிச் சமூக அமைப்பிலே 'சாதி' என்ற அமைப்பு குடியேற்றங்கள் நிகழ்ந்த ஆரம்பகாலத்திலிருந்து நிலவிவருவதாகக் கொள்ளலாம். காலத்துக்குக் காலம் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறிய பல்வேறு சாதி, தொழிற் பிரிவினரும் வன்னி மண்ணில் நிலை கொள்ளும் பொழுது அம் மண்ணில் தேவைக்கேற்பத் தம் தம் தொழில் முறையைத் தேர்ந்து பேணிக் கொண்டனர் என்று கருத இடமுண்டு.

நூருண்டுகளுக்கு முன்பு வன்னியில் நிலவிய 36 சாதிப் பிரிவினரைப் பற்றிய தகவல்களை ஜே. பி. லீவிஸ் தருகிறுர். 9 பிராமணர், வெள்ளாளர், கரையார் முதல் வேடர் வரை உள்ள இந்தத் தகவலிலே வேளாளரில் மடப்பள்ளி வேளார் என்ற வொரு இரண்டாம் பிரிவினரும் கரையாரில் திமிலர், முக்குவர் ஆகியவர்களுடன் சேர நான்கு வகையினரும் குறிப்பிடப் பட்டுள்ளனர். வன்னியர் என்ெருரு சாதியும் சுட்டப்பட்டு இவர்களின் மிகச் சில குடும்பங்கள் அன்று இருந்தன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் வன்னிமை என்னும் ஆள்புலத் தலைமை வகித்த வன்னிக் குறுநிலத் தலைவர்களின் மரபில் எஞ்சியவர்களாகலாம். ஜே. பி. லீவிஸ் குறிப்பிடும் 36 சாதியினரும் வன்னியில் இப்பொழுது உள்ளனரா என்பதும் வேறு பல சாதியினரும் மிகுந்துள்ளனரா என்பதும் தனியே ஆராய வேண்டியன.

— ꧋ —

ஒரு குறிப்பிட்ட பிரதேச சமூகத்தின் மானிடவியல் சார்ந்த அம்சங்களினதும் பாரம்பரிய கலை இலக்கிய அம்சங்களினதும் வெளிப்பாடு நாட்டார் வழக்கியல் என்ற சொற்ெறடரால் சுட்டியுணரப்படும். இத்துறையில் வாய்மொழிப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், குழு உக்குறிமரபுகள், கூத்து முதலிய கலைகள். கைப்பணிகள், பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள் பொழுது போக்கு அம்சங்கள் சமயல், வீடமைப்பு, மருத்துவம் முதலியன இடம் பெறும்.

விளை நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வன்னிச் சமூக பொருளாதாரக் கட்டமைப்பிலே உடலுழைப்பாளராகிய ஆண்கள் ஒன்றிணைந்து தொழிற்படும் வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் வழிபாடுகள் நிகழ்த்தும் வேளைக ளிலும் பாடப் படுவனவாகப் பல வாய் மொழிப் பாடல்கள் வழங்கி வந்துள்ளன. பெண்கள் பாடி வந்திருக்கலாம் என்று கருதக் கூடிய வகையில் ஒப்பாரிப் பாடல் ஒன்றும் வழக்கில் உள்ளது. இவை வன்னி வள நாட்டுப் பாடல்கள் என்ற தலைப்பிலே அண்மையில் நூல் வடிவம் பெற்றுள்ளன. தொழில் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை, வரலாற்றுக் கதைப் பாடல்கள், என்ற வகைகளில் அமையும் இந் நூலில் உள்ள பாடல்கள் முழுவதும் வாய் மொழிப் பாடல்கள் தானு என்பது இலக்கியக் கொள் கை சார்ந்த ஆய்வுக்குரியது.

தொழில் சார் பாடல்கள் என்ற வகை யில் அமைந்த பண்டிப்பள்ளு, குருவிச்சிந்து என்பன விவசாயத்துக்கு அழிவு தரும் கருப் பொருள் சார்ந்தவை. பன்றிகளால் விவசா யத்திற்கு ஏற்படும் அழிவு பற்றியும், அத னைத் தவிர்ப்பதில் விவசாயி படும் சிரமங் களையும் நகைச் சுவையுணர்வுடன் பன்றி கூற்றுக வெளிப்படுத்தும் பண்டிப்பள்ளு வன்னிப்பகுதி விவசாயியின் உடலுழைப்பின் பெருமையையும் உற்பத்தி மட்டத்தையும் உணர்த்துவது. கணவன் மனைவி, குழந்தை கள் ஆகியவர்கட்கிடையிலான குடும்ப உற வைப் பன்றிகள் மீது ஏற்றிப் பாடியுள்ள தன் மூலம் நகைச் சுவையைப் புலப்படுத் தினுலும் வன்னிப் பிரதேசம் முழுவதுக்கு மான உற்பத்தி தொடர்பான பிரச்சி னையை இவ் விலக்கியம் தொட்டுள்ளது. குருவிப்பள்ளும் இத்தகைய தொன்றே. குருவிச்சிந்தின் அடிப்படையும் இதுவே.

வயலில் நெல் விளைவிக்கும் போதும், காவலின் போதும், அரிவு வெட்டும் போதும், சூடடிக்கும் போதும், பலர் இணைந்து தொழிற்படும் சூழ்நிலையில் பாடப்படுவன இப்பாடல்கள். கடவுளர் பெயரிலுள்ள சிந் துப் பாடல்கள் பலவும் இத்தகைய சூழ் நிலைகளிலும் பாடப்படுகின்றன. தொழில் வேகம் உடலசைபு என்பவற்றுக்கேற்ப விரை வாகவும் ஆறுதலாகவும் பாடுவதற்கேற்ப ஓசையமைப்புடையனவாக இந்த வாய் மொழிப் பாடல்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக முருகையன் சிந்திலே அமையும் ஒரு பாடலை இங்கு நோக்கலாம்.

ஆற்றிலே தண்ணீர் அசைந்துவருமாப்
போல்
அதன் பிறகே புள்ளுத் துரந்து வருமாப்
போல்
சேத்திலே தண்ணீர் தெளிந்து வருமாப்
போல்
செங்கவள நாரையினம் மேய்ந்து வருமாப்
போல்
வன்னவரி வேங்கை மதத்துவருமாப்
போல்
வாதராசன் காற்று மோதி வருமாப்
போல்
வீட்டிலே கடிநாய் வெகுண்டு வருமாப்
போல்
நாட்டிலே வாழ்கின்ற நல்லிளந்தாரிமார்
நனுகாமல் நிலையருவி விளையாடினுரே.

இது அரிவு வெட்டும் செயலை அச்செயலுக் குரிய ஓசையுடன் உணர்த்துவது, வயலில் அரிவு வெட்டத்தொடங்கிவிட்டால் இது வெட்டிமுடிக்கப்படும் வரை பன்றிப்பள்ளைப் பாடுவதில்லை என்ற கட்டுப்பாடு உண்டென அறியப்படுகிறது. பன்றிகளால் ஏற்படும் பேரழிவை எப்பொழுதும் எதிர்நோக்கும் சூழ்நிலையில் அதைப்பற்றி நகைச்சுவையாகச் சிந்திக்கவே அஞ்சும் ஒரு மனப்பாங்கை இக்கட்டுப்பாடு உணர்த்துகிறது. தெய்வங் களுக்கு மடைபரப்பி வழிபடும் வேளைகளில் அவற்றைப் புகழ்ந்து பாடும் தன்மையில மைந்த சிந்துப்பாடல்கள் உடுக்கு வாத்தி யத்தின் ஓசையுடன் அவற்றுக்கேயுரிய தாள ஒலியுடன் பாடப்படுபவை. அம்மன் சிந்துப் பாடல் வற்றுப்பளைக் கண்ணகை யம்மனின் பொங்கல் மடையின் போது உடுக்கடித்துப் பாடப்படுவது.

வன்னியில் யானை பிடிக்கும் தொழில் புரிந்த பணிக்கர் சமூகத்தின் கதையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலப்பணிக்கர் ஒப்பாரி ஒரு பெண்ணின் வீரத்லதக் கூறும் கதையாக அமைந்தாலும் ஆண்முதன்மைச் சமுதாய உணர்வின் வெளிப் பாடாகவே அமைகின்றது, பணிக்கர்பலராலும் பிடிக்கமுடியாத ஒரு கொம்பன் யானையை வேலப்பணிக்கன் மனைவி அரியாத்தைதான் பிடிப்பாள் என்று பணிக்கர்மார் கேலியாகக் கூறுவதும், அதனைச் சவாலாக ஏற்று யானையைப் பிடித்துக் காட்டிய அரியாத்தை, அத்துடன் உயிர்துறந்ததுமான செய்தி, அச்செயல் பெண்ணுக்குரியதல்ல, என்ற ஆண்முதன்மையுணர்வினையே புலப்படுத்துகிறது. இந்த வாய்மொழிப்பாடற்கதை ''முல்லைமணி''யினால் அவளும் தோற்றுவிட்டாள் என்ற சிறுகதையாகவும், அ. பாலமனோகரனால் குமாரபுரம் நாவலில் ஒரு உட்கதையாகவும், எடுத்தாளப்பட்டுள்ளது. நாட்டார் வழக்கு நவீன இலக்கியத்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதற்கு இவை பொருத்தமானதொரு எடுத்துக்காட்டுக்களாகும்.

வன்னிப் பிரதேசத்தில் வாய்மொழியாக வழங்கிவரும் கதைகள் சிலவற்றில், அங்கு குடியேற்றங்களுக்கு பெயரிட்டது தொடர்பான தகவல்கள் அமைந்துள்ளன. பாணன் கமம், என்பது பனங்காமம் எனவும், ஒட்ட அறுத்தகுளம், ஒட்டறுத்தகுளம் எனவும் 'வவுனி விழாங்குளம், வவுனியா எனவும் பெயர் பெற்ற வரலாறுகள் இக்கதைகளிலே அறியப்படுகின்றன. முருக்கு வெட்டுவான், வேணுவில் ஆகிய தாழ்நிலங்களில் வாழ்ந்தவர்கள் இயற்கைப் பாதிப்பிலிருந்து தப்புவதற்காகப் புதிதாகக் குடியேறிய நிலம் புதுக்குடியிப்பு என வழங்கிவருகின்றமையும் கதைகள் மூலம் அறியப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகள் சில :

(அ) குட்டியாடு கொழுத்தாலும் வழுவழுப்பு தீராது.

(ஆ) நூல் போட்டு சுருப்பிடிக்குமாப்போல.

(இ) நிலவுக் கொளித்துப் பரதேசம் போறதோ.



இவை ஈழத்தின் பிறபாகங்களிலும் பயில்வதால் வன்னிக்குத் தனியுரிமையுடையன என்பதற்கில்லை.

''ஆற்றை மறித்தான் குளத்தை மறித்தான்
கார்த்திகை மாதத்துக் கற்கடகத்தையும் மறிப்பானோ ?''

என்ற வாய்மொழி வழக்கு கார்த்திகை மாதக் கர்க்கடக இராசி நாளில் மழை நிச்சயமாகப் பெய்யும் என்ற விவசாயிகளது நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைகின்றது. நந்தியுடையார் என்பவரின் நெல்வயலுக்குப் போகும் ஆற்று நீரையும் குளத்து நீரையும் குளக் கோட்டன் தடுத்த போது நந்தியுடையாரின் வயல்கள் நீரின்றி வாடின என்றும், அப்பொழுது அவர் இவ்வாறு கூறினர் என்றும், இதற்குப் பின்னணிக்கதையொன்று வாய்மொழியாக வழங்குகின்றது.

வன்னிப்பிரதேச வயற்புலத்தில் பணிபுரிபவர்களுக்கு அங்கு வழங்குவதற்கென்று சில குழூஉக்குறிகள் உள அக்குறிகளாலேயே பொருட்களைச் சுட்டவேண்டும். என்பதும் செயலை விளக்க வேண்டுமென்பதும் அப்பிரதேச பாரம்பரியம்.

| | |
|---|---|
| கடகம் | — பெருவாயன் |
| கழிபடும்நெல் | — அக்கந்து முகப்பொலி |
| சாக்கு | — இளையான் |
| சாணி | — போல் |
| சிறிய பையன் | — குஞ்சுப்போலன் |
| சுண்ணும்பு | — வெள்ளை |
| சுழகு | — குல்லம் |
| சோறு | — அமுது |
| தண்ணீர் | — நெடியாழி |
| தயிர் | — வெள்ளை |
| நெருப்பு | — வெளிச்சக்காரன் |
| நெல் | — போலி. சூரன் |
| பாக்கு | — கொட்டை |
| புகையிலை | — கருக்கல் |
| மணல் | — வைரப்பொலி |
| மாடு | — நடையன் |
| மீன் | — கடற்கருப்பு |
| வீடு | — குடில் |

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலே — வாடல்
வேலேக்காரன் தடி — வெலேக்காரன்
வைக்கோல் — பொலிக்கொடி

இக்குழுஉக் குறிகளுட் சில இலக்கிய வழக்கில் உள்ளவை. உதாரணமாக குடில், அமுது, நெல்லேப் பொலி என வழங்குவது. ஈழத்தின் பிறபிரதேசங்களிலும், காணப்படுவதே. உதாரணமாக கரவெட்டியில் இவ் வழக்குண்டு என்பர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. பசு, எருமை, ஆடு முதலியவற்றைக் கால் நடை என்பது வழக்கு. இங்கு மாடு நடையன் எனப்படுவதை இதனுடன் தொடர்பு படுத்தலாம். ஏனைய பல அப்பிரதேசத்திற்குரிய சிறப்புக் குழுஉக் குறிகள் எனலாம்.

''மதியக் காரன் தளம்புறுன் வைரப் பொலியைக்
கொண்டாடா குஞ்சுப் போலா''
[தம்பி நடுக்கட்டை ஆடுது மண்ணள்ளிக் கொண்டுவா]
''கொட்டாப் பிச்சுப் போட்டியோ ?
[சாப்பிட்டாயா]

முதலிய குழுஉக்குறி உரையாடல்களே இன்றும் வன்னிப் பிரதேச வயற் புலங்களில் அவதானிக்க முடியும்,

வன்னிப் பிரதேச சமூக அமைப்பில் நிலவுடைமையாளனும் அதில் உடலுழைப்பை ஈடுபடுத்துபவனுமான விவசாயி— அதாவது கமக்காரனே முதன்மையானவன் என்பதால் அவனது உணர்வுகளுடன் தொடர்புடையதாகவே நாட்டு வாய்மொழிப் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஒரு கமக்காரனின் வயலில் அரிவி வெட்டு காலத்தில் அவனது உறவினர்களும் நண்பர்களும் மட்டுமன்றி, பிற சாதி சேர்ந்த தொழிலாளரும் ஒன்முகச் சேர்ந்து ஒரே நாளில் முழு அரிவிகளேயும் வெட்டும் நோக்கில் 'பரத்தை போடுதல்' என்ற கூட்டுப் பெருமுயற்சியில் ஈடுபடும் பொழுது இத்தகைய பாடல்கள், குழுக்குறி உரையாடல்கள் என்பன ஒரு கூட்டுணர்வையும் உற்சாகத்தையும் ஊட்டுவனவாக அமைகின்றன எனலாம்.

வன்னிப் பிரதேச சமய நம்பிக்கைகளிலும், சடங்கு முறைகளிலும், முக்கியமாக இரண்டு வகைப் பண்புகளே அவதானிக்க முடிகிறது. பரமசிவன் தொடக்கம் ஐயனர் வரையிலான புராண — ஆகம மரபுத் தெய்வங்களே வழிபடும் போதே வதனமார், விறுமர், யாப்பைவன்னியர் என்ற பெயரையுடைய பிரதேச தெய்வங்களும் பாடிப் பரவப் படுகின்றன. ஆலயங்களில் முறைப்படி தாபித்த கடவுளே ஆகம நெறிப்படி வழிபடும் வேளேயில், வசதிக்கேற்ப ஒரு கல்லே அல்லது மரவேரை முன்வைத்துப் பொங்கி மடை பரவி வழிபடும் நெறியும் காணப்படுகிறது. இவ் வேறுபாட்டை சாதி, சமூக அந்தஸ்தடிப்படையில் வேறுபடுத்தி நோக்குவதற்கில்லே. குடியேற்றக்காலத்தில் கொண்டு வந்த சமய மரபு வாழுகின்ற காலத்து வசதி வாய்ப்புக்களுக்கேற்ப நெகிழ்ந்து கொடுத்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

புராண — ஆகம மரபு வழிபாட்டில் பிராமணக் குருமாருக்கு முக்கிய பங்குண்டு. வன்னிப் பிரதேசத்தில் பிராமண சமூகத்தின் தொகைமிகக் குறைவு. புராணம் ஆகமம் சார்ந்த கல்வி மரபை வளர்ப்பதற்கான வாய்ப்பும் சூழலும் காணப்படவில்லேப் போலும். எனவே எல்லாச் சாதியினரும் இணைந்து தொழிற்படும் சமூக சமய இணைப்பைத் தெளிவாகக் காணலாம். குறிப்பாக வற்றுப்பளே அம்மன் கோவில் பொங்கல் வழிபாட்டில் பிராமணன் வேளாளர், கோவியர், தச்சர், பறையர் முதலிய பல சாதியினரும் இணைந்தே கிரிகைகள் செய்கின்றனர். இவ் விணைப்பு பாரம் பரியமாக நிலவிவருகிறது. மந்திரம் சொல்லி தீபாராதனே செய்யும் கிரியையை பிராமணர் செய்ய ஏனையவர்களே பொங்குவது மடைபரவுவது சிந்து பாடுவது முதலியன செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

954.9302
LOK
AL



ஆகம கல்வி வளர்ச்சியுடைய யாழ்ப் பாணப் பிரதேசத்தில் நாவலர் காலச் சிந் தனைகளின் விளைவாக ஆகம சம்மதமற்ற கண்ணகித் தெய்வக் கோவில்கள் பல ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகம்மை ஆலயங்களாக மாற்றமடைந்தமை கடந்த ஒரு நூற்றுண்டு வரலாறு. ஆயின் வன் னியில் கண்ணகி, கண்ணகை அம்மன் என்ற பெயரில் வெளியே சிலம்பேந்திய கண்ணகியாகவும் அகத்தே உமையின் அம் சமான காளியாகவும் கருதப் பட்டு வழிபடப்படுகிறுள். இந்த இருமுனைப்பட்ட போக்கிற்கு இணைப்புக் காட்டும் வகை யிலே இளங்கோவின் சிலப்பதிகாரக் கற் புடைப் பத்தினிக்கு புராணத் தன்மை வாய்ந்த கதை புனைந்து காளியின் அவ தாரம் எனக்காட்டி அமைகிறது சிலம்பு கூறல் எனப்படும் ஈழத்து சிலப்பதிகார ஏட்டிலக்கியம். ஈழத்தின் பிறபாகங்களிலும் பாடபேதங்களுடன் காணப்படும் (கோவ லனுர் கதை, கண்ணகிவழக்குரை) இவ் விலக்கிய மரபைத் தழுவியே கோவலன் கூத்து என்ற நாட்டுக் கூத்து வன்னிப் பிரதேசத்தில் ஆடப்படுகிறது.

கமக்காரனொருவன் தன் குளக்கட்டில் உள்ள பிள்ளையாருக்கு கற்பூரம் கொழுத் தியோ அல்லது பொங்கி மடைபரவியோ வழிபட்ட பின்பே தனது வயல் வேலை யைத் தொடங்குவான். இயந்திர உழவில் இத்தகைய சடங்குகளுக்கு நேரமில்லை. வேளாண்மையைப் பாதுகாப்பாக வீடு கொணர்ந்து சேர்த்தபின் தன் வழிபடு தெய்வத்திற்கு 'நிறை பணி' போடுதல் என்னும் மடை செய்வான். காட்டு நிலத் தைச் சார்ந்திருப்பதால் விலங்குகளின் அபாயத்திலிருந்து தற்காத்துக் கொள்வ தற்கு 'ஐயனுர்' என்ற தெய்வம் துணை புரிவதாக நம்பப்படுகிறது. காட்டிலே கரடி, யானை முதலிய மிருகங்கள் எதிர்ப்படும் வேளையில் 'சடையங்குளத்து ஐயனே!' என்றழைத்தவுடன் எதிர்ப்பட்ட மிருகம் பின்வாங்கி ஓடிவிட தப்பிமீண்ட பலரது கதைகள் இன்றும் வன்னியில் நிலவுகின் றன. ஐயனுர் வனமுறை தெய்வமென்பதே புராணமரபு.

திருமணம், மரணம் முதலான இல்லக் கிரியைகளில் பிராமணரையோ, சைவக்குருக் களையோ அழைத்து சமயாசாரப்படி செய் யப்படுவது பொதுமரபு. இத்தகைய வசதி வாய்ப்புக்கள் அற்ற சூழ்நிலையில் திருமணங் கள் ஊரின் முதியவரும், விடயம் தெரிந்த வரும், மதிப்புக்குரியவருமான ஒருவர், அக்கிரி யைகளை முன்னின்று நடத்திவைப்பது இன் றும் பல வன்னிக் கிராமங்களிற் காணப் படுகின்றது. உறவினர்கள் சூழ, தேங்காய் உடைத்து கூறை, வேட்டி உடுப்பித்து தாலி கட்டுவித்து மாலை மாற்றுவது என்ற அள வில் கல்யாணம் நிறைவுறும். இந்தக் கொண் டாட்டமும் செய்ய வசதியில்லாத விடத்து மாப்பிள்ளையை வீட்டுக்கழைத்து ''சோறு கொடுப்பித்தல்'' என்ற சுருக்கமான மண உறவு முறையும் வழக்கிலுண்டு. திருமணப் பதிவை 'கசாது' எழுதுவது என்று வன்னி யில் வழங்குவர்.

சமயச் சார்பான நம்பிக்கைகள் என்ற வகையில் மேலே கூறிய ஐயனுரின் துணை பற்றிய நம்பிக்கையும், வற்றுப்பளை கண்ணகி அம்மனுக்கு கடல்நீரில் விளக்கெரிக்கும் நம் பிக்கையும், அவ்விளக்கு இடையில் நூர்ந் தால் உலகழிவேற்படும் என்ற நம்பிக்கையும் வன்னியில் பரவலாக இன்றுண்டு. கடல் நீரில் விளக்கெரிக்கும் முறை இன்றும் நிலவு கின்றது. பிற சமயத்தவனுன நெவில் என்ற பறங்கியன் அம்மனை அவமதிக்க முயன்ற வேளையில் அம்மன் ஆலய பனிச்சைமரம் ஆடி, காயெறிந்து அவனைத் துரத்தியதான செவிவழிக்கதையை இன்றும் நம்புகின்றனர்.

பொதுவாக நாள் நட்சத்திரம் பார்த்து வேலை தொடங்குதல் சகுனம் பார்த்தல் முதலிய வற்றிலும் கோவிலிற் பூக்கட்டி வைத்து முடிவு அறிவதிலும் வன்னியின் முதிய பரம்பரையினருக்கு இன்றும் நம் பிக்கை உண்டு. வியாழன் வெள்ளி முதலிய

246021
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

நாட்களில் நெல்லோ, தானியங்களோ காசோ வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாது என்ற கட்டுப்பாட்டுணர்வு இன்றும் நிலவுகின்றது. அப்படிப் போக அனுமதிப்பது வீட்டின் செல்வத்தைச் சிதைப்பதாக அமையும் என நம்புகின்றனர். நீண்டகாலம் மழையின்றித் தவிக்கும் மக்கள் கொடும்பாவி கட்டி ஊர்முழுவதும் இழுத்துச் சென்று சுடுகாட்டில் எரித்தால் மழை பெய்யும் என்ற நம்பிக்கையுண்டு. பாடை ஒன்று செய்து அதில் பிரேதமொன்றைப் புனைந்து கூடியழுது ஒப்பாரியுடன் இழுத்துச் செல்லும் இந்த நிகழ்ச்சி ஒரு சவ ஊர்வலம் போலவே அமையும். 'உலகக் கொடுமையாகிய பாவி இறந்து விட்டான் இனி நல்ல காலம் பிறக்கும்' என்ற நம்பிக்கையின் உருவகம் இது.

வன்னிப் பிரதேசத்திற்குரிய சிறப்பான வீடமைப்பு முறைகளில் ஒன்று வட்டவீடு. நடுவிலே உயரமான தூண் அமையும். அதன் உச்சியிலே வட்டமாகக் கைமரங்கள் இணைக்கப்பட்டு கூம்பு வடிவிலே சுற்றவர இறக்கி மண்சுவர், சார்புக் கப்பு என்பவற்றில் பாரம் பொறுக்க வைத்து மேலே பனையோலையால் வேய்வர். இந்த வீட்டின் ஒற்றை வாசற்புறத்தில் இருபுறமும் திண்ணைகளும் அமையும். இவ்வீட்டுக்குப் புறம்பாகத் தனியாக சமயற் கொட்டில் (குசினி) வெளிமால் என்பன அமையும். இந்த வட்ட வீட்டுக்குள் இறைச்சிக்கறி கொண்டு போதல், வீட்டுக்கு விலக்கான நிலையிற் போதல், என்பன தவிர்க்கப்படும். குறிப்பிட்ட ஒரே பரப்புள்ள நீள் சதுர வீடமைப்பதைவிட வட்டவீடமைப்பது செலவு சுருக்கம் என்றும், தொழில் நுட்பச்சிரமம் குறைவானதென்றும் கூறப்படுகின்றது. இந்த வீடமைப்பு மரபு இன்று அருகிவருகிறது. வட்டவீடமைப்பு மரபு மட்டக்களப்புப் பிரதேசத்திலும் காணப்படுகின்றதென்றும் இது மலையாள பண்பாட்டுத் தொடர்பால் ஏற்பட்டதாக இருக்கலாம் என்றும் கலாநிதி அ. சண்முகதாஸ் தெரிவிக்கிறார். இதைப்போலவே நெல்லைப்பாதுகாப்பாக நீண்டநாள் வைத்திருப்பதற்கு 'கொம்பறை' என்ற வட்டக்கூடு முறையும் வன்னியிலே நிலவிவந்துள்ளது. ஒன்றரை முழ உயரமுள்ள நான்கு சிறு தூண்களை சதுரமாக நட்டு அவற்றின் மேல் பலகையிட்டு அதன்மேல் கொடிகளாற் பின்னப்பட்ட வட்டவடிவமான இருபக்கமும் திறந்த கூடையை வைப்பர். அக்கூடையின் மேல் ஓலைக் கூடையிட்டு மூடுவர். பலகை பரப்பப் பட்ட அடித்தளத்தில் மண் இட்டு சாணியால் மெழுகுவர். அதிலே நெல்லை இட்டு வைத்தால் வருடக் கணக்காக அது பழுதுபடாமலும், எலி, அணில், குருவி முதலியவற்றால் அழிக்கப்படாமலும் பாதுகாப்பாக இருக்கும். முன்னைய காலங்களில் நெல்லை வீட்டிலே பேணி வைக்கும் முறை நிலவியது. அண்மையில் நெற்கொள்வனவுக்கு கூட்டுறவுக் கடைகளும் தனிப்பட்ட வர்த்தகரும் பெருகியுள்ள சூழ்நிலையில் கொம்பறை அமைப்புக்கான தேவை அருகிவிட்டது.

பனையோலை தென்னங்கிடுகு முதலியவற்றால் வேயப்பட்ட வட்ட விடு, வெளிக் கொட்டில், கொம்பறை, சமையற் கொட்டில் ஆகியவற்றைக் கொண்ட வீடமைப்பும் அதே ஓலைக் கிடுகுகளால் சுற்றவர அடைக்கப்பட்ட புறவேலிகளும் பசு, எருமை முதலிய கால்நடைகளும் உப உணவுப் பயிர்கள் கொண்ட சிறு தோட்டமும் தன்னகத்தே அமைந்த வன்னியின் கிராமப்புற வீடமைப்பும் வீட்டுச் சுற்றுடலும் இன்று பொதுவாக மங்கி மறைந்து வருகின்றன.

கிராமிய மருத்துவம் என்ற வகையில் பாம்பு கடிப்பின் விஷம் இறக்கும் ஓதிய மலைப் பரியாரியார் பற்றிக் குறிப்பிடலாம். அவர் கொடுக்கும் மருந்து பற்றியும் அவர் வாய்ச் சொல்லின் தவறாமை பற்றியும் நிலக்கிளி நாவலிலே அ. பலமனோகரன் எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. இதே போல பிள்ளை பெற்ற அன்னையின் வயிற்றிலிருந்து நஞ்சுக்கொடி விழாவிட்டால் ஒருவர் வாய் பேசாமல்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடாரியை எடுத்துக் கொண்டு 'நஞ்சுக்குப் போகிறேன்' என்று மும்முறை சொல்லி விட்டு ஒரு மரத்தை நோக்கி ஓடுவார். அவ்வேளை நஞ்சு விழுந்துவிடும். அப்பொழுது விழாவிட்டால் குறித்த மரத்தின் பட்டையை வெட்டி வந்து அதில் பிரசவித்த பெண்ணை இருத்தியவுடன் நஞ்சு விழுந்துவிடும். இப்படியொரு மருத்துவ முறை வன்னிப் பிரதேசத்தின் தெற்கில் இலுப்பைக் குளம் சார்ந்த பகுதியில் நிலவி வருவதை வன்னியூர்க் கவிராயர் தமது 'வெள்ளித்திசை' என்ற சிறுகதையிலே குறிப்பிட்டுள்ளார். சின்னமுத்து, கொப்புளிப்பான், அம்மை முதலிய நோய்களும், கண்ணகி அம்மனின் மஞ்சட் காப்பையும் வேப்பிலையையும் பூசியும் தடவியும் நோய் தீர்க்கும் முறையும் நிலவி வருகின்றது.

விவசாயியின் வருவாய்க்குரிய பொழுது போக்குகளில் ஒன்று வேட்டை. பயிரை அழிக்க வரும் பன்றி முதலியவற்றை வேட்டையாடுவதுடன் பெருங்காடுகளுக்குட் சென்று நான்கைந்து நாட்கள் தங்கி புலி, மான், மரை என்பவற்றையும் வேட்டையாடும் வழக்கமுண்டு. இறைச்சியை உணவுக்குப் பயன்படுத்துவதுடன் இறைச்சி, தோல் இரண்டையும் விற்றுப் பணமீட்டலாம். புலித்தோல் அதிக விலைக்கு விற்கக் கூடியது. மிருகங்களைச் சுட்டுக் கொல்வதுதான் வேட்டை என்றாலும் அதிலும் ஒரு கருணை சார்ந்த நடைமுறை உண்டு. ஒரு மிருகம் இன்னொரு மிருகத்தைக் கொன்று உணவருந்திக் கொண்டிருக்கும் போது எந்த வேட்டைக் காரனும் அதனைச் சுடமாட்டான். உணவருந்தி இளைப்பாறிய பின்பே தன் முயற்சியைத் தொடருவான்.

வன்னிப் பிரதேசத்திற் பயிலப்படும் பாரம்பரியக் கலைகள் என்ற வகையில் கோலாட்டம், ஊஞ்சல், காவடி, மகுடி, வேதாள ஆட்டம், நாட்டுக் கூத்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம். குடமூதல் என்ற கலைமரபு பற்றியும் முதியோரால் நினைவு கூரப்படுகின்றது. ஊஞ்சல், கோலாட்டம் என்பவை ஆண்டு தோறும் சித்திரை வருடப்பிறப்பை அடுத்து வசந்த கால சூழ்நிலையிலே கூடியாடி மகிழும் கலைகள். ஈழத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இவை பயில்கின்றன. காவடியும் ஏனைய பிரதேசங்களுக்கும் பொதுவான கலையே. 'மகுடி என்பது மட்டக்களப்பிலும் பயில்வதாக அறியப்படுகிறது. முள்ளியவளையிலே ஆடப்படும் மகுடி ஒரு நாடகத் தன்மை வாய்ந்தகலை. இந்தியாவுக்கு இஸ்லாமியர் வியாபார நோக்கில் கப்பல் கட்டி வந்து குடியேறிய போது அங்கிருந்த இந்து சமய குருமாருக்கும் இவர்களுக்குமிடையில் நடைபெற்ற சமயப் போராட்டமே இதன் கதை பேயாட்டங்களும் மாந்திரிக அம்சங்களும் இணைந்த இந்தக் கலை இப்பொழுது அருகி வருகின்றது. வேதாள ஆட்டம் என்பது பூதங்களைப் போல வேடமிட்டு மனிதர் ஆடுவது. கந்தபுராணம் படிக்கும் கோயில்களில் அப்புராணத்தில் இடம் பெறும் பார்வதி திருமணம், தெய்வானை திருமணம் ஆகிய கதைப்பகுதிகள் பயன் கூறப்படும் நாட்களில் அத்திருமண நிகழ்ச்சியை விழாவாகக் கொண்டாடுவது வழக்கம். சிவன், முருகன் ஆகிய மாப்பிள்ளைகளின் திருமண ஊர்வலங்களில் அவர்களது சேனைகளிலுள்ள பூதங்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் கலந்து ஆடுகின்றன என்ற கருத்தைப் புலப்படுத்தும் வகையில் வேதாள ஆட்டம் நடைபெறும். பிரம்பினாலும் கடதாசியாலும் கட்டி ஒட்டி உருவாக்கப்பட்ட உயரமான பருத்த ஆண்-பெண் வேதாள உடற் கூடுகளுக்குள் நுழைந்து நின்று பறைமேளத்தின் தாளகதிக்கேற்ப ஆடுவர். முள்ளியவளை, செம்மலை, தென்னமரவாடி கிராமங்களில் இவ்வாட்டக்கலை நிலவிவந்தது.

நாட்டுக் கூத்து என்ற வகையில் கோவலன் கூத்து வன்னிப் பிரதேசத்திற்குரிய தனித்தன்மை வாய்ந்ததொன்றாகும். செங்குந்தர் கரையார் ஆகியோர் நீண்டகாலமாக இக்கூத்து மரபைப்பேணி வருகின்றனர். இந்த நாட்டுக்கூத்தின் ஆட்ட அமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அண்மைக்கால வரலாற்றுக்கதையா கிய 'பண்டார வன்னிய'னுக்குப் பயன் படுத்தத் தொடங்கியுள்ளமை ஒரு மரபு மாற்றமெனலாம். நாட்டுக் கூத்து நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது நடிகர் களுக்கு பாராட்டிச் சன்மானம் வழங்கு வதைக் 'கட்டுப்பூராயம்' என்பர்.

நாட்டார் வழக்கியல் மரபுகள் கல்வி, அரசபணி, கைத்தொழில் வாய்ப்புக்கள் முதலியவற்றால் ஏற்பட்டுள்ள சமூக மாற் றங்களால் காலப் போக்கில் வழக்கிழந்து போவதும் புதிய பரிணமம் பெறுவதுமுண்டு. வன்னியிலே வாய்மொழியாக வயற்பிர தேசங்களில் வழங்கிய பாடல்கள் இன்று ஒருசில முதியவர்கள் வாயில்தான் வாழ் கின்றன. ஒரு கிராம சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒருவருடன் ஒருவர் சார்ந் தியங்கும் வகையில் வயல்வேலை செய்யும் மரபும், பரத்தை போடுதல் என்ற அரிவு வெட்டும் மரபும், மறைந்து வருகின்றன. அரிவு வெட்டை ஒரு கூலித்தொழிலாக மாற்றியபின் பழைய அந்த இணைப்புணர் வுக்கு இடமில்லாது போய்விட்டது. பொ ழுது போக்குகள் குறைந்து பொருளீட்டும் வேகம் அதிகரிப்பதால் வாய்மொழிக் கதை மரபும் அருகிவிட்டது,

எருமைகள் உழுத வயலில் இயந்திர உழவு இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதனால் ஏர்க்கலப்பை மறைந்து வருகிறது. நாட்டுக் கூத்துகள் இரவுமுழுவதும் ஆடப் படும் நிலை இன்றும் நிலவினாலும் அவற் றைச் சுருக்கி இரண்டொரு மணிநேரக் கலையாக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

வட்டவீட்டுமுறை வழக்கிழக்க, ஓடும் செங்கல்லும் சீமெந்தும் இணைந்த கல்வீட்டு முறை வன்னிக் கிராமங்களில் பெருவழக் குப்பெற்று விட்டது. ஓட்டுத் தொழிற் சாலையின் வருகை இதனைத் துரிதப்படுத்திய தெனலாம். பலநோக்குச் சங்கமும் பிறபிர தேச வர்த்தகரும் பழைய 'கொம்பறை' நெற்பேணல் முறைவழக்கிழக்க முக்கிய காரணமாக அமைந்தமையை மேலே அவ தானித்தோம்.

கண்ணகைத் தெய்வத்துக்கு திங்கள் அல் லது வெள்ளியில் ஒரு நேரப்பூசை செய்வது மரபு. வெள்ளியினாலமைந்த முக அமைப்பு கை, கால் உறுப்புக்களுடன் கும்பத்தில் இருத்தப்படும் கண்ணகை மூல தெய்வம் இப்பொழுது அந்நிலையுடன் சிலாவிக்கிரக மாகவும் மாற்றமடைந்துள்ளமையும் தினந் தோறும் பூசை செய்வதற்கான மரபும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகால வழக்கு மாற்றங்கள். ஆகமமரபு தழுவிய பிற ஆலய தெய்வங்களுடன் கண்ணகித் தெய்வத்தை யும் ஒன்றாக எண்ணியதின் விளைவு இது.

இத்தகைய மாற்றங்கள் சமூக–பண்பாட் டின் பரிணமத்தை உணர்த்துகின்றன. கல்வி, அரசபணி, முதலியவற்றாலும் புதிய கைத்தொழில் துறைகளின் தோற்றத்தா லும் வன்னியரின் உலக நோக்கிலும் பரி ணமம் ஏற்பட்டுள்ளது. எனினும் பிரதே சத்தின் பழைமையை – வன்னியான் என்ற சமூக பண்பாட்டின் தனித்தன்மையை – கிராமிய உணர்விலே பேணிக் கொள்ளும் பண்பு இன்றும் வன்னியில் உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. பத்மநாதன், கலாநிதி. சி. வன்னியர் பேராதனை சி. பத்மநாதன் 1970. பக். 33 – 47.
2. **Manual of the Vanni Destricts.** Caylon, H. C. Cttle, Agting Govt Printers. 1895. Page 1.
3. The origin of the Tamil Vanni Cheif Lancies of Ceylon. **The Ceylon Journal of The Humanities.** Vol, one July 1970. PP 144 – 140.
   வீரகேசரியில் அவ்வப்போது வெளி வந்த் கட்டுரைகள் முதலியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வன்னிவள நாட்டுப்பாடல்கள்–சிறப்புரை பதிப்பு :
மெற்ருஸ் மயில். ஒட்டிசுட்டான் :
முல்லை இலக்கியவட்டம்
1980 பக். XX

5. மு. கு. பக். XXI

6. ஜே. பி. லூயிஸ். மு. கு. நூல்
பக். 153 – 154.

7. வையா என்னும் நாட்டுவளப்பம்.
வண. சா. ஞானப்பிரகாச சுவாமிகளின் பதிப்பு : அச்சுவேலி ஞானப்பிரகாசயந்திரசாலை.
1921. பக். 14.

8. யாழ்ப்பாணவைபவமாலை. முதலியார் குலசபாநாதன் பதிப்பு.
கொழும்பு : சரஸ்வதி புத்தகசாலை.
1953 பக். 10 – 13.

9. மு. கு. பக். 82.

10. வன்னிவள நாட்டுப்பாடல்கள்,
பக். 29.

[யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 1980 ஜுன் 13, 14, ஆம் திகதிகளில் நடத்திய, பேராசிரியர் கணபதிப்பிள்ளை நினைவு இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் ஆய்வரங்கில் படிக்கப்பட்டது]

## தென்னிந்திய வன்னியர்கள்

தென்னிந்தியாவிலுள்ள வன்னியர் பற்றி திருநாவுக்கரச நாயஞர் தேவாரம் ஒன்றில் சான்றுள்ளது.

''ஞானங் காட்டுவார் நன்னெறி காட்டுவார்
தானங் காட்டுவார் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவார் போல்வன்னி யூரரே''

திருவன்னியூர் என்ற இடத்திலிருக்கும் இறைவனை வன்னியூரர் என்று பாடுகிருர் திருநாவுக்கரசுநாயஞர் இங்கேயுள்ள ஈசன். அக்கினீஸ்வரர் என்று அழைக்கப்படுகிருர். இவ்வூர் திருவீழி மழலைக்கு வடமேற்கே 2 கல் தொலைவில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு எல்லைகள்

"வாழையம் பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டம்"

"வண்டு பண்செயு மாமலர்ப் பொழில் மஞ்ஞை
நடமிடும் மாதோட்டம்"

"பொன்னிலங்கிய முத்து மாமணிகளும்
பொருந்திய மாதோட்டம்."

என சமய குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற திருக்கேதீஸ்வர நாதர் எழுந்தருளி இருக்கும் மாதோட்டம் வன்னியின் மேற்கு எல்லைப்பகுதியாகும்.

இங்கேயுள்ள பாலாவி முற்காலத்தில் கப்பல்கள் வந்து நிற்கும் துறைமுகமாக விளங்கியிருக்கிறது. அதனை சுந்தரமூர்த்தி நாயனுர் "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்" என்று பாடுகிறுர்.

"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்று திருஞான சம்பந்தர் தேவாரம் பாடிய திருகோணமலை வன்னியின் கிழக்கெல்லையாக இருந்திருக்கிறது.

சமயகுரவர்களால் பாடப்பெற்ற இருதலங்கள் இரு எல்லைகளில் அமைந்திருக்கும் சிறப்பு வன்னிப்பகுதிக்கு நிலையான சொத்தாகும்.

## வன்னியர் தோற்றம்

வன்னியர்களின் தொழில் போர் புரிதல். படையில் உள்ள ஒருவன் அநேக சண்டைகளுக்குப் போய் அதிவீர பராக்கிரம முள்ளவனுகவும், விவேகியாகவும் காணப்படின் அவன் "வன்னியன்" என்ற உத்தியோகத்திற்கு உயர்த்தப்படுவான்.

இப்படியாக வன்னியன் உத்தியோகத்தைப் பெற்றவர்களிலிருந்தே வன்னியச்சாதி தோன்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கற்சிலை மடுவிலுள்ள
பண்டார வன்னியன் ஞாபகச் சின்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த வன்னிமண்ணின் காவலர்கள்

முல்லைமணி. வே. சுப்பிரமணியம் B. A. Hons E. T.

ஈழமணித்திருநாட்டின் பலபாகங்களிலும் வன்னியர் என்னும் குறுநிலமன்னர் ஆட்சி புரிந்து வந்தனர். வன்னிநாடு சிங்களப் பிரதேசங்களிலும் தமிழ்ப் பிரதேசங்களிலும் காணப்பட்டது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, நுவரகளவியா என்னும் பிரதேசங்களில் பல வன்னியர்கள் குறுநிலமன்னர்களாக ஆட்சி புரிந்து வந்தனர். பொலநறுவையின் கீர்த்தி பெற்ற மன்னனாகத் திகழ்ந்த விஜயபாகு ஒரு வன்னித் தலைவனாகவே ஆரம்பத்தில் இருந்தான். பதின்மூன்றும் நூற்றாண்டில் ஈழநாட்டின் முப்பெரும் பிரிவுகளான ராஜரட்டை மாயரட்டை, ரோகணம் என்பவற்றில் வன்னிமைகள் காணப்பட்டன. 1

வன்னி என அழைக்கப்படும் பிரதேசங்கள் ஈழத்தின் பலபாகங்களிலும் பரந்திருந்த போதும் இதன் கேந்திர ஸ்தானமாக முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனையிறவுக் கடலுக்குத் தெற்கேயுள்ள பகுதிகளும் திகழ்கின்றன. வன்னியென்னும் பெயரை இப்பிரதேசம் பெறுமுன் அடங்காப்பற்று என்னும் பெயரைப் பெற்றிருந்தது. இலங்கைச் சிவில் சேவையைச் சேர்ந்த ஜே. பி. லூயி என்பவர் அடங்காப்பற்றையே வன்னிநாடு எனக் குறிப்பிடுகின்றார். 2

(THE "WANNI" was the name given to the part of Nothern Ce lon which is bounded on the north by the Jaffna Lake on the South by the Aruvi River and the District of Nuwarakalawiya on the east by the District of Trincomalee and on the west by the District of Mannar.)

எல்லைவடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை —
நல்ல திருக்
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு

என்னும் பாடலும் வன்னி நாட்டின் எல்லைகளைக் குறிப்பிட்டு அடங்காப்பற்றையே வன்னிநாடு எனக் கூறுகின்றது.

---

1. கலாநிதி சி. பத்மநாதன் — வன்னியர்
2. J. P. Lewis — Manualof Vanni Districts

ப. வ. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி, வன்னியர் - பெயர்க்காரணம்**

வன்னி என்னும் சொல் நெருப்பு என்னும் பொருளில் கந்த புராணம் காமதகனப் படலத்தில் வருகின்றது வனம் நிறைந்த பிரதேசமாகையால் வன்னி எனப் பெயர் பெற்றது என்பர் சிலர். 3 'வன்ய' என்னும் வட மொழிச் சொல்லின் சிதைவுதான் வன்னியர் என்பர் வேறுசிலர். தமிழ் வரலாற்று மூலநூல்களின்படி வன்னினர் ஆண்டதாலேயே வன்னி என்னும் பெயரைப் பெற்றது.

**வன்னியர் யார்?**

வன்னியர் என்னும் சமூகம் சேனைத் தலைவராகவும், போர் வீரராகவும், சிற்றரசராகவும் தென்னிந்தியாவில் வாழ்ந்தனர். தமிழகத்தின் வட பகுதியில் சிறப்பாகத் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்து வந்தனர். சோழப் பேரரசின் படையமைப்பில் வன்னியர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். முதலாம் இராஜராஜ சோழன் இலங்கைக்குப் படையெடுத்த போது (பத்தாம் நூற்றாண்டின் இறுதி) அவர்களின் படையில் வன்னியர் இருந்தனர். வன்னி மன்னர் பற்றிய ஆதார பூர்வமான குறிப்புக்கள் சோழர் காலம் தொடக்கமே கல்வெட்டுக்களில் வருகின்றன. 'இதனால் சோழருக்குப் பின்பு தான் ஏறக்குறைய 12 ஆம் நூற்றாண்டில் வன்னியர் இலங்கையில் செல்வாக்குப் பெற்ற குறுநில மன்னராக இருந்திருக்கலாம்' என கலாநிதி சி. பத்மநாதன் கருதுகின்றார். ஆனால் அதற்கு முன்பு இலங்கையில் வன்னியர் இருக்கவில்லை என்று குறிப்பிடுதல் பொருந்தாது.

**வன்னியர் குடியேற்றம்**

வன்னியரின் இரு குடியேற்றங்களைப் பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலையும்', 'கோணேசர் கல்வெட்டும்' வையா பாடலும் குறிப்பிடுகின்றன. 'சாலிவாகன சகாப்தம் 358 ஆம் வருஷத்தில் (கி. பி. 436) மனு நீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரையின் பொருட்டு இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புதுப்பித்தான். இத் திருப்பணியை நிறைவேற்றிய பின்னர் அவ் வாலயப் பணிவிடைகளுக்கும் கோணேசர் லிங்கத்துக்குப் பூசை செய்வதற்கும் ஏற்படும் செலவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல்களையும் தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளில் பயிரிட்டு வருமானஞ் செலுத்துமாறு வன்னியர்களை அழைத்துக் குடியிருத்தினான். பின்னர் பாண்டிய நாட்டிலிருந்து 59 வன்னியர்கள் வந்து அவர்களுடன் கூடினார்கள். அவர்கள் தமக்குள் ஏழு தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். இவர்களின் பரம்பரையினரே வன்னியை ஆண்டு வந்தனர். இக்கதையைக் கோணேசர் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. இக்கதையையோ இதில் வரும் பெயர்களையோ நாம் கற்பனை எனக் கொண்டாலும் இது வன்னியர் திருகோணமலைப் பிரிவில் குடியேறிய சம்பவத்தைக் குறிக்கிறது எனக் கொள்ளுதல் பொருந்தும்.

'வையா பாடல்' என்னும் நூல் வன்னியர் குடியேற்றம் பற்றி வேறொரு கதையைக் கூறுகின்றது. இதுவே அடங்காப்பற்றில் வன்னியர் குடியேற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

'செயதுங்க வீர வரராச சிங்கன் தனது மாமன் மகளை மணம் முடிக்க விரும்புவதாக மதுரை மன்னனிடம் அறிவிக்குமாறு தூதுவர்களை அனுப்பினான். தூதுவர்கள் சொன்னதைக் கேட்ட மதுரை மன்னன் அறுபது வாட்படை வன்னியரை அழைத்து தனது மகளார் சமதூதியை அவர்களுடன் இலங்

3. J. P. LEWIS: Manual of wanni. "It is not certain what the meaning of the name is. Several derivations have been Suggested Tennent mentions two - "one significant of the forest (Vanam).... the other, of the intense neat while according to Cordine. the name means Scarcity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கு அனுப்பி வைத்தான். வரராசசிங்கன் இளவரசியை மணம் முடித்த பின்னர் வன்னியர்களுக்குப் பரிசாக அடங்காப்பற்றைக் கொடுத்தான். அடங்காப்பற்றை ஆளுதற்குப் போதிய படையின்மையால் இந்தியாவிலிருந்து இளஞ்சிங்கமாப்பாணன், நல்லாகுதேவன், அத்திமாப்பாணன் என்போரை அழைத்தனர். அவர்கள் மதுரை, தொண்டைமண்டலம் முதலிய இடங்களிலிருந்து வன்னியரைக் கொண்டு வந்தனர். இவர்கள் வன்னி நாட்டின் வெவ்வேறு பற்றுக்களுக்கு அதிபதிகளாயினர். இக்கதை வன்னியரின் இரண்டாவது குடியேற்றத்தைக் குறிப்பிடுகின்றது எனக் கொள்ளலாம்.

### வன்னிப் பற்றுக்கள்

வன்னிப் பற்றுக்கள் காலத்துக்குக் காலம் வேறுபட்டிருந்தன. கயிலாய வன்னியனார் சிதம்பர தரும சாதனப் பட்டையத்தில் வன்னிப் பற்றுக்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது: கரிக்கட்டுமூலை, பனங்காமம் தென்னன்மரபடி, மேல்பற்று, முள்ளியவளை, பச்சிலைப்பள்ளி, இவை ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் இருந்தன. இவற்றைவிட ஓமந்தை, புதுக்குடியிருப்பு, பூநகரி என்னும் பற்றுக்களும் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. ஏறக் குறைய இதே பிரிவுகளையே போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குவெறோஸ் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

### வன்னி மன்னர்கள்

வன்னிநாட்டை ஆண்ட மன்னர்கள் வன்னியர், அல்லது வன்னியனார் என்றும், அரசிகள் வன்னிச்சிகள் என்றும் அழைக்கப்பட்டனர். வன்னிராச்சியத்தின் சிறந்தராசதானியாக பனங்காமம் திகழ்ந்தது. புகழ்பூத்த மன்னர்களான குலசேகர வன்னியன், கைலை வன்னியன், மரியா செம்பத்தை என்று அழைக்கப்பட்ட நல்ல நாச்சியார் நல்ல மாப்பாணன் என்போர் பனங்காமத்தை ஆண்டனர். நல்ல நாச்சியார் வன்னிச்சி ஒல்லாந்தருக்குக் காட்டிய எதிர்ப்பைப் போன்று ஈழத்தின் வேறெப்பகுதியிலும் ஒல்லாந்தருக்கு எதிர்ப்புக் காட்டப்படவில்லை. 4. பனங்காமத்துக் கைலைவன்னியன் ஒல்லாந்தரின் மேலாணையை அவமதித்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக அவர்களின் தர்பாருக்குப் போகாது விட்டான். ஒல்லாந்தர் காலத்தில் புதுக்குடியிருப்பில் இலங்கை நாராயணனும், முள்ளியவளையில் பெரிய மெயினரும், கருநாவல் பற்றில் அம்பலவன்னியனும், தென்னன் மரபடியில் சேதுகாவல வன்னியனும், பூநகரியில் டொன்கஸ்பார் நிச்செந்திராயனும், பறையனாலங்குளத்தில் டொன் கஸ்பார்கவுசையனரும் ஆட்சி புரிந்தனர்.

### வன்னியரின் அடங்காத்தன்மை

வன்னியர் குறுநில மன்னராக இருந்த போதும் வடக்கே யாழ்ப்பாண மன்னர்க்கோ தெற்கே அனுராதபுர அரசர்க்கோ அடிபணியவில்லை. சில காலங்களில் யாழ்ப்பாண மன்னரின் மேலாணையை ஏற்பது போல் நடித்தாலும் திறை செலுத்தவில்லை. 16ஆம் நூற்றுண்டு தொடக்கம் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியவுடன் வன்னிப் பகுதியும் தங்கள் மேலாணையின் கீழ் வந்து விட்டதாகக் கருதினர். ஆனல் நடைமுறையில் வன்னியர்களாக இருந்தனர். போர்த்துக் கேயரைப் பொறுத்த அளவில் வன்னி நாட்டில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். 5. வன்னியர் யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுப்பதைத் தடுப்பதற்காக ஆனையிறவிலும், பூநகரியிலும் கோட்டைகளைக் கட்டியிருந்தனர்.

---

4. J. P. LEWIS: Manual of Vanni
5. C. S. Navaratnam:- Vanni and the Vanniyas.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் வன்னித் தலைவர்களை எதிர்க்க விரும்பவில்லை. வன்னியர் கண்டியரசுடன் சேர்ந்து தம்மை எதிர்க்கத் துணியலாம் என்னும் பயத்தினலே வன்னியருடன் நல்லுறவு கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் வன்னியை அடிபணிய வைக்க வேண்டும் என்னும் கொள்கையுடையவராய் இருந்தனர். எனினும் 1803 வரை வன்னிராச்சியத்தை அடிபணிய வைக்க முடியவில்லை.

### பண்டாரவன்னியன்

வன்னி நாட்டின் இறுதிப் பெருமன்னன் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் இவன். நுவரகளவியாவைச் சேர்ந்தவன் எனச் சிலரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவன் என வேறு சிலரும் கருதுகின்றனர். இவ் வன்னியனது யுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அடங்காப்பற்றுப் பிரதேசத்திலேயே நடைபெற்றிருக்கின்றன. நுவரகளவியாவைச் சேர்ந்தவன் என்னும் குறிப்பைக் கொண்டு இம் மன்னன் தமிழன் அல்லன் என வாதிடுவோரும் உண்டு. இவன் பெயர் தமிழ் மன்னன் என்பதைத் திடமாகக் காட்டுகின்றது. மகாவன்னி என அழைக்கப்படும் நுவரகளவிய என்னும் சிங்களப் பிரதேசத்தில் தமிழர் குடியேற்றம் நிகழ்ந்திருக்கிறது. இரண்டாம் இராசசிங்கனின் கைதியாக 18 ஆண்டுகள் கண்டியில் வாழ்ந்த றெபேட் நொக்ஸ் தப்பியோடிய போது அநுராதபுரத்தில் வாழ்ந்த மக்களுடன் சிங்கள மொழியில் உரையாடிய போது அவர்கள் அதை விளங்கிக் கொள்ளவில்லையென்றும், அவர்களின் தாய்மொழி தமிழாக இருந்ததென்றும் குறிப்பிடுகின்றார். எனவே பண்டாரவன்னியன் ஒரு தமிழ் வன்னி மன்னன் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கால முற் பகுதியிலும் வாழ்ந்தான். ஒல்லாந்தருக்கும் பண்டாரவன்னியனுக்குமிடையேயுள்ள தொடர்புகள் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு முறை ஒல்லாந்தர் சாயவேர் திறையாகத் தரும்படி கேட்ட போது அதை நிராகரித்து விட்டான். ஆங்கிலேயரின் குறிப்புக்களைக் கொண்டே நாம் பண்டாரவன்னியனைப் பற்றிய சில தகவல்களையேனும் பெறக் கூடியதாக இருக்கிறது. 1803 ஆகஸ்ட் 25 ஆம் திகதி முல்லைத்தீவிலிருந்த அரசாங்க இல்லத்தைத் தாக்கி அங்கு கப்டன் வொன் டிறிபேக்கின் தலைமையில் இருந்த படையைப் பின்வாங்கச் செய்தான். கப்டன் டிறிபேக் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வள்ளங்களின் உதவியுடன், தனது படைகளுடன் தப்பியோடினன். திருகோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் வந்தபடை மீண்டும் முல்லைத்தீவைக் கைப்பற்றியது. பண்டாரவன்னியனும் அவனுடைய படைவீரர்களும் கோட்டையிலிருந்து மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர். பண்டாரவன்னியனுக்கு உதவி புரிந்தமைக்காக இராசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு குமாரசேகர முதலியாரும், அவருடைய நண்பர்கள் சிலரும் தூக்கிலிடப்பட்டனர். தூக்கிலிடப்பட்ட இடம் இன்றும் தூக்குமரந்தடி என அழைக்கப்படுகின்றது.

19 ஆம் றெஜிமெண்டைச் சேர்ந்த படைப் பிரிவொன்று தளபதி ஜோன் யுவெலின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிநாடு நோக்கி அனுப்பப்பட்டது. இப் படை பல வீடுகளைத் தீக்கிரையாக்கியது. ஏராளமான மாடுகளைக் கொள்ளையடித்தது. மன்னாரிலிருந்து கப்டன் வொன் டிறிபேக்கின் தலைமையில் வந்தபடை கற்சிலைமடு என்னும் இடத்தில் பண்டாரவன்னியன் படைகளை எதிர்பாராத விதத்தில் தாக்கியது. 1803 அக்டோபர் 31 ஆம் நாள்

6. J. P. LEWIS
7. C. S. NAVARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை ஐந்து மணியளவில் இந்த யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தில் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டான். பண்டாரவன்னியன் வசமிருந்த கண்டி மன்னனின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கியொன்று ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

"1803 அக்டோபர் 31 இல் இதையடுத்த பகுதியிலே தான் கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான் என்னும் கருத்துள்ள ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்ட நடுகல் இன்றும் கற்சிலைமடுவில் உண்டு. (HEREABOUTS CAPTAIN VON DRIBERG DEFEATED PANDARA VAWNIYA 31 St OCTOBER 1803) கப்டன் வொன் டிறிபேக் ஆங்கிலேய கூலிப்படையிலுள்ள டச்சுத் தளபதியாகும்.

"இந்த யுத்தம் நடைபெற்ற இடத்தை ஒரு கிராமவாசி எனக்குக் காட்டினார். அவரிடம் அவரின் தாத்தாவினால் அவருக்குக் காட்டப்பட்டதாம். சில புளிய மரங்களின் மத்தியில் அவ்விடம் இருந்தது. இப்பெரிய புளிய மரங்கள் பண்டாரவன்னியனுக்கும் டிறிபேக்கிற்குமிடையே நடைபெற்ற யுத்தத்தைப் பார்வையிட்டிருக்கக் கூடிய வயதையுடையனவாயிருக்கின்றன." என 1895 ஆம் ஆண்டு ஜே. பி. லூயிஸ் குறிப்பிடுகின்றார். கற்சிலைமடுவிலுள்ள நடுகல் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. அந் நடுகல்லை கிராமத்தவர் கண்டிருந்தால் நிச்சயம் அதை அவருக்குக் காட்டியிருப்பார்கள். எனவே இந்த நடுகல் பின் வந்த தேசாதிபதிகளால் நடப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருத இடமுண்டு.

பண்டாரவன்னியனைத் தோற்கடித்தமைக்குப் பரிசாக பண்டாரவன்னியனுக்குச் சொந்தமான பண்டாரிக்குளம்,கப்டன் டிறிபேக்கிற்கு அளிக்கப்பட்டது. இக் குளமும் கிராமமும், 1865ஆம் ஆண்டுவரை டிறிபேக்கின் சந்ததியினர்வரை இருந்தது.

1803இல் தோற்கடிக்கப்பட்டு வன்னியிலிருந்து அகற்றப்பட்டபோதும், தனது படைவீரர்கள் சிதறுண்டபோதும், வன்னி மண்ணை மீண்டும் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தைப் பண்டாரவன்னியன் கைவிடவில்லை. 1810 மே மாதத்தில் கண்டிப் பிரஜைகள் சிலரது உதவியுடன் கிழக்கு மூலை தெற்குப்பகுதியில் பண்டாரவன்னியன் தனது எதிர்ப்பைத் தெரிவித்தான். வவுனியாவுக்கு அண்மையிலுள்ள கிராமம் ஒன்றைக் கொள்ளையடித்ததாக ஆங்கில அறிக்கைகள் கூறுகின்றன[8]. இப்படையெடுப்பின்போது பண்டாரவன்னியன் படையில் 14 வீரரே இருந்தனர். எனினும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இவன் படையைக்கண்டு நடுநடுங்கினர். கண்டிராச்சியத்தின் எல்லைப்பகுதிகளான வெடிவித்தகல், வவுனியா ஆகிய இடங்களில் கடும் பாதுகாப்புப்படைகள் நிறுவப்பட்டன. 1810ஆம் ஆண்டு செப்டம்பரில் பண்டாரவன்னியன் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் வன்னியைத் தாக்கவிருப்பதாக வன்னிப்பகுதி கலக்டர் ரேணருக்கு மேற்பற்று கிழக்கு முதலியார் கதிர்காமநாயகத்திடமிருந்து செய்தி எட்டியது.

வன்னியின் பாதுகாப்புப்படை மீண்டும் அதிகரிக்கப்பட்டது. ரேணரின் விண்ணப்பத்தின் பேரில் யாழ்ப்பாணம், திருகோணமலைப் படைப் பிரிவுகளிலிருந்து கூடுதலான வீரர் அனுப்பப்பட்டனர். 1811இல் உடையாவூரில் நடைபெற்ற போரில், பண்டாரவன்னி

8. வ. பொன்னம்பலம் — வித்தியாதீபம் 1967
பண்டாரவன்னியனை ஆங்கிலநிர்வாகம் கொள்ளைக்காரன் என வர்ணித்ததில் ஆச்சரியமில்லை. இந்திய விடுதலை இயக்கத்தையும் இதுபோன்ற தேசிய போராட்டங்களையும் வழிநடத்திய தலைவர்களுக்கு அன்னிய ஆளும் வர்க்கம் கொடுத்த பெயர் கொள்ளைக்காரர் என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன் படுகாயமடைந்தான். இவனது படைவீரர் இவனைப் பனங்காமத்திற்கு எடுத்துச் சென்றனர். அடுத்தநாளே பண்டாரவன்னியன் ஆவி பிரிந்தது. இதுவே பண்டாரவன்னியனின் ஆதார பூர்வமான வரலாறாகும். 1980இல் பண்டாரவன்னியனின் இறப்புப் பற்றி ஒரு புதிய கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பண்டாரவன்னியன் யுத்தத்தில் இறக்கவில்லை; வயிற்றோட்ட நோயினால் இறந்தான் என்பதே அக் கருத்து. இதனை வெளியிட்டவர் தமது கூற்றுக்கு எதுவித ஆதாரமும் தெரிவிக்கவில்லை. ஆதாரம் இல்லாத இக் கூற்றை வரலாற்று உண்மையாக எடுக்கமுடியாது.

பண்டாரவன்னியன் மறைவுடன் வன்னியர் எதிர்ப்பும் மறைந்துவிட்டது. சூரியனே அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராச்சியத்தைக் கலங்கவைத்துத் தனது பிறந்தபொன்னாட்டின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்து இறுதி மூச்சுவரை அயராது போரிட்ட மாவீரன் பண்டாரவன்னியனது அஞ்சா நெஞ்சமும், தளரா ஊக்கமும் பற்றி எதிரிகளின் ஏடுகளே எமக்கு எடுத்தியம்புகின்றன. ஒரு சில நாட்டுப்பாடல்களைத் தவிர, மாவீரனின் வாழ்க்கைச் சம்பவங்கள் பேணிப் பாதுகாக்கப்படவில்லை.

வன்னி நாட்டினதும் புகழ்பூத்த வன்னி மண்ணின் காவலர் பற்றியும் முழுமையான ஆய்வுகள் நடத்தப்படவேண்டும்.

அன்னைபூமி யென்றும் அடங்காப்பற்றும்
வன்னி மண்ணினின் மானத்தைக்
காத்திட
தன்னுயிர் கொடுத்துப் புகழ்கொண்டமா
மன்னன் மாவீரன் பண்டார வன்னியன்.

## வன்னியரின் சின்னம் வில்

கோணேசர் கல்வெட்டும், வையா பாடலும் இலங்கைக்கு வன்னியர் வந்த வரலாறு பற்றி குறிப்பிடுகின்றன. வன்னியர்கள் தென்னிந்தியப் பகுதிகளிலிருந்தே இலங்கைக்கு வந்தனர் என இரண்டுமே கூறுகின்றன. தற்பொழுது தமிழ் நாட்டில் சேலம் முதல் புதுச்சேரிவரை வன்னிய குலத்தினர் பரந்து வாழ்கின்றனர்.

வன்னியர் அக்கினி குலத்தவர் என்பது புராணக் கதை. '' சிலை எழுபது '' என்னும் நூல் வன்னியர்குல மான்மியத்தை அவ்விதம் கூறுகின்றது. வன்னியருக்குரிய சின்னம் வில் ஆகும்.

(வையாபாடல் ஆய்வுரை)
க. செ. நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிவள நாடு

— வித்துவான் F. X. C. நடராசா
மட்டக்களப்பு

வன்னிநாடு வளர்சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னிநாடு கதிர்சோலை நாடு
காராளர் வாழுங் கன்னியர்நாடு

என்பது நாட்டுப்பாடல். இந்த நாட்டுப்பாடலிற் குறிப்பிடப்படும் நாடு வன்னி ஆகும். வன்னி பின்னர் வவனி, வவனியா என்று மாறுதலடைந்துள்ளது.

வடபால் ஆனையிறவுக்கடல்; தென்பால் வடமத்திய மாகாணம்; குணதிசை கடல் குடதிசை மன்னார் மாவட்டம். இவற்றுளடங்கிய மாநிலப்பகுதியே வன்னி. தற்காலம் வவுனியா முல்லைத்தீவு என்ற இரு மாவட்டங்களாகத் திகழ்கின்றது.

வன்னி என்ற சொல்லிற்குப் பல பொருள்களுண்டு. நெருப்பு, வனம், வெப்பம் வெறுமை, கடுமை, வன்னியன் என்னும் சாதி எனப் பலபடக்கூறுவர். அக்கினியையும் சாதியையும் பெரும்பாலும் குறித்து நிற்குமென்பதே பொதுவழக்கு.

வியத்தகு இந்தியாவில் மானியமுறையில் ஆட்சிநடாத்திய காலத்திலும் பேரரசர், சிற்றரசர் ஆட்சிமுறையிலும் படைக்கும் படைதிரட்டலுக்கும் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். படையாட்சி, வன்னியர், போடிமார், அதிகாரி. முதலிமார், பாளையக்காரர், பட்டங்கட்டி, சம்மட்டியார், முக்கியர், முன்னிலைக்காரர், சேர்வைக்காரர், கிராமணி, தொண்டமான், என்ற சொற்களெல்லாம் படையுடன் சம்பந்தப்பட்டவையாக இருத்தலை நாம் காணலாம்.

வன்னியர் என்றழைக்கப்பட்ட மக்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை முதலாமிடங்களில் அதிகமாக வசித்தனர். மதுரையிலிருந்து வந்தவர்களே வன்னிவள நாட்டிற் குடியேறினர் என்று வையாபாடல் மூலம் அறியக்கிடக்கின்றது. ஆகவே வன் யர் என்ற படைப்பிரிவினர், வந்தேறிய நாடு வன்னி ஆயிற்று என்பதே பொருத்தமுடையது. ஆங்கிலேயர் ஆட்சிமுறையிலும் வன்னியனார் என்ற பதவி வன்னியைச் சார்ந்த நிலப்பகுதிகளில் நிலவிவந்தமை யாவரும் அறிந்ததே.

வன்னியர் மனைவிமாரை வன்னிச்சி, நாச்சிமார் என்பர். மட்டக்களப்பில் வன்னிச்சிகுளம், உன்னிச்சைகுளம் என்றும், வன்னிச்சிகேணி பனிச்சங்கேணி என்றும் வழங்குகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள நாச்சிமார் கோயிலும் .இவர்களோடு சம்பந்தப்பட்டதாகும். வன்னியனாரை முதலிமார் என்றும் வழங்குவர். வயல்வெளிகளில் அமைந்து கிடக்கும் முதலிமார் கோயில்கள் இவர்களின் பெயரால் ஏற்பட்டவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியர் என்ற படைத்தலைமை வழக்கம் குறிப்பிட்ட ஒரு சாதியினர்க்குரிய தன்று. இந்தியாவில் வழங்கும் அத்தனை சாதிகளின் பேரால் வன்னியர் என்ற தலைவர் இருப்பர். அதனுலன்றே குறும்பு வன்னியர், அம்பலக்கார வன்னியர், பள்ளி வன்னியர், வலய வன்னியர், மறவ வன்னியர், தேன் வன்னியர், இருள வன்னியர், வன்னிகுல சத்திரியர் என்ற பலசாதி மக்களிலும் வன்னியர் இருந்தனர் என்பது புலனுகின்றது.

வன்னியரைப்பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டிருப்பினும் அவற்றிற் பெரும்பாலானவை வன்னியர்கள் யாவரும் படைக்கலப்பயிற்சி உடையவரென்பதை எடுத்து இயம்புகின்றன.

படைக்கலப்பயிற்சியுடையவர்களாக ஈழத்தில் வந்து குடியேறி வன்னிவளநாட்டில் குடிபதிகளாக வாழும்பொழுது அவர்கள் தங்களுக்கென ஓர் சுயாட்சிநிலத்தினை வகுத்து ஆட்சி நடத்தியபடியால் "அடங்காப்பற்று" என்று தங்கள் வதிவிடத்திற்கு நாமஞ்சூட்டலாயினர்.

வன்னியிற் குடியேறிய வன்னியர்கள் தமிழ்பேசும் மக்களாக இருந்தபடியாற்றுன் அங்குள்ள பெயர்கள் யாவும் தனித் தமிழ்ப்பெயர்களாக அமைந்துள்ளன எனலாம்.

இயற்கையிலமைந்த குளங்களின் பாங்கரில் தங்கள் வாழ்க்கையை நடாத்தத் தொடங்கிக் காடுவெட்டியும், குளந்தொட்டும், பயிர்த்தொழிலில் ஈடுபடலாயினர். இவர்கள் தொட்ட தொடாத நீர் நிலைகள் பற்பல பெயர்களைப் பெறலாயின. குளம், வில், மடு, மோட்டை, கேணி, நீராவி, ஒடை, குழி, தாழ்வு, குண்டு, பள்ளம், பொக்கணை என்பன அவற்றுட்சில.

இவ்வண்ணம் நீர்நிலைகளைச்சார்ந்து மக்கள் இருப்புக்கொள்ள இருந்த இடங்களும் நீர்நிலைப் பெயர்களை அடைந்தன. வன்னிவளநாட்டில் குக்கிராமங்கள் ஐந்நூறுக்கு மேற்பட இருக்கின்றன. இவற்றில் முந்நூறு கிராமங்கள் குளம் என்ற சொல்லினை ஈருக உடையன. குளத்திற்கு வைத்த அடைமொழிகளும் தனித் தமிழ்ச்சொற்களாக அமைந்துள்ளன. அவற்றுள் சில வருமாறு. அலைக்கல்லுப்போட்டகுளம், கல்லொழுங்குப்புளியங்குளம், கல்நாட்டினகுளம், குடிதாங்கினகுளம், மரந்தள்ளிநின்றகுளம், அலியன்சாய்ந்தகுளம், ஆனைபிடித்தகுளம், கிடாப்பிடித்தகுளம், மயில்முட்டையிட்டகுளம், விளக்குவைத்த குளம்.

குளங்களுள் முதன்மையானதும், பழைமையானதும் ஆகியது வவுனிக்குளம். இது மகாவமிசத்திற் கூறப்பட்டிருக்கிறது.

வன்னிவளநாட்டில் கன்னியர் கோவில் என்றோர் தலம் உண்டு. இங்கு ஏழு கோயில்கள் ஏழு கன்னியர்க்குள. கன்னியராயிருந்த வன்னிச்சிமாரைக் குறிப்பதுபோலும். நந்தி என்ற வன்னியனின் புத்திரிகள் என்றுங்கூறுவர்.

இனி, வன்னிவளநாடு பற்றி எங்கள் தமிழ் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்ட சில சம்பவங்கள் சம்பந்தமாகக் கூறப்பட்டவற்றைப் பார்ப்போமாக. எமக்குக் கிடைத்த மிகவும் பழமையான நூல்கள் இரண்டு. இவை இரண்டும் போர்த்துக்கீசர் காலத்து எழுந்தவை.

| | |
|---|---|
| சந்தியோர்க்குளமயூர் அம்மானை | 1647 |
| ஞானப்பள்ளு | 1658 க்கு முன்னர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு பிரபந்தங்களிலும் வன்னிநாடு எடுத்தோதப்பட்டிருக்கிறது. சந்தியோ குமையூர் அம்மானை என்ற சிற்றிலக்கியத்தைப் பேதுருப்புலவர் பாடினர். கி.பி. 1647ல் தமது நூலைப் பாடியதாக அவரே பாயிரத்திற் கூறியுள்ளார்.

ஆண்டாயிரமும் அறுநூறும் ஆறேளும்
மீண்டும் ஓர் அஞ்சும் விளங்கவே சென்றவந்நாள்
கார்த்திகை மார்கழியாம் காணுமிரு மாதமதில்
கீர்த்தியுள்ள செந்தமிழாற் கிளத்தினர் இக்கதையை
என்று பாடப்பட்டிருக்கிறது. இந்நூலில்
தொம்மையாந் தூதுவனும் சோதிக்குவந்தவனும்
நம்மையாம் தொம்மை இங்கிருக்கவொட்டானும்
வாருங்கள் பேய்களே வன்னி குடிபோய் விடுவோம்.

ஞானப்பள்ளும் போர்த்துக்கீசர் காலத்தில் பாடப்பட்டது. அது போர்த்துக்கல் அரசனை வாழ்த்தியுள்ளது. மேலேயுள்ள அம்மானை அடிகளில் பேய்கள் வன்னிநாடு சென்றன என்றியம்பப்பட்டிருக்கிறது. ஞானப்பள்ளுப் பாடலிற் சம்மனசுகள் அங்கு அனுப்பப்பட்டனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாடல் வருமாறு:

முன்னை நாளி லெண்ணவொண்ணுத
வெண்ணச் சம்மனசுவை முயன்றே படைத்து
விட்டவி தத்தை முட்டவே சிலர் போட்டதால்
அன்ன வர்களை வன்னி யானதிலடைத்து
நன்மை படைத்தான் அர்ச்சிய சிட்ட ஞ்ருமானு
சபை யழகு பண்ணை வயலிலே.

இவ்வகையாக வன்னிவளநாடு நன்செய், புன்செய் நாடாகத்திகழ்ந்து பலவகைப் பற்றுகப் பிரிந்து வன்னியர்கள் பலரால் ஆளப்பட்டது என்ற வரலாறு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்கால வரன்முறைகளிற் காணக்கூடியதாக இருக்கிறது.

## சிங்கள இனத்தில் வன்னியர்

மதுரா புரியிலிருந்து அறுபது வன்னியர், மாருதப்பிரவையின் மகன் சிங்க மன்னவன் (வாலசிங்கன், வரராசசிங்கன்) காலத்தில் அவன் மணவினை சம்பந்தமாக இலங்கை வந்தார்கள். முதல் வந்த அவ்வறுபது வன்னியரும் அடங்காப் பற்றினுக்கு அனுப்பட்டனர். அவர்களுள் ஒரு வன்னியன் கண்டி நகரில் திசை (Disava) ஆக இருந்தான் இவனே சிங்கள மக்களுள் வன்னிய குலம் வளர்வதற்கு காரணனுயிருந்தான்

வையாபாடல் ஆய்வுரை
க. செ. நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் மரபும் பண்பாடும் ஓர் ஆய்வு:

**[முல்லைத்தீவு, வவுனியா மாவட்டம்]**

— இரா. வை. கனகரத்தினம் B. A. (Hons)

**வ**ன்னிநாடு வடக்கே யாழ்ப்பாணக்குடா நாட்டையும் கிழக்கே அருவியாற்றங் கரையையும், மேற்கே மன்னார் பிரதேசத்தையும் உள்ளடக்கி இருந்தது.[1] வரலாற்றில் இப்பகுதி "அடங்காப்பற்று" என்று அழைக்கப்பட்டது. இவ் வன்னிமை தென்ன மரவாடி, முள்ளியவளை, கருநாவற்பற்று, செட்டிகுளம், குதிரைமலை, துணுக்காய் முதலான பகுதிகளை உள்ளடக்கி இருந்தது.[2]

இவ் வன்னிமை மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை ஆகிய பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கி காட்சியளிக்கின்றது. நெய்தலும் மருதமும் இணைந்தும் தனித்தும் நின்று மக்கள் வாழ்வுக்கு வளமளிக்கின்றன. இப் பிரதேசத்தில்; மதுரை, மருங்கூர், வடகிரிநாடு, காரைக்கால் முதலான இடங்களில் இருந்து வந்து மக்கள் குடியேறினர்.[2A] வன்னிமைகள் வன்னியர்களாலும், ஆரியச் சக்கரவர்த்திகளாலும் (1216 — 1621) ஐரோப்பியர்களாலும் (1621 — 1947) ஆளப்பட்டன. காலாகாலம் ஏற்பட்ட அரசியல் படையெடுப்புக்களும், அரசியல் மாற்றங்களும் வன்னி மக்களின் அரசியல் இறைமையை வலுவிழக்கச் செய்தபோதிலும் அவர்கள் தமது பாரம்பரிய வழமைகளை பேணிக்காப்பதில் பின்நிற்கவில்லை.

வன்னிமைகள் இன்றும் கிராமிய அமைப்புடையனவாகவே காணப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியிற் கிறிஸ்தவ மிசனரிமார்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்த நிலையிலும், மக்களாட்சிக்குப்பின் ஏற்பட்ட அரசியல் விளிப்புணர்ச்சியால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களால் வன்னிமைகள் வளர்ச்சியுற்று வருகின்ற நிலையிலும், அவர்களின் சமுதாய மரபுகளும் நம்பிக்கைகளும் பண்பாடும் பெரிதும் மாற்றமின்றி கைக்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

## வீடுகளின் அமைப்பு

பொதுமக்களின் பெரும்பான்மையோரின் வீடுகள் சிறிய குடிசைகளாகவே காணப்படுகின்றன. அவற்றின் அமைப்பு முறைகளைக் கொண்டு மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம்.

(i) நீண்ட சதுர நிலப்பரப்பில் சாய்வான கூரைகளை உடையவை
(ii) நீண்ட சதுர நிலப்பரப்பில் கூம்பக வடிவான கூரைகளை உடையவை
(iii) நீண்ட சதுரமான நிலப்பரப்பில் குவிந்த வடிவமான கூரைகளை உடையவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமை எங்கிலும் நீள்சதுரமான வீடுகளையே அவதானிக்கலாம். இவை பனையோலைகளாலும், தென்னோலைகளாலும் வைக்கோலாலும் வேயப்பட்டுள்ளன. இவற்றின் சுவர்கள் களிமண்களால் கட்டப்பட்டவை. சுமார் 4' முதல் 5' உயரமுடையவை. இவற்றுக்கு யன்னல்கள் இருப்பதில்லை. சில பகுதிகளில் சுவர்கள் சிறியனவாக அமைத்து அதன்மேலே கம்புகள் கொண்ட செத்தைகளையோ, ஓலைகள் கொண்ட செத்தைகளையோ அமைத்துக்கொள்வர். இவற்றிலே திண்ணைகள் அமைக்கப்படுவதில்லை. வீட்டின் முன்புறமாக ஒரு பந்தல் போட்டுக் கொள்வார்கள். இதனை மால் என்றும் அழைப்பர். விருந்தினர், வீட்டில் உள்ளோர் முதலானோரின் உரையாடல்கள் யாவும் பந்தலில் நடைபெறும். இத்தகைய சதுரக் கூரை வீடுகள் இரட்டைக்கூரை வீடுகளாகவும் அமைந்திருக்கின்றன. இவ்வகை வீட்டமைப்பில் பிறிதோர் அமைப்பையும் காணலாம். அவை கூரைகள் சதுர வடிவாக அமைந்து; சுவர்கள் 4' — 5' உயரமுடையதாய் வாசலின் இரு பக்கங்களையும் திண்ணைகளாகக் கொண்டதாய், நாற்புறமும் திண்ணைகளாகக் கொண்டதாய் அமைந்து காணப்படும். இவ்வகை வீடுகளே வன்னிமை எங்கும் பரந்து காணப்படுகிறது. (ii) கூம்பக வடிவமான கூரைகளைக்கொண்ட வீடுகள் குறிப்பாக முள்ளியவளை, வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் முதலான இடங்களிலே காணப்படுகின்றன. இவ்வகை வீடுகள்யாவும் பனையோலை கொண்டே வேயப்படுகின்றன. இதன் சுவர் 4' — 5' உட்பட்டதே.

இவற்றுக்குத் திண்ணைகள், யன்னல்கள் அமைக்கப்படுவதில்லை. (iii) குவிந்த கூரைகளை உடைய வீடுகள் சாய்ந்த கூரைகளை உடைய வீடுகளைப்போன்று பரந்த இணைந்து காணப்படுகின்றன. இவற்றின் சுவர்கள் 4' — 5' உயரமுடையவை. வாசலின் முன்புறத்தில் ஒரு சிறிய திண்ணை அமைந்து காணப்படும். எல்லாப் பிரதான வீட்டின் முன்பக்கமாக பந்தல் அமைப்பது வழக்கமாகக் காணப்படுகின்றது. இப்பந்தல் சற்று விசாலமானது. பந்தலை வைரமரங்களான முதிரை, காயா, வெடுக்குநாறி முதலான ''கால்'' தங்கிநிற்கும். வீட்டின் வாசல்கள் கிழக்குநோக்கி அல்லது வடக்குநோக்கி அமைந்திருக்கும். வன்னிமக்கள் பனையோலை கொண்டும் வைக்கோல்கொண்டும் வேய்வதையே பெரிதும் விரும்பி நிற்பர்.

வீட்டின் உட்புறங்களையும் வெளிப்புறங்களையும், சுவர்களையும், பச்சைச் சாணகம் கொண்டு அவற்றோடு சாம்பலும் சிறிது கலந்து கிழமைக்கு ஒருமுறை அல்லது இருமுறை மெழுகுவார்கள். பிரதான வீட்டினுள்ளே பெட்டி, பெட்டகம், மதிப்புள்ள பொருட்களை வைத்துப் பாதுகாப்பர். பதினெட்டாம் நூற்றுண்டுவரை இவர்கள் கதிரை, மேசை மற்றும் வீட்டுத் தளபாடங்களின் தேவையை அறிந்துகொண்டதாய் தெரியவில்லை. இதனாற்போலும் வீட்டின் அமைப்புக்கள் அடக்கமாக அமைந்தன. வீடுகளை மிகவும் துப்பரவாக வைத்திருப்பர். வீட்டின் முன்பக்கமாக பத்திரி மரம், தோடை, தேசிக்காய், மாதுளை மரங்களை நாட்டிவைப்பர். இவை முளிவதற்கு நல்லதென்பது இவர்களின் நம்பிக்கை. வீட்டின் புறத்தே முருங்கை, பலா, மா முதலான மரங்களை நடுவர். மட்டக்களப்பு மக்களும் வீட்டின் முன்புறத்தே மாதுளை மரத்தை நடுவர். இது கண்ணகி, மாரியாகிய தெய்வங்களின் சின்னமாகக் கணிக்கப்படுகின்றது[3]. வீட்டிற்கு வேலி அத்தியாவசியம். வன்னிமக்கள் வேலி அடைக்கும் அமைப்பிற்கும் ஏனைய பிரதேச மக்கள் அமைக்கும் வேலி அடைப்பிற்கும் வேறுபாடுகள் பல. வன்னிமக்கள் தமது வேலிகளை காட்டுத்தடிகள் கொண்டும் கிணியா, பன்னை முதலிய மரங்களின் ''அலம்பல்'' கொண்டும் அமைத்துக்கொள்வர். வீட்டு வாசலை முன்நோக்கி சிறிது தூரத்தில் நெல்லுப் பட்டறை[4] அல்லது கொம்பறை[5] அமைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீமூட்டல்**

தீப்பெட்டி சரியாக உபயோகத்திற்கு வருவதற்கு முன்பாக வன்னி மக்கள் தீமூட்டிக் கல்லுக்கொண்டும், ஆத்தித்தடி, உலரித்தடிகளை எடுத்து ஒன்றின் நடுவில் துளைசெய்து மற்றத்தடியை துளைக்குள் நிமித்திவைத்து கரம்பக்கயிற்றை நேரிய தடியின் நடுப்பகுதியில் கட்டி அமைத்து இழுப்பதன்மூலம் பெறப்படும் தீப்பொறியை ஆனை லத்தி, தும்பு முதலானவற்றில் பற்றவைப்பதன் மூலம் பெற்றுக்கொண்டனர். தீயைமூட்டி ''தீப்பறை'' போடுவதன் மூலமும் நிரந்தரமாக நெருப்பைப் பெறுவதற்கு வழிதேடிக் கொண்டனர். இரவில் நீண்ட தூரம் செல்ல வேண்டுமானால் காய்ந்த வீரத்தடியை எடுத்து அதன் மேற்புறத்தை சிறுசிறு துண்டுகளாக கிளித்து அதிலே நெருப்பை மூட்டி பந்தம்போல் எடுத்துச்செல்வர்.

**உணவுவகை**

மக்களின் காலை உணவு பழஞ்சோறு, பழந்தண்ணீர், பால் பச்சையரிசிக்கஞ்சி, பனாட்டு, பனங்கிழங்கு, கவலைக்கிழங்கு, அல்லைக்கிழங்கு, தேன் முதலானவற்றை உண்பர். மதிய உணவாக சோறு, மரக்கறி, பால், தயிர், நெய், இறைச்சிவகைகள் முதலானவற்றைச் சாப்பிடுவர். இரவு உணவாக சோற்றையே சாப்பிட்டுக்கொள்வர்.

**உறவுமுறை**

தமிழ்நாட்டிலே உறவுமுறையானது குடும்பம், பங்காளி, தாய்வழி உறவினர், சாதி என்ற அடிப்படையிலே இருப்பது போன்று[6]; ஈழநாட்டிலும் குறிப்பாக வன்னிமக்களிடத்திலும் காணப்படுகின்றது. தாய், தந்தை அவர்களுடைய குழந்தைகள் அனைவரையும் சேர்த்துக் குடும்பம் என்பர். குறிப்பிட்ட கிராம எல்லைக்குள்ளே சிறிய வீட்டிலே வாழும் பழக்கமுள்ள இம்மக்கள் தம் பிள்ளைகளின் மருமக்களையும் மருமகள்மாரையும் ஒரே வீட்டில் வைத்திருப்பதிலே பெரிதும் விருப்பம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலையில் இவர்கள் ஒரு பொதுக் குடும்பவாழ்க்கை வாழ்வதிலே நம்பிக்கையும் விருப்பமும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். உறவின் தாக்கமும் தாய்வழி, அல்லது மனைவிவழி உறவினரிடத்து அதிக நம்பிக்கையும் பற்றும் செலுத்தும் பண்பு பொதுவாக தமிழ் மக்களிடத்தே இருப்பதொன்றே. இதற்கு அவர்கள் விதிவிலக்கன்று.

**குலமரபு**

குலமரபு என்பது பல்வேறுபட்ட இனமரபுகளைக் குறிப்பதாகும். வன்னிமையிலே வேளாளர், முதலியார், உடையார்[7] என்போர் பிரதான உயர் வகுப்பினர் ஆவர். பிராமணர் வன்னிக்கு 18ம் நூற்றாண்டிற்குப் பிற்பாடே வந்ததாக அறிய முடிகின்றது[8]. இவ்வுயர் குடிமக்களுக்கு பலவகையான குடிமக்களும் உளர்[9]. உயர்வகுப்பினர் எல்லோரும் தாம் நினைத்தமாத்திரத்திலே குடிமகனைப் பெற்றுவிடமுடியாது. பத்து மரக்கால் விளைநிலமும் ஒரு பெரிய பால்மாடும் ஒரு வேட்டைநாயும் வைத்திருக்கும் ஒருவருக்கே ஒரு குடிமகன் இருப்பான். பார்ப்பனரின் முக்கியத்துவம் மிகக்குறைவு. 19ம் நூற்றாண்டிலே இரு பார்ப்பனக் குடும்பங்களே இருந்தனரென அறிய முடிகின்றது. அம்பட்டர், வண்ணார், பள்ளர், கோவியர், ஆகியோரே இம் மக்களின் பிரதான குடிமக்களாவர். இவர்கள் ''குடிமகன்'' என்றே அழைக்கப்பட்டார்கள். இப்பண்பு ஈழநாட்டிலே பரந்துவாழும் தமிழ் சமுதாய மரபிற்கு ஒப்பானதாகும். உயர் குடி மக்களின் வாழ்க்கையின் நிலைக்களமாக அமையும் கோவியருக்கு ஆதனங்கள் இருந்தன, ஏனைய குடிமக்களுக்கு நிலபுலன்கள் இருக்கவில்லை[9A]. இதனாலே இவர்கள் கமக்காரனின் தயவிலேயே தங்கி இருக்கவேண்டிய தேவை இருந்தது. இவர்கள் ஆண்டொன்றிற்கும் பிரதான சடங்குகள் நடைபெறும் பொழுதும் சில ஊதியங்களைப் பெற்றுக் கொள்வர். வண்ணார் ஆண்டொன்றிற்கு ஆண்களின் குடித்தொழிலிற்காக 3 மரக்கால் நெல்லையும் பெண்களின் குடித்தொ

ழிலிற்காக 6 மரக்கால் நெல்லேயும் பெற்றுக்கொண்டனர். பறையர் 2 மரக்கால் நெல்லேயும் அம்பட்டர் 3 மரக்கால் நெல்லேயும் பெற்றுக்கொண்டனர்[10]. பரத்தைவெட்டுக் காலத்திலே குடிமகன் ஒருவன் வயலில் உள்நுளேந்து ஒரு வயலில் நின்றுல் அவ் வயல் முழுவதையும் அவனிடத்தே விட்டு விடும் மரபு இருந்துவந்தது. குடிமக்கள் யாவரும் கமக்காரனின் தயவிலே அவனின் நிலங்களிலே தமது வாழ்நாளேக் கழித்தனர்[11].

வன்னிமைகளின் பெரும் செல்வமாக மாடுகள், எருமைகள் கணிக்கப்பட்டன. கமக்காரனுக்கும், குடிமக்களுக்கும் மாடுகள், எருமைகள் இருந்தன. அவற்றைத் தமது மரபுக் குழுக் குறிகள் மூலம் புலப்படுத்தினர். இக் குறிகள் மாட்டின் முன்னங்கால்களிலும் பின்னங்கால்களிலும் தொடைகளிலும், கன்னங்களிலும், நெற்றியிலும், வயிற்றிலும் சுடப்பட்டன. மாராப்பும் கல்லும், பைக்கிறக்கட்டு, நடுகயிற்றுக்குறி, திருநீற்றுமடல், ஆறுகால்வதிரை, அம்பு வில்லு, தம்பட்டம், தம்பட்டத்தடி, பசும்பை, ஏந்துவிளக்கு, குத்துவிளக்கு, கன்னத்துப்புள்ளு திராசு, நுகம், சலவைக்கல்லு, கத்தரிக்கோல், பெட்டகம் என்பன குறிப்பிடத் தகுந்த குறிமரபுகளாகும். சமூக ஏற்றத் தாழ்வுகள் படிப்படியாக வலுவிழந்து செல்கின்றபொழுதும் அவற்றை அநுசரிக்க வேண்டிய தகுதிப்பாடு தமக்குண்டு என்று நம்புவோரும் இங்கு இல்லாமல் இல்லே.

திருமணங்கள் பெற்றேரின் விருப்பப்படியே பெரிதும் நடைபெற்று வருகின்றன. தத்தமது குலங்களுக்குள்ளேயே திருமண உறவினே வைத்துக்கெண்டுள்ளனர். கலப்புத் திருமணங்கள் அனுமதிக்கப்படவில்லே. ஆனுல், அகம்படியார், கோவியர் முதலானேர்கள் தமது உறவுமுறைகளே வேளாளர்களுடன் வைத்திருப்பதை அவதானிக்க முடிவதையும், இவர்கள் இன்று பொதுவாகவே உயர் சாதியினராகவே கணிக்கப்படுவதையும் அவதானிக்கலாம். ''சீதனம்'' கொடுக்கவேண்டிய கட்டாயம் இருக்கவில்லே. ஒவ்வொரு குடியானவனும் தம்மியல்புக்கு ஏற்ற சீதனங்களே வழங்கினர். சீதனங்களாக பசு, எருது, எருமை, 5–10 மரக்கால் நெல், நெல்வயல், பட்டணக்காப்பு, பீலிக்காப்பு, பீலிமயிலடி, தண்டை, வாளி, கடுக்கன், காப்பு, ஒண்ணப்பு, முருகுக்கட்டை, காதுவாடி, அட்டியல் வாழ நார்ச்சரடு, கொண்டைப்பூ என்பன வழங்கப்பட்டன. திருமண வைபவங்கள் பெண்வீட்டிலேயே நடைபெற்றன. ''தாலி'' மஞ்சட்கயிருகவே இருந்தது. திருமணவைபவங்களேயும் ஏனைய சடங்கு முறைகளேயும் சமய ஆசார சீலர்களே நடத்திவைத்தனர்.

மகப்பேறு

இல்லற வாழ்க்கையின் முதல் எதிர்பார்ப்பு குழந்தைப் பேருகும். குழந்தைப் பேறு உடையவளே சமுதாயத்தின் மங்களமான நிகழ்ச்சிகளில் முதன்மை பெறுகின்ருள். மகப்பேறு இல்லேயேல் மலடன் என்றும் மலடி என்றும் வசமொழிகளுக்கு உட்பட்டு சமூக நடவடிக்கைகளுக்குப் பின் தள்ளப் படுகின்ருன். தனக்குப் பின் தன் வளம் கொளிக்க அவன் விட்டுச் செல்லும் செல்வம் குழந்தைகளே. இது மனித சமுதாயத்தின் பொதுவானதும், சிறப்பானதுமான நம்பிக்கை ஆகும். வன்னிமைகளிலும் ஒரு தாய் மகப்பேற்றைபெற்றவுடன்கொத்தி கலேக்கும் வழக்கம் உண்டு. குழந்தையைப் பெற்ற தாயை தனியானதோர் இடத்தில் அமர்த்தி, வீட்டு வாசலிலும், தனியான இடத்திலும் பத்திரிக் குழையைக் கட்டி வைப்பர். மகப் பேற்றை நடத்திவிப்பவளும் அச் சடங்கினே முடித்து வைப்பவளும் மருத்துவிச்சியேயாகும். ஆண் குழந்தை பிறந்தவுடன் கூரை தட்டுதலும் பெண் குழந்தை பிறந்தவுடன் அம்மி தட்டுவதும் மரபாகும். தாயானவள் மூன்று நாட்களும் உணவு வகைகள்யாவற்றிலும் சிறிய பகுதியை எடுத்து வைத்து விட்டு, மூன்றும் நாள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து கொத்தி கலேக்கப் புறப்படுவார். தாய்

246021
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

படுத்த பாயையும் உணவுகளையும் கோடாரி யும் டந்தமும்கொண்டு,மருத்துவிச்சி,புறப்படு கொத்தியாத்தை, என்று சொல்லிக்கொண்டு சிலருடன் வெளிச்சென்று பால் உள்ள மரங்களில் சிறப்பாக பாலைமரங்களின் கீழ் படைத்து "கொத்தியாத்தை நீ இங்கேயே இரு" என்று கூறி மரத்தில் கொத்திவிட்டு வீடு நோக்கி வருவர். வீட்டிற்கு வந்ததும் 'தாயும் பிள்ளையும் சுகமா' என்று மூன்று தரம் கூரையைத் தட்டிக் கேட்பாள். ஓம் என்றதும் எல்லோரும் உட் செல்வர். பின் மருத்துவிச்சிக்கு மரக்கறிகளும் வெகுமதிக ளும் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைப் பர். இப்படி. யாழ்ப்பாணக் குடா நாட்டி லும் நடைமுறையில் இருந்து வந்தது.

### வழிபாடும் நம்பிக்கைகளும்

மனிதன் இறையில் நம்பிக்கை கொண்டே பூமியில் வாழ்கின்றான். தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சத்தியைக் கடவுளென்றும் இறைவனென்றும் போற்றி வருகின்றார்கள். அதற்கு பல சமூகத்தினரும் பல பெயர்க ளைச் சூட்டி வழிபடுகின்றனர். இறையியலை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையின் தோற்றத்தில், விதியில், பழக்க வழக்கங்க ளில் நம்பிக்கை உடையவனாக வாழ்கின் றான்.

வன்னி மக்களின் இறை நம்பிக்கையா னது இரு வேறு பட்டதாகக் காணப்படு கின்றது. (1) பெருந் தெய்வ வழிபாடு அல்லது ஆகம நெறிக்கமைந்த வழிபாட்டு முறை.

(2) சிறு தெய்வ வழிபாடு அல்லது ஆகம விதிவகைக்கு உட்படாத வழிபாட்டு முறை. பெருந்தெய்வங்களான சிவன் பிள்ளையார் முருகன் முதலானோருக்கு ஆலயங்கள் எழுப்பி ஆகம முறைக்கமைய வழிபட்டு வருகின்றார் கள். சிறு தெய்வங்களாக ஐயனார், கண்ணகி நாச்சிமார், காளி, சந்நியாசி, அண்ணமார் பெரியதம்பிரான், குறும்பன், பூதராசன், இளந்தாரி, முனி, காத்தவராசன் முதலான தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இத் தெய்வங்களிலே ஐயனார், கண்ணகி, நாச்சி மார், நாகதம்பிரான் முதலான தெய்வங் கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். ஐயனார் வள்ளியம்மையின் காவல் தெய்வ மாக விளங்குகின்றார். அவரின் உறைவிடம் காடுகளே என்று கருதுகின்றனர். காட் டிற்கு தேன் எடுக்கச் செல்வோரையும் வழிப்போக்கரையும் காப்பாற்றும் தெய்வ மாகவும் நீர்ப்பாசன குளங்கள் உடையா வண்ணமும் கடும் வரட்சிக் காலத்தில் நோய்களால் பீடிக்கப்படாமல் இருப்பதற் கும், வரட்சியில் மழை வேண்டி அருள் புரிதற்கும் ஐயனாரின் அருள்வேண்டி மக் கள் வழிபடுவர். வன்னிமையின் எல்லாப் பகுதியிலும் ஐயனார் கோயில்கள், வழிபாடு கள் இருந்த பொழுதும் ஐயனார் சடவங் குளத்திலும் ஆண்டான் குளத்திலுமே உறைந்து அருள் புரிகின்றான் என்று நம்பு கின்றனர்: மக்கள் எதற்கும் "சடவன் குளத்து ஐயனாரே"என்று போற்றுவதை அவதானிக்க முடிகின்றது. கண்ணகி வழி பாடு தமிழ் நாட்டிலே காணப்பட்ட போதும் அதன் பரத்துவம் ஈழ நாட்டிலேயே மிளிர்கிறது. தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப் பாணக்குடா நாட்டிலே அங்கணகைக் கடை யில் குடியமர்ந்த கண்ணகி பின்னர் வற் றாப்பளையையே தனது இருப்பிடமாகக் கொண்டார் என மக்கள் நம்புகின்றனர். ஐயனார் தெய்வீக முக்கியத்துவம் வாய்ந்த பொழுதிலும் கண்ணகி வழிபாட்டின் முக் கியத்துவம் பரந்த அளவில் வன்னிமை களில் காணப்படுகின்றது. வற்றாப்பளை கண்ணகி ஆலயம் அதிவிஷேடமுடைய ஆலயமாக திகழ்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதி களிலிருந்தும் எல்லா இனமக்களும் இவ் வாலயத்தை பண்டுதொட்டு வழிபட்டுச் செல்லும்தன்மை உடையது[13B] முள்ளியவளை கல்லிருப்பு, ஒட்டிசுட்டான் தண்ணீரூற்று கொக்கிளாய், புதிய குடியிருப்பு முதலான இடங்களிலும் கண்ணகி வழிபாடு சிறப் பாகக் கொண்டாடப்படுகின்றது. நாச்சி மார் வழிபாடு வன்னிமைகளில் முக்கியம் பெற்ற பொழுதும் வழிபாட்டு நோக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள் காணப்படுகின்றன. சப்த மாதர்களின் அம்சமே நாச்சிமார் என்றும், தமிழ் நாட்டிலே இருந்து வந்து வீரப் போர் புரிந்து தமது கற்பைக் காப்பாற்றிக் கொண்ட நங்கைகளின் வீர உணர்வினதும் கற்பின் தூய்மையினதும் வெளிப்பாடே நாச்சிமார் வழிபாடு என்றும் கருதப்படுகின்றது. உண்மையில் வன்னிமையின் நாச்சிமார் வழிபாடு வீர உணர்வினதும், கற்பின் வெளிபாடென்றே கொள்ளுதல் வேண்டும். நாக வணக்கம் கேரள நாட்டிலே சிறப்புற்று விளங்குவது போன்று வன்னி மக்களிடத்திலும் சிறப்புற்று விளங்குகின்றது. வீடுகள் தோறும் நாகவழிபாடு உண்டு. புதூரிலே நாகதம்பிரானுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றனர். இங்கு காணப்படும் புத்துமண் ஆலகால விடத்தையும் நீக்கும் சக்திவாய்ந்தது என்று பூரணமாக இங்குள்ள மக்கள் நம்புகின்றனர். இதனைப் 'புதிர்' என்றும் 'கோயில் மருந்து' என்றும் அழைப்பர். நல்ல பாம்பைக் கண்டு மக்கள் பயந்து ஓடுவதில்லை. ''நாகையர் வராதே போய்விடு'' என்று கூறியதும் அது கலைந்து விடும் என்பர். ஏனைய தெய்வங்கள் யாவும் வயல் காவல் தெய்வங்களாகவும் மாடு, ஆடு, எருமை முதலான மிருகங்கள் காணுமற் போய் விட்டால் அவற்றைப் பிடிப்பதற்கு நேர்ந்து அருள் வேண்டி வணங்கும் தெய்வங்களாக அமைகின்றன. ஒவ்வோர் தெய்வங்களுக்கு தனித்தனி சிந்துகளைப் பாடியுள்ளனர்.

இங்கு அமைந்து காணப்படும் ஆலய அமைப்புகளை இருவகையாக நோக்கலாம்: (1) ஆகம சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்டு அமைந்தவை; (2) கொட்டில்களாக அமைந்தவை; சிற்ப விதிகளுக்கமைந்த பெருங்கோயில்கள் பெரும்பாலும் வன்னியின் பட்டண, நகரப் புறங்களிலே காணப்படுகின்றன. இக் கோவில்களில் பெரும்பான்மையானவற்றிற்குக் கோபுர அமைப்புக்கள் இல்லை. கொட்டில்களாக அமைந்த கோயில்கள் இறையகத்தையும் மண்டபத்தையும் உடைய கோயில்களாகவும் சில இறையகம் அப்தராளயம், மண்டபங்கள் உடையனவாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் சில கட்டிட அமைப்புக்களைக் கொண்டு ஓடுகளால் வேயப்பட்டுள்ளன. ஏனையவை யாவும் ஓலைகளாலும் தகரங்களாலும் அமைக்கப் பட்டனவாகக் காணப்படுகின்றன.

ஆலய விழாக்களைத் தவிர பொது சமய விழாக்களை துலக்கத்துடனும் சிறப்பாகவும் கொண்டாடுவார்கள். தைப்பொங்கல், பட்டிப் பொங்கல், நவராத்திரி, கார்த்திகை விழக்கீடு வெளிழுளக்கம் விழாக்களைக் குதுகலமாகக் கொண்டாடுவார்கள். மகாசிவ ராத்திரி, கந்த சஷ்டி முதலான விழாக்களை மிகுந்த அமைதியோடும், பத்திப்பாவனையோடும் கொண்டாடுவார்கள்.

வன்னி மக்கள் மந்திரம், பெல்லி, சூனியம் முதலானவற்றில் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். மந்திரவாதிகளின் மந்திர உச்சாடனங்களால் கொடிய விலங்குகளின் வருகையைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் சில மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம் விலங்குகளின் கால்களையும் வாய்களையும் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்தனர். தமது மந்திர சக்தியைக் கொண்டு விசகடிகளையும் சிலநோய்களையும் தணித்து வந்தனர். நவீன மருத்துவ முறைகளாலும் பிற நடவடிக்கைகளிலும் மந்திரவாதிகளின் ஆற்றல்கள் நிலை தளர்ந்து விட்டன. வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இயற்கையின் விளைவுகள் என்று கிராமமக்கள் எற்றுக் கொள்வதற்கில்லை. அவை பெல்லி அல்லது சூனியத்தின் விளைவென்றே அவற்றுக்குக் காரணம் கற்பிப்பார்கள். மந்திரம் ஓதி அதன்மூலம் திருநீற்றைச் சத்திவாய்ந்ததாகச் செய்து அதன் மூலம் தாம் நினைத்த காரியங்களைச் செய்து கொள்வர். ஏவல் அல்லது பெல்லி என்பது தாம் விரும்பிய கடவுளை அல்லது தேவதையை மந்திரத்தினுல் கட்டுப்படுத்தி அதன் மூலம் தாம் நினைத்த காரியத்தை முடித்துக்கொள்வர். ஏவல் தாம் நினைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் செய்து முடிக்கும் என்பதில் இவர்கள் நம்பிக்கை உடையவர்கள். ஏவல்பேய் ஆளை உடனே கொல்லும். இவரது வாக்கியங்களில் ஒன்றாகும். காட்டேறி, கானமாமுனி, நரசிங்கன், மாடன், வசமன், மூத்தகுடியன், காளி, இரத்தசாமுண்டி, குட்டிச்சாத்தான். என்பன மந்திரவாதிகளால் ஏவலுக்கும் சூனியத்திற்கும் பயன்படுத்தப்படும். தேவதைகளாகும் இவ்வகை ஏவல், சூனியம் முதலான வற்றிலிருந்து தம்மைக் காப்பாற்ற வீடுகளிலே பத்திரி மரங்களையும் வீட்டின் கூரைகளிலும் இறப்புக்களிலும் பத்திரிக் குழைகளைச் செருகிவிடுவதாலும் இவற்றினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாமென்று நம்புகின்றனர். அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இத்தகைய நிலைகள் தளர்ந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

**சகுனங்கள்:-**

பொதுவாக எல்லாமக்களுக்கும் சகுனங்களில் நம்பிக்கை உண்டு. நம்பிக்கைகள் இடத்திற்கிடம் வேறுபட்டும் ஒத்த தன்மையுடையனவாகவும் அமைந்திருக்கும். விழிவளர்த்திற்கு வெறும் பானையுடன் செல்லல் தலைவிரிகோலமாக நிற்றல் ஆகிய சம்பவங்களைப் பார்த்தல், பார்ப்பனன், அம்பட்டன், கன்னிப்பெண்கள் என்போர் எதிர்படல், நாய், பூனை, சாரப்பாம்பு என்பன குறுக்கே செல்லல் என்பன விழிவளத்திற்கு ஆகாதென்பதில் இவர்கள் நம்பிக்கையுடையவர்கள். ஆனால் நிறைந்த பால் குடத்துடன் வரல், கன்றீன்ற பசுக்கள் எதிர்படல். நெல், அரிசி, வெற்றிலை, தேங்காய் கொண்டுவரல் என்பனயாவும் நல்ல சகுனங்கள் என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை உண்டு.

**திண்ணைப் பள்ளிக் கூடங்கள்**

தமிழியலின் ஆரம்பக்கல்விமுறை திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வந்த ஆசிரியர்களே இங்கு திண்ணைப் பள்ளிகளை நடத்தினர். வசதிபடைத்தோர் யாழ்ப்பாணம் சென்று கல்விகற்றுத் திரும்பினர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே காரைதீவு, நாகர்கோயில், புலோலி, பருத்தித்துறை முதலான இடங்களில் இருந்து ஆசிரியர்கள் மாட்டுவண்டிகள் மூலம் வந்து கல்வி கற்பித்தனர். அவர்கள் வரும் பொழுது புகையிலை, பாக்கு, பனுட்டு, தேங்காய் முதலியவற்றையும் கொண்டு வருவர். வசதிபடைத்த வீட்டிலே இருந்து, அவரின் வீட்டுத் திண்ணையிலே பாடங்களைச் சொல்லிக் கொடுத்து வந்தார். இங்கு சாதிமரபுகள் பாரட்டப்படவில்லை. கமக்காரன் முதல் குடிமகன் ஈறாக ஒரே கூரையின் கீழ் இருந்து கல்வி பெறும் வாய்ப்பை வன்னித் திண்ணைப் பள்ளிகள் அளித்தமை பாராட்டப்பட வேண்டிய தொன்றே. இங்கு கந்த புராணம், திருவிளையாடல், பாரதம், நமச்சிவாயமாலை, பிள்ளையார்கதை, சண்பகமாலை வெற்றி வேற்கை, வாக்குண்டாம், நல்வழி நன்னெறி, நீதி வெண்பா, நிகண்டு முதலான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இவ்வாசிரியர்கள் ஆறுமாதம் முதல் மூன்று வருடங்கள் தங்கி தொடர்ந்து பாடங்களை நடத்தினர் அவருக்கு மரக்கால் நெல்லும் 10 ரூபா காசும் மாதம் கொடுக்க வேண்டியிருந்தது. சில இடங்களிலே படிக்கும் பாடங்களை பொறுத்து சன்மானம் வேறுபட்டிருந்தது. நிகண்டு, நீதிநூல்கள், நமச்சிவாயமாலை, பிள்ளையார் புராணம் முதலான நூல்களை ஒரு வருடம் படித்தால் ரூபா 60, நெல்லும் காய்கறியும் கொடுத்தல் வேண்டும். திருவாதவூரடிகள் புராணம் ஒரு வருடம் படித்தால் ரூபா 100, நெல்லும் மரக்கறியும் கொடுத்தல் வேண்டும். பாரதம் ஒரு வருடம் படித்தால் ரூபா 300, நெல்லும் மரக்கறியும் கொடுத்தல் வேண்டும். கந்தபுராணம் 2 வருடங்கள் படித்தால் ரூபா 500, நெல்லும் மரக்கறியும் கொடுத்தல் வேண்டும். (15) பள்ளிகள் இரவில் நடத்தப்படுவதில்லை. ஆசிரியர் திரும்பும் பொழுது மாணவரின் சன்மானப் பொருட்களுடன் தேன் நெய் என்பவற்றையும் எடுத்துச் செல்வார். மட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்களப்பில் வழக்கில் இருந்தவாறு வீடு வீடாக எண்ணெய்ச் சிந்து படிந்து அதன் மூலம் ஆசிரியரின் சம்பளம் கொடுக்கும் வழக்கம் வன்னியில் இருக்கவில்லை.

ஆடை:—

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்பர். இம்மக்களின் ஆடை வகையினை இரண்டு வகையாக வகுக்கலாம். (1) தைத்த ஆடை (2) தைக்காத ஆடை. தைத்த ஆடைகள் பாவாடை, சட்டை, உள்சட்டை துண்டுத்தாவணி என்பன அடங்கும். தைக்காத ஆடை என்பது சேலையாகும். தைத்த ஆடைகளை சிறுபிள்ளைகள் தொடக்கம் பருவம் அடைந்த பிள்ளைகள் வரை அணிந்தனர். தைக்காத ஆடைகளை வயதான பெண்கள் யாவரும் அணிந்தனர். இவர்கள் 'கச்சு' இன்றி முன்மடிப்புகளுடன் அணிந்து கொள்வர். பெரும் பான்மையோர் சேலையைக் குறுக்குக் கட்டி கொய்யமுகம் விட்டு வந்துள்ளனர். சிலசமயங்களில் சேலையை வீசுதாவணியாகவும் பறதாவணியாகவும் குதிரைத்தாவணியாகவும் அமையும் விதத்தில் உடுத்திக் கொண்டனர். நவீன மாற்றங்கள் ஏற்படும் வரையும் இவ்வமைப்புடைய ஆடை அணிதலே நடைமுறையில் இருந்துவந்தது.

வன்னிமக்கள் யாவரிடத்திலும் சிறிய மேட்டு நிலங்களும் வயல் பரப்பும் இருக்கவே செய்தன. சிறுபோகத்தின் போது மேட்டு நிலங்களில் பயிர்ச் செய்கையும் கால போகத்தின் போது வயல் நிலங்களில் நெல்லும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. வயலும் வயல் சார்ந்த பொருட்களையும் புனிதமானவை என்றே கருதினர். வயலில் மாடுகளைக் கொண்டு சென்று இறக்கி உழுவதற்கு முன்பாக கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து சூரியனை வணங்கி, பூமியைத் தொட்டு வணங்கிய பிற்பாடே மாடுகளை வயலில் இறக்குவர். இப்பகுதிகளிலே இருபோக வெள்ளாமையே மேற்கொள்ளப்படுகின்றது. அவை (1) புழுதி அல்லது சிறுபோகம் (2) சேற்றுப்பு அல்லது காலபோகம் ஆகும் 16 இப்போகங்களில் மூத்துச்சம்பா, கமுகம்பூச்சம்பா, காடைக்கழுத்தன், சித்திரக்காலி, பெரியகறுப்பு, குலவாழை, கொட்டுவெள்ளை சின்னக்கறுப்பு, மூப்பொங்கன், பனங்களியன் சாஎலி, சொரிகுரும்பை, மலையழகன், சீனட்டி முருங்கைக்காயன் (பொக்காலி) அடுக்கு வெள்ளை விரால்வயுறன், கார்நெல்லு, முல்லைநெல்லு, ஒட்டை வாலன், முருங்கன் கறுத்த இளங்கலையன், வெள்ளை இளங்கலையன், முதலான நெல்வகைகள் விதைக்கப்பட்டன. நெல்லை முளைகட்டியும், வெறும் நெல்லாகவும் விதைப்பர். முளைகட்டிய நெல்லை சேற்று விதைப்புக்கும், வெறும் நெல்லை புழுதி விதைப்புக்கும் பயன்படுத்துவர். நெல் முற்றி கதிர் பழுத்து நிலம் சாய்ந்து விழ ஆரம்பித்ததும் கமக்காரன் உள்ளத்திலே புதிய உத்வேகமும் மகிழ்ச்சியும் பிறக்கும். இந்நிலையில் அவன் நல்ல நாள் பார்த்து புதிர் எடுக்க முயற்சிப்பான்.

புதிர் எடுத்தல்

புதிர் எடுக்க செல்வதற்கு முன்பாக தனது உறவினர் சிலருக்கு புதிர் காய்ச்சப் போகின்றோம் என்பது பற்றி அறிவிப்பான். புதிர் எடுக்கப் போகும் பொழுது புதிய பெட்டி தாழ்கத்தி, கற்பூரம், தேங்காய், வாழைப் பழம் என்பவற்றை எடுத்து வெள்ளைத்துணியால் மூடிக்கொண்டு செல்வான். அங்கு பச்சைச்சாணியால் பிள்ளையார் பிடித்து வைத்துவிட்டு தலைப்பாய் கட்டி கிழக்கு முகமாக நின்று கற்பூரத்தைக் கொழுத்தி, தேங்காய் உடைத்ததன் பின் நல்ல உப்பட்டியாக வெட்டிக்கொண்டு வருவார்கள். வரும் பொழுது வீட்டின் முற்றத்திலே நிறைகுடம் வைத்து பச்சைச்சாணியில் பிள்ளையார் பிடித்துவைத்து விளக்குக் கொழுத்தி மனைவி பிள்ளைகள், உறவினர் மகிழ்வுடன் வரவேற்பார்கள். கொண்டுவந்த உப்பட்டி நிறைகுடத்துக்கு அருகில் வைக்கப்பட்டு பின் உள் வீட்டிற்குக் கொண்டு சென்று பின் திண்ணையில் வட்டமாகக் கட்டித் தொங்கவிடுவர். கொண்டு வந்த உப்பட்டியின் ஒரு பகுதியை உடனே எடுத்து கசக்கி குத்தி அரிசியாக்கி பால், சர்க்கரை, சேர்த்து புதிர்காய்ச்சி எல்லோரும் உண்டு மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்தை வெட்டு

நெல் முற்றிக் கதிர் வெட்டும் காலம் வந்ததும் கமக்காரன் 7 பாக்கு 7 வெற்றிலை 7 பழத்துடன் அயல் கிராமத்துக்கு அல்லது அப்பகுதியில் வயது முதிர்ந்த ஒருவரிடம் சென்று தாம் கொண்டு சென்ற பொருட்களை அவருக்கு கொடுத்துப் பணிந்து தமது வயல் விளைந்து விட்ட சம்பவம் குறித்துக் குறிப்பிட்டுவிட்டு, பரத்தை வெட்ட வேண்டிய நாளையும் சுபவேளையையும் குறிப்பிட்டுச் சொல்லி விட்டு தமது இடத்துக்குச் சென்று விடுவார். பின்னர் பெரியவர் அயலவர்களை அழைத்து விடயத்தை விளக்கிக் குறிப்பிட்டு கமக்காரனின் வயலுக்குச் சென்று நெல்லை வெட்ட ஆரம்பிப்பார்கள். எல்லோரும் பாடிக்கொண்டே வெட்டுவார்கள். ஒருவர் பாட அதனைப் பாடும் வழக்கமும் எல்லோரும் சேர்ந்து பாடிக் கொண்டு வெட்டும் வழக்கமும் உண்டு. இங்கு ஒருவர் தனித்து நின்று பாட்டின் தாள அமைதிக்கேற்ப மேளம் அடிப்பர். இதனைப் பரத்தை போடுதல் என்பர். பாட்டின் ஆரம்பத்தில் பிள்ளையார் சிந்து படிப்பர். பின்னர் சிவபெருமான் சிந்தும், பண்டிப் பள்ளும், காலைச் சாப்பாட்டிற்குப் போகும் வரை படிப்பர். காலைச்சாப்பாட்டிற்குப்பின் மதிய போசனம்வரை ஐயனார் சிந்து, முருகன் சிந்து, நாகதம்பிரான் சிந்து, வன்னித் தெய்வச் சிந்து, நாச்சிமார் சிந்து, அம்மன் சிந்து, விலுமன் சிந்து, வீரபத்திரன் சிந்து, அன்னமார் சிந்து, வதனமார் சிந்து, முதலான சிந்துக்களைப் படிப்பர். மதிய போசனத்திற்குப் பிற்பாடு 'கதிரைமலைப்பள்ளு'வை வயல் வெட்டி முடியும் வரையும் படிப்பர். பரத்தை வெட்டும் காலத்தில் எதிர்நோக்கிக் கமக்காரன் வருவானாகில் உப்பட்டியை அவன் முன் போட்டு அவரை மறித்து, இடை மறித்து, குற்றவாளியாக்கி எல்லோரும் சூழ்ந்து அவரது குற்றத்திற்காக சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று கேட்பார். அதற்கு கமக்காரன் உடன்பட்டதும் தொடர்ந்து வெட்டுவர். வெட்டிச் சூடுவைத்து முடிந்ததும் கமக்காரனுக்குத் தலைப்பாகை கட்டி வழி நெடுக குழல் ஊதி அழைத்துச் செல்வர். அங்கு நிறைகுடம், விளக்குக் கொழுத்தி பலபேர் வாழ்த்தி வரவேற்பர். பின்னர் வந்தோர் யாவரும் விருந்துண்டு புறப்பட்டுச் செல்வர்,

சூட்டுக்களம்

சூடு வைக்கப்படும் இடம் களம் என்று அழைக்கப்படும். சூட்டின் வடதிசைப்பக்கமாக சூடு அடிப்பதற்குக் களம் அமைக்கப்படும். இக்களம் ஞாயிறு, வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் நன்கு செதுக்கி சாணி கொண்டு மெழுகுவார்கள். களம் எப்பொழுதும் வட்டவடிவினதாகவே அமைக்கப்படும் பின்னர் சூடு அடிப்பதற்காக மாடுகளையும், ஆட்களையும், தண்ணீர், கழுகுகள், மண்வெட்டி, தேங்காய், கற்பூரம், வாழைப்பழம் சாராயம், கடகம், சாக்கு முதலான பொருட்களை ஒழுங்கு செய்வர். இதற்கு ஆயத்தம் செய்தல் அல்லது ஒழுங்கு செய்தல் என்று பெயர். கேட்டி, கூளந்தட்டி[17] ஆகிய பொருட்களை வயலின் சுற்றுப்புறக் காடுகளில் வெட்டிக் கொள்வர். களத்துக்கு பெண்கள் செல்ல அனுமதிப்பதில்லை. இத்தகைய பொருட்கள் களத்துக்கு கொண்டு சென்றதும் சில நம்பிக்கையின் பேரில் சிறப்பான குழூஉக்குறிச் சொற்கள் கொண்டு வழங்குவர். இத்தகைய சொற்கள் மட்டக்களப்பு மக்களின் சமுதாய மரபிலும் வன்னி மக்களின் சமுதாய மரபிலும் ஒன்றிணைந்தும் மாறுபட்டும் காணப்படுவதை அவதானிக்கலாம். சொற்கள் மாறுபட்டாலும் அவை உணர்த்தும் பொருள்களும் நம்பிக்கைகளும் ஒரே அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டனவாகவே அமைகின்றன. இவ்விரு பகுதிகளின் களக்குழூஉக்குறிகளைப் பின்னிணைப்பில் பார்க்கவும்.

சூடு அடிக்கும் களம் எப்பொழுதும் வட்டவடிவமாகவே அமைந்திருக்குமென்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. அவற்றுக்குக் குறுக்கே சில அண்ணளவான அளவுத்திட்டங்கள் உள. அளவுத்திட்டம் சூட்டின் அளவிற்கு ஏற்ப மாறுபடும். சுமார் 10'–15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அதன் விட்டம் அமைந்திருக்கும். செதுக்கி மெழுகப்பட்ட களத்தின் நடுவே 2'–2½' ஆழத்திற்கு கிடங்கு தோண்டி அதற்குள் களக்கட்டையைநடுவார்கள். இந்நிகழ்ச்சி சூட்டுக்களம் செருக்கும் நாளிலே முடிவடைந்து விடும். சூட்டுக்களத்திற்கு அடுக்குகளைக் கொண்டு சென்றவுடன் முதலில் தேவகணங்களை அமைதிப் படுத்துவதே முதல் வேலையாக அமைகின்றது. தேவகணங்களை அமைதிப்படுத்தாவிட்டால், பொலிகளைக் கொண்டு சென்றுவிடும் என்பது இவர்களது நம்பிக்கையாகும். முதலில் ஐயனாருக்குமடை போடுவார்கள். பிற்பாடு நரசிம்மன், காளி வன்னியர் முதலான தெய்வங்களுக்கு பத்திரிக்குழை, கற்பூரம், தேங்காய்ப்பாதி, சாராயம், வாழைப்பழம் முதலான பொருட்களை வைத்து வழிபடுவர்[18]. இதன் பிற்பாடு கமக்காரன் களத்திற்கு வந்து கிழக்கு முகமாக நின்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்துவிட்டு வேலகாரன் தடியால் மேற்கு, வடமேற்கு பக்கமுள்ள சூட்டியிருக்கும் நெல்லை எடுத்து ''பொலி தாயே பொலி, பொலி தாயே பொலி'' என்று சொல்லியும் அல்லது ''மட்டக்களப்பு மணற்கும்பம் போலே வாரி பொலி தாயே''[19] என்றும் சொல்லி கிழக்கு அல்லது வடக்கு நோக்கி களத்தின் நடுவில் அடிப்பார். இவ்வாறு மூன்று முறை செய்ததும் எல்லோரும் சேர்ந்து சூட்டினை அள்ளிக் களத்தில் போடுவார்கள். சூட்டுக்களம் வடக்கு நோக்கி அல்லது கிழக்கு நோக்கி அமைந்திருக்கும். சூடுகள் மேற்கு நோக்கி, வடமேற்குக்கு அமைந்திருக்கும். சூடு தள்ளும் பொழுது வலது பக்கமாகத் தள்ளியே அடிப்பார். சூட்டின் எண்ணிக்கை அதிகரித்தாலும் வலமிருந்தே தள்ளிச் சென்று அடிப்பர். வடதிசையும், கிழக்குத்திசையும் மங்களமான திசை என்பதில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சூடு தள்ளிய தும் ஒற்றைப்பட்ட எண்ணிக்கைகளைக் கொண்ட பிணையல்களை களத்தில் இறக்கி வளைப்பர். குறிப்பாக 5, 7, 9 என்ற பாங்கில் பிணையல்கள் அமையும். மாடுகளை வளைக்கும் பொழுது சிந்து பாடி ஓலம் எழுப்பி வளைப்பர். முடிவில் வைரப் பொலியின் முதல் அளவை நெல்லை தனியாக எடுத்து 'கோயில் நெல்' என்று சொல்லி எடுத்து வைத்துவிட்டு வீட்டிற்குக் கொண்டு செல்வர். வன்னி மக்களின் கமப்புல நடவடிக்கை யாவற்றிலும் தெய்வீக களையைக் காண முடிகின்றது.

நெல்லுப்பட்டடை, கொம்பறை

வீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட நெல் இரண்டுவிதமாகப் பேணப்படுகின்றது. அவை (1) நெல்லுப்பட்டடை (2) கொம்பறை ஆகும். பனங்காமத்தை மையமாகக் கொண்ட வன்னிப் பற்றுக்களில் நெல்லுப்பட்டடை மூலமே நெற்கள் பேணப்பட்டு வந்தது. பறன் அமைத்து அவற்றிலே வைக்கலை நன்கு பரவி வைக்கல் கத்தைகளை நாலா பக்கமும் அடுக்கி உயர்த்தி அதனுள்ளே நெல்லைப் போட்டுப் பின் வைக்கல் திரி கொண்டு நாலாபக்கமும் இறுக்கி கட்டுவர். பின் வைக்கல் கத்தைகள் கொண்டே மூடி முடிவில் கோலால் வேய்ந்து விடுவர். இவற்றில் இடப்படும் நெல் நீண்ட காலத்திற்கு சுமார் 8 வருடம் முதல் 15 வருடங்கள் இருப்பதோடு எவ்வித பூச்சி ஜந்துக்களும் நெல்லைக் குத்தா வண்ணம் பாதுகாக்கப்படுகின்றது.

கொம்பறை களி மண்ணால் ஆக்கப்படுவது, சுமார் 10'–12' உயர முடையவையாக இருக்கும். வட்ட வடிவமானது. பானை போன்ற அமைப்புடையது. அதன் கீழ் புறத்தின் கீழ் சிறிய அறையொன்றும் காணப்படும். இதில் பல பொருட்கள் வைத்து எடுப்பர். கொம்பறையில் நெல்லைப் போடுவதற்கு முன்பாக சிறிய பொங்கல் நடத்தி சூரிய வணக்கம் செய்த பிற்பாடே நெல்லை அதனுள் போடுவார்கள். இக்கொம்பறைகளில் சில 500 மரக்கால் கொள்ளக் கூடியனவாகவும் அமைந்துள்ளது பூச்சி, புளு, எலி முதலான ஜந்துக்களால் நெல் சேதமுறாது நீண்டகாலம் இருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] வன்னி மக்களால் கண்டுபிடித்த சிறந்த கருவிகளே நெற்பட்டடையும் கொம்பறையுமாகும். வன்னி மக்களின் ஒவ்வோர் வீடுகளிலும் இவற்றில் ஏதோ ஒன்று இருப்பதை இன்றும் காணலாம். இவற்றை தக்க முறையில் பேணுவதன் மூலம் தமது இல்லங்களில் இலட்சுமி நிரந்தரமாக குடிகொண்டிருப்பாள் என்பது இவரது நம்பிக்கை. இதனாலே தான் விருந்தினரை உபசரிக்கும் பண்பு இவர்களிடம் மிகுந்து காணப்படுகின்றது எனலாம்.

**அளவீடு**

நெல்லை அளக்கும் பொழுது சேர், மரக்கால், புசல், பறை என்ற முகத்தல் அளவைகளை இன்றும் கையாளுகின்றனர். ஆனால் பகுதிக்குப் பகுதி சில வேறுபாடுகள் உண்டு. 20 நீட்டல் அளவைகளான யார், அடி, அங்குலம், இஞ்சி அளவீடுகளையே இற்றைவரை பயன்படுத்தி வந்தனர்.

**விளையாட்டு**

சிறுவர் சிறுமியர் வாலிபர்கள் அவ்வப்போது காலையிலும் மாலையிலும் நேரம் கிடைக்கும் வேளையிலும் சில விளையாட்டுக்களை விளையாடுவது பொதுவான மரபு. பெண்கள் பாண்டிவிளையாடல், எட்டுக்கோடு, தாயம், ஊஞ்சல், கும்மி ஆடுதல், ஒழித்து விளையாடல், கிச்சுமாச்சுத்தம்பளம், கல்லுத் தண்டல் முதலான விளையாட்டுக்களை விளையாடுவர். ஆண்கள் வாரோட்டம், கிளித்தட்டுப்பாய்தல் 21 (கிளித்தட்டு) குடோரி, காசை எறிதல், மௌடி, நாயும் புலியும், வட்டக்கூடு, மோதிரம் வைத்து விளையாடல் முதலான விளையாட்டுக்களை விளையாடுவார்கள். இவ்விளையாடல்களில் குடோரி, காசை எறிதல், மோதிரம் வைத்து விளையாடுதல் முதலானவை இப்பிரதேசத்துக்கென்றே தனித்துவமுடைய விளையாட்டுக்களாக அமைகின்றன.

**[illegible]பெயர்களும்:-**

[illegible]லமைந்த ஊர்களின் பெயர்கள் [illegible]பெயர்களாகவும் சில இயற்பெயர்களாகவும் காணப்படுகின்றன. காரணப்பெயர்கள் தெளிவுடையனவாகவும் அழகுடையனவாகவும் அமைந்துள்ளன. உதாரணமாக ஒட்டறுத்த குளம், மூன்றுமுறிப்பு, பனங்காமம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், கல்விளான், முதலான பெயர்களைக் குறிப்பிடலாம். ஒட்டறுத்த குளம் என்பது நெல்லை வெட்டிய பிற்பாடு கிடக்கும் நெற்கட்டைக்கு ஒட்டு என்பது பெயர். அவ்வொட்டு குளநீர் பாய்ந்து விளைந்து திரும்ப அறுவடை செய்துகொண்ட பகுதியாதலால் ஒட்டறுத்த குளம் எனப் பெயரிட்டனர். மூன்றுமுறிப்பு என்பது குளம் கட்டியபொழுது மூன்றுதரம் முறிப்பு எடுத்தமையால் மூன்று முறிப்பு ஆயிற்று. பனங்காமம் என்பது பனைகள் நிறைந்து கள்ளு மிகுதியாக எடுக்கப்பட்டு மனிதனுக்குப் போதையை ஊட்டியமையால் பனங்காமம் என்பதாயிற்று என்பர். நட்டாங்கண்டல் என்பது கண்டல் மரங்கள் நிறைந்து காணப்பட்டமையால் நட்டாங்கண்டலாயிற்று. கல்விளான், கல்லுப்போன்ற தடித்த தரைத்தன்மை உடைய பிரதேசத்தில் விளாத்திமரங்கள் நிறைந்து காணப்பட்டமையால் கல்விளான் ஆயிற்று. கரும்புள்ளியான் என்பதில் ஆன் உருபு பின்னர் சேர்க்கப்பட்டதென்பர். கரும்புளியடி என்ற பதமே பின்னர் கரும்புள்ளியான் ஆனது என்பர். கரும்புளி நிறைந்த பகுதியாதலால் கரும்புளி எனப்பட்டு கரும்புள்ளியான் ஆயிற்று.

பிரதான குடிமக்கள் வாழ்ந்த பகுதிகள் அவர்களின் இயற் பெயர்களோடு சேர்ந்து இடப்பெயராயிற்று. உதாரணமாக முதலியார் குளம், முதலியார் வாழ்ந்தமையால் முதலிக்குளம் என வழங்கிற்று. அதே போன்றே துரும்பன் துறை, பறைச்சி மோட்டை, தச்சன்வெளி, ஒட்டன்குளம், கொல்லவிளான்குளம், நாவிதன்குளம்(நாவிதன்) ஆகிய இடப்பெயர்களும் குடிமக்களின் பெயர்கொண்டு வளங்குவதாயிற்று.

**இராமிய இலக்கிய வடிவங்கள்:-**

வாய்மொழி இலக்கிய வடிவங்களே கிராமிய இலக்கிய வடிவங்களாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை கிராமியப்பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் என அமையும். இவ் வடிவங்கள் தாம்கொண்ட பொருளின் ஆழமான உணர்ச்சியின் வடிவங்களாகவும், தர்க்கரீதியான உண்மைகளை உணர்த்துதற்கும், ஒரு பொருளின் வடிவங்களையோ, செயல்பாடுகளையோ நன்கு உணர்த்துதற்கும் ஒருவிடயத்தின் உள்ளீட்டை நேரடியாக உணர்த்துவதற்கும் பயன்படுகின்றன. இவ் வடிவங்கள் யாவும் புலமையுள்ள சாதாரண மக்களால் உருவாக்கப்படுகின்றன. இவை பெரியர் சுட்டி ஒருவரால் எழுதப்படாது, செவிவழி மரபாக வழக்கத்தில் வருதலால் வாய்மொழி இலக்கிய வடிவங்களாக அமைகின்றன. இப்பகுதி மக்களிடத்தில் இந் நான்கு வடிவமான இலக்கிய வடிவங்களும் இடம்பெற்றிருந்த பொழுதும் அவை பற்றிய பூரண ஆய்வு மேற்கொண்டு நூலாக வெளிவரவில்லை. அவ்வப்போது சிலர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்[22]. கிராமியப் பாடல்கள் (1) தாலாட்டு (2) குழந்தைப் பருவ விளையாட்டுப்பாடல் (3) காதற்பாடல் (4) தொழிற்பாடல் (5) ஒப்பாரிப் பாடல் (6) வழிபாட்டுப்பாடல் (7) சமூகப் பிரச்சனை திருமணவாழ்க்கைப்பாடல் என ஏழாக வகுத்து ஆராய்வர்[23]. சிலர் சமூகப் பிரச்சனை திருமணவாழ்க்கைப்பாடல், என்பதற்குப் பதிலாக கதை—கூத்துப்பாடல்கள் என்பதனைச் சேர்த்து ஏழாகவகுப்பர்[24]. வசை பாடல் என்ற ஒரு வழக்கம் கிராமிய மக்களிடத்திலே இருப்பதை கிராமியபாடல் ஆய்வினர் மறந்துவிடுகின்றனர். இவ்வமைப்பு முறைகளில் ஒப்பாரி, வழிபாட்டுப்பாடல், தொழிற்பாடல் ஆகியன இம் மக்களிடத்தே முக்கியத்துவம்பெற்று விளங்குகின்றன. மட்டக்களப்பு மக்களிடத்தே காணப்படும் காதற்பாட்டு, தாலாட்டுப்பாடல், கதை—கூத்துப்பாடல் இப்பகுதி மக்களிடத்தே இல்லையென்றே குறிப்பிடலாம்.

கிராமிய மக்களின் ஆரம்ப அறிவியல் விருத்தியின் கருவூலங்களாக கதைகள், விடுகதைகள், பழமொழிகள் என்பன அமைகின்றன. வன்னி மக்களிடத்தில் காணப்படும் விடுகதைகள் பொதுவாக தமிழ்மக்கள் யாவருக்கும் பொதுவானவையாகவும் சில சிறப்புடையனவாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக சில விடுகதைகளை நோக்கலாம்.

1. ஆள்விழுங்கி பனியில் கிடக்கின்றது அது என்ன? விடை: வீடு.
2. தூங்காதகாய் என்ன காய்? விடை: துணுக்காய்.
3. ஒரு குடியோலை கொண்டு ஒதுங்கிக் கிடக்கின்ற கணபதி அண்ணைக்கு அறுபது கண். அது என்ன?

   விடை: மயில்.
4. கும்பாக குடம் இரண்டு; கோணக்கால் நாலாறு; பங்கப்பழையல் பன்னிரண்டு சிங்கமுறுந் தலை மூன்று; செப்பரிய கால் பத்து; கண்களாறு ஓடும் உலாவும் மிருகம்; உயிர் மூன்று. அது என்ன? விடை: மாடுகளும் வண்டிலும் மனிதனும்.
5. நாலுலக்கை குத்திவர: இரண்டு சுழகு புடைத்துவர; குண்டான ஒத்த அகப்பை துளாவிவர; கொண்டான்போல்லு கழன்றுவர; வருவது என்ன? விடை: யானை.

இவைபோன்ற வன்னி மக்களிடையே வழக்கிலுள்ள விடுகதைகளாகவே காணப்படுகின்றன.

வன்னிமைகளில் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே சிறப்பாக இசை, கூத்து, நாடகம் போன்ற கலை வடிவங்கள் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலே இசை மரபுகள் அண்ணாவிமார்களால் பேணப்பட்டு காப்பாற்றப்பட்டது போன்று வன்னிமைகளிலும் அண்ணாவிமார்களே கலை மரபுகளை பேணிக் காத்து வருகின்றனர். 18ம் நூற்றாண்டிலும் 19ம் நூற்றாண்டிலும் தென்னிந்தியக் கலைஞர்களின் வருகை இப் பிரதேசங்களில் அண்ணாவிமாரின் தோற்றத்திற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமைந்தன. இதன் விளைவாக கூத்து, விலாசம், நாடகம் என்பன இப் பிரதேசங்களில் புதிதாகத்தோன்ற ஆரம்பித்தன. தென் இந்தியாவில் இருந்துவந்த கலைஞர்கள் சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர - மயானகாண்டம், அல்லி அருச்சுனன், (பாவைக்கூத்து) பவளக்கொடி, அதிரூபஅமராவதி, இராமாயணம், கோவலன், காத்தவராயன், (கூத்து) கன்னன் (கூத்து) முதலான விலாசங்களையும், கூத்துக்களையும், பாவைக் கூத்துக்களையும் நடத்தினர். காத்தவராயன், கோவலன், கன்னன் ஆகிய கூத்துக்களும் இம்மக்களால் நன்கு ரசிக்கப்பெற்றன. இம்மூன்று கூத்துக்களின் தாக்கம் புதிய கூத்து மரபுகள் வன்னியில்தோன்ற வழிகோலின என்று கூறலாம். கூத்துக்கள் வட்டக்களரி முறையிலேயே நடைபெற்றன. விலாசங்கள் மேடைகளில் நடைபெற்றன. மேடைகள் தென்னங் குத்திகளை நான்கு சதுரங்களாக நெருக்கமாக நட்டு நடுவிலே மண்போட்டு மேடை அமைத்து அதிலே நாடகங்கள், விலாசங்கள் மேடை ஏற்றப்பட்டன. கூத்துக்கள் விலாசங்கள் விடிய விடிய நடைபெற்றன. பச்சைத் தென்னங் குற்றியின்மேல் தேங்காயை உடைத்து திரிவைத்தும், வாழைக்குத்தியை எடுத்து அதனை நட்டு அதிலே தேங்காய் சிரட்டையைவைத்து திரியிட்டும் மேடைக்கு ஒளியேற்றினர். அவ்வப்போது பனையோலை களைப்போட்டு எரிப்பதன் மூலமும், காட்டு விறகுக்கட்டைகளை எரிப்பதன்மூலமும் பெரு வெளிச்சத்தை ஏற்படுத்திக்கொண்டனர். பீடைகள் கிராமங்களைப் பாதிக்கின்ற பொழுதும், வருடந்தோறும் காத்தவராயன் கூத்து கிராமங்களில் ஆடப்பட்டுவருவது மரபாகவே காணப்படுகின்றது. ஒருவிதத்தில் தென்னிந்திய வைதீக சமய கலைஞர்களின் வருகையும் கிறிஸ்தவக் கலைஞர்களின் வருகையும் வன்னி மக்களிடத்தில் கலைத்துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்று கூறுவது பொருத்தமுடையது எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின்பின் வன்னிமைகளில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதாரமாற்றங்களால் மக்கள் நவீன கல்விவசதிகளை நாடிச் செல்லவேண்டியிருந்தனர். போக்குவரத்து வசதிகள் நவீனமயமாக்கப்பட்டது, உழவுத்தொழில்கள் விரைவாகச் செய்து முடிக்கக்கூடியதாக உழவு யந்திர வருகை ஏற்பட்டது. நாடு மின்சாரமயமாக்கப்பட்டு சினிமாக் கொட்டகைகள் திறக்கப்பட்டன. மக்களின் இடப்பெருக்கம் புதிய இடங்களுக்கு புலம் பெயரவேண்டிய தேவையை ஏற்படுத்தியது. புதிய குடியேற்றங்கள் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைக்கு தடையாக அமைந்தன. மிகுந்த விரைவாக முன்னேற்றம் அடையவேண்டும் என்ற ஆசை வளர்ந்தது. மத்தியதர மக்களின் வாழ்க்கைமுறை எல்லோரும் வாழத் தலைப்பட முனைந்தனர். இதனாலே பண்டுதொட்டு தம்மிடத்து நிலவிவந்த பாரம்பரிய சமூக உறவுகளையும், பண்புகளையும் தள்ளிவிட எத்தனித்தனர். எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டு வன்னிமக்களிடத்தில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியபோது அவர்களின் புராதன பண்பாட்டு, கலை உணர்வுகளை வலுவிழக்கச் செய்தனவென்றே கூறுதல் வேண்டும்.

---

அடிக்குறிப்புக்கள்:

1. "எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை நல்லதிரு
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத்திகழ் வன்னி நாடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நவரத்தினம், சி. எஸ். ''வன்னியும் வன்னியரும்'' திருக்கேதீச்சரம் திருக்குடத் திரு மஞ்சனமலர், ஆலயத்திருப்பணிச்சபை வெளியீடு, அல்பியன் அச்சகம் கொழும்பு. 1976. பக். 178

பத்மநாதன். சி. வன்னியர் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை யாழ்ப்பாணம் 1976. பக் 55.

3. பாலசுந்தரம் இ. ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும், (மட்டக்களப்பு மாவட்டம்) தமிழ்ப் பதிப்பகம், சென்னை. 1979.

5 மேற்காட்டியவற்றின் விளக்கம் உள்ளே குறிபிடப்பட்டுள்ளது.

6. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, 1975. பக். 95

7. உடையார் என்பது ஈழநாட்டிலே வழங்கப்பட்ட பெயராகவும், ஒரு சாதியின் பெயராகவும் மானியங்களை உடையவராகவும் அமைகின்றது. வன்னியிற் காணப் படும் உடையார் என்ற சாதிவளமை ஆராயப்படவேண்டியதொன்றாகும்.

8. Lewtcs J. P. munuce of the vannu Districts. (1895) , P. 81
பின்வரும் குலமரபு மக்கள் வன்னியில் வாழ்ந்தனர். 1. வேளாளர், 2. பிராம ணர், 3. மடைப்பள்ளி (வேளாளர்), 4. பரவர், 5. கரையார், 6. திமிலர், 7. வலை யர், 8. செட்டியார் 9. தட்டார், 10. தச்சர், 11. கக்கிலயர், 12. கடையர், 13. குயவர், 14. ஓட்டர், 15. அகம்படியார், 16. இடையர், 17. சிவியார், 18. தனக்காரர், (Tanakkarar) 19. சாணர், (Chanar) 20. அம்பட்டர், 21. வண் ணான், 22 நளவர், 23. கோவியர், 24. பறையர், 25. துரும்பர். 26. பள்ளர், 27. மறவர், 28. கள்ளர், 29 றெம்டிக்கால், 30. வன்னியர், 31. வேடர்
(Lewces J. P. nuenual of uomi pistricts) (1895. P. 82

9A. சில இடங்களில் இவை விதிவிலக்காக அமைந்துள்ளன. இதற்கு பனங்காம வன் னிமையைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

10. குடிமக்களுக்குக் கொடுக்கும் மானிய அளவீடுகள் இடத்துக்கிடம் மாறுபடும்.

11. துணுக்காய், பனங்காம வன்னிமைகளில் தனியாக வாழ்ந்தனர். அவர்களுக்கு சொந்தமாக ஆதனங்கள் இருந்தன என்பதற்கு அவர்கள் குழுக்களாக வாழ்ந்த பிரதேசங்கள் சான்றாக அமைகின்றன. உதாரணமாக ஒட்டன் குளத்தில் வண் ணாரும் பூவரசன்குளத்தில் தோட்டிமாரும் கண்டல்வெளியில் நாவிதரும் நட் டாங்கண்டலில் சாண்டாரும்

11A. வரலாற்றுப்புகழ் மிக்க திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், தான்தோன்றீஸ் வரம், வவுனிக்குளச் சிவாலயம் ஆகிய சிவாலயங்கள் வன்னிப் பிரதேசத்திலே அமைந்திருப்பது ஈண்டு மனங்கொள்ளத் தக்கதாகும்.

12. முல்லைமணி. ''வன்னிநாட்டின் காவல் தெய்வம்'' முள்ளியவளை ஸ்ரீ நெறிக் கழ கம் ஆண்டுமலர், சக்தி அச்சகம், முள்ளியவளை, 1967 பக். 20–21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. "ஆனதொரு வற்றாப்பளைமீ துறைந்தாய்
போங்கு புகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்
புகழ்பெருகு கோலங்கிராய்மீ துறைந்தாய்
எங்குமே உன்புகழை மங்காமலோத
என்றனது சிந்தையிலு றைந்தகா ரணியே
பங்கமுறு துயரங்கள் தீரவருள் புரிவாய்
பரிவுசெறி கோலங் கிராயிலுறை மாதே"

என்ற அம்மன் பள்ளு கண்ணகியம்மை முதல் உறைவிடம் அங்கணாம்மை என்பது புலப்படும்.

13. Lewies J. P. manual of the vanni districts. (1895) P. 265.

14. சோமலே தமிழ்நாடு மக்களின் மரபும் பண்பாடும் (1975) பக்.

15. ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் வெகுமதிகள் இடத்துக்கிடம் சிறிது வேறுபட்டுக் காணப்பட்டன.

16. வன்னி மக்கள் சிறுபோகத்தின்போது ஒட்டைவாலன்' சரளி, காடைக்கழுத்தன், அழகியவண்ணன், பானன் கலியன், சிறுவெள்ளை, முப்பன்கன், சவரக்குரன், வட்டுப் பித்தன், கருன் குழவாலி, முருங்கன் மணல்வாரி, மலையளகன், முல்லைநெல்லு அடுக்குவெள்ளை, முதலான நெல்லுவகைகள் விதைக்கப்பட்டன. காலபோகத்தின் போது குலவாழை, வெள்ளைநெல்லு, கறுத்தஇளங்கலைவன், வெள்ளைஇளங்கலையன் சீனட்டி, பச்சப்பெருமாள், வெள்ளைச் சீனட்டி முதலான நெல்லுவகைகள் விதைக்கப்பட்டன.

Lewres J. P. manual of the vanni districts. (1895) P.

17. ஒரு தடியுடன் அதன் நுனியில் கொள்ளித்தடிகள் சேர்த்துக் கட்டப்பட்ட அமைப்பு. தென்னம் பாளை விளக்குமாறு போன்றது.

18. தவசியாகுளம், பாலமோட்டை, ஓமந்தை, சேமமடு, நொச்சிக்குளம் முதலான வன்னிப் பகுதிகளில் இத்தகைய வழக்கம் உண்டு. மட்டக்களப்புப் பகுதியிலும் மயிழமுடித்தீவு முதலான பகுதிகளில் இத்தகைய வழக்காறுகள் இருப்பதாக அறியக்கிடக்கின்றது.

19. இவ்வாய்வாளரால் சேகரிக்கப்பட்ட குறிப்பில் இதனை அவதானிக்க முடிகின்றது.

20. வவுனியாவில் 16 சேர் - 1 மரக்கால்: 2 மரக்கால் - 1 புசல் முல்லைத்தீவில் 12 சேர் - 1 மரக்கால் 2¾ மரக்கால் - 1 புசல் என்றும் கொள்வர். 24 சேர் 1 புசல் என்பது பொதுவிதி.

21. வெளிக்கோடுபாய்தல், தட்டுப்பாய்தல் என்றும் குறிப்பிடுவர்.

22. அ. அரியகுட்டிப்பிள்ளை, சி. அ. (பதிப்பாசிரியர்) அருவிச்சிந்து, கதிரையப்பர் பள்ளு பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, யாழ்ப்பாணம். ஆண்டு குறிப்பிடவில்லை.

ஆ. மெற்றாஸ்மெயில், செ. (பதிப்பாசிரியர்) வன்னிவள நாட்டுப்பாடல்கள், முல்லை இலக்கியவட்டம், செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம் 1980.

23. வானமாமலை, நா. (தொகுப்பு) தமிழ்நாட்டு பாமரர் பாடல்கள், எல். சி. எச், பிரைவேட் லிட், சென்னை. 1964.

24. பாலசுந்தரம், இ. ஈழத்து நாட்டார்பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும் (1976) பக். 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

## முல்லைத்தீவு — வவுனியா மாவட்டங்களிலும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும்

# சூட்டுக்களத்தில் உபயோகிக்கப்படும் குழூஉக்குறியீடுகள்

| முல்லைத்தீவு—வவுனியா மாவட்டங்கள் | மட்டக்களப்பு மாவட்டம் | பொருள் மரபு |
|---|---|---|
| அமுது | வெள்ள | சோறு |
| அரைவயிறன் | அரைவயிறன் | நன்கு முற்றாத நெல்மணி |
| இளைஞன் | கோணியல், தோல்வாயன் | சாக்கு |
| இளைஞன் | இளையன் | சீலை |
| உப்பட்டி | | பிடிபிடியாக வெட்டிய நெற்தொகுதி |
| ஓலம் | குரல்காட்டுதல் | பொலி சொல்லிப்போடுதல் |
| கட்டு | கட்டு | பல உப்பட்டிகள் கொண்ட கட்டு |
| கலங்கன் | வெள்ளம் | தண்ணீர் நீர் |
| கந்து | கந்து | வைக்கோல் போர் |
| களம் | களம்வெட்டி | சூட்டுக்களம் |
| கந்துமுறி | கந்துமுறி | தண்டோடு காணப்படும் நெல் |
| களம் | பொன்னின் களம் | நெற்களம் |
| குஞ்சுவாயன் | குஞ்சுவாயன் | சிறுபெட்டி |
| குல்லம் | | சுளகு |
| குளரி | | நெற்கதிர்க்கொத்து |
| கூழம் | கட்டைக் கூழம் | நெல் தூற்றும்போது பறக்கும் கழிவுகள் |
| சூட்டுக்கம்பு | சூட்டுக்கம்பு கட்டுக்கம்பு. | சூடு அள்ளிப் போடுவதற்குப் பயன் படுத்தப்படும் ஒரு சோடிக்கம்புகள் |
| கூரன், பொலி | வாரி. பொலி | நெல் |
| கிழவன் பொலி | | சப்பட்டை |
| கட்டுக் களம் | வாரிக்களம், சூட்டுக்களம் | நெற்களம் |
| கொட்ட | கருக்காய் | பாக்கு |
| | மம்மட்டக் கொல்லன் | மண்வெட்டி |
| கொல்லன் | | சின்ன மண்வெட்டி |
| கொம்பு | கொம்பு | நெற்கதிர் தூற்றும்போது சிதறும் நெல் |
| | | மாடு சாய்க்கும் தடி |
| | கொட்டன் | போர் |
| சூடு | சூடு | தீப்பந்தம் |
| சூழ் | | |
| தலைப்பொலி, வைரப்பொலி | வைரப்பொலி, தலைப்பொலி | தூற்றிய நெல்லின் சிறந்த பகுதி |
| சூடுதட்டி | | சூடுவைக்கும் பொழுது உப்பட்டிகளை ஒழுங்குபடுத்தப் பயன்படும் கருவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கவரன் மதிப்பு | பொலி மதித்தல் | நெல் அளத்தல் |
| நடையன் | செல்லன், வாரிக்காலன் | மதிமாடு |
| பல்லிளிச்சான் | பல்லிளிச்சான் | தேங்காய்ப்பாதி |
| புகைஞ்சான் | புகைஞ்சான் | புகையிலை |
| பாசம் | நெடுமுழவன், உருட்டுவான் | கயிறு |
| பெரிய போலன், | | பெரிய மனிதர் |
| சிறிய போலன் | | சிறியோர் |
| பெருவாயன் | பெருவாயன் | கடகம் |
| போலன் | பெருமாள் | சூடடிப்போர் |
| பொலியன், | | பொலி எடுத்தல் |
| போர் | | சூட்டிலும் சிறியவை. பல கட்டுக் |
| போர்க்குட்டி | கந்து | களாலானவை. போரிலும் சிறிய தோற்றமுடையவை. |
| பொலிக்கொடி | பொலிக்கொடி | வைக்கோல் |
| வருணன் | வருணன் | மழை |
| வலிச்சான் | வலிச்சான் | ரொட்டி |
| வரதராசன், வாயு தாசன் | | காற்று |
| வாட்டி | வாட்டி | களத்தின் ஓரம் |
| வாட்டி கட்டுதல் | வாட்டி கட்டுதல் | நெல் கதிர்கள் களத்தின் ஓரத்தில் கிடப்பின் அவற்றை எடுத்து நடுவில் போடுதல் |
| கட்டையடி நடையன் | | களத்தின் களக்காட்டையுடன் கட்டியிருக்கும் மாடு |
| வாட்டி நடையன் | | களத்தில் ஓரம் நிற்கும் மாடு |
| மடி நெல் | | மழையில் நனைந்து கறுத்த நெல் |
| வைரப் பொலி | | மண் கட்டி |
| வெளிச்சக்கரன் | பெரு வெளிச்சம் | நெருப்பு |
| வெள்ளோடன் | வெள்ளோடன் | தேங்காய் |
| வேட்டி, சால்வை | நெடுமுழவன் | வேட்டி, சால்வை |
| | இல்லை | பெருக்கம் |
| | பெருகு | வா, போ |
| | வெள்ள பெருகுதல் | சோறு சாப்பிடுதல் |
| களம் பொலிதல் | களம் பொலிதல் | சூடு அடித்து முடிந்ததும் வீட்டுக்குக் கொண்டு செல்லல் |
| | கூரைக்கோடு | வீடு |
| | கூளங்கையன் | பேய் |
| | நார்க்கம்பு | கேட்டிக்கம்பு |
| | கரைஞ்சான் | வாழைப்பழம் |
| | கருங்கள்ங்கன் | நன்கு முற்றி விளைந்த நெல் |
| | கந்துமுறி | தண்டுடன் காணப்படும் நெல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மின்னிக்கட்டுதல் | நித்திரை செய்தல் |
| விசுக்குவான் | மாடு சாய்க்கும் கேட்டிக் கம்பு |
| படுவான் | மேற்குத்திசை |
| பட்டறைப் பெருவாயன் | பட்டறை |
| கோல் | சாணகம் |
| கடற்கரும்பு | மீன் |

குறிப்பு : மட்டக்களப்புக் களக்குழூஉக்குறிகள் இ. பாலசுந்தரத்தின் ஈழத்துநாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும் (1979) பக். 356 — 58 என்ற நூலை அடியொற்றியது.

நன்றியுரை :

எனக்கு இக்கட்டுரையை எழுதுதற்கு ஒத்தாசை புரிந்த பின்வருவோருக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| பெயர் | வயது | இடம் |
|---|---|---|
| சி. கற்பகம் | 100 | குமுழமுனை |
| சி. தெய்வேந்தரம்பிள்ளை | 30 | குமுழமுனை |
| முல்லைமணி | | ஒட்டிசுட்டான் |
| குலசேகரம் | 60 | துணுக்காய் |
| செல்லத்துரை | 63 | நட்டாங்கண்டல் |
| சிங்கராசா | 52 | பழைய குடியிருப்பு |
| மு. நல்லதம்பி | 65 | முள்ளிவாய்க்கால் |


வன்னியை அரசாண்ட மன்னர்களில் கயிலை வன்னியன் என்னும் வீர மன்னனும் ஒருவன். அவனது சரித்திரத்தை கிடைத்த சில தகவல்கள் ஆதாரங்கள், என்பவற்றின் துணையோடு, திரு கரவை கிழான் கந்தசாமி அவர்கள் "தணியாத தாகம்" என்ற பெயரில் நாடகமாக்கினார். மேடைகளில் பல தடவை நடிக்கப் பட்டதோடு புத்தகமாகவும் "தணியாத தாகம்" வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மண்ணின் முதல் விடுதலை வீரன் பண்டார வன்னியன்

— கே. எஸ். மெற்றுஸ் மயில் பி. ஏ. சிறப்பு
(முல்லைமயூரன்)

அறிவு நீ, தருமம் நீ, உள்ளம் நீ, அதனிடை மருமம்நீ, உடற்கண்
வாழ்ந்திடும் உயிர் நீ, தோளிடை வன்பு நீ நெஞ்சகத்து அன்பு நீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும் தெய்வச்சிலை........

(பாரதிபாடல் ஜாதிய கீதம்)

வன்னி நாட்டின் கடைசி அரசனாக, இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் இனத்தின் இறுதி மன்னனாக, ஏன் உலகத்திலேயே அந்நியனை ஆட்டிப்படைத்த கடைசிச் சுதந்திர தமிழ் வீரனாக வாழ்ந்து 'சுதந்திரம் இன்றேல் இல்லை வாழ்வு, அடிமை வாழ்விலும் வீர சுவர்க்கம் மேலானது' என கர்ச்சனை புரிந்து, தன் உயிருக்கும் மேலாக நாட்டுப் பற்று மிஞ்சி தனது உயிரை அர்ப்பணித்து அம் மண்ணில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பெருமை தேடியும், இன்றைய சுதந்திர வீரர்களுக்கு முன்னோடியாகவும் விளங்கிய வன்னி மண்ணின் முதல் விடுதலை வீரன் பண்டார வன்னியனுக்கு, அவனை ஞாபகமூட்டிச் சிலை நிறுவுவது சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய விடயமாகும்.

இற்றைக்கு 179 ஆண்டுகளுக்கு முன்பு வீரசுவர்க்கம் அடைந்த அம் மன்னனை நாம் நினைவுகூர்ந்து சிலை அமைத்து விழாவெடுக்கும் வேளையில் அவன் வாழ்ந்த நாடு, அவனது வரலாறு என்பவற்றை அறியவேண்டியதும் அவசியமான ஒன்றே.

**வன்னிநாடு,**

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குத் தெற்கில் மட்டக்களப்பு, புத்தளம் பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பு முழுவதும் வன்னி என்று குறிப்பிடப்பட்டமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வலிகாமம், தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற மாகாணங்களுடன்வன்னி நாட்டையும் யாழ்ப்பாண அரசு உள்ளடக்கி இருந்ததென்றும், மன்னாரிலிருந்து திருகோணமலை வரை அவ் வன்னி பரந்திருந்ததென்றும் குவேறோஸ் சுவாமியார் குறிப்பிடுகிறார்[1]. வன்னியும் வன்னியரும்'' என்ற ஆங்கில நூலில் அதன் ஆசிரியர் சீ. எஸ் நவரத்தினம், ஜே. பி. லூயிஸ் அவர்களின் ''மனுவல் ஒவ் த வன்னி'' என்னும் நூலிலிருந்து மேற்கோள் காட்டி தனது கருத்தைக் குறிப்பிடுகையில் ''வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னியென்பது, இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ். குடாநாட்டிற்கும், நுவரகலவியா மாவட்டத்திற்கும் இடைப்பட்டதாகும். வன்னி என்று குறிப்பிடுவதற்கு முன்னர் இப் பகுதி அடங்காப்பற்று என்று அழைக்கப்பட்டது எனத் தெரியவருகிறது. திருகோணமலையின் கிழக்குப் பகுதியிலிருந்து மன்னாரின் மேற்குப்பகுதியும், அத்துடன் தென்னமரவடி, முள்ளியவளை முதலிப்பற்றில் குதிரைமலை வரையும் செட்டிகுளத்தில் ஒரு பகுதியும் வன்னி என அழைக்கப்பட்டது. இதனுடைய விஸ்தீரணம் 3000 சதுர மைல்களாகும்[2] என்கின்றார். எனினும் இன்று நாம் வன்னி என்று குறிப்பிடும் பொழுது வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பையே கருத்தில் கொள்ளுகிறோம். இக் கருத்தை மேற்கொண்டு தற்பொழுது மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை வன்னித் தேர்தல் தொகுதியாக்கியது, வன்னி இராச்சியம் இருந்த வரலாற்றை நினைவுபடுத்தும் சரித்திரப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சியாகும்.

விவசாயவளமுங், கடல்வளமுங் கொண்டு ஈழத்தின் உணவுக்களஞ்சியங்களுள் ஒன்றாகத் திகழ்வதால் வன்னிப் பிரதேசத்தை ''வன்னிவளநாடு'' என்பது மரபு. குளங்களைச் சார்ந்த நெற்கழனிகளும், விலங்குகள் மலிந்த காட்டுப் பிரதேசங்களும், கடற்றொழிலுக்குப் பயன்படும் நீண்ட கடற்கரையும் அடர்ந்த வனங்களும் நிறைந்த இயற்கை ரசனை பொருந்திய நாடு வன்னிவளநாடு. தேக்கு, யானைத்தந்தம், சாயவேர், கருங்காலி, மீன், நெல் முதலிய இயற்கை வளம் நிறைந்த களஞ்சியம் இவை அந்நிய நாட்டாரைக் கவரச்செய்தன.

வன்னிமைகளில் பனங்காமத்தை ஆண்ட குறுநில மன்னனே வலிமை படைத்த அரசனாக விளங்கினான். பண்டாரவன்னியனின் மூத்தோர் வன்னியர்கள் தக்க நேரத்தில் வேற்றுமை நீங்கி ஒற்றுமைகண்ட வரலாற்றைக் கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டயம் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. அடங்காப்பற்றைச் சேர்ந்த வன்னியர் பலர் ஒன்றுசேர்ந்து மடதர்ம ஏற்பாடுகளைச் செய்தமை கவனத்திற்குரியது. வன்னியர் தம்மிடையே போர்புரிந்து வந்த போதும் ஒல்லாந்த ஆட்சியாளருக் கெதிராக கிளர்ச்சியேற்படுத்துங் காலங்களில் ஒத்துழைத்தனர். அடங்காப்பற்றிலிருந்த வன்னியர் பதினெட்டாம் நூற்றாண்டிற் சமய விவகாரங்களைப் பொறுத்தமட்டில் இணைந்து பணியாற்றத் தயங்கவில்லை என்பதற்கு இப் பட்டயத்திலுள்ளவை சான்றளிக்கின்றன[3].

அடங்காப்பற்று வன்னிமைகளின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் தேவையான அரிய சான்றுகள் இப்பட்டயத்திலே வருகின்றன. அடங்காப்பற்றிலுள்ள வன்னி நாடுகள் பலவற்றின் பெயர்களும் அவற்றில் அதிகாரஞ் செலுத்தியிருந்த குறுநில மன்னர்களின் பெயர்களும், பட்டயத்தில் வந்துள்ளன. பனங்காமத்தில் நிச்சய சேனாதிராய முதலியாரும் கரிகட்டுமூலை, தென்னமரவடி என்னும் பத்துக்களில் புவிநல்ல மாப்பாண வன்னியனார், புண்ணியபிள்ளை வன்னியனார் என்போரும், வன்னியர்களாயிருந்தனர். மேல்பத்தில் சூராண தீர வன்னியராய முதலியாரவர்களும் கந்தையினா வன்னியனாரவர்களும் மேல்பத்து- முள்ளியவளையில் இலங்கை நாராயணமுதலியாரவர்களும் மயிலாத்தை உடையாரும், வன்னியர்களாயிருந்தனர் என்பதை செப்பேட்டின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்[3].

யாழ்ப்பாண அரசின் எழுச்சியோடு வன்னிநாடுகளின் பல புதிய குறுநில மன்னர் குலங்கள் அதிகாரம்பெற்றன. பதின்மூன்றும் பதின்நான்காம் நூற்றாண்டுகளில் வன்னியிலே ஏழுக்கு மேற்பட்ட குறுநில அரசுகளிருந்தன வென்று கொள்வதற்கிடமுண்டு. காலப்போக்கில் அயல் பற்றுக்கள் மேல்பலம் வாய்ந்த வன்னியர் ஆக்கிரமித்ததின் விளைவாக ஏழு வன்னி நாடுகள் வளர்ச்சி அடைந்தன[3]. அடங்காப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள வன்னியரை அடக்கித் திறைகொள்வது போர்த்துக்கேயருக்கு மிகச் சிரமமாக இருந்தது[3].

எனவே சுதந்திரமாக வாழவேண்டும் என்று துடிதுடித்துக்கொண்டு இருந்த வன்னியர்கள் அந்நியன் ஆக்கிரமிப்புக்கும், அவர்கள் கட்டளைக்கும் ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. தருந்த சந்தர்ப்பம் ஏற்படும்போது தாம் கொடுக்கும் திறையை மறுத்து அவர்கள் தொடர்பை துண்டிக்க முயன்று இருக்கின்றுர்கள். இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்புக்கும் 1658–1795 வரை கரையோர மாகாணங்களை ஆட்சிபுரிந்த ஒல்லாந்தரின் அடக்குமுறைக்கும் அடிபணியாது சுதந்திரமாக வாழ்ந்து வந்தது. பண்டார வன்னியனிடம் ஒல்லாந்தர் 'சாயவேரை' அனுப்பிவைக்கும்படி கேட்டபொழுது மறுத்திருக்கிறுன். 'அவன் ஒரு சுதந்திர இளவரசன். ஒரு சந்தர்ப்பத்தில் ஒல்லாந்தர் சாயவேர் அனுப்பிவைக்கும்படி வேண்டினர். அதை அவன் துணிகரமாக மறுத்தான்'[4].

இவ்வாறு விடுதலை உணர்வுடன் செயல்பட்ட தமிழ் சுதந்திர வீரர்களுக்கு அக்காலத்தில் வாழ்ந்த வேறு வன்னியர்கள் அந்நியருடன் சேர்ந்து, தமிழ் வன்னிய அரசர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தடையாக இருந்திருக்கின்றுர்கள். இக்காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிய சிற்றரசர்களுக்கு புகலிடமும், உதவியும் கிடைத்திருக்கின்றது. குறுநில வன்னி அரசர்களின் மனைவிமார்கள் அவ்வரசர்களின் விடுதலைக்காக சபதஞ் செய்து ஒல்லாந்தரின் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்திருக்கிறுர்கள். இக்கூற்றுகளுக்கு உதாரணமாக, 'வன்னியும் வன்னியரும்' என்ற ஆங்கில நூலிலிருந்து பண்டாரவன்னியன் ஆண்ட காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறமுடியும். 1790ம் ஆண்டில் நல்லமாப்பாண வன்னியன், வேறொரு வன்னியன் மறைமுகமாகக் கொடுத்த தகவல்களின்படி கைது செய்யப்பட்டான். நல்லமாப்பாண வன்னியன் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு 12000 றிக்ஸ் டொலர்ஸ் தண்டம் விதிக்கப்பட்டது. விதிக்கப்பட்ட தண்டனை கொடுக்குமட்டும் அவனை மறியலில் வைத்திருந்தார்கள். அவனது காணிகள் யாவும் பறிக்கப்பட்டு வண்ணுர் பண்ணையிலுள்ள பெரிய தாமோதரம்பிள்ளை என்பவரிடம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. 3 வருட காலத்துக்குள் அக்காணியிலிருந்து மிக உச்சமான வருமானத்தைப் பெற்றுர். மாப்பாணன் மனைவி நல்லாச்சியார் யாழ்ப்பாணம் வந்து வண்ணுர்பண்ணையை இருப்பிடமாகக் கொண்டார். அவ்வேளையில் தன்னுடைய கணவனை மறியலிலிருந்து விடுவிக்கும் வரையும் 'ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு, என்றும், குளிப்பதில்லை என்றும்' சபதம் எடுத்தாள். நல்ல மாப்பாணர் குடும்பத்தின் நெருங்கிய நண்பரான வைத்திலிங்கஞ் செட்டியார் கொழும்பிற்குச் சென்று அரசாங்கத்திடம் தொடர்பு கொண்டு உரியதண்டத்தைச் செலுத்தினுர்.[15]

### விடுதலைவீரன்

வன்னி தவிர்ந்த ஏனைய தமிழ்ப்பிரதேசங்களில் வெற்றி வாகை சூடிய ஆங்கிலேயர்கள் தமிழன் கோட்டைகளில் வெற்றிக் கொடி பறக்கவிட்டனர்.

கொழும்பொடு கோட்டையும்
மட்டக்களப்பும்
குறைவில்லா யாழ்ப்பாண இராச்சியமும்
அழுங்குப்பிடியாகப் பிடித்தவற்றை
ஆண்டாரே ஆங்கில நாட்டினர்கள்

என்ற நாட்டுப்பாடலுக் கேற்ப ஆங்கிலேய ஆதிக்கம், ஏகாதிபத்தியம் தலைநிமிர்ந்து சென்றது. அடுத்த முயற்சியாக எந்த அந்நியனுலும் முறியடிக்க முடியாத சுதந்திர அரசாக, எந்த அரசுக்கும் அடிபணியாத அரசாக, அடிமைப்படாத அரசாக, அடங்காப்பற்றுடன் சுதந்திர கீதம் பாடிய அரசாக, தன்னுட்சி செய்த வன்னி அரசின் மேல் ஆங்கிலேயர் கவனங் கொண்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியைக் கைப்பற்ற ஆயத்தம் மேற்கொண்டனர். இந்த நேரத்திலே, தீரத்திலே படைவீரத்திலே, நெஞ்சில் ஈரத்திலே பண்டாரவன்னியனும், வன்னியரும் சளைக்கவில்லை. வெள்ளையனின் பீரங்கிக்கும் பயந்து சரண் அடைய நினைக்கவில்லை. சுதந்திரம் இன்றேல் வாழ்வு இல்லை. அடிமை வாழ்வினும் வீரசுவர்க்கம் மேலானது, எனக் கூவினான்.

சுடுத லும்குளி ரும்உயிர்க் கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினோ அறப் போரினை என்றான்.

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப ஆங்கிலேயனை எதிர்க்க ஆணையிட்டான். வீர வாள் பொறித்த கொடிகள் பட்டொளி வீசிப்பறந்தன. வன்னி நாட்டின் திக்குத் திசை யெல்லாம் படைகள் ஓடின பண்டார வன்னியன் பதினெட்டாம் போரில் குமுழமுனையில், கற்பூரப்புல் வெளியில் படைகளுடன் முகாம் இட்டான். அணி தயாராயிற்று.

காப்டன் வொன்றிபெக் தலைமையில் முல்லைத்தீவுக் கரையை அடைந்த கடற்படைக்கும் பீரங்கிகளுக்கும் முல்லைத்தீவுத் துறை முகம் முதல் இலக்காகியது. வொன்றிபெக் முல்லைத்தீவில் கோட்டை அரண் அமைக்க முயன்றான். தமது மேலாணையை ஏற்றுத் திறை தருமாறு மன்னன் பண்டாரன்னியனுக்கு ஆணை அனுப்பினான். பண்டார வன்னியன் ஆத்திரமடைந்தான்.

கறுவா வாங்க வந்தார் — இன்று
கப்பம் என்று கேட்டால்
உறவாா் துன்பம் ஈதை — துரை
உணர வேண்டும் இன்றே

என்ற பாடல் பண்டாரவன்னியனின் எச்சரிக்கையைப் பறை சாற்றுகின்றது. போர் முரசு கொட்டியது. வேலும், வாளும், வில்லுந் தாங்கிய குதிரைப்படை வன்னி வீரர்கள் பண்டாரவன்னியனின் தலைமையில் றிபேக்கை எதிர்த்தனர். கோட்டை தகர்த்தது. வாட்கொடி உயர்ந்தது. கொம்பனிக் கும்பல் தலைகுனிந்து ஓடின. முல்லைத்தீவின் அருகே 'குதிரை சாய்ந்த இறக்கம்' என்ற புகழ்ப் பெயருடன் இன்னும் விளங்கி வரும் வழி ஊடே மன்னாருக்குத் துரத்தப்பட்டான் றிபேக்.[6] இந் நிகழ்ச்சி வன்னியும் வன்னியரும் என்ற ஆங்கில நூலில் குறிப்பிடப் படுவதாவது, 1803ல் அடிக்கடி கண்டி அரசனுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் பிரச்சினைகள் இருந்ததினால் கண்டியர்கள் கரையோரப் பகுதிகளில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டைகளை அம்பாந்தோட் டையிலிருந்து முல்லைத்தீவுவரை தாக்கினார்கள். நுவரகலவிய மாவட்ட திசாவாவும், பண்டார வன்னியனும் வன்னிப்படையினரும் சேர்ந்து முல்லைத்தீவுக் கோட்டையைத்தாக்கினார்கள். லெப்டினன் றிபேக் என்பவர் உடனடியாகக் கைவிட்டு கடல்மூலம் யாழ்ப்பாணம் சென்றார். உடனடியாக ஆங்கிலேயப்படை திருகோணமலையிலிருந்து படையெடுத்து முல்லைத்தீவு சென்று திரும்பவும் கைப்பற்றினார்கள்[7] எனக் குறிப்பிடுகின்றார். [பண்டார வன்னியன் அந்நியரை எதிர்த்துப் போராடும் வேளையில் வன்னிக்கு அப்பாலுள்ள கண்டிச் சிங்கள அரசர்களும், மக்களும் பல உதவிகளைக் கொடுத்து உதவியிருக்கிறார்கள்[4] எனவே கண்டிச் சிங்களவருடைய உதவியினால் பண்டாரவன்னியன் தனது விடுதலைப் போரைச் செய்ய மேலும் உதவியாக இருந்திருக்கின்றது.]

பண்டாரவன்னியனின் போர்த்திறமைக்கு லெவ்டினன் றிபேக் அஞ்சினான். பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வன்னியரின் வாளிற்கும், வேலிற்கும் நிகர் நிற்கமுடியாது தவித்தன. ஆங்கிலேயர் அஞ்சிவிட்டு நிற்கவில்லை. அறிவைப் பயன் படுத்தினார்கள். மும்முனைத் தாக்கலை மேற் கொண்டார்கள். பண்டார வன்னியனை எதிர்க்க, கப்டின்கள், மூவ்வழியில் அதாவது, திருகோணமலையில் எட்வேட் மெட்சின் தலைமையில் ஒருபடையும், மன்னாரிலிருந்து காப்டன் வொன்றிபெக்கின் தலைமையில் ஒருபடையும், யாழ்ப்பாணத்தில் இருந்து சேனாதிபதி யூபெல் தலைமையில் பலம் கொண்ட மற்றொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையும் வீரபண்டாரவன்னியனின் போர் பூத்த வன்னியம்பதியை நோக்கி நகர்ந்தன.

திருகோணமலை எல்லைப்புறத்தில் நல்ல நாச்சன் வன்னிச்சியும், மன்னார் எல்லையில் பனங்காமம் பகுதியையும் காத்த தங்கை ஊமச்சியா வன்னிச்சியும் எதிர்த்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த படையை மாங்குளத்திற்கும் முறிகண்டிக்கும் இடையில் உள்ள பதினெட்டாம் போர் என்னும் இடத்தில் முன்னேறிச் சென்று பண்டார வன்னியன் எதிர்த்தான்-6

முப்படைகளின் எதிர்ப்பையும் வேலாலும் வாளாலும் எதிர்த்து சமாளிக்க முடியவில்லை எனினும் அடிபணிய மறுத்துவிட்டான். சரண் அடைய மறுத்தான். தனது இறுதி மூச்சு வரையும் போர் செய்து கற்சிலை மடுவில் காயமடைந்து வீர சுவர்க்கம் அடைந்தான். தனது மண்ணிற்கு முதல் விடுதலை வீரனாக நின்று, அடிபணியாத சுதந்திர வீரனாக நின்று, தனது நாட்டை அந்நியனுக்கு ஒப்படைக்காத மாவீரன் பண்டார வன்னியன். இவனின் அழியாத நினைவுச் சின்னங்களாக குமுழமுனையில் 'பண்டார வன்னியன் கிணறு' 'பண்டாரவன்னியன் வளவு' காணப்படுகின்றது.

மாவீரன் பண்டாரவன்னியனின் வீரவரலாறு தன்னை இன்றைய நிலையிலே நினைவு படுத்த வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம். தனது நாட்டிற்காக, தனது இனத்திற்காக, தன்னுயிரைப் போக்கிய அவனது வீரவரலாற்றை முக்கியமாக அம்மண்ணில் பிறந்தவர்கள், வளர்பவர்கள் நினைவுகூர வேண்டியதும் அவசியமாகும். தனியரசு ஆண்ட வன்னிமண்ணின் எல்லைகள் நாளுக்கு நாள் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் இவ்வேளையில், பண்டார வன்னியனை நினைவுபடுத்த வேண்டியது அத்தியாவசியமாக இருக்கின்றது. பண்டாரவன்னியனைப் போன்ற உணர்வுடன், அடங்காப்பற்றுடன் ஒவ்வொரு தமிழனும் தனது கடமையைப் புரிய வேண்டியது கடமையாகவுள்ளது. கடமை சரிவரச் செய்யத்தவறின் 'வாழ்வு இல்லை'.

---

அடிக்குறிப்பு

1. **Queyroz Trans** P 151
2. **Vanni and the Vanniyas** P. 1
   **C. S. Navaratnam**

   'Vanni was the name given to the northern Country between the Jaffna Peninsula and the Nuwarakalawiya District. Before it acquirid the name Vanni it Seems to have been Know as 'Adankapattu' it Stretched From Trincomalee on the east to mannar on the west and Consisted of Tennamaravadi Mulliyawalai Karunaval Pattu which included lands as for as Kudiramalai and a Portion of Cheddikulam. The extent of the Vanni May be about 3000 Square miles.'
3. 'வன்னியர்' கலாநிதி பத்மநாதன் பக்கம் *81—83*
4. **Vanni and the Vanniyas** P. 29
   **C S Navaratnam**

   He was a Courageous and independent Prince. On One Occasion the Dutch authorities forced him to Supply them with dye-roots, which request he flatly refused to carry out. On auother occasion Pandara Vanniyan Joinei the Sinhalese torces in their attack on Mullaitivu.
5. **Vanni and the Vanniyas** P. 28—29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**C. S. Navaratnam**

About 1790 Nallamappana Vanniyan of Panankamam was arrested for treason on the allegations made indirectly by a Sinhalese Vanniya. He was taken to Colombo and imposed a fine of 12000 Rix dollers. There he was retained in Prison till the payment of the fine. All his Lands were Seized and Leased to Periya Thamotherampillai of Vannarponnai. During the three years of this lease he amassed a good deal of wealth. Nalla Nachchan, the wife of this celebrated Vanniya Came to Jaffna and took har residence at Vannarponni **after taking a Solemn Vow that she would neither bathe nos take more than one meal a day Until her husdand was released from Prison** Vaitthilinga Chettiyar a friend of the family, and one who Commanded great influence with the Government Soon Procecdcd to Colombo, and Secured his release after paying the fine.

**6. வன்னி மாவீரன் பண்டார வன்னியன் வரலாற்றுச் சுருக்கம்.**
**தா. சிவசிதம்பரம் பா. உ.** *31-10-68*

**7. 'Vanni and the Vanniyas'** P. 21
**C. S. Navaratnam**

In 1803 when there was Constant friction between the Kandyan Kingdom and the British, the Kandyans attacked all the British Maritime territory from Hambantota to Mullaitivu. The Dissawa of Nuwarakalawiya together with Pandara Vannyan and the people of Vanni attacked the fort at Mullaitivu. Lieutenant Drieberg who was in Command abandoned it and went by sea to Jaffna. Soon a British force from Trincomalee hastened to Mullaitivu and recaptured the fortress.

### வன்னியர் குடியேற்றம்

கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் காலம் கி. மு. 101. அவனது மாமன் மகளான மாருதப் பிரவை காலமும் அதனை அண்டியே இருத்தல் வேண்டும். அவளின் மகனுன சிங்கமன்னவன் காலமும் கி. மு. முதலாம் நூற்ருண்டின் நடுப்பகுதியாகலாம். வையாபாடலின் படி இவனே அறுபது வன்னியர்களை இலங்கையிற் குடியேற்றியவனுவான். எனவே வன்னியர்கள் இலங்கையிற் குடியேறிய காலம் கி. மு. 50ஆம் ஆண்டு வரையிலென வையாபாடல் வாயிலாகக் கொள்ளக் கிடக்கிறது.

(வையாபாடல் ஆய்வுரை)
க. செ. நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை முரசொலிக்கும் வீர வரலாற்றைப் படைத்தவன்

க. தர்மலிங்கம், B. A. (Hons)
முள்ளியவளை

சூரியனே அஸ்தமிக்காத மாபெரும் சாம்ராச்சியத்தை அமைத்து, உலகெங்கும் கொடி பறக்கவிட்டு, வெற்றி முழக்கத்துடன் வீறுகொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளைக் கதிகலக்கி, அவர்களது படைகளை சின்னபின்னப்படுத்தி உயிரிலும் மேலாக வீரசுதந்திரம் வேண்டிநின்ற ஒரு தமிழ் மன்னனே பண்டாரவன்னியனுவான். இலங்கையை ஆண்ட மன்னர்களில் கடைசி மன்னன். உயர்ந்த தோற்றம், விரிந்தமார்பு, ஒடுங்கிய இடை, பரந்த நெற்றி, உரமேறிய புயங்கள், கழுகுப் பார்வை அவனை அலங்கரித்து நிற்கும் விசேட அம்சங்களாகும். பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்குக் காட்டிய எதிர்ப்பும், அவர்களது கொள்கையை ஏற்பதற்குக் காட்டிய மறுப்புமே வன்னிப் பிரதேசத்துக்கு அடங்காப்பற்று எனப் பெயர் வரக் காரணமாக இருந்தது.

வன்னிப் பிரதேசம் வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவி ஆற்றையும், மேற்கே மன்னூர் மாவட்டத்தையும், கிழக்கே திருகோணமலையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. வீரம் செறிந்த பண்டாரவன்னியன் இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களைச் சீரோடும் சிறப்போடும் நீதிவழுவாது ஆண்டு வந்தான். மாதம் மும்மாரி பொழிந்தது. பொருளாதாரத்திலே இப்பிரதேசம் இலங்கையிலேயே தனக்கென ஓர் இடத்தை வகித்துக்கொண்டிருந்தது. தேன், தேக்கு, யானைத்தந்தம் என்பன இப்பிரதேசத்தின் தேசிய செல்வங்களாக நிறைந்தும் மலிந்தும் கிடந்தன. இவையே ஆங்கிலேயர் இப்பிரதேசத்தின் மீது காதல் கொள்ளக் காரணமாக இருந்தது.

ஆங்கிலேயர் முதல் தடவையாகக் கண்டியைக் கைப்பற்றுவதற்காக கண்டி அரசனுடன் போர் தொடுக்கச் சென்றபோது பண்டாரவன்னியன் வன்னியில் உள்ள வீரர்களைத் திரட்டி ஒரு படையைக் கண்டிக்கு அனுப்பி கண்டி அரசனது வெற்றிக்கு உதவினுன். பண்டாரவன்னியன் கண்டியிலே நடாத்திய வீரப்போர், பண்டாரவன்னியனது வீரத்தை வெள்ளையருக்குத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியது. கண்டியைக் கைப்பற்ற, முதலில் பண்டாரவன்னியனைத் தோற்கடிக்கவேண்டிய நிலை ஆங்கிலேயர்களுக்கு உருவாகியது. எனவே ஆங்கிலேயர்களது முழுக்கவனமும் முழுச் சக்தியும் வன்னிப் பிரதேசத்தை நோக்கித் திரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியது. பண்டாரவன்னியனது ஆட்சியின்கீழ் சிற்றரசனுக விளங்கிய காக்கை வன்னியன் கரிக்கட்டு மூலையின் கரையோரப் பகுதிகளை ஆண்டுவந்தான். அவனுக்கு இருந்த அளவற்ற ஆசையைக் கண்ட ஆங்கிலேயர் அவனை நாடிப் பல ஆசை வார்த்தைகளைக் கூறி அவனைத் தம்வசப்படுத்தி அவனது உதவியுடனும் பலத்த பாதுகாப்புடனும் முல்லைத்தீவில் ஒரு கோட்டையை அமைத்தனர். அக்கோட்டையை அடித்தளமாகக் கொண்டு பண்டாரவன்னியனை வீழ்த்தி வன்னியைக் கைப்பற்றத் திட்டமிட்டுச் செயல்பட்டனர்.

ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முல்லைத்தீவில் கோட்டை ஒன்றை அமைத்துவிட்டனர் என்பதைக் கேள்வியுற்ற மாவீரன் பண்டார வன்னியன் தனது குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை ஆகிய முப்படைகளையும் உசார்ப்படுத்தி முல்லைத்தீவில் நிறுவப்பட்ட ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கோட்டையைத் தகர்த்தெறியப் புறப்பட்டான். 1803ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி பண்டாரவன்னியனது வீரப்படை “ கப்டன் வொன்றிபேக் ” தலைமையிலான படையுடன் எதிர்த்துப் போராடியது. துப்பாக்கிகள் இயங்கின, பீரங்கிகள் முழங்கின. புது ஆயுதங்களை பண்டார வன்னியன் கண்டபோதும் அஞ்சாது துணிச்சலோடு தனது படைக்குத் தலைமைதாங்கித் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் எதிர்த்துச் சென்று ஆங்கில ஏகாதியத்திய படைகளைப் பின்வாங்கச் செய்து புறமுதுகிட்டு ஓடச் செய்தான். பல வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். இவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்பட்டு பின் திருப்பி அனுப்பப்பட்டனர். முல்லைத்தீவுக் கோட்டை தாள்தூளாகியது அதனது எச்சங்கள் நிலைத்து இருந்து இன்றும் பண்டாரவன்னியனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளைவிரட்டி அடித்து, கோட்டையைத் தரைமட்டமாக்கிய மகிழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக குமாரபுரத்தில் விழாக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இச் சந்தர்ப்பத்தில் திருகோணமலையில் இருந்து “ கப்டன் எட்வேட் மெச் ” என்பவரின் தலைமையில் படையொன்று வன்னியனை நோக்கிப் படையெடுத்து வந்தது. இதனைக் கேள்வியுற்ற பண்டார வன்னியனும் அவனது படையினரும் வீரம் தலைக்கேற உசார் நிலையில் இருந்தனர். சுதந்திரதாகம் அவர்களைப் பின்னேதள்ள ஆங்கில ஏகாதிபத்திய படைகளை நோக்கிச் சென்றனர். கற்பூர புல்வெளிக்கு அருகாமையில் உள்ள, இன்று வன்னி மேடு என்று அழைக்கப்படுகின்ற போர்த்திடலில் இரு படைகளும் முட்டி மோதின. சுதந்திர உணர்வு அவர்களுக்கு இடைவிடாத சக்தியைக் கொடுத்தது. பண்டாரவன்னியனது கனல் பறக்கும் வாள்வீச்சுக்கு நின்றுபிடிக்க முடியாத ஆங்கிலப்படை இரண்டாம் தடவையாக புறமுதுகிட்டு ஓடியது.

நேருக்கு நேர்நின்று பண்டார வன்னியனையும் அவனது படைகளையும் வெல்ல முடியாது எனக் கண்ட ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் சூட்சிகள் செய்யத் தொடங்கினர். கரிக்கட்டுமூலை அரசனைநாடி ஆசை வார்த்தைகாட்டி பண்டாரவன்னியனையும் அவனது படைகளையும் காட்டித்தரும்படி கேட்டனர். சுதந்திர இரத்தமில்லாத அடிமை மோகம்கொண்ட காக்கை வன்னியன் அற்ப சலுகைகளுக்காகக் காட்டிக் கொடுக்கத் தயாராக இசைந்துவிட்டான். காக்கைவன்னியனது உதவியோடு ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் மும்முனைத் தாக்குதலைச் செய்யத் தொடங்கினர். “ ஜோன் ஜெவல் ” என்பவரின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு படையும், “ கப்டன் எட்வேட்மெச் ” என்பவரின் தலைமையில் திருகோணமலையில் இருந்து ஒரு படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் "கப்டன் வொன்றிபேக்" தலைமையில் மன்னாரில் இருந்து இன்னோர் பெரும் படையும் தரைமார்க்கமாக வன்னி நாட்டை நோக்கிச் சென்றன. முப்படைகளையும் எதிர்க்கக்கூடிய படைவலு பண்டாரவன்னியனிடம் இருந்தது. இதனை அறிந்த காக்கை வன்னியன் மன்னாரில் இருந்துவரும் படை பற்றிப் பண்டார வன்னியன் அறியாதவாறு பார்த்துக்கொண்டான். பண்டார வன்னியனது படைகள் திருகோணமலையில் இருந்து வரும் படைகளையும் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் படைகளையுமே எதிர்நோக்கியிருந்தது.

(மன்னாரில் இருந்து வரும் படைகளைப் பற்றி அறியாத பண்டார வன்னியன். குமாரசிங்க வன்னியன் தலைமையில் ஒரு படையைத் திரட்டித் திருகோணமலையில் இருந்துவரும் படைகளை எதிர்க்க விட்டு விட்டு, தனது தலைமையில் ஒரு படையைத் திரட்டியாழ்ப்பாணத்தில்இருந்துவரும் படைகளை எதிர்க்கச் சென்று, இடையில் கற்சிலை மடுவிலே முகாமிட்டு இருந்தனர். 1803ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி காலை ஐந்துமணியளவில் மன்னாரில் இருந்து "கப்டன் றிபேக்" தலைமையில் வந்த படை பண்டாரவன்னியன் நித்திரையில் இருந்த சமயம் அவனது முகாமிற்குள் புகுந்து பண்டாரவன்னியனது படைகளில் பலரை கொன்றுவிட்டு பண்டார வன்னியனையும் அவனது படைகளில் 50 பேரையும் சிறைப் பிடித்துக்கொண்டது. மாபெரும் வீரனை சிறைப்பிடித்த தினம் ஆங்கில ஏகாதிபத்தியவாதிக்கு ஒரு மறக்கமுடியாதநாளாகும். அந்நாளை நினைவுபடுத்தும் முகமாக இவ்விடத்தில் ஒரு நினைவுக்கல்லை நாட்டினர். அக்கல்லு இன்று பண்டாரவன்னியனது வீரத்தைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றது. அது ஒன்றே அவரது வீரத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பண்டார வன்னியன் தோற்கடிக்கப்படவில்லை. சிறைப் பிடிக்கப்பட்டதுதான் உண்மை. ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் தமது புகழை நிலை நாட்டுவதற்காகவே தோற்கடித்ததாக நினைவுக் கல்லில் பொறித்துள்ளனர்.

ஆங்கிலேயர்களால், சிறைப்பிடிக்கப்பட்ட பண்டாரவன்னியன் இறந்துகிடந்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு தன்னோடு சிறைப்பிடிக்கப்பட்ட வீரர்களைக் கண்டு பெருமிதமடைந்தான். கப்டன்றி பேக்கை நாடி "நேருக்குநேர் நின்று போர் செய்தவர்களை நாம் சாகுமுன் எமது வீரத்தைக்காட்ட ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும்" என்று கேட்டான். பண்டார வன்னியன் முன்பு தனக்கு உயிர்ப்பிச்சை அளித்ததை ஞாபகப்படுத்திய கப்டன்றிபேக் 50 வீரர்களைத் துப்பாக்கியுடன் நிறுத்திவிட்டு பண்டார வன்னியனது விருப்பத்தை நிறைவேற்ற அனுமதி அளித்தான். பண்டார வன்னியன் 50 குதிரைகளையும், 50 வாள்களையும், ஒரு ஈட்டியையும் வெள்ளையரிடம் பெற்று 50 வீரர்களிடமும் கொடுத்தான். வாளேந்திய 50 வீரர்களையும் இரு பிரிவாக்கி ஒன்றை ஒன்று நோக்குமாறு சிறிது இடைவிட்டு நிறுத்தினான். ஈட்டியின் முனையில் தேன்தோடை பழமொன்றைக்குத்தி நடுவே நாட்டினான். பண்டாரவன்னியன் ஓரமாகப் போய்நின்று "கைதட்டியதும் ஒரே பாய்ச்சலில் பக்கம் மாறவேண்டும், வாளோடுவாள் குதிரையோடு குதிரை மோதக்கூடாது 50 பேரின் வாளும் பழத்தில் வெட்டவேண்டும், 50 துண்டுகள் கீழே வீழ்ந்திருக்க வேண்டும் எஞ்சிய துண்டுகள் ஈட்டிமுனையில் இருக்கவேண்டும்" என்று கூறினான். வெள்ளையர்கள் வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றனர். பண்டாரவன்னியன் ஒருமுறை பலமாகக் கைதட்டினான். அவன் கூறியபடி எல்லாம் நடந்தது. வெள்ளையர்கள் வியப்படைந்து நின்றனர். மீண்டும் ஒருமுறை பண்டாரவன்னியன் கைதட்டினான். குதிரைகள் வெள்ளையர்மீது பாய்ந்து தாக்கின. குதிரைப்படையை ஒருவாறு அடக்கிய ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைத் திரும்பிப் பார்த்தனர். பண்டாரவன்னியனைக் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. கைக்கு எட்டிய பண்டாரவன்னியன் துப்பாக்கிச் சூட்டுக்கு எட்டவில்லையே என்று எண்ணி மூலைமுடுக்கெல்லாம் தேடினர். அக்கம் பக்கமுள்ள பற்றைகள் எல்லாவற்றையும் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன. தான் வாழ்ந்த மண்மீது அழியாத பற்றுக் கொண்ட பண்டாரவன்னியன் அன்னை பூமியை அன்னியர் கையில் இருந்து காப்பாற்ற மீண்டும் போர்தொடுக்க உறுதி கொண்டு மழுவர் கையில் இருந்து மாளமறுத்து வெள்ளையரை அழிக்கத் தப்பிச் சென்றுவிட்டான்.

திருகோணமலையில் இருந்து வந்த வெள்ளையர் படை, தலைவன் இல்லாது தத்தளித்துக்கொண்டிருந்த வீரர்களைத் தூக்கி விட்டு கொன்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த வெள்ளையர்படை வன்னி மக்களின் பொருளாதாரங்களைச் சூறையாடி வீடுகளை எரித்து அக்கிரமம் செய்தது.

வெள்ளையர்முன் வீரத்தின் திறமையை எடுத்துக்காட்டி அவர்களிடம் இருந்து தப்பிச் சென்ற பண்டாரவன்னியன் வெள்ளையர்களைத் துரத்த மீண்டும் வீரர்களைத் திரட்டி இரகசியமாகப் பயிற்சி கொடுத்து வந்தான். இந்த நிலைக்கு வர அவனுக்கு 7 வருடங்கள் சென்றது. 1810ஆம் ஆண்டு மேமாதம் வன்னிப் படைகள் கிழக்குமூலை தெற்கில் மீண்டும் விடுதலைப்போர் தொடுத்தனர். வெள்ளையர் மீண்டும் கலங்கத் தொடங்கினர், நிம்மதியிழந்தனர். இந்தப் பூமியை மீண்டும் மீட்கத் தொடங்கினன் பண்டாரவன்னியன். இத்தகைய நிலையில் ஆங்கிலேயரது அதிஷ்டமும் வன்னியர்களது துர் அதிஷ்டமும், பண்டாரவன்னியனை நோய்க்கு உள்ளாக்கியது. வன்னிப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக விளங்கிய பனங்காமத்தை ஆட்சிசெய்த பண்டாரவன்னியனின் சகோதரி நல்லநாச்சன் நோய் வாய்ப்பட்ட பண்டாரவன்னியனை தனது வீட்டில் வைத்துப் பராமரித்தாள். வன்னியரின் தலைவிதி அவனைச் சும்மாவிடவில்லை. 34 வயதில் மரணமானுன். அன்றே வன்னி மக்கள் அடிமைத்தளையில் மூழ்கினர். இன்று அத்தளையில் இருந்து விடுபடத் துடித்துக்கொண்டிருக்கின்றனர்.

பண்டாரவன்னியனது மரணம் வன்னி மக்களை அடிமைத்தளைக்குள் இட்டுச் சென்றது. இதனைக் கண்டு தாங்காத வானம் கதறியழுதது. வீட்டு அடுப்புகளில் பூனைகள் படுத்து உறங்கின. வீதிகள் யாவும் வெறிச்சோடிக்கிடந்தன. வன்னிநாடே அழிந்து விட்டதுபோன்ற அமைதி எங்கும் நிலவியது.

வீரம்செறிந்த மன்னனுடைய வரலாறு விடுதலை பூரசொலித்து நிற்கிறது.

பொழுது புலர்ந்தது; யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்துநிற் கின்றேம்
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே
வியப்பிது காண்பள்ளி எழுந்தரு ளாயே.

— பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஒருகள ஆய்வு —

# ஐயனார் வழிபாட்டில் வன்னியின் சடவங்குள ஐயனார் கோயில்

— தமிழரசி சந்திரசேகரம் B. A (Hons)

ஈழத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வன்னி வாழ் தமிழ் மக்களது பங்களிப்புத் தொடர்பான மதிப்பீடு இற்றை வரை நிறைவானவகையில் மேற் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பாரம்பரிய கிராமிய விவசாயப் பண்பாட்டையுடையவர்கள் வன்னியர்கள். அண்மைக் காலத்தில் நகர் சார்ந்த வாழ்க்கை முறைக்கு இவர்கள் ஆட்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இக் கால கட்டத்தில் அவர்களின் பாரம்பரியப் பண்பாட்டின் ஒரு கூறுகியதும், மரபு ரீதியானதுமாகிய நாட்டார் சமய வழக்கங்களை இனங் கண்டு பதிவு செய்வது. ஆய்வு, தேவையாகிறது. இவ்வுணர்ச்சியின் உந்துதலால் மேற் கொள்ளப்பட்ட ஒரு கள ஆய்வின் பெறுபேறே, இச் சிறிய கட்டுரை. பொதுவாக ஐயனார் வழிபாடு பற்றி சிறிது இங்கே நோக்கப் படுகிறது, சிறப்பாக வவுனியா மாவட்டத்தின் கனகராயன் குளத்தையண்டியுள்ள சின்னடம்பன் கிராமத்தில் அமைந்துள்ள ''சடவங்குள ஐயனார்'' ஆலயத்தில் வருடாந்தப் ஆவணி மாதத்தில் நடைபெறும் பொங்கலும் அது தொடர்பான கரணங்களும் இங்கே எடுத்து நோக்கப்படுகின்றன.

## 1. புராண மரபில் ஐயனார்

கந்தபுராணம் மாசாத்தா படலத்திலேயே ஐயனாரின் தெய்வீக வரலாற்றியலின் ஆரம்பத்தினைக் காண முடிகிறது. தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தனர். அமுதம் வெளிவந்தது. இருபகுதியினரும் அதனை உண்ணும் பொருட்டுப் பொருதனர். அப்போது திருமால் மோகினி வடிவம் பூண்டார். அவ் வடிவைச் சிவன் சேர்ந்த சமயம் ஐயனார் தோன்றினார். இந்திரன் தனது இந்திராணியை அசுரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டி இவரைத் துதித்தான். அப்போது ஐயனார் கரிய மேனியும், சிவந்த சடையும், குதிரை வாகனமும், கோழிக் கொடியும் கொண்டவராய் பூரணை, புட்கலை என்ற இருமனைவியருடன் இந்திரன் முன் தோன்றினார். இவருக்குப் பன்னீராயிரம் படைக்கலங்கள் உள்ளனர். இவரது படைத் தலைவன் வீரமாகாளன், அசுரர்களுடன் போர் செய்து வனத்திலே இந்திராணியைக் காத்த காவற் தெய்வம். இவர், சிவனுக்கும் திருமாலுக்கும் பிறந்த பிள்ளையாதலால் ஐயனார் ஹரிஹர புத்திரன் என்ற சிறந்த நாமத்தினைப் பெறுகிறார். சுப்பிரபேதம், அம்சுமத் பேதம், பூர்வகாரணாகமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய ஆகமங்களில் ஐயனருக்கு இடம் அளிக்கப்பட்டிருந்தாலும், ஆகம முறைப்படி ஆலயங்கள் அமைத்து இவரை வழிபடுவது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. கிராமிய அடிப்படையிலேயே மக்கள் இவரைப் பெரும்பாலும் இன்று வணங்குகின்றனர்

2. தமிழ் மக்கள் மத்தியில் ஐயனர்

ஐயப்பன், ஹரிஹர புத்திரன், சாஸ்த்தா, வரைட்சகர், என்ற பல நாமங்களால், ஐயனரைத் தமிழர்கள் வழிபடுகின்றனர். இந்தியாவில் கேரள நாட்டில் சபரிமலை ஐயப்பன் வழிபாடு புகழ்வாய்ந்ததாகும். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் கிராமிய விவசாயிகளின் காவற் தெய்வம். இவர், வரட்சி காரணமாக ஏற்படும் நோய்களிலிருந்தும், கொடிய காட்டு விலங்குகளிலிருந்தும் தம்மையும், தமது கால் நடைகளையும் காப்பாற்றும்படி வேண்டுவர். செல்வச் செழிப்பு, மழை போன்ற தேவைப்பாடுகளுக்கும் இக் கடவுளாரையே வேண்டுகின்றனர். தமிழ் மக்களில் கரையார், முக்குவர் சலவைத் தொழிலாளர் போன்றோர் சிலர் தமது குல தெய்வமாகவும் ஐயனரை வழிபடுவர்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஐயனர் வழிபாடு அருகியே காணப்படுகிறது. மலையகத்திலும் வன்னிப் பிரதேசத்திலும், யாழ் மாவட்டத்தையண்டியும் இவ் வழிபாடு செறிந்து காணப்படுகிறது. இலங்கையில் கிறிஸ்தவ சகாப்தத்தையண்டிய காலத்திலிருந்து ஐயனர் வழிபாடு ஆரம்பமாகிறது. அம்பாறை, வவுனியா, கிளிநொச்சி, அனுராதபுரம், புத்தளம், ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்லோயா, மாபடுவ, உருத்திரபுரம், கிரியா, மருதமடுவப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட சில தொல்லியற் தரவுகளைச் சில வரலாற்று ஆசிரியர்கள் ஐயனர் வழிபாட்டுடனும் அவற்றின் காலத்தினைக் கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்துடனும் தொடர்பு படுத்துகின்றனர். மருதமடுவ என்ற இடத்தில் எடுக்கப்பட்ட சிதைந்த நிலையிலுள்ள யானை, குதிரை போன்ற வடிவங்களும், பெண் பதுமைகளும் அங்கே ஐயனர் வழிபாடு நிலவியதற்கான இறுதியான ஆதாரங்களைத் தருவனவாகக் கருதப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்களின் புகழ்—வாய்ந்த ஐயனர் ஆலயங்களை வன்னிப் பிரதேசத்தில் முல்லைத் தீவு, புதுக்குடியிருப்பு, கொக்குளாய், கொக்குத் தொடுவாய் கோடாலிக் கல்லு, சின்ன அடம்பன், நெடுங்கேணி, அனலைதீவு, வேலணை, வரணி அராலி, காங்கேசன்துறை, சுன்னுகம், ஆகிய இடங்களில் காணலாம். இங்கே சூலம் அல்லது கல் ஒன்று ஐயனரின் அடையாளச் சின்னமாக வைக்கப்பட்டிருக்கும். சிறப்ப அம்சங்கள் பொருந்திய பெரும் கட்டிடங்கள் எவற்றினையும் காணமுடியாது. மரங்களின் கீழ் குளக்கரைகளையண்டி, தனிமையான இடங்களில், கிராமங்களின் எல்லைகள், காட்டுப் பிரதேசங்களின் மத்திய பகுதிகள். ஆகிய இடங்களில் தமிழர்கள் ஐயனரை வழிபடுகின்றனர். பறையொலிப்பதும், உரு ஆடிக் குறி சொல்வதும், பலி வெட்டிப் படைப்பதும் இவர்களது வழிபாட்டின் முக்கிய அம்சங்களாகும். பலிவெட்டுதற்கு சட்டபூர்வமாகத் தடைவிதிக்கப்பட்ட பின்னர், தமிழர்கள் முற்றுகவே இக்கரணத்தை விட்டு விட்டனர். தமது பாரம்பரிய கிராமிய வழிபாட்டு அம்சங்களின் அடிப்படையிலே இன்றும் காவற் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

3. ஈழத்தில் சிங்களவர் மத்தியில் ஐயனர்

ஐயநாயக்க, ஹரிஹர புத்திர என்ற நாமங்களால் சிங்களவரும் இவரை வழிபடுகின்றனர். கிராமிய விவசாயத்தை மேற்கொள்ளும் சிங்கள மக்களும் தமது காவற் தெய்வமாக ஐயனரை நம்புகின்றனர். ஐயனுயக்க மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்ததாக இவர்களிடையே கதையுண்டு. புத்தர் மல்லவ வனத்துக்குச் சென்றபோது இலங்கையை ஐயனரது பொறுப்பில் விட்டுச் சென்றதாக இவர்கள் கருதுகின்றனர். சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கும் திருமாலுக்கும் பிறந்த பிள்ளையே ஐயனார் என்று பௌத்தர்களும் நம்புகின்றனர். சிறந்த ஒரு காவற்தெய்வம் என்ற இந்துக்களது நம்பிக்கையின் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நிலையில் பௌத்தர்களும் ஐயனாரை வழிபட ஆரம்பித்திருக்கலாம். ஐயனாருக்கு அருகே முருகனையும், பிள்ளையாரையும் வைத்து சிங்களவர் வணங்குகின்றனர். விஷ்ணுவை, இராமரை வணங்கும் சிங்களவர், ஐயனாரையும் அவர்களது வரிசையில் வைத்து வணங்க ஆரம்பித்திருக்கலாம்.

குளங்கள் கட்டிய பின்னரும், அறுவடை செய்து வீட்டிற்குக் கொண்டுவந்த பின்னரும், இத் தெய்வத்திற்கு "முட்டிமங்கல்ய" விழா என்ற ஒரு விழாவினை தனிமையான இடங்களில் அன்றிக் குளக்கரைகளிலும் வைத்துச் செய்வர். பானைக்குள் தீபங்களை வைத்து ஐயனாரை வழிபடுவதே இவ் விழாவின் முக்கிய அம்சமாகும். வன்னிவாழ் சிங்களமக்களிடையே இவ் வழிபாடு எந்தளவுக்கு எவ்வடிவத்தில் இருக்கிறது என்பது இன்னும் ஆழமாக ஆராயப்படவில்லை. பொதுவாக இலங்கைவாழ் சிங்களவர்களின் ஆழ்ந்த நம்பிக்கைக்குரிய ஒரு காவற்தெய்வம் ஐயனார் என்று கூறுவதில் பிழையில்லை.

4. சடவன்குள ஐயனார் வரலாறு

அடம்பன் என்ற சிறியகிராமத்தில் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் வசித்த மக்களுக்கு மணியொலி, சங்கொலி கேட்கும் வழக்கம் இருந்ததாகவும், அங்கே வாழ்ந்த ஒரு ஆசிரியர் கனவில் ஐயனார் தோன்றித் தனது இருப்பிடத்தையும், காட்டிச் சென்றதாகவும், மாணவர்கள் ஆசிரியரைத் தூக்கிச்சென்று அடர்ந்த காட்டின் மத்தியில் சூலத்தை நாட்டி வழிபாட்டினை ஆரம்பித்ததாகவும் இப்பகுதி மக்களிடை கர்ணபரம்பரைக் கதையுண்டு. இதனைவிட ஆலயத்தோற்றம் பற்றிக் கூறுவதற்கு எவ்வித இலக்கியச் சான்றுகளும் இல்லை. இன்றும் ஆலயம் அடர்ந்த காட்டின் மத்தியிற் காணப்பட்டாலும் வீதிகளைத் திருத்தி விசேட பொங்கல் நாட்களில் போக்குவரத்து வசதிகளைச் செய்கின்றனர்.

5. பூசாரியாரும் பொங்கல் ஆயத்தங்களும்

பரம்பரையாக வரும் வேளாளர் குலத்தைச் சேர்ந்த பூசாரியொருவரே பிரதான பூசாரியாவர். வருடந்தோறும் ஆவணிமாதத்தில் பிரதான குருவின் கனவில் பொங்கல் செய்வதற்கு சம்மதம் கொடுத்த பின்னரே இங்கே செய்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்வர். சம்மதம் பெறுதுவிட்டால் பொங்கல் நடைபெற மாட்டாது. பொங்கல் நடைபெறுமாயின் அதற்கு எட்டு நாட்களுக்கு முன்பு பொது மக்களுக்கு பொங்கல் நடைபெறும் தேதியினைத் தெரிவித்த பின்னர் ஆலயத்திற்குப் பிரதான பூசகரும் வழக்கமாக விரதம் அனுட்டிப்பவர்களும் உதவியாட்களும் சென்று பொங்கலுக்குரிய ஆயத்தங்களை மேற்கொள்வர். கரணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதான பூசாரியார்

"ஓம் நாலுவேதம் ஆறுசாத்திரம் அறுபத்து நான்கு காலாக்கியானமும் கூடி ஒன்றுகப் பிறந்த அரி புத்திரன் மார்பில் பூனூல் சமர்ப்பணம். கையிலெடுத்தேன் பன்னீராயிரம் பூதப் பிரேத பசாசுகளும் விலகிநில் ஐயனார் ஆணைப்படியே விலகிநில்"

என்று கூறி அங்குள்ளவர்களின் கையில் கப்பண வேளையைக் கட்டுவர். இதனை நோற்புக் குத்துதல்" என்பர்.

பின்னர் அரிசி, மா, பயறு முதலியனவற்றினை ஆயத்தம் செய்வர். வாழைக் குலைகள் பழுக்கவைப்பர், ஆலயத்தைச் சுற்றிச் சுத்தம்செய்வர், விளக்குத்திரிகள் பல திரித்து எண்ணெய்விட்டு ஊறவைப்பர், விளக்குகள், பாத்திரங்கள் இவற்றினைச் சுத்தம்செய்வர். எட்டாம் நாள் "குடிமக்கள்" என்றழைக்கும் சலவைத்தொழிலாளி, கோவியர், அம்பட்டர், பறையர், குலத்தவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவர் ஆலயத்திற்கு வருவர். சல வைத்தொழிலாளி அங்குள்ள பூசாரியாருக் கும் ஏனையவர்களுக்கும் சுத்தமான உடை களை அணியக் கொடுப்பதுடன் அம்பட்ட குலத்தவராகிய பரியாரி என்று அழைப்ப வருடன் சேர்ந்து பொங்கற் கரணங்கள் நடைபெறும் போது ஆலவட்டம் பிடிப்ப தற்குரிய துணிகளையும் கொண்டுவருவர். ''சாம்பான்'' என்று அழைக்கப்படும் பறை யர் குலத்தவர் பறை முழக்குவதற்கு ஆயத் தமாக பறைகளைக் கொண்டுவருவர் இவற் றின் பின்னர் பொங்கல் ஆரம்பமாகும்.

## 6. பொங்கற்கரணங்கள்

### A. மடைப்பண்டமெடுத்தல்:-

பொங்கலுக்குத் தேவையான பொருட்கள் அத்தனையும் வைக்கப்பட்டிருக் கும் இடத்திற்கு பூசாரியாரும் குடிமக்களும் பக்தர்களும் பறைமுழக்கத்துடன் செல்வர். பொருள்களைச் சரிபார்த்து ஐயனரை வேண்டி உருவாடிய பின்னர் பூசாரியார் ஒவ்வொரு பொருள்களாக பக்தர்களிடம் கொடுத்து ஐயனர் ஆலயத்திற்குக் கொண்டு வருவர். இந் நிகழ்ச்சி பொங்கலன்று இரவு பதினெரு மணியளவில் ஆரம்பமாகும்.

### B. கும்பம்வைத்தல்

ஐயனருக்கும் அவரது பரிவாரங்கள் என்று கருதும் அத்தனை தெய்வங்களுக்கும் கும்பங்கள் வைத்து அதிலே தெய்வங்கள் வரவழைக்கப்படுதலே கும்பம்வைத்தலாகும். முதலில் சைகைமூலம் அவ்வத் தெய்வங்கட் குரிய வடிவங்களை வெவ்வேறுபட்ட கூலவடி வங்களில் நிலத்தில் பூசாரியார் போடுவார். இதனை இயந்திரம் போடுதல் என்பர். இதன் பின்னர், வெள்ளைத் துணியினைப் பிடித்த படி பூசாரியார் நான்குபக்கமும் திரும்பி வணங்கித் தெய்வத்தை துணிக்குள் வாலா யம் பண்ணிவிட்ட பாவனையில் துணியினை நிலத்தில் விரிப்பர். அதன்மேல் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு பிரிவாக வாழை இலைகளின் மேல் அரிசியினைப் போடுவர். பின்பு பழம், பாக்கு, வெற்றிலை வைப்பர்.

இவ்வாறு தெய்வங்கள் வரவழைக்கப்பட்ட பின்னர் அவர்களுக்குத் துதிப்பாடல்கள் பாடிக்கொண்டிருக்கும்போது பொங்கல் செய்வதற்குத் தொடங்குவர்.

### C. வளர்ந்து நேர்தல்

பொங்கற்பானையை அடுப்பில் வைப் பதற்கு முன்பு அதனைத் தூக்கி நான்கு திக் கும் சுற்றி அங்கு வரவழைக்கப்பட்டிருக்கும் தெய்வங்களாலும், தேவதைகளாலும் அங்கு கூடியிருப்பவர்களுக்கு துன்பங்கள் விளையா வண்ணம் வேண்டுவர். யாவருக்கும் ஐய னரே அடைக்கலம் என்ற பொருளில்

''அந்தரம், சுவர்க்கம், பூமி மண்டலங் கள், எட்டுத்திக்கும் பதினறு கோணங்க ளையும் ஆளும் புட்கலையாள் முதல் அறு பத்துநான்கு நூருயிரம் மற்று மாக்களை யும் படைத்துக் காக்கும் தம்பிரானுக் கும் தம்பிராட்டிக்கும் அபயம் அடைக் கலம்''

என்று மிகுந்த பயபக்தியுடன் வணங்கிப் பானையைப் பொங்கலுக்கு அடுப்பில் ஏற்று வர். பொங்கல் நிறைவுற்ற பின்னர் அத னைப் படைப்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்வர்.

### D. மடைபரவல்

ஐயனருக்கும் அவரது பரிவார தெய்வங்களான மனைவியர் பூரணை, புட்கலை வீரமாகாளர், பரிகல வயிரவர், இளந்தாரி வயிரவர், விறுமன், போன்ற படைத் தலை வர்கள், பதினென் வயிரவர்களாகிய ஆதி வயிரவர், சடைவயிரவர், ஆகாச வயிரவர், பாதாளவயிரவர், கிறிவட்டதுட்ட, சங்கார, அகோர, அக்கினி, ஆதித்த, கம்பிலி, வடுக, மனேவிர, நிர்வாணி, கல்யாணி, காபால, உருத்திர, உக்கி வயிரவர்கள் அண்ணமார், நாச்சிமார், சங்கிலிக்கறுப்பன், போன்ருேர் பன்னீராயிரம் படைக்கலங்கள் யாவற்றிற் கும் மடை பரவுவர். மடையில் பன்னீரா யிரம் பழம், பன்னீராயிரம் வெற்றிலை, பன் னீராயிரம் பாக்கு போன்றன பரவிய பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர் வேறும் பழவகைகள், கரும்பு, இளநீர் பொங்கல் சாதம், வடை முதலியன படைத்துத் தெய்வங்களை மடைக்கு வரவழைப்பர், அப்போது

''ஐயனுருக்கும் பரியலத்துக்கும் அவையும் அடைக்கலம். நல்லதம்பிரானே நாயகனே களனியிலே பால் கிடையாதநேரம் ஏந்தியும் இரந்தும் மடிப்பிச்சை வாங்கியும் எட்டிலொன்று குறையாதிருக்கிறது. பெற்றும் பெருத பாவிகட்கு மண்டு விளங்கிச் செல்வமுண்டாக்கி இருக்க வேண்டும், காட்டுக்குப்போனேன் என்று நிற்கவேண்டாம் வைத்தமடையறியேன் வையாத மடையறியேன், இடம் அறியேன், வலமறியேன், மடையில் வந்து கண்ணை முளித்துப் பார்க்கவேண்டும்'' என்று பாடுவர்,

விசேடமாக நாச்சியாரது மடையில் சீப்பு, கண்ணுடி, காப்பு, காலணிகள், முடி மயிர், போன்றவற்றைப் படைத்து வழிபாடுவர், நாச்சிமாருக்கு அருகே அண்ணமார் மடை இருக்கும், அண்ணமார் நாச்சிமாரது காவலாளிகள் என்றும் பொல்லு அவர்களுக்கு படைக்கப்ப்பட்டிருக்கும். இலேகுழைகளின் மேலேயே படையல்களைப் போடுவர் அண்ணமார் தாழ்ந்த சாதியினர் காவலாளிகள். என்ற ஒரு நம்பிக்கையில் இவ்வாறு செய்கின்றனர். இவ்வாறு மடைகள் பரவிய பின்னர் பூசாரியார் ஐயனரிடம் மிகவும் உருக்கமாக

''ஆனைகரடி கடியாமல்
ஆனதோர் சர்ப்பம் தீண்டாமல்
மானமருத்துவம் இல்லாமல்
மைந்தனைப் பெற வரம்தா''

என்று பாடுவர். பின்பு ஐயனரது படையல்களுக்கு முன்பு திரைச்சேலை யொன்றை தொங்கச் செய்வர். அதன் பின்பு வைரவர் முன்பு செல்வர்.

E பலியிடுதல்

இப்போது பலியிடப்படுவதில்லை. பலி கொடுத்த காலத்தில் வயிரவருக்கும், படைக்கலங்களுக்குமே பலிகொடுத்தனர். போரில் விழும் பிணங்களின் இரத்தமே தேவதைகளின் விருப்பமான, உணவு என்று நம்பி மிருகங்களையாவது வெட்டி இரத்தம் படைத்தால் மாத்திரமே இவை சாந்தமடையும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு செயற்பட்டனர். தமிழ்நாட்டிலும் ஐயனுருக்குப் பலி கொடுக்கப்படுவதில்லை. தேவதைகளுக்கே பலி கொடுக்கப்பட்டது. பூசாரியார் ஆட்டினை நீராட்டி உயரத்தில் தூக்கிப் பிடித்தபடி நிற்க இன்னெருவர் ஒரே வெட்டில் தலையை நிலத்தில் விடுவார். நேர்த்தி செய்து வெட்டுவதற்குக் கொண்டு வந்த ஏனைய ஆடுகள் கோழிகள் ஏலத்தில் விற்று பணம் ஆலயத்திற்குக் கொடுக்கப்படும்.

F வாழ்த்தலும் வழிவிடுதலும்

பொங்கலுக்கு வரவழைக்கப்பட்ட தெய்வங்களைப் பாடி வழி விடுவதற்காக பூசாரியாருடனும் பறைமுழக்கத்துடனும் பலிப் பொருட்களைக் கொண்டு 'பரிகல வெட்டை' என்ற வெளியைச் சென்றடைவர். அஙகே ஒரு மணித்தியாலமாக பறை முழக்கி பூசாரியார் எல்லாத் தெய்வங்களையும் வரவழைத்து பழம் பாக்கு பலிப் பொருட்களையும் கொண்டு சென்று நிலத்திற் போட்ட பின்பு

''வந்தபரிகலமே வாராமல் நின்றவரே
காவில் நில்லாது நீங்கள் இருக்கும்
தேசத்திற்குச் செல்லவே சுவகா''

என்று பாடி அனுப்புவர், பின்னர் தலை முழுகி உடைமாற்றி ஐயனுருக்குத் தீபம் காட்டி முடிப்பர்.

7. வன்னியின் பொதுவான வழிபாட்டுப் பாரம்பரியத்தில் ஐயனர் பெறும் இடம்

வன்னிநாட்டில் கண்ணகையம்மன், நாக தம்பிரான் ஐயனர் போன்ற கிராமியத் தெய்வங்களை விட சிவன், முருகன் பிள்ளையார் போன்ற ஆகம வழிவந்த தெய்வங்களையும் மக்கள் வழிபடுகின்றனர், ஆகம வழிவந்த தெய்வங்கள் ஆகம மரபுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியும் கிராமிய அடிப்படையிலும் வணங்கப்படுகின்றனர். பிள்ளையாருக்கு முறைப்படி சிலேயெழுப்பி வைதிகக் குருக்கள் பூசை செய்வதனையும் மறுபுறம் காட்டு விநாயகர் என்ற பெயரில் காட்டுவழிகளில் வைத்தும் விக்கினங்களுக்குத் தெய்வம் என்ற வகையில் கிராமங்களில் கல் ஒன்று அவரின் சின்னமாக வைக்கப்பட்ட நிலையிலும் வணங்குவர்.

கண்ணகையம்மன், நாகதம்பிரான் வழிபாட்டில் கிராமிய மரபுகள் மங்கி ஆகம வழிப்பட்ட மரபுகள் தலைதூக்குவதினை அவதானிக்கலாம். பெயர் பெற்ற கண்ணகையம்மன் இன்று இராசேஸ்வரி அம்மனுக மாற்றம் பெற்று இன்று செல்வந்தர்களுடைய பெரும் ஆலயம் என்று கணிக்கக் கூடியமுறையிலுள்ளது. ஆனுல் பெரும்பாலான இந்துக்கள் கண்ணகையம்மன் என்று நம்பியே வழிபடுகின்றனர். வற்றுப்பளையில் இன்று வைதிகக் குருக்கள் பூசை ஒருபுறமும், மறுபுறம் கிராமிய அம்சங்களுடன் கூடிய வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

நாகதம்பிரான் வழிபாடும் இம்மக்களின் சிறப்பான வழிபாட்டுமுறை. இது கிராமிய அடிப்படையில் இருந்தது; இன்று புதூர் ஆலயத்தில் கற்கட்டிடங்களையும் வைதிகக் குருக்களையும் கொண்ட ஆகம வழிபாட்டுடன் பாரம்பரியமாக தமிழர்களது கிராமிய வழிபாட்டம்சங்களையும் அவதானிக்கலாம். இவ்வாறு கிராமிய அடிப்படையில் வந்த கண்ணகை, நாகதம்பிரான் வழிபாடுகளில் வைதிகச் செல்வாக்கு இடம் பெறும் அதே நேரம், ஐயனுர் வழிபாட்டில் மாத்திரமே வைதிகச் செல்வாக்கு ஆதிக்கம் செலுத்த முடியாதுள்ளது. வன்னிநாட்டின் தெய்வங்களில் ஐயனுர் தனியிடத்தைப் பெற்று விளங்குகிருர்.

8. இங்கே நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகள் :

N. ஐயன் கோயில் மருந்தும் வேளையும்

பொங்கலின் பின்பு ஆறு அங்குல நீள நூலேயும் மைஞ்சள் நிற உருண்டைகளான மருந்தினையும் பூசாரியார் பக்தர்களுக்கு வழங்குவார். வேளேயும், மருந்தும் தீராத நோய்களை தீர்ப்பதாகவும் வேளை கட்டுவதனுல் தேவதைகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிவிடலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. எவ்வாறு புதூர் நாகதம்பிரன் ஆலயத்தில் எடுக்கும் மண் பாம்புக்கடிக்கு மருந்தாகின்றதோ அதேபோல் சிறிய வருத்தங்களுக்கு இம்மருந்தினை நீரில் கரைத்துப் பருகுவர்.

பெருங்காயம், உள்ளி, நற்சீரகம், வேர்க்கொம்பு, மஞ்சள், பனங்கற்கண்டு ஆகிய ஏழு பொருட்களையும் நன்முகச் சேர்த்து இடித்தே மருந்தினைத் தயாரிக்கின்றனர். போக்குவரத்து, மருத்துவ வசதிகளற்ற இக்கிராமமக்கள் இதன் மூலம் பயன் அடைகின்றனர். பிரசவ வேதனையில் துடிக்கும் பெண்களுக்கு முதலில் ஐயனுரின் மருந்தினைக் கரைத்துக்கொடுப்பர். பிள்ளை சுகமாகப் பிறந்துவிடும் என்று நம்புகின்றனர்.

B. வேளைகள் கட்டுதல்

"ஓம் அரிகர புத்திராய சுப்பிர
மணியாய வீரபத்திராய
சிறிராம் தேவதாய சங்க அகோர
உருத்திர சங்கராய
இன்னுர்மேல் நிற்கும் சங்கார
சங்கரா விலகு"

என்ற பொருளில் வேண்டித் துதித்துப் பூசாரியார் கட்டும் வேளை மூலம் மக்கள் குணமடைவர், காணிக்கையையும் செலுத்துவர்.

C. பிள்ளைகளை விற்றல்

நோயினுல் வருந்தும் சமயங்களில் பிள்ளையை ஐயனுருக்கு நேர்ந்து அவருக்கேயுரியவர்களாக்குகின்ற பாவனையில் ஆலயத்தில் நிறுத்து விற்பர், இன்னெருவர் பணம் கொடுத்து அப்பிள்ளையை வாங்குவர், பணம் ஆலயத்துக்குரியதாக்கப்படும், பிள்ளையைப் பெற்றோரிடம் மறுபடியும் ஒப்படைப்பர், தென்னம்பிள்ளையையும் கொண்டு வருவர்; ஆலயத்தில் அவற்றினை நாட்டுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**D. குறி சொல்லல்**

ஐயனாரைத் துதித்து பக்தியுடன் வணங்கின் அத்தெய்வம் பூசாரிமேல் வந்தவுடன் அவர் உரு ஆடத் தொடங்குவர் என்று இப் பகுதிவாழ் மக்கள் நம்பி அவ்வாறான நிலையில் அவரை வணங்குவர். அப்போது அதனைத் தெய்வவாக்காகச் "சாமி ஆடிச் சொல்லிற்று" என்று கூறி அதன்படி காரியங்களைச் செய்வர்.

**காவடியாட்டம்**

பறையொலிக்கு ஏற்பக் காவடியாடுவதன் மூலம் நேர்த்திகளை நிறைவேற்றுகின்றனர். பொங்கல் தொடங்கியவுடன் காவடிகளும் ஆட ஆரம்பிப்பர். காட்டு வழிகளால் இருமருங்கிலும் காவடிகளும் பக்தர்களும் வந்து கொண்டிருக்கும் காட்சி சபரிமலை யாத்திரையை நினைவுபடுத்துவதாக இருக்கும். காவடி ஆடுவோர் மேலும், தெய்வம் சில சமயங்களில் வந்து விடுவதாக, நம்பப் படுகிறது. அவ்வாறான சமயங்களில் பூசாரியார் அவர்களில் தண்ணீர் தெளித்து நிறுத்துவர். தாள லயங்களுக்கு ஏற்ப ஒருபோதும் ஆடிப்பழகாத பக்தர்களும் முறையாக ஆடும் காட்சி சிறப்புக்குரியதாக அமைகிறது.

கிராமிய வழிபாடு உண்மையில் பண்டைய மக்களின் சுதேச வழிபாடு. கிராமிய மக்கள் தமது சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தெய்வங்களை நேரடியாக உருவகப்படுத்த மேற்கொண்ட காரணங்களின் வளர்ச்சியே கிராமிய வழிபாடு. விவசாய சமூகத்திடமிருந்தே இவ்வழிபாடு தோற்றம் பெறுகிறது. அமைதியானதும் சிக்கலற்றதுமான கிராமிய வாழ்க்கை முறைக்குரிய வழிகாட்டல்களாக, விளக்கங்களாக இவ்வழிபாட்டு முறைகளுள்ளன. பண்டைத் தமிழர் கற்களை நாட்டி, அவற்றிற்குப் பலி கொடுத்து, வெறிஆடி, குறிசொல்லி வணங்கினர். வேலன் வெறியாடல் என்று பண்டை இலக்கியங்கள் பண்டைத் தமிழர் வழிபாட்டு முறையினை இயம்புகின்றன.

"ஐயனார் வீரபத்திரர், சங்கிலிக் கறுப்பன், அண்ணமார், நாச்சிமார் வழிபாடானது நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியாகக் கொள்ளலாம்" என்று Dr ராசமாணிக்கனார் கருதுகிறார். அவ்வாறாயின் இன்று நாம் காணும் பழமைச் சிறப்புமிக்க ஐயனார் வழிபாட்டில் பண்டைத் தமிழர் வழிபாட்டின் எச்ச சொச்சங்களைக் கண்டு தெளியலாம். இலங்கைத் தமிழர் பண்பாட்டின் முழுமையை அறிய வேண்டுமாயின் பழமைச் சிறப்பு மிக்க கிராமியப் பண்பாடுகள் பற்றிய அறிவு முக்கியமானதாகும்.

தமிழர் பண்பாடு இந்துமதத்தையும் தன்னுள் அடக்கியுளது. இந்துப் பண்பாட்டின் முழுமையையும் கூட நாம் அறிவதற்குக் கிராமியப் பண்பாடுகள் அழியாது எழுத்து வடிவால் பேணப்படுவதுடன் மாத்திரமல்ல, ஆராயப்பட வேண்டியவையுமாகும். இந்த வகையில் வன்னித் தமிழரது பண்பாட்டுப் பாரம்பரியங்களை ஆராய்ந்து அறிய வேண்டுமாயின், அவர்களது வழிபாட்டு முறைகள் மானிடவியல் ரீதியில் சமூகவியல் நோக்கில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பற்று வன்னிமைகள் 1658—1697

— கலாநிதி சி. பத்மநாதன்

கொழும்புப் பல்கலைக் கழகம்.

ஈழநாட்டிலே பிரித்தானியரின் ஆட்சி ஏற்படுவதற்கு முன் பல நூற்றாண்டுகளாக நிலைபெற்ற குறுநில அரசுகளே வன்னிமைகள் என்ற சிற்றரசுகளாகும். மானியமுறையிலான சமுதாய அமைப்பு நிலை பெற்ற காலத்தில் இலங்கையின் அரசியலிலும் பொருளாதார அமைப்பிலும், வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பொதுவாக அவை இலங்கையின் வரட்சிவலயத்திலே அமைந்திருந்தன. அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த வன்னிநாடுகள் தமிழ் வன்னியராலே ஆளப்பட்டுவந்துள்ளன.

குறுநில மன்னர்க்குரிய பதவியினைக் குறிக்கும் வன்னிமை, வன்னிபம், வன்னியன், வன்னிராசன், என்ற சொற்கள் சோழராட்சிக் காலத்திலே தொண்டைமண்டலத் தொடர்பின் காரணமாக இலங்கையிலே வழக்கில் வந்தன, வேளைக்காரப் படைகளின் தலைவர்கள் பிரதேசத் தலைவராகியதன் விளைவாகவே குறுநிலவரசுகளை வன்னிமைகளெனக் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டிருத்தல்வேண்டும்[2]. காலப் போக்கிலே சிங்களவர், வேடர், முதலியோர் வாழ்ந்த குறுநிலப் பிரிவுகளும், அவற்றின் அதிபர்களும் முறையே வன்னி எனவும் வன்னிராஜ எனவும் குறிப்பிடப்படும் மரபு வலுப்பெற்றது. வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் வன்னியர்களின் முன்னோர்கள் தமிழகத்திலிருந்தும் வந்து இலங்கையின் பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தார்கள் என்று குறிப்பிடுகின்றன. பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்து சூளவம்சத்திலும், சிங்கள நூல்களிலும் வன்னிகள் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மாகனுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலே பல வன்னிமைகள் இருந்தன. கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தைக் கைப்பற்றிய போது, அதன் பகுதிகளைப் படையாட்சி வன்னியருக்குப் பகுத்துக் கொடுத்தான் என்று மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுகின்றது. இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்திலே (1236–1271) இராசரட்டை, மாயரட்டை, உறுகுணை ஆகிய முப்பெரும் பிரிவுகளையுஞ் சேர்ந்த வன்னிபற்றிச் சூளவம்சம் குறிப்பிடுகின்றது. வன்னிகள் பதினெட்டென்பது சிங்கள நூல்களின் மரபாகும். இம் மரபும் தென்னிந்தியாவிலே நிலவிய ஐதிகம் ஒன்றின் அடிப்படையிலே தோன்றியவொன்றாகும். வன்னிகளை மகாவன்னி, சிரிவன்னி என வகுத்துக் கூறும் முறையொன்றும் சிங்கள இலக்கிய மரபிலுண்டு.

மத்தியகால இலங்கையிலே ஏக காலத்தில் நிலைபெற்ற யாழ்ப்பாணம், கோட்டை கண்டி ஆகிய மூன்று இராச்சியங்களிலும் வன்னிமைகள் அடங்கியிருந்தன. அவை பொதுவாகவே கரையோரப் பகுதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான இராட்சியங்களின் எல்லைப்புறங்களிலும் அமைந்திருந்தன. அவை அடர்த்தியான காடுகளினாலே சூழப்பட்டிருந்தமையினாலும், பிரதான இராச்சியங்களின் தலைநகரங்களுக்கு மிக்க தூரத்திலே காணப்பட்டதாலும், வன்னியர்மீது ஆதிக்கஞ்செலுத்திக் கொள்வது அரசரைப் பொறுத்தவரையிலே மிகுந்த சிரமமாயிருந்தது. முடி மன்னருக்கும், வன்னியருக்கும் இடையிலான தொடர்புகள் காலப்போக்கிலே வரையறையான சம்பிரதாயங்களினாலும், மரபுகளினாலும் பிணிக்கப்பட்டிருந்தன. அரசனுடைய ஆதிக்கத்தினாலும், அனுமதியினாலும், வன்னியர் அதிகாரம் பெற்றனர் என்ற கோட்பாடு அரண்மனைகளிலே வற்புறுத்தப்பட்டது. இதனை வன்னியர்கள் சம்பிரதாயபூர்வமாக மட்டுமே ஒப்புக்கொண்டார்கள். முடிமன்னரின் படைவலியும் அதிகாரமும் குன்றிய மானியகாலப்பகுதியில் வன்னியரின் ஆதிக்க வளர்ச்சியினை அரசர்களினாலே கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை, வன்னிப்பிரதேசம் ஒன்றின்மேல் புதிய தலைவன் ஒருவன் அதிகாரம் பெறுமிடத்து அவனுக்குரிய பட்டமும் விருதுகளும் முடியரசனாலே வழங்கப்படுவது வழக்கம். வன்னியர்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலியவற்றையும்,சிறப்புச்சின்னங்களையும் வரிசைகளையும் கொண்டிருந்தார்கள். ஆதிக்கஞ் செலுத்துவதற் கேதுவான படை பலத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள், அவர்களின் ஆட்சியுரிமை தலைமுறை தலைமுறையாகப் பரம்பரை வழியாகச் சென்றது. தமது நாடுகளிலே நிருவாகத்திற்கும் நீதிபரிபாலனத்துக்கும் அவர்களே பொறுப்பாகவிருந்தார்கள்; தமது தலைமையின் கீழமைந்த எல்லா அதிகாரிகளையும் அவர்களே நியமித்தார்கள். வன்னி நாடுகளிலே மக்கள் அரசுக்காற்றவேண்டிய சேவைகளும், இறைகடமைகளும் வன்னியருக்கே செலுத்தப்பட்டன. வன்னியர்கள் பொதுவாக மன்னருக்குரிய அதிகாரங்கள் எல்லாவற்றையுமே கொண்டிருந்தார்கள். எனவேதான் அவர்களைக் குறுநிலமன்னர் என வர்ணிப்பது வழக்கம். அரசர்களைப் போல வன்னியர்கள் அபிஷேகஞ் செய்து முடிசூடிக்கொள்ளவில்லை. வன்னியர்கள் தம் மீது மேலாதிக்கம் பெற்ற அரசனுடைய அரண்மனைக்கு ஆண்டுதோறும் சென்று திறை செலுத்தவேண்டியமை நியதி. சிறப்பான அரசியல் வைபவங்களிலும் அவர்கள் கலந்துகொள்வது வழமை. மேலும் அரசனுக்குத் தேவையேற்படுமிடத்து அல்லது அவனாற் பணிக்கப்படுமிடத்து படையுதவி அளித்தல் வேண்டும். திறையும் மேலாதிக்க உரிமையுமே முடிமன்னருக்கும் குறுநிலமன்னருக்குமிடையிலான உறவுகளிலே முக்கியத்துவம் பெற்றன. தமது மேலாதிக்க உரிமையைப் பலம்பொருந்திய மன்னர் மட்டுமே நிலைநாட்டிக்கொள்ள முடிந்தது. இரண்டாம் பராக்கிரமபாகு வடமத்திய இலங்கையிலும் உறுகுணையிலும் அதிகாரம் பெற்றிருந்த வன்னியர்களிடமிருந்து திறைபெற்றுக் கொள்ள முடிந்தது. அவனுக்குப் பின் ஆறும் பராக்கிரமபாகுவின் (1415-1467) காலம்வரை ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் எந்தப் பிரதேசத்திலேனும் காணப்பட்டவன்னியர் மீது மேலாதிக்கம் செலுத்தவில்லை.

வட இலங்கையிலுள்ள, வன்னிமைகள் யாழ்ப்பாண இராச்சியத்தினுள் அடங்கியிருந்தன. ஆரியச்சக்கரவர்த்திகள் பதின்மூன்றும் நூற்றாண்டிலே பாண்டிநாட்டிலிருந்து படையெடுத்துவந்து சிங்கை நகரிலே இராசதானியமைத்து தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்திய நாட்களில் அவர்களுக்காதரவாயிருந்த பிரதானிகள் பலர் வன்னிநாடுகளின் மேற் படையெடுத்துச்சென்று அங்கிருந்த அதிகாரிகளை அகற்றிவிட்டு தமது ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்களின் ஆட்சியிலே அடங்காப்பற்று வன்னிகளிலே ஒரு புதிய அதிகாரவர்க்கம் தோன்றியது. அது பாண்டிநாட்டுத் தொடர்புடையதாகவும் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதரவினைப் பெற்றதாகவும் விளங்கியது. யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்குள் ஏழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமைகள் பதினேழாம் நூற்றுண்டிலே காணப்பட்டன. பனங்காமம், மேல்பத்து, முள்ளியவளை, கருநாவல்பத்து, கரிக்கட்டு மூலை, தென்னமரவாடி, செட்டிகுளம் என்பவையே அவ்வேழு வன்னிமைகளாகும். பதினுறும் நூற்றுண்டிலே போத்துக்கேயர் யாழ்ப்பாண அரசிடமிருந்து மன்னுரைக் கைப்பற்றுவதற்கு முன் மாதோட்டம் முதலியவிடங்களிலும் வன்னியர் ஆட்சியதிகாரம் பெற்றிருந்தார்கள்.

ஒல்லாந்த தேசாதிபதி பான் கூன்ஸ் என்பவர் 1658 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ம் நாளில் எழுதிய அறிக்கையொன்றிலே வன்னிகளை மேல்வருமாறு வர்ணித்துள்ளார்: "இந் நான்கு மாகாணங்களும் பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாணப்பட்டின இராச்சியம் என்றழைக்கப்பெற்றன. வன்னி என்று அழைக்கப்படும் வன்னியருடைய மாநிலம் இந்த இராச்சியத்திற்குரியதாகும். இது யாழ்ப்பாணப்பட்டினத்து அரசர்களினுலே கைப்பற்றப்பட்டு அவர்களின் மேலாதிக்கத்தின் கீழமைக்கப்பெற்ற பெருநிலப் பகுதியாகும். இந்நிலை போர்த்துக்கேயரினுலும் பேணப்பட்டது. இப்பொழுது யாழ்ப்பாணப்பட்டின மாநிலத்தின் ஒரு பகுதியாகவுள்ளது. எங்கள் ஆட்சியின் கீழ் அது அமைந்துள்ள போதும் அதன்மேல் (எங்கள்) பூரண இறைமை ஏற்படுத்தப்படவில்லை. அதன் எல்லைகள் கடலோரத்திலிருந்து மூன்று அல்லது நான்கு மைல்களுக்கு உட்புறமாகச் செட்டிகுளத்திலே தொடங்கி கொழும்புத்துறைக் கெதிராகவுள்ள கல்முனைவரை நீடித்து அங்கிருந்து கிழக்கு நோக்கித் திருகோணமலைவரை பரந்து பின் அப்பகுதியிலிருந்து மேற்குப்புறமாக கற்பிட்டி, மாதோட்டம், மன்னுர் ஆகிய இடங்கள்வரை செல்கின்றன. இப்பெரிய மாவட்டத்திற் குரியனவாய் திருகோணமலைக்கு மேற்குப்பக்கமாகவுள்ள காடுகளை உள்ளடக்கிய பிரதேசங்கள் மேல்வருவன: ஏறக்குறைய 50 கிராமங்களைக் கொண்ட தென்னமரவாடிப்பற்று, 100 கிராமங்களையுடைய கரிக்கட்டு மூலைப்பற்று, 70 கிராமங்களைக்கொண்ட முள்ளியவளைப்பற்று, 5 கிராமங்களை உள்ளடக்கிய செட்டிகுளப்பற்றின் ஒரு பகுதி. வன்னி மாநிலத்திலே ஆறு மாகாணங்களும் முந்நூறுக்குக் குறையாத கிராமங்களும் உள்ளன. (குடா நாட்டிலுள்ள) நான்கு மாகாணங்களைப்போல யாழ்ப்பாணப் பட்டினத்திற் குரியனவாகிய செட்டிகுளம், பூனெரி, மேற்பற்று என்பவற்றை உள்ளடக்கிய வன்னிப்பிரதேசம் ஏறக்குறைய 80,000 ஜெர்மன் சதுரமைல்கள் சுற்றளவினைக் கொண்டதாகும். அது 42 ஆண்டுகளுக்கு மேலாக பழமையானதும் இறைமையாதிக்கமுடையதுமான அரசவமிசத்தைச் சேர்ந்த விக்கிரக ஆராதனைக்காரனுகிய சங்கிலி என்ற அரசனுலே ஆளப்பட்டது"[4].

### கயிலாய வன்னியன்

யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியிலே வன்னியர் யாழ்ப்பாணத்திற்கு ஆண்டுதோறுஞ் சென்று வரிசைகள் கூடிய காலத்திலே திறைசெலுத்திவிட்டுத் திரும்பிச் செல்வது வழக்கம். போத்துக்கேயரின் படையெடுப்புக்கள் ஏற்பட்ட காலங்களிலே முள்ளியவளை, பனங்காமம், ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வன்னியர்கள் யாழ்ப்பாண அரசருக்குப் படையுதவியளித்தமையோடு தாங்களே நேரிற்சென்று இராச்சியத்தைக் காப்பதற்கான போர்களிலே ஈடுபட்டார்கள். பதினேழாம் நூற்றுண்டின் முதற் காற்பகுதியிலே போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் வன்னிகள் மீது மேலாதிக்கஞ் செலுத்தி வன்னியரிடமிருந்து திறைகளைப்பெற்றுக் கொள்வதில் அக்கறை கொண்டிருந்தார்கள். ஆயினும் வன்னியர்களின் மீது மேலாட்சியினை இலகுவிலே அவர்களால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. வன்னிகளிலே மிகப் பெரியதும் பரந்ததுமான பனங்காமப்பற்றின் அதிபனுன கயிலாயவன்னியன் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கால முடிவிலே 14 வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களாக யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருக்கவில்லை[5]. அவன் தான் செலுத்தவேண்டிய திறைகளையும் போர்த்துக்கேயருக்குச் செலுத்தவில்லை. அடங்காப்பற்று வன்னிகளிலே பதினேழாம் நூற்றாண்டிலே ஆட்சி புரிந்த வன்னியர்களுட் கயிலாயவன்னியனே அதிக பிரபல்யம் வாய்ந்தவனாக விளங்கினான் அவன் அதிகாரத்தின் கீழ் அமைந்திருந்த பனங்காமப்பற்று, அடங்காப்பற்றிலே ஏறக்குறைய அரைவாசிப் பகுதியை உள்ளடக்கியிருந்தது. யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து அதிகாரஞ் செலுத்திய ஐரோப்பிய ஆட்சியாளருக்கு வன்னி நாட்டிலிருந்து கிடைக்க வேண்டிய திறையில் அரைவாசிப்பகுதி பனங்காமப்பற்றிலிருந்தே பெறப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. கயிலாய வன்னியன் மிக பரந்தவொரு பிரதேசத்தை ஐரோப்பியரின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்படாது சுதந்திரமான அரசனொருவனுக்குரிய அதிகாரங்களோடு ஆட்சி புரிந்தமையினாலே அவனை "அரசன்" என்று ஐரோப்பிய அதிகாரிகளும் வரலாற்றாசிரியர்களும் வர்ணித்தார்கள்.

வன்னிப் பிரதேசம் காடடர்ந்திருந்த காரணத்தினாலும் யாழ்ப்பாணத்திலிருந்து குறிப்பிடக்கூடிய தூரத்திலே அமைந்திருந்தமையினாலும், அதனைக் கைப்பற்றி அடக்கிக் கொள்வது கடினமானதாகும். வட இலங்கையிலே ஆட்சிபுரிந்த போர்த்துக்கேயவதிகாரிகளிடமும் ஒல்லாந்தரிடமும் அடங்காப்பற்றைக் கைப்பற்றி அதன்மீது அதிகாரஞ் செலுத்துவதற்குத் தேவையான போதிய படைபலமிருக்கவில்லை. 1658ஆம் ஆண்டில் ஒல்லாந்தரின் ஆட்சி ஏற்பட்ட பின்பும் இதே நிலை காணப்பட்டது. மேலும் இலங்கையின் வேறு பல பகுதிகளிலே ஒல்லாந்தர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையினாலே அடங்காப்பற்று வன்னிகளின் மீது படையெடுத்து நிருவாகப் பொறுப்புக்களை நேரடியாகவே மேற்கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை.

பதினேழாம் நூற்றாண்டின் மூன்றாவது காற்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலைகளும் அடங்காப்பற்று வன்னிகளின் மேல் ஒல்லாந்தர் கடைப்பிடித்த கொள்கையை ஓரளவுக்கேனும் நிர்ணயிக்கக்கூடியன வாயிருந்தன. கண்டி இராச்சியத்தோடு பகைமையேற்பட்டிருந்ததினாலே கண்டியரசனுடைய செல்வாக்கு எந்தளவிலேனும் பரந்து கொள்ளக்கூடிய வகையிலே தாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒல்லாந்தர் விரும்பவில்லை. கண்டியரசனுக்கும் வன்னியர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் நிலவிவந்தன. கயிலாய வன்னியன் கண்டியரசனோடு கடிதத் தொடர்புகளைக் கொண்டிருந்தான். தமது நிலைக்கும் உரிமைகளுக்கும் ஐரோப்பியராலே ஆபத்தேற்படுமிடத்து வன்னியர் கண்டியரசனின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளக் கூடியவொரு நிலை காணப்பட்டது. வன்னியர்கள் கண்டியரசன் பக்கஞ் சேர்ந்து கொள்வதனைத் தடுத்துக் கொள்வது ஒல்லாந்த ஆட்சியாளரின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாயிருந்தது. மேலும், வன்னியர்கள் மூலம் கண்டிராச்சியத்து விவகாரங்களைப்பற்றி தாம் அறிந்து கொள்ள முடியுமென்றும் ஒல்லாந்த அதிகாரிகள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

வன்னிப்பிரதேசத்து நிருவாகப் பொறுப்புக்களை நேரடியாக ஏற்படுத்திக் கொள்வதற்கான தகைமையும் போதிய அதிகாரிகளும் ஒல்லாந்தர் வசம் காணப்படவில்லை. எனவே நிருவாகப் பொறுப்புக்களனைத்தையும் வழமைபோல் வன்னியர் வசம் விடுத்து அவர்கள் மூலமாக யானைகளைத் திறையாகப் பெற்றுக் கொள்வதையே அவர்கள் விரும்பினார்கள். போர்த்துக்கேயரைப் போலன்றி தமது மேலாதிக்க உரிமைகளை நிலைநாட்டுவதிலே ஒல்லாந்த அதிகாரிகள் கூடியகவனஞ் செலுத்தினார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கத்தின் நியமனத்தின் மூலமாகவே வன்னியர்கள் தங்கள் பதவிகளையும் ஆதிக்கவுரிமையினையும் பெற்றார்களென்று கருதப்பட்ட பொழுதிலும் பரம்பரைவழியாக ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும் முறை வன்னியர்களிடையே வழமையாகியது. இதனால் வன்னியரின் பலமானது வலுப்பெற்றுவந்தபொழுது அவ்வழமையை ஒல்லாந்த அதிகாரிகளினாலே மாற்றியமைத்துக்கொள்ள முடியவில்லை. ஏககாலத்திலே பல்வேறு வன்னிகளிலும் ஆதிக்கஞ் செலுத்தியவர்கள் உறவினர்களாயிருந்தனர். சில காலங்களிலே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டுக்கு மேற்பட்ட வன்னிகளின் மீது ஆட்சி செலுத்தினார்கள் ஆதலினாலே யாழ்ப்பாணத்து அதிகாரிகளோடு நகராறு கொள்ளுங் காலங்களிலே வன்னியர்கள் கூட்டாகவும், பொதுவான தலைமையின் கீழும், செயற்படுவது வழக்கமாயிருந்தது. தம்மீது மேலாதிக்கஞ் செலுத்தும் அரசாங்கத்திற்கெதிராக கிளர்ச்சிபுரியுங் காலங்களில் வன்னியர்கள் எல்லோரும் பனங்காமத்து வன்னியனின் தலைமையின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கமாயிருந்தது.

ஒல்லாந்த அரசாங்கம் வன்னியர்களோடு கூட்டாகவும் தனித்தனியாகவும் திறைகள் கடமைகள் ஆகியவற்றைப் பொறுத்து உடன்படிக்கைகளைக் காலாகாலம் ஏற்படுத்திவந்தது. தங்கள் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய இறைகடமைகளையும், சேவைகளையும் வன்னியர்களே பெற்றார்கள். ஊர்காவல், உள்ளூர் நிர்வாகம் முதலிய விடயங்களும் அவர்களின் பொறுப்பாகவேயிருந்தன. அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்ற தானிய வரியின் பெறுமதி மதிப்பிடப் பெற்று அதற்கேற்பவே அவர்களுள் ஒவ்வொருவரும் எத்தனை யானைகளைத் திறையாகக் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. ஆண் யானையொன்றின் பெறுமதி 300 இறைசால் எனவும் பெண்யானையொன்றின் பெறுமதி 250 இறைசால் எனவும் தீர்மானிக்கப் பட்டிருந்தது. இத்தகைய ஏற்பாட்டின்படி ஆறு வன்னிகளின் திறையும் மேல் வருமாறு கணிக்கப்பட்டிருந்தது.[7]

| | | |
|---|---|---|
| பனங்காமம் | — | 16 யானைகள் |
| கரிக்கட்டுமூலை | — | 7 யானைகள் |
| கருநாவல்பத்து | — | 4 யானைகள் |
| தென்னமரவாடி | — | 1 யானை |
| மேல்பத்து | — | 1 யானை |
| முள்ளியவளை | — | 1 யானை |

காலப்போக்கிலே ஒல்லாந்தர் தமக்குப் பெரிதுந் தேவைப்பட்டனவும் வன்னிப்பகுதியிலே கிடைக்கக் கூடியனவுமாகிய வேறு பொருட்களையும் வன்னியர்களிடமிருந்து மேலதிக திறையாகப் பெற்றுக் கொள்ள முற்பட்டார்கள். அவற்றுள் மரமும் மான் தோலும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. யாழ்ப்பாணத்திலே அரசாங்கத்தின் கட்டட வேலைகளுக்கு மரங்கள் பெருமளவிலே தேவைப்பட்டன. வேட்டைத்தளங்களிலே யானைகளைப் பிடித்துப் பிணிப்பதற்கான வார்களைத் தயாரிப்பதற்கு மான்தோல்கள் பயன்பட்டன. ஒல்லாந்த தேசாதிபதியொருவரின் அறிக்கையிலே இவ்விரு பொருட்களின் திறை குறித்துப் பிறப்பிக்கப்பட்ட கட்டளையிலே மேல்வரும் விபரங்கள் உள்ளன.[8]

| வன்னிப்பிரிவு | திறை–மரம் | மான்தோல் |
|---|---|---|
| பனங்காமம் | 25 | 40 |
| கரிக்கட்டுமூலை | 40 | 20 |
| மேல்பத்து | 30 | 20 |
| முள்ளியவளை | 15 | 20 |
| கருநாவல்பத்து | — | 20 |

திறைகளை ஆண்டுதோறும் செலுத்துவதோடு வன்னியர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று வரிசைகள் கூடுங் காலத்திலே ஒல்லாந்த அரசாங்கவதிகாரிகளுக்கு விசுவாசம் தெரிவிக்க வேண்டும். யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பினைத்தேடி வன்னிக்குள் நுழைந்து கொள்ளும் குற்றவாளிகளையும் கொலைகாரரையும் மற்றும் ஊழியம் முதலிய கடமைகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவ்விடங்களிலிருந்து தப்பியோடும் குடியானவர்களையும், அடிமைகளையுங் கைப்பற்றி அதிகாரிகளிடம் ஒப்படைத்துக் கொள்வதும் வன்னியர்களின் பொறுப்பாகவிருந்தது. அடிமையொருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைக் கைப்பற்றி அவனை அவனது எசமானிடத்திலே ஒப்படைக்குமிடத்து வன்னியருக்கு இரண்டு இறைசால் கொடுக்கப்படும். அடிமையொருவனோ வேறு குற்றவாளியொருவனோ வடக்கிலே ஒல்லாந்தரின் நேரடியான ஆட்சியின் கீழமைந்த பிரதேசங்களிலிருந்து வன்னிப்பகுதி களினூடாகக் கண்டியரசனின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பகுதிகளுக்குச் செல்ல நேரிடின் வன்னியர் தமது கவனக்குறைவிற்குப் பொறுப் பேற்றுக் கொண்டு உடையவனுக்கு 50 இறைசால் கொடுத்தல் வேண்டுமென்று ஒல்லாந்த அதிகாரிகளினாலே விதிக்கப்பட்டது. ஒல்லாந்த அதிகாரிகளும் அவர்களின் சேவகர்களும் வன்னியொன்றினூடாகப் பிரயாணஞ் செய்யுமிடத்து அவர்களுக்கு வழியைக் காட்டுவதும் பாதுகாப்பளிப்பதும் அப்பிரதேசத்து வன்னியனாரின் பொறுப்பென்றும் எதிர்பார்க்கப்பட்டது.[9]

ஒல்லாந்த அதிகாரிகள் வன்னியர்களோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் ஒல்லாந்தருக்கே மிகச் சாதகமானவையாகக் காணப்பட்டன. எதுவித செலவும் முயற்சியும் மேற்கொள்ளாது அதிக வருமானத்தைக் கொடுக்கக்கூடிய யானைகளையும் பிற பொருட்களையும் அவர்கள் பெற்றுக் கொள்வதற்கும் தமது தேவைகளுக்கேற்ப வன்னியர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற சாதனங்களாக அவை தென்பட்டன. ஆயினும் நடைமுறையிலே அவற்றைச் சாதனைப் படுத்திக் கொள்வதிலே அதிக சிரமங்கள் ஏற்பட்டன. தங்கள்மீது உடன்படிக்கைகள் சுமத்திய பொறுப்புக்களை இயன்றவரையிலே தவிர்த்துக் கொள்வதற்கு தமது சாதுரியத்தையும் தமக்குச் சாதகமாகவுள்ள எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் தவறவில்லை.

யாழ்ப்பாணத்து ஒல்லாந்த அதிகாரிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே கயிலாய வன்னியன் பொறுப்பேற்றான். 1658 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் வன்னிகளின் மீது தங்கள் மேலாதிக்க உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு ஒல்லாந்தர் முற்பட்டனர். கயிலாய வன்னியனும் மற்றைய வன்னியரும் யாழ்ப்பாணத்து அதிகாரிகளின் ஆணைகளுக்கடங்கவில்லை. மேல்பத்து, கருநாவல்பத்து முதலிய வன்னிகளின் அதிபர்களும் கயிலாய வன்னியனுடைய தலைமையை ஒப்புக்கொண்டனர். ஒல்லாந்தருடைய கட்டளைகளுக்குப் பணிந்து பிற வன்னியர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று திறை செலுத்திய நாட்களிலும், கயிலாய வன்னியன் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அவனைப் பதவியிலிருந்து நீக்கிக் கொள்ள விரும்பியபோதும் தொடக்கத்திலே அவனுக்கெதிராகப் படையெடுக்கமுடியாத நிலையிலிருந்தனர். கண்டிராச்சியத்தோடு 1665க்குப் பின் போரேற்பட்டதும் வன்னியருக்கும் ஒல்லாந்தருக்குமிடையிலான உறவுகளிலே நெருக்கடி நிலையேற்பட்டது. வன்னியர்கள் கண்டியர்களோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியதுடன் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழமைந்த பிரதேசங்களிலும் பகையான செயல்களில் ஈடுபட்டனர்.

தேசாதிபதியின் மகனாகிய இளைய பான் கூன்ஸ் 1671 ஆம் ஆண்டிலே பாணமை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைக், கைப்பற்றியதும் வன்னியரை அடக்குவதற்கான வாய்ப்பினைப் பெற்றான். அவன் தனது படையுடன் முல்லைத்தீவிலிறங்கி அங்கிருந்து வன்னிக்குள் நுழைந்து கயிலாய வன்னியனாரின் இருப்பிடமாகிய ஐயன்பெருமாள் என்ற கிராமத்திலே தங்கினான். வன்னியர்கள் எல்லோரும் அங்கு சென்று பணிந்து அவனிடம் மன்னிப்புக் கோரிச் சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவனுடைய கட்டளைக்குப் பணிந்து எல்லா வன்னியரும் யாழ்ப்பாணத்திற்குப் போனார்கள். கயிலாய வன்னியன் சுகவீனமாயிருந்த காரணத்தைக் காட்டித் தனக்குப் பதிலாகத் தன் உறவினனொருவனை ஆனுப்பியிருந்தான். யாழ்ப்பாணத்திலே திறை,மேலாதிக்கஉரிமை ஆகியன பற்றி வன்னியர்களோடு புதிய உடன்படிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டது. டொன் கஸ்பார் சிதம்பரப்பிள்ளை, டொன் பிலிப்பு நல்லமாப்பாணர், புண்ணிய பிள்ளை உடையார், திரிகைல உடையார் ஆகிய வன்னியர்களே இப்புதிய ஏற்பாட்டிலே பங்கு கொண்டவர்களாவர்.[10]

வன்னியர்களுடன் அமைந்த தொடர்புகளிலே மீண்டும் ஒல்லாந்தருக்குப் பிரச்சனைகள் ஏற்பட்டன. புதிய உடன்படிக்கைகள் ஏற்படுத்தி ஐந்து ஆண்டுகள் கழிவதற்குள் கயிலாய வன்னியன், புண்ணியபிள்ளை உடையார் ஆகியோரின் நடவடிக்கைகள் பற்றி யாழ்ப்பாணத்து அதிகாரிகள் அரசாங்கத்திற்கு முறைப்பாடு செய்ய நேரிட்டது. ஆயினும் 1678 ஆம் ஆண்டிலே கயிலாய வன்னியன் இறந்ததும் வன்னிநாடுகள் உறுதிப்பாடும் பிடிவாதமும் பலமுங் கொண்ட ஒரு பெருந்தலைவனை இழந்தன. ஒல்லாந்தர் தங்கள் மேலாதிக்க நிலையை வன்னிநாடுகள் மீது பலப்படுத்திக் கொள்வதற்குப் புதியவொரு வாய்ப்பினைப் பெற்றனர். இக்காலமளவிலே இலங்கையின் பல பாகங்களிலும் அதிருப்திகளுங் குழப்பங்களும் ஏற்பட்டிருந்தன. ஒல்லாந்தரின் ஆட்சியேற்பட்டிருந்த பகுதிகளிலே அவர்களுக்செதிரான கிளர்ச்சிகளைத் தூண்டுவதிலே கண்டிமன்னன் அக்கறை கொண்டிருந்தான். இத்தகைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதிலே கவனங் கொண்டிருந்த வன்னியர்கள் மீண்டும் கண்டியரசனோடு தொடர்பினை ஏற்படுத்தினார்கள். இவற்றினாலே தமக்கேற்படக் கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வன்னியர்களுக்கெதிராக உரியநேரத்திலே தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதென அரசாங்கம் தீர்மானித்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொம்மாந்தர் அனுப்பிவைத்த படை வன்னிக்குச் சென்று அங்குள்ள தலைவர்களை அடக்கியது. வன்னியர்களோடு தனித்தனியாக உடன்படிக்கைகள் ஏற்பட்டன. வன்னிக்குச் செல்லும் பாதைகளிலே ஆங்காங்கு காவல் நிலையங்களும் அமைக்கப்பட்டன, வன்னியர்கள் மீண்டும் கிளர்ச்சி புரிந்தால் அவர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படுமென்றும் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படுமென்றும் அரசாங்கம் வற்புறுத்தியது.[11] அதற்குப்பின் வன்னியர்கள் வெளிப்படையாக அரசாங்கத்தை எதிர்க்க முற்படவில்லை. எனினும் இருதரப்பினருக்கும் இடையிலான உறவுகளிலே அமைதி ஏற்படவில்லை. வன்னியர்கள் இராசதந்திரத்தினாலும் சாதுரியத்தினாலும் தங்கள்நலவுரிமைகளைப் பேணிப் பாதுகாத்துக்கொள்வதிற் கவனஞ் செலுத்தினார்கள்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலே வன்னியின் எல்லைகளுக்கப்பாலமைந்த பகுதிகளிலே வன்னியர் தங்கள் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. 1690 வரை பூநெரி பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை, மாதோட்டம் ஆகிய பகுதிகள் அதிகாரி என்ற பதவிப்பெயரைக் கொண்டவொரு அதிபனாலே நிருவகிக்கப்பட்டன. அவற்றிலேகுடியானவர்களிடமிருந்துதானிய வரி முதலிய இறைகடமைகளை அரசாங்கம் பெற்றதோடு அங்குள்ள காடுகளிலிருந்தும் பல யானைகள் ஆண்டுதோறும் கொம்பனியின் அரசாங்கத்திற்குக் கிடைத்தன. 1960 இலே அப்பகுதிகளிலே அதிகாரி முறை ஒழிக்கப்பட்டு அப்பிரதேசங்கள் பனங்காமத்து வன்னியரிடம் ஒப்படைக்கப்பட்டன. பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை ஆகியவிரு பகுதிகளும் நல்லமாப்பாண வன்னியனாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பூநெரிப்பகுதி அவனுடைய மகனாகிய நிற்சிங்கநாதராயனாரிடம் கொடுக்கப்பட்டது. மேலும் அவனுக்கு யானை வேட்டைக்களத்தின் மேலான அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டது.[12] வன்னிநாடுகளிற்போல இப்பகுதிகளிலுள்ள இறைகடமைகளையெல்லாம் தாமே பெற்றுக்கொள்வதற்கு வன்னியர் வாய்ப்பினைப்பெற்றார்கள். அதற்குப் பதிலாக இப்பகுதிகளிலே குறிப்பிட்ட தொகை யானைகளைப் பிடித்துக் கொம்பனிஅதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு அவர்கள் உடன்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தரான சுவார்திகுருன் அங்கில்லாத சமயத்திலே வன்னியர்கள் யாழ்ப்பாணத்திலே கொமிஷனர்களாகவும் கடமையாற்றினர்கள் 1690 இல் நல்லமாப்பாணன், நிற்செயசிங்கநாத ராயன், இலங்கநாரண முதலியார் ஆகிய வன்னியர் மூவரும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லுமாறு கொம்மாந்தரினலே உத்தர விடப்பெற்ற பொழுது அங்கு செல்லாது கொழும்புக்குச் சென்று தேசாதிபதியைச் சந்தித்தார்கள்.[13] வன்னியர்களை அதிக சம்பிரதாயபூர்வமான மரியாதைகளோடு தேசாதிபதி வரவேற்று உபசரித்தமையினலே தேசாதிபதிக்கும் யாழ்ப்பாணத்து உயரதிகாரிகளுக்குமிடையிலே பெரும் மனக் கசப்பேற்பட்டது. அதற்குப்பின் அவர்கள் முன்னெரு பொழுதுமில்லாத தற்பெருமையுடனும் சுயநம்பிக்கையுடனும் நடந்துகொள்ள முற்பட்டார்கள். புவிநல்ல மாப்பாணன், சேதுகாவல மாப்பாணன், அம்பலவாணர் ஆகிய வன்னியர் மூவரும் கொழும்புக்குப் போவதற்கு மறுத்தமையினலே அவர்களுக்கும் வன்னியர்களுக்குமிடையே பகைமை யேற்பட்டது. எனவே பதினேழாம் நூற்றாண்டின் முடிவிலே பனங்காமத்து வன்னியரின் அதிகாரமும் செல்வாக்கும் வளர்ச்சியடைந்திருக்கையில் முற்காலத்திற் போல அறு வன்னிகளின் அதிபர்களுக்குமிடையில் ஒற்றுமை காணப்படவில்லை. தென்னமரவாடி, கருநாவல்பத்து, முள்ளியவளை ஆகியவற்றின் வன்னியர்கள் யாழ்ப்பாணத்து அதிகாரிகளுக்குப் பணிவான முறையிலே நடந்துகொண்டார்கள்.

### யானை திறை

யாழ்ப்பாணப்பட்டினத்தைப் பொறுத்த வரையில் யானைகள் மூலமாகவே அரசாங்கத்திற்குக் கூடுதலான வருமானங் கிடைத்தது. வன்னியிலிருந்து 43 யானைகள் ஆண்டுதோறும் கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மாதோட்டம், முசலிபத்து, நானூட்டான் ஆகிய பகுதிகளிலே வாழ்ந்த மக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய தானியவரி, தலைவரி ஆகியவற்றிற்குப் பதிலாக யானைகளைப் பிடித்துக் கொம்பனியின் அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கு இணங்கியிருந்தார்கள். அவர்களிடமிருந்து 29 யானைகளை ஆண்டுதோறும் பெற்றுக்கொள்ளலாம் என ஒல்லாந்த அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர். அத்துடன் 20 அல்லது 25 யானைகளைப் பூநெரிக் காடுகளிலிருந்து பிடித்துக் கொள்ளலாமெனக் கணக்குப் போட்டிருந்தார்கள். எனவே 80 யானைகளையாவது வருடந்தோறும் யாழ்ப்பாணராச்சியத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாமென்று கருதப்பட்டது. ஆயினும் எதிர்பார்த்தளவு தொகையான யானைகளை அவர்களாற் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்தியாவிலே முகலாயப் பேரரசர்களும் பாஹ்மணி சுல்தான்களும் மதுரை, தஞ்சாவூர் போன்ற பகுதிகளின் நாயக்கர்களும் யானைகளை அதிக விலை கொடுத்து வாங்கினர்கள். போர்களிலும் பாரங்களை இழுப்பதற்கும் இந்தியாவிலே யானைகள் பெருமளவிலே பயன்படுத்தப்பட்டன. அரண்மனைகளிலும் ஆலயங்களிலும் மங்கள நிகழ்ச்சிகளுக்கும் அவை அங்கு பயன்படுத்தப்பட்டன. வங்காளம், சோழமண்டலக்கரை ஆகிய பகுதிகளிலிருந்து வணிகர்கள் கொழும்புத்துறைக்கும் காலிக்கும் யானைகளை ஏற்றிச் செல்வதற்கு வருவது வழக்கம். யானையொன்று ஏறக்குறைய 800 இறைசாலுக்கு அரசாங்கத்தாலே விற்கப்பட்டது. வட இலங்கையிலே ஒல்லாந்தருக்குப் பிரதான வருவாய் யானை வர்த்தகத்தின் மூலமாகவே கிடைத்தது.

எதுவிதமான சன்மானமுமின்றி யானைகளைக் கொடுக்க வேண்டியதாலும் வேட்டைத் தளங்களை அமைப்பித்து மிகச் சிரமப்பட்டு யானைகளைப் பிடிக்கவேண்டியிருந்தமையாலும் வன்னியர் குறித்த தொகை யானைகளைப் பிடித்து ஒல்லாந்தருக்குக் கொடுப்பதிலே கவனஞ் செலுத்தவில்லை. 1665 ஆம் ஆண்டிலே வன்னியர்கள் திறையாகக் கொடுக்காத யானைகளின் நிலுவைத்தொகை 80 ஆகும். பதினறு ஆண்டுகளுக்குப்பின்,

1679 இல் அது 300 ஆக அதிகரித்தது. அடுத்த வருடத்திலே வன்னியர் செலுத்த வேண்டிய யானைகளின் தொகை அரசாங் கத்தின் கணக்குப் பொத்தகங்களிலிருந்தும் நீக்கப்பட்டன. எனினும், இக்கடன்களைச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டபொழுதிலும், வன்னியர்கள் பின்னரும் தாம் கொடுக்கவேண்டிய குறிப் பிட்ட தொகை யானைகளைக் கொம்பனியா ரிடம் ஒப்படைக்கவில்லை. 1696 ஆம் ஆண் டிலே வன்னியர்களிடமிருந்து அரசாங்கத் திற்குத் திறையாகக் கிடைக்கவேண்டிய யானைகளின் நிலுவைத் தொகை 70 எனக் கணிக்கப்பட்டது. 1690 இல் பூநெரிப் பகுதி யின்மேல் அதிகாரம் பெற்று யானைவேட் டைத்தளத் தலைவனாக நியமனம் பெற்றி ருந்த நிற்செயசிங்க நாதராயன் 1695–1697 ஆகிய வருடங்களில் ஒருயானை தனையுங் கொம்பனியாரிடம் கொடுக்கவில்லை. அவன் மூலமாக 131 யானைகளை 7 வருடங்களில் அரசாங்கம் இழக்க நேரிட்டதென்று கொம் மாந்தர் சுவார்திகுறான் 1697 ஆம் ஆண் டிலே தான் எழுதிய சுற்றறிக்கையிலே குறிப் பிட்டுள்ளார்.

### பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதிக்குரிய வன்னியர் பற்றிய அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பனங்காமம்: | கயிலாயவன்னியன் | (1) நல்லமாப்பாணன்<br>(2) காசியனுர் | (1) நல்லமாப்பாணன்<br>(2) இலங்கநாரண வன்னிபம் |
| 2. | கரிக்கட்டு மூலை: | புதுநல்லமாப் பாணன் | சேந்தனுர் | புவிநல்ல மாப்பாணன் |
| 3. | மேல்பத்து | பூதுங்கன் உடையார் | குட்டிப்பிள்ளை | புவிநல்ல மாப்பாணன் |
| 4. | முள்ளியவளை: | பூதுங்கன் உடையார் | குட்டிப்பிள்ளை | பெருமைஞர் உடையார் |
| 5. | கருநாவல் பத்து: | திரிகைலை வன்னிபம் | திரிகைலை வன்னிபம் | அம்பலவாணர் |
| 6. | தென்னமர வாடி: | சண்முக உடையார் | செம்பாத்தை உடையார் | சேதுகாவல மாப்பாணன் |

அடிக்குறிப்புகள் :

1. சி. பத்மநாதன்,
   வன்னியர், பேராதனை, 1970, பக்கங்கள் 34—47
2. S. Pathmanathan,
   The kingdom of Jaffna, Colombo, 1978, pp. 126—132
3. மட்டக்களப்பு மான்மியம்
   பதிப்பு F. X. C. நடராசா, கொழும்பு, பக்கம் 93
4. Instructions from The Governor-General and Council of India to The 'Governor of Ceylon 1656—1665
   trans. Sophia Pieters, Colombo, 1908, pp. 85–86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மேலது, பக்கம் 89

6. S. Arasaratnam
'The Vanniar of North Ceylon. A study of Feudal power and Central Authority, 1660—1760,' **The Ceylon Journal of Historical and Social Studies (CJHSS)** Vol. 9. No. 2, July–December 1966, p. 104

7. மேலது, பக்கம் 103

8. Memoir of Rijcklof Van Goens Junr, Governor of Ceylon, 1675—1679 trans. Sophia Pictures, Colombo, 1910, pp. 31—32

9 S. Arasaratnam

**CJHSS**,Vol 9, No. 2, p. 106

10. மேலது, பக்கம் 108

11. மேலது, பக்கம் 7

12. Memoir of Hendrick Zwaardecroon Commandeur of Jaffna patnam, 1697, trans. Sophia Pieters, Colombo, 1911, p. 97

13. மேலது, பக்கம் 7

## கண்ணகி வழிபாடு

சேரன் செங்குட்டுவன் சேரநாட்டிலே பத்தினித் தெய்வமாங் கண்ணகியை வழிபடுவதற்காகச் சிலையெடுத்து மகிழ்ந்தான்; ஈழத்தில் வாழ்ந்த கயவாகு மன்னன் அப்பத்தினி வழிபாட்டை ஈழத்தில் தொடக்கிவைத்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

முள்ளியவளையில் இருக்கும் வற்றாப்பளை அம்மன் ஆலயம், கண்ணகி வழிபாட்டுக்கான முதன்மையான இடமாகும். மதுரையை எரித்தும் சினந் தணியாத கண்ணகி **பத்தாவது** இடமாக வந்து அமர்ந்த இடம் தான் **பத்தாப்பளை** என வழங்கப்பட்டு மருவி இன்று **வற்றாப்பளை** ஆகியது என கர்ணபரம்பரைக் கதை வன்னியில் இன்றும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்டாரவன்னியன் கழகம்"

## —அதன்வரலாறும் சாதனையும்

இரா வரதராஜா
செயலாளர்

"வீரஞ்செறிந்த வன்னிநாடு— இதன் மேன்மையுயரப் பணி செய்வோம்" என்னும் குறிக்கோளுடன் 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது பண்டாரவன்னியன் கழகம். பண்டார வன்னியனது வரலாற்றை மட்டுமன்றிப் புகழ்பூத்த வன்னிமண்ணின் காவலர்களது வரலாறுபற்றியும் வன்னியின் வரலாற்றைப் பற்றியும் ஆராய்ச்சிசெய்வதும் அறிமுகம் செய்வதுமே நோக்கமாகக்கொண்டு இக்கழகம் இயங்கியது.

இக்கழகத்தின் போஷகராக வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் தா. சிவசிதம்பரமும் தலைவராக முல்லைமணி வே. சுப்பிரமணியமும், இணைச்செயலாளர்களாக திருவாளர்கள் இரா. வரதராசா, சவரிமுத்து என்போரும் பொருளாளராக திரு. அ. கா. மகாலிங்கமும் தெரிவுசெய்யப் பட்டனர்.

இதே ஆண்டில் வன்னி மண்ணின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனுக்கு அவன் நினைவுச்சின்னம் அமைந்திருக்கும் கற்சிலைமடுவில் பெருவிழா எடுக்கப்பட்டது. கொட்டும் மழையையும் குமுறும் வானத்தையும் பொருட்படுத்தாது வன்னி மண்ணின் அரும்பெறற் புதல்வர்களும், பாடசாலை மாணவர்களும் எல்லாத் திணைக்களங்களையும் சேர்ந்த உத்தியோகத்தரும் பங்குகொண்டு சிறப்பித்தனர். "பண்டாரவன்னியன் சருக்க வரலாறு" கழகப் போஷகர் தா. சிவசிதம்பரம் அவர்களால் வெளியிடப்பட்டது. 31-10-68இல் இடம்பெற்ற இவ்விழாவின் போது பண்டாரவன்னியன் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து பண்டாரவன்னியன் நினைவுதினமாகிய அக்டோபர் 31ஆம் திகதியில் ஒவ்வோராண்டும் பண்டாரவன்னியன் விழாக்கள் கொண்டாடப்பட்டன. 1969 இல் முல்லைத்தீவிலும், 1970இல் முள்ளியவளையிலும் 1971இல் ஒட்டிசுட்டானிலும் பண்டாரவன்னியன் கழகத்தின் ஆதரவில் விழாக்கள் நடைபெற்றன. இவ்விழாக்களில் அரசியல் பிரமுகர்கள், வரலாற்று அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலர் பங்குகொண்டு சிறப்பித்தனர். ஈழத்தின் எல்லாத் தமிழ்த் தினசரிகளும் சிறப்புமலர் வெளியிட்டுக் கௌரவித்தன. இவ்விழாக்களில் உரை நிகழ்த்தியோர் மேல்வரும் கருத்துக்களை வெளியிட்டனர்.

(1) வன்னிப் பிரதேச வரலாறு பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுசெய்யப்படல் வேண்டும்.

(2) பண்டாரவன்னியன் உருவச்சிலையொன்று கற்சிலைமடு ஒட்டுசுட்டான் சந்தியில் நிறுவப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இலங்கையரசு பண்டாரவன்னிய னுக்கு முத்திரை வெளிட வேண் டும்.

1972ஆம் ஆண்டு பண்டாரவன்னியன் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. வன்னிப் பிரதேசத்திலுள்ள பொதுமன்றங் கள் பண்டாரவன்னியன் விழாவைக் கொண் டாடும்படி அதில் வேண்டுகோள் விடப்பட் டிருந்தது. இவ்வேண்டுகோள் வீண்போக வில்லை. வவுனியா, கிளிநொச்சி, நெடுங் கேணி முதலிய பல்வேறு இடங்களில் பண் டார வன்னியன் விழாக்கள் கொண்டாடப் பட்டன.

1968-இல் 'தினபதி' பண்டாரவன்னி யன் உருவப்படத்தைப் பத்திரிகையில் வெளி யிட்டது. பண்டார வன்னியன் கழகம் 1969-இல் பண்டாரவன்னியன் உருவப்படங் களை அச்சிட்டு விநியோகித்தது.

முல்லைமணியின் 'பண்டார வன்னியன்' வரலாற்று நாடகத்தை இக்கழகம் 1970 இல் நூலுருவில் வெளியிட்டது. இதே நாடகத் தின் இரண்டாம் பதிப்பு 1972-இல் வீரகே சரி பிரசுரமாக வெளியிடப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் பண்டாரவன் னியன் புகழ் பரவத் தொடங்கவே இந்நாட கம் வன்னிப் பிரதேசத்தில் மட்டுமன்றி யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டிபோன்ற பல்வேறு நகரங்களில் மேடை நாடகமாகவும் நாட்டுக்கூத்தாகவும் அரங்கேற்றப்பட்டது. இலங்கை மாணவர் சோவியத் றஸ்யாவில் இந்நாடகத்தை மேடையேற்றினர்.

இரண்டாம் வகுப்புத் தமிழ் நூலில் பண் டார வன்னியனின் கதையும் எட்டாம் வகுப் புத் தமிழில் நாடகத்தின் ஒரு காட்சியும் இடம் பெற்றன.

வன்னி வரலாறு பற்றி பல்கலைக் கழகமட் டத்தில் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. கலாநிதி சி. பத்மநாதன் 'வன்னியர்' என் னும் நூலை வெளியிட்டார். திரு. செ. குண சிங்கம் 'கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். பேராசிரியர் கா. இந்திரபாலா ஆங்கிலத் தில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள காடுகளில் கிடக்கும் அழிபாடுகளையும், கல்வெட்டுக் களையும் நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு களை நடத்துகின்றார்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா — நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா

— பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

கன்னித் தமிழ் நாடாம் — எங்கள்
வன்னித் திரு நாடு — அதனை
அன்னைத் தமிழ் போலே -- எண்ணி
ஆயிரம் பண் பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் வன்னி மன்னனே இறுதி மன்னன்

கவிஞர்
" அகளங்கன் "
(நாகலிங்கம் தர்மராஜா)

1. தேவாரம் பெற்றதிருத் தலங்கள்ரெண்டுஞ்
சேர்ந்துதிகழ் வன்னிவள நாட்டையாண்ட
பூவாரம் பூண்டதிரு மார்பன்வெற்றிப்
புகழ்பூத்த பண்டார வன்னியற்குப்
பாவாரஞ் சூட்டியவன் அரசுசெய்த
பண்பான வன்னியாம் வவுனியாவில்
நாவாரப் புகழ்பாடிச் சிலையைவைக்கும்
நன்னாளாம் இன்னாளே பொன்னாளாகும்.

2. வெள்ளையரை எதிர்த்ததமிழ் இராச்சியங்கள்
வீழ்ந்தபின்னும், விருப்பாய் மானங்காப்போம்
கொள்ளையெனுன் நோயினிலே உயிர்போனாலுங்
கொடுமைமிகு விஷத்தினிலே உயிர்போனாலும்
மெள்ளவரும் முதுமையிலே உயிர்போனாலும்
மேன்மைகள் எல்லாமும் போயேதீரும்
எள்ளவரும் எதிர்காலம் எனப்போரிட்ட
எம்வன்னி மன்னனே இறுதிமன்னன்.

3. முல்லையொடு மருதநிலம் முயங்கிநிற்கும்
முருகன்வாழ் குறிஞ்சியொடு நெய்தல்தானும்
எல்லையென இருமருங்கும் கோணேசரோடு
எழில்மாந்தைக் கேதிஸ்வரம் நிமிர்ந்துநிற்குந்
தொல்லையென வந்தவெள்ளை ஆட்சிதன்னைத்
துரத்திப்போர் புரிந்தவன்னி மன்னனுக்கு
இல்லையொரு இணையென்றே மண்ணில்வாழும்
ஈஎறும்பு இனங்கூடச் சொல்லிநிற்கும்.

4. எண்ணரிய மக்களெல்லாம் பணிந்துபோற்றும்
எழிலான கண்ணகியின் கோயிலுண்டு
தண்ணளிகொள் வன்னியிலே ஒட்டுசுட்டான்
தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயமுமுண்டு
பண்ணிறைந்த மருதமடு மாதாவுண்டு
பலர்கூடி வணங்குகின்ற புதூருமுண்டு
கண்ணிறைந்த கணவர்தமை இழந்துவிட்டாற்
கனற்பாயும் காரிகையர் வாழ்ந்தநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வந்தாரை வரவேற்கும் வன்னிநாட்டில்
வளமெல்லாம் நிறைந்தபல சோலையுண்டு
செந்தா மரையடர்ந்த குளங்களுண்டு
செந்நெல்விளை கின்றபல வயல்களுண்டு
நந்தா விளக்கனைய மனிதருண்டு
நற்கதலி மாபலாக்கள் நிறையவுண்டு
மந்தார நறுந்தெரியல் சூடியெங்கள்
பண்டார வன்னியனார் ஆண்டநாடு.

6. சோலைகளில் மயில்கள்தினம் ஆடிநிற்கும்
சோர்ந்துநிதம் நாரைகளே வாடிநிற்கும்
பாலைகளில் மந்தியினம் கூடிநிற்கும்
பயிர்வயலில் தென்றலிசை பாடிநிற்கும்
ஆலைகளில் நெற்குவியல் கோடிநிற்கும்
அலையடித்துக் கரையில்மணல் மூடிநிற்கும்
சாலைகளில் கல்லெல்லாம் வன்னிமண்ணின்
சரித்திரத்தை அறிவதற்கே தேடிநிற்கும்.

7. மதயானை கரடிபுலி வாழுங்காட்டை
வளமாக்கி நெல்வயலாய் வகுத்துமேலும்
இதமான குளங்கட்டி நீரைத்தேக்கி
எல்லோரும் ஒன்றிணைந்து நெல்விதைத்துப்
பதமான பருவத்தில் களைகள்கட்டிப்
பகலிரவு ஆவலொடு காவல்காத்தெவ்
விதமான விலங்குகட்கும் வெருவிடாமல்
வீரர்கள்தாம் வாழ்கின்ற வன்னிநாடு.

(வேறு)

8. மாவெலாம் குயிலினோசை வயலெலாம் மயிலினோசை
காவெலாம் கரியினோசை கரடிகள் புலியினோசை
ஆவெலாம் கன்றைத்தேடி அலமரு கின்றவோசை
பூவெலாம் வண்டினோசை பொலிகின்ற வன்னிநாடு.

(வேறு)

9. தேவர்க்கும் இனியதேன் பொழிகின்ற நாடு
ஏவர்க்கும் இனியநாடு இரப்பவர்க் கீயும்நாடு
மூவர்க்கும் முதல்வனீன்ற முருகனை வணங்குந்நாடு
யாவர்க்கும் வாழ்வளித்து நலம்பெற வாழ்க! வாழ்க !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவில் வந்த வன்னியனார்!

— இ. விக்னேஸ்வரன் —
வவுனியா

1. வந்தாரை வாழவைக்கும்
வன்னித் திருமண்ணை
சொந்தமாய் ஆண்டுவந்து
சோராப் புகழடைந்து
விந்தைமிகு காவலராய்
விளங்கிச்சுடர் விட்டுநின்று
நந்தமிழர் நெஞ்சினிலே
நன்றாய் நிறைந்துவிட்ட
சிந்தைநிறை பண்டார
சீர்புகழார் வன்னியனார்
எந்தனது கனவில் வந்தார்
ஏறுதனின் நடைபோட்டே !

(வேறு)

2. வந்தமன்னன் தனைநோக்கி
வணக்கத்தைச் சொன்னேனென்
வந்தனத்தைக் கேளாது
வயக்களிறு போலநின்றார்.
எந்தனது வாழ்க்கையிலே
எப்போதும் கண்டதில்லை
எந்தலைவன் முகத்தினிலே
எள்ளுங்கொள்ளும் வெடித்தனவே!

3. " வன்னியரே, நும்மனத்தே
வருங்கோபந் தானென்னே
என்னிடமே சொல்லிடுவீர்
ஏலுமெனில் தீர்த்திடுவேன் "
வன்னியனார் ஓர்தடவை
வடிவாகப் பார்த்தபின்னர்
சொன்னாரே கவலையுடன்
சோர்வடைந்த முகத்துடனே !

4. " அந்நாளில் எச்சிராய்
ஆண்டுவந்தேன் அந்தமண்ணை
எந்நாளிலும் அடங்கா
ஏற்றம்பெறு பற்றென்றேன்.
முந்நாளில் நான் வளர்த்த
முறைப்பெருமை தானெங்கே !
இந்நாளில் வாழ்பவரும்
இதுபற்றி நோவதெங்கே !

(வேறு)

5. எட்டுத் திக்கிலும்
எதிர்த்தே வந்துநின்ற
கெட்ட பகைவர்களின்
கேவலப் படைகள்தன்னை
வெட்டி வீழ்த்தியேயென்
வீரவா ளாலவரின்
கொட்டம் அடக்கிநின்றேன்
குழம்பிடச் செய்து நின்றேன் !

6. நற்றமிழ்ப் புலமைமிக்க
நல்லவர் புலவர்தம்மைச்
சுற்றமாய் எனக்குநேராய்ச்
சூழவே இருத்திக் காத்துக்
கற்றவர் போற்றும் நல்ல
கல்வியின் வளமெல்லாமும்
வற்றிடா வன்னியென்று
வழங்கிடச் செய்துநின்றேன் !

7. அன்று நான் கண்டுவிட்ட
அழகான வன்னியெங்கே ?
இன்றுஅந் நிலத்தைத்தேடும்
இழிவான நிலைதானிங்கே !
என்றுஅது இருந்ததென்று
எதிரிகள் கேட்கும்வண்ணம்
கொன்றுதான் விட்டார் சிலர்தம்
குறிக்கோளில் சுயநலம்கொண்டே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் கொடிக்கீதம்

"முல்லைமணி"

*(1968, 69, 70, 71, 72ஆம் ஆண்டுகளிலே வன்னியின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற பண்டாரவன்னியன் விழாக்களின்போது, வீரவன்னியனின் கொடி ஏற்றி வைக்கப்படும் போது இசைக்கப்பட்ட கொடிக்கீதம்.)*

வீரந் திகழ்கொடி வெஞ்சமர் வாட்கொடி
வெற்றி மணிக் கொடியே
பாரில் உயர் மன்னன் பண்டார வன்னியன்
பண்பு நிறை கொடியே

மங்கள மஞ்சள் நிறத்தினில் வாளுடன்
மாண்பு பெறப் பறக்கும்
செங்கதி ரோனொளி வீசியெம் நாட்டினைச்
செம்மை யுறக் காக்கும் (வீரந் திகழ்கொடி)

வானையளாவிடும் கம்பமதில் உயர்
வன்னிக் கொடி பறக்கும்
சீனத்துப் பட்டொளி வீசியே செந்தமிழ்
வீர இசை பரப்பும் (வீரந் திகழ்கொடி)

மேற்குத் திசைநாட்டின் வெள்ளையர் வந்து
மேவு வணிகஞ் செய்தார்
பார்த்துப் பயந்து நடுங்கியே ஓடும்
மணிக்கொடி வாழியவே (வீரந் திகழ்கொடி)

ஆயிரம் ஆயிரம் வன்னியின் வீரர்
அணியினில் வந்து நின்றே
தாயின் மணிக்கொடி தன்னை வணங்கும்
தனயர்கள் வாழியவே. (வீரந் திகழ்கொடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விரியும் பிரபஞ்சம்'

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம். O. B. E.

**வ**வுனியா போன்ற வறண்ட பிரதேசங்களிலே, முகிலிலா அமாவாசை நள்ளிரவிலே, வானத்திலே ஓர் அற்புதக்காட்சி; அவ்வப்பொழுது, வானில் சோழம் பொரி போன்று நட்சத்திரங்கள் சிதறிக்கிடக்கின்றதை நாம் காண்கிறோம்.

முதற்றோற்றத்திலே இந்த நட்சத்திரங்கள் கிட்டத்தட்ட ஒரு சீராகப் பரம்பியிருக்கின்றன என நாம் முடிவு செய்யக்கூடும். எனினும் வானை உற்றுநோக்கின், அவை அவ்வாறன்று என நாம் எளிதில் கண்டு கொள்ளலாம். ஒருசில நட்சத்திரங்கள் நீங்கலாக, பெரும்பான்மையானவை தட்டைப் பெட்டியொன்றுள் அடக்கப்பட்டிருப்பதாகத் தோன்றும்.

பெருந்தொலையிலுள்ள வான்பொருட்களை ஊனக்கண்கொண்டு நோக்கி, அவற்றின் ஒழுங்கு முறைகள் பற்றி எம்மால் எவ்வித முடிபும் செய்ய இயலாது; ஆனல், இன்று வலுமிக்க தொலைகாட்டிகள் உள்ளன; அவற்றைக்கொண்டு எம்மைச் சூழ்ந்திருக்கும் வெளியில், ஊனக்கண்ணுக் கெட்டாத் தொலையிலுமுள்ள பொருட்களைக் காணவும் புவியிலிருந்து அவ்வவற்றின் வேருக்கங்களை மதிப்பிடவும் முடிகின்றது.

இந்த நூற்றுண்டின் முற்பகுதியிலே, சிறப்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டிலுள்ள வில்சன் மலை வானேக்கு நிலையத்து விற் பன்னர், வலுமிக்க தொலைகாட்டிகளைப் பயன்படுத்தி, எல்லாவகை நட்சத்திரங்களின் பரம்பன் முறையினையும் ஆராயலானுர். இவ்வழி கிடைத்துள்ள செய்திகளைச் சுருக்கிக் கூறிவிடலாம்.

நட்சத்திரங்கள் யாவும் எழுமாறகப் பரம்பியிருக்கிறதின்று எனவும், அவை சுருளியொன்றின் உருவில் கிடக்கின்றன எனவும், எமது சூரியனும் அதை வலம்வரும் கோள்களும் இச்சுருளியின் ஒருமூலையில் கிடக்கின்றன எனவும், இந்த நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்த நட்சத்திரங்கள் இணைபிரியாது கிடக்கின்றன எனவும், காணப்பட்டுள்ளன. வானில் பால்அருவி போன்று கூட்டத்தின் உரு தோற்றுகிறபடியால், அக்கூட்டம் பால் வீதி என அழைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆராய்ச்சியினைத் தொடர்ந்து நடாத்துகையில், எமது வெளியில், எமது சொந்தப் பால்வீதி போன்ற **பால்வீ**திகள் கோடிக்கணக்கில் உள்ளன என்பதும் தெரிய வந்துள்ளது: அல்லாமலும் அப்பால்வீதிகளிலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையும் அப்பால் வீதிகளின் தூரங்களும் வேகங்களும் மதிக்கப்பட்டுள்ளன.

எழுதவோ கற்பனைசெய்யவோ முடியாத அளவிலான மிகமிகப் பெரிய எண்கள் வானியலில் வருகின்றன. இவ்வெண்களை உணர்த்தற் பொருட்டு ஒரு வாய்பாடு :

கோடி என்பதிலிருந்து புறப்படுவோம்

| | |
|---|---|
| ஆயிரங்கோடி | ஒரு வியம் |
| வியம் தர வியம் | இருமை வியம் |
| இருமை வியம் தர இருமை வியம் | நான்மை வியம் |
| நான்மை வியம் தர நான்மை வியம் | எண்மை வியம் |

என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாய்பாட்டின் அடிப்படையில் ஒரு வானியல் வாய்பாடு.

| | |
|---|---|
| நூறுகோடி யறுமை வியம் அணுக்கள் | ஒரு நட்சத்திரம் |
| பத்து வியம் நட்சத் திரங்கள் | ஒரு பால் வீதி |
| பத்துக்கோடி பால் வீதிகள் | பிரபஞ்சம் |

இதிலிருந்து எமது பிரபஞ்சமானது எட்டுணை பிரமாண்டமானது என எம்மால் ஓரளவு புரிந்துகொள்ளலாம்.

மேற்படி சுருளிகள் அல்லது பால் வீதிகள் பற்றி இன்னுமொரு செய்தி. அவற்றின் இடைத்தூரங்கள் அதி வேகத் துடன் அதிகரிக்கு முகமாக இவை வெளி நோக்கிச் செல்லல்வேண்டும் என ஜர்மானிய நாட்டைச் சேர்ந்த கணித நிபுணர் ஜன்ஸ் ரைன் என்பார் 1916 அறிவில், அறிமுறைப் படி காட்டியுள்ளார். ஐன்ஸ்ரைனின் எதிர் கூறல் வில்சன் மலைத் தொலைகாட்டிகளால் மிகவிரைவில், நோக்கன் முறைப்படி மெய்ப் பித்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே, பால் வீதிகளாலான எமது பிரபஞ்சமானது விரிந்துகொண்டே யிருக்கிறது எனப் பகர லாம்.

மேற்படிவிரிவுக்கு ஓர் எல்லை உண்டா? எல்லை இருப்பின், அப்புறம் யாது? இக் கேள்விகளுக்கும் ஐன்ஸ்ரைன் விடை கொடுத் திருக்கிறார். அதாவது, விரிவுக்கு ஓர் எல்லை உண்டு; அதற்குப்பின் பிரபஞ்சம் ஒடுங்கத் தொடங்கும்; ஒடுக்கத்தின் ஈற்றிலே, ஒடுக் கத்தின் போது விடுவிக்கப்படும் சக்தி காரண மாக, ஆருயிர்கள் உட்பட, எல்லாச் சடப் பொருட்களும் சாம்பல்போன்றாகும். பின் வாயுமயமாகும். அடுத்து, மீண்டும் விரிவு தொடங்கும். நட்சத்திரங்களும் பால் வீதி களும் உண்டாகும். மாறிமாறி விரிவும் ஒடுக்கமும் ஓய்வின்றி நிகழும் என்றவாறு. ஒருவிரிவும் ஓர் ஒடுக்கமும் சேர்ந்து பன்னி ரண்டு வியம் ஆண்டு காலம் (12 கற்பம்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வானியல் கூறும் விரியும் பிரபஞ்சம் பற்றி ஓரளவு அறிந்து கொண்டுள்ளோம். அடுத்து இவ்விடயம்பற்றி எமது திருமுறை திருமறைகள் எதனையும் கூறுகின்றனவா? எமது இருடியர்களும் நாயன்மார்களும் நிலை யற்ற தத்துவங்களில் ஈடுபட்டிருக்க மாட் டார்கள் என நாம் கருதக்கூடும். எனினும் சைவம் ஆராயும் அடிப்படை விடயமானது

"நான் எங்கிருந்து வந்தேன், எங்குப் போய்க்கொண்டிருக்கின்றேன்?"

என்பதேயாம். ஆகவே, பிரபஞ்சத்தின் கடந்த, நிகழ், வருங்காலங்கள் இக் கேள்வி யின்பாற்படும், ஆருயிர்கள் பிரபஞ்சத்தின் ஒருகூறு ஆதலின். எனவே சைவநூல்களில் பிரபஞ்சத்தைப்பற்றிச் செய்திகள் இருந் தாக வேண்டும்என நாம் எதிர்பார்க்கலாம். இதோ ஒருசில :

சம்பந்தர் தேவாரம்

'விரிந்தனை, குவிந்தனை, விழுங்குயிர்
உமிழ்ந்தனை திரிந்தனை... '

மாணிக்க வாசகர் திருவண்டப் பகுதி

'தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பேருழியு நீக்கமும் நிலையும்'

திருமூலர் திருமந்திரம்

'விரிந்து குவிந்து விளைந்த இம்மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார் முதற்பூதம்
இரைந் தெழு வாயு விடத்தினில்
ஒடுங்கே'

சிவஞான போதம்

'தோன்றி நின்றொடுங்கும் பிரபஞ்சம்'

சிவஞான சித்தியார்

'தத்துவ மெண் மூன்றுஞ் சென்றுன்
மதத் துவத் தொடுங்கும்
வித்தையி லொடுங்கு மாறுஞ் சிவத்
தினி லொடுங்கு மூன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்ததத் துவமிம் மூன்று மென்பர்க
ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொடுங்குந் தோற்
றமு மிதுபோ லாகும்'

ஒன்றோடொன்று முரண்படா இம் மேற்கோள்களை ஒருசேர்த்துப் பார்க்குமிடத்து, கீழ்வரும் செய்திகள் புலனுகின்றன. பிரபஞ்சத்தினின்று வேறுபடாத (அபேத) நிலையில் சிவம் பாடப்படுகிறது.

சக்தி ரூபமாகப் பிரபஞ்சம் சிவத்தினின்று
தோன்றும்
பிரபஞ்சம் தோற்றம் நிலைபேறு பேரொடுக்
கம் உடையது
பேரொடுக்கத்தின் இறுதியில் பேரூழி
பேரூழியில் சக்தி சிவத்தில் ஒடுங்கும்.

தோற்றம், விரிவு, ஒடுக்கம் ஆகியமூன்றும் மீண்டும் மீண்டும் நிகழும். ஒடுக்கத்தின்போது விழுங்கப்பட்ட உயிரினங்கள் அதற்கடுத்த தோற்றத்தில் சிருஷ்டிக்கப்படும். ஒடுக்கத்தின் இறுதியில் எல்லாம் மயான மயமாக இருக்க, சிவன் சுடலைப் பொடி பூசியாகத் தனித்துநின்று நடனம் புரிகிருன். அவனிலிருந்தே அடுத்த தோற்றம்.

என்ன வியப்பு நவீன விஞ்ஞானத்தின் எல்லையில் சைவமும் விஞ்ஞானமும் முரண்பாடின்றிச் சந்திக்கின்றன.

## நாச்சிமார் வழிபாடு

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், நாச்சிமார் கோவில்கள் ஆங்காங்கு உள்ளன. வன்னிநாட்டை அரசாண்ட வன்னித் தலைவியர் எழுவர் அக்காலத்து ஒல்லாந்தரோடு பெரும்போர் நிகழ்த்தி, தோல்வியுற்றனர். அதனுல் தாம் மாற்ருன் கைப்படலாகாது என்னும் எண்ணத்துடன் நஞ்சுண்டிறந்தனர்.

எனவே தமிழ்மக்கள், அவரை வீரத் தெய்வங்களாக்கி இன்றும் வணங்குகின்றனர். நாச்சிமார் வழிபாடு தோன்றிய வரலாறு இதுவே. இக்கோயில்களிலே வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றுவர். பறையும் முழக்குவர். ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு நாச்சியின் பெயருக்காக முழக்கப்படுகிறதாம்,

தைப்பொங்கல், ஆண்டுப்பிறப்பு முதலிய நன்ருட்களிலே கோவிலின் சுற்ருடலில் உள்ள குடும்பத்தினர் வந்து பொங்குவர். அன்றியும் இடர் நேர்ந்த காலத்து நேர்த்திக் கடன் செய்து அதற்காகவும் பொங்கல் செய்வதுண்டு.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை.
(ஈழத்து வாழ்வும் வளமும் நூலிலிருந்து)

# இலங்கை வேந்தன் இராவணன்

— பேராசிரியர் ஆ. சதாசிவம்
பேராதனைப் பல்கலைக் கழகம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே எத்தகைய உறவு நிலைத்திருந்தது என்பதனை அறிந்துகொள்ள உதவும் நூல் ஆதிகாவியம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் இராமாயணம் ஆகும். ஆதியில் வடமொழியில் வால்மீகி என்னும் முனிவரால் எழுதப்பட்ட ஆரிய இன மக்களின் புகழ்கூறும் இவ் இராமகதை வேறுபட்ட வடிவங்களில் தென்கிழக்காசியாவில் உள்ள பல்வேறு நாடுகளில் பயிலப்பட்டு வருகின்றது. இக் கதையின் மையமாக விளங்குபவர்கள் இராமனும் இராவணனுமாவர். இவ் விருவரும் பண்டைய உலகில் வாழ்ந்த இரு இன மக்களின் தலைவர்கள்.

இந்தியாவையும் இலங்கையையும் மையமாகக்கொண்டு தோன்றிய இராமாயணக் கதை ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு மேலாக புராணகாரர்களின் புனைகதைகளையும் தழுவியதாய் அறத்தைப் போதிக்கும் களஞ்சியமாய் விளங்குகின்றது. அறம் வெல்லும் என்பதே இராமாயணக்கதையின் உயிராகப் படைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் மக்களாற் பெறக்கூடிய பயன்கள் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றுமாகும். மறுவுலகத்துக்கு உரியது நான்காவதாகிய ''வீடு'' அல்லது மோட்சநெறி. இலங்கை வேந்தனாகிய இராவணன் பொருள் இன்பம் ஆகிய இரண்டையும் முழுமையாக அனுபவித்தவன். மூவுலகங்களையும் ஆண்டவன். சிவபக்தன். தன் தவவலிமையினால் சிவனிடமிருந்துபெற்ற வரத்தினால் இந்த உலக ஆட்சியில் கண்ணுங்கருத்துமாயிருந்தான். தன் ஆட்சியை எதிர்த்தோரையெல்லாம் தவிடுபொடியாக்கினான் என இராமாயணங் கூறும். ஈற்றில் இராவணனை எதிர்த்து வெற்றி பெற்றவன், முப்பொருளில் முதலாவதாகிய அறத்தை இவ்வுலகில் நிலை நாட்டுதற்கென்றே வட இந்திய சத்திரிய வமிசத்திற் பிறந்த இராமன். அவனை ''அறத்தின் அண்ணல்'' எனக் காவியகாரர் புகழுவர். எனவே அறத்துக்கும் மறத்துக்கும் இடையே ஏற்பட்ட போராட்டமே இராம இராவண யுத்தம்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ நாயன்மார்களாகிய ஞானசம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் பண்டைய சிவபக்தனாகிய இலங்கைவேந்தன் இராவணனை முந்நூறுக்கு மேற்பட்ட பாடல்களிற் புகழ்ந்து கூறியுள்ளனர். ஞானசம்பந்தர் பின்வருஞ் சொற்றொடர்களில் இராவணன் பற்றி விளக்குகிறார்:

''ஏழ்கடல்சூழ் இலங்கை அரையன், எரியார் வேற் கடற்றானை இலங்கைக்கோன்,

ஏவும்படை வேந்தன், இராவணன், இலங்கை இராவணன், இலங்கைக்கிறைவன், இலங்கைக் குரிசில், இலங்கைக் குலக்கோன் இலங்கை மன்னுவாள் அவுணர்கோன், இலங்கையர் மன்னனுகி எழில்பெற்ற இராவணன், இலங்கைமன்னன், கடற்றுறை இலங்கை மன்னன், தென்னிலங்கைக் கிறைவன், தென்னிலங்கையர் வேந்தன், மயங்குமாயம் வல்லராகி வானினேடு நீரும் இயங்குவோருக் கிறைவனுய இராவணன், தேசுகுன்ருத் தெண்ணீரிலங்கைக் கோமான், பரக்கும் தொல்சீர்த் தேவர்கள் சேனைப் பௌவத்தைத் துரக்குஞ் செந்தீப் போலமர் செய்யுந் தொழில்மேவும் அரக்கன், அடல் வந்த வானவரை யழித்துலகு தெழித்துழலும் அரக்கர் கோமான், இமையவர் அஞ்சியோட எதிர்வாரவா தம்மையின்றி யமைதரு வல்லரக்கன், இலங்கியமேனி இராவணனே''

ஞானசம்பந்தர் கூற்றின்படி இராவணன் வாழ்ந்த நாடு நமது நாடாகிய ஏழ்கடல் சூழ் இலங்கையே என்பதும் அவன் பெரிய கடற்படையைக் கொண்டிருந்தான் என்பதும் தெரியவருகிறது. இலங்கை என்பதன் பொருள் இலங்குதல்—விளங்குதல் அதாவது கடல்நடுவே ஒளிவிட்டுப் பிரகாசிப்ப தென்பதாகும். இராவணன் தேவர்கள் என வருணிக்கப்படும் ஆரிய இனத்தவரை எதிர்த்ததால் அவர்தம் காவியங்களிலும் புராணங்களிலும் 'அரக்கன்' என்றும் 'இராட்சதன்' என்றும் 'அவுணன்' என்றும் கூறப்படுகிருன். ஞானசம்பந்தரும் இராவணனை ''அரக்கர்க்கிறைவன், அரக்கர்கோமான், அரக்கர்கோன், அரக்கர்விறல் வேந்தன், அவுணர்கோன்,இலங்கையரக்கர் தமக்கிறை, பரந்தோங்கு பல்புகழ் சேர் அரக்கர்கோன், வல்லரக்கர் விறல்வேந்தன், அடல்வந்த வானவரை யழித்துலகு தெழித்துழலும் அரக்கர் கோமான் என வருணிக்கிருர்.

''அரக்கர்'' என்போர் யாவர் என்பது வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த வினவாகும். ஆரிய புராணநூல்களின்படி தேவர்களாகிய ஆரிய பரம்பரையினரின் பகையாளிகள் அரக்கர்; அவுணர், இராட்சதர் என்ற சொற்களும் ஒரே பொருளன. ஆரியர் இந்தியாவுக்குள் புகுந்து தம் ஆட்சியைப் பரப்ப முற்பட்ட காலத்தில் மொகெஞ்சதரோ, கரப்பா முதலிய நகரங்களில் வாழ்ந்த பண்டைய மக்கள் உட்பட இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்துவந்த பூர்வீகக்குடிகளே அரக்கர், அவுணர், இராட்சதர் எனக் கூறப்படுகிற்றனர் என்பது வரலாற்றுசிரியர் கருத்து. அதர்வவேதத்திற் கூறப்படும் மந்திரம், தந்திரம், மாயம் நிறைந்த மக்களாக வருணிக்கப்படும் பூர்வீகக் குடிகளே இவர்கள். ''திராவிடர்''என ஆரிய நூலார் கூறும் தமிழர்களும் (தமிழ்> தெமிழ> திரமிழ> திரவிட) ''ஒஸ்ரோலொயிட்'' (Australoid) என அழைக்கப்படும் ஒருவித மஞ்சள் நிறமுடைய இனமக்களுமாவர். பின்னவர் சிறுபான்மையினரானமையின், காலப் போக்கில் மிகப்பெரும்பான்மையினராக இந்தியாமுழுவதிலும் வாழ்ந்த தமிழின மக்களின் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டுத் தம் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்க முடியாது தமிழினத்துடன் ஒன்றுபடலாயினர். இவர்கள் பேசிவந்த ''முண்டா'' எனப்படும் மொழியும் அழிந்தொழிந்தது. ஆரியரின் தலைமையை ஏற்றுக்கொண்ட பண்டைய தமிழின மக்களுள் ஒரு பகுதியினர் ''பிராகிருதம்'' என்னும் கலப்புமொழி பேசும் மக்களாக மாறி வட இந்தியா முழுவதிலும் இன்று பரந்து வாழ்கின்றனர் என்பது சுனித குமார் சட்டர்யி போன்ற பேரறிஞர் கருத்தாகும்.

இலங்கையிலே ஆரிய வமிசத்தினராகிய விசயனும் அவனுடைய தோழர் எழுநூறு பேரும் வந்து குடியேறிய கி. மு. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் பற்றிப் பேராசிரியர் கே. எம். டி. சில்வா எழுதிய இலங்கையின் வரலாறு என்னும் நூல் (பக். 6) கூறுவதாவது. ''மத்திய இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்புக்கூடு முதலிய புதை பொருளாய்வின் படி பலாங்கொடை மனிதன் என வருணிக் கப்படுபவனே இலங்கையின் ஆதிமனிதன். இவனுடைய வழித்தோன்றல்களே வேடர் என அழைக்கப்படுபவர். இன்று இலங்கையில் வாழும் சிங்கள தமிழ் மக்களே தோற்றத் தளவில் பண்டைய பலாங்கொடை மனி தனின் பண்புகளைக் கொண்டுள்ளனர்'' எனக் கருதலாம். பலாங்கொடை மனிதன் 'ஒஸ்ரோலொயிட்' (Austroloid) இன மக்க ளின் பண்புகளுள் பெரும்பாலான வற்றைக் கொண்டுள்ளான் (பக் 7) என மேலும் அவர் கூறுவர். இது உண்மையாயின் இயக்கர், நாகர் முதலிய பூர்வீகக் குடிகள் பண்டைய தமிழ் மொழியைப் பேசுபவர்களாக இருந் திருக்க வேண்டும். திருக்கேதீச்சரம் நயினை முதலிய கோயில்களில் நாக வணக்கம் பிர சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதே வணக்கமுறை மொகெஞ்சதரோ கரப்பாவிலும் காணப்பட்டுள்ளது. வரலாற் றுப் பேராசிரியர் எல்லாவலை தாம் எழுதிய 'பண்டைய இலங்கையின் சமூக வரலாறு' என்னும் நூலில் இலங்கை ஆரிய மயமாக் கப்படுவதற்கு முற்பட்ட பூர்வீக இலங் கையில் லிங்க வழிபாடும் சைவ சமயமும் நிலை பெற்றிருந்தன வென்றும், அக்காலச் சமூகநிலை இந்தியாவிற் போலவே காணப் பட்டது என்றும் (பக். 161) கூறுவர். இக் கூற்றுக்களின் அடிப்படையில் இராவணனது வரலாற்றை ஆராயின் உண்மை தெளிவா கும்.

இராவணன் கரு நிறமுடையவன். இரா வண்ணன் என்னும் அவன் பெயரும் இராப் பொழுதின் வண்ணத்தை உடையவன் எனப் பொருள்படும். ஞானசம்பந்தரும் 'இராவ ணன்', 'இரவமரும் நிறம் பெற்றுடைய இலங்கைக்கிறை' 'இருள் நிறைந்தவன்' 'இருளைப் புரையும் நிறத்தில் அரக்கன்' 'கடலென நிறம்' 'கறுத்த அரக்கன்' 'கார் கொள் மேனியவ்வரக்கன்' 'காரரக்கன்' 'நீலமாமணி நிறத்தரக்கன்', மழை முகில் போலு மேனி அரக்கன்' 'மையார் நிற மேனியரக்கர் தங்கோன்' எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இரா, இரவு என்ற இரு அடிச்சொற்களும் தமிழில் உண்டென்ப தைத் தொல்காப்பியங் காட்டும். வண்ணம் என்பது நிறத்தைச் சுட்டும் பண்டைய சொல். இக்காரணத்தாலேயே அவனது பெயரும் இரவமரும் நிறம், இருள் நிறம், இருளைப்புரையும் நிறம் என ஞானசம்பந் தர் பாடல்களில் காரணப் பெயர் என்பது அழகாக வற்புறுத்தப் பட்டுள்ளது. இரா+ வண்ணன், இராவணன் என மருவிற்று. இராவணன் என்ற அழகிய தமிழ்ப் பெயர் போலவே அவன் மனைவி வண்டோதரி மண்டோதரி என்னும் பெயர்களினுல் அழைக்கப் பெறும் பெண்ணின் பெயருமா கும். பிற்காலத்தில் 'மண்டோதரி' என அழைக்கப்படும் இராவணன் மனைவியின் பெயர் 'வண்டோதரி' என்பது 'ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப் பேரருளின்பமளித்த பெருந்துறை மேய பிரான்' என்னும் மணிவாசகரின் குயிற்பத்துப் பாடலால் தெரியவருகிறது. ஆனல் ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஞான சம்பந்தர் பாடலில் 'வண்டமரோதி' என் பதே 'வண்டோதரி' என்பதன் உண்மை வடிவம் என்பது 'வண்டமரோதி மடந்தை பேணி. அஞ்செழுத்துமே (280) என்னும் அடியிலிருந்து தெரியவருகிறது. வண்டு+ அமர்+ஓதி என்னும் மூன்று சொற்களால் ஆய அழகிய தமிழ்ப் பெயர் காலப் போக் கில் வண்டமரோதி> வண்டோதரி> மண் டோதரி என மாற்றம் பெற்றுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. ஞானசம்பந்தர் பாடல்களின்றேல் இலங்கை வேந்தன் இரா வணனதும் அவன் மனைவி வண்டமரோதி யினதும் பெயர்கள் தமிழ்ப் பெயர் வடிவம் என்பதையும் அவை காரணப் பெயர்கள் என்பதையும் அறிவது முடியாது.

இராவணனும் அவன் மனைவி வண்டம ரோதியும் சிறந்த சிவபத்தர்கள். இதனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன் மார்கள் இலங்கை வேந்தனையும் அவன் மனைவியையும் பாடிப் புகழ்ந்துள்ளனர். இராவணன் சிவன் வாழும் கயிலாய மலை யைத் தூக்க முயன்றபோது இறைவன் பெருவிரலால் நசுக்கவே, இராவணன் தன் அகந்தையை நினைத்து யாழ் வாசிக்க இறை வன் தன் பாதாரவிந்தங்களின் கீழ் அவனை வைத்து உலகோருக்குக் காட்டினர் என்பது சைவ மரபு, இக்கருத்தினை ஞான சம்பந் தரும் 'மலையான்மகள் அஞ்ச வரையெடுத்த வலியரக்கன் நெரியச் சரணுகிர் வைத்தவன்' 'இராவணன் தன் முழுவலியடக்கிய முதல் வன்' 'இலங்கைக்கிறை வாட அடர்த்து' 'இலங்கைக் கோன் நாமம் இறுத்தானை' 'இலங்கையர் கோன் இடர்படச் சிரித்தவன், 'இலங்கை வாழ் வேந்தை நாசஞ் செய்த 'நங்கள் பெருமான்', 'கயிலை யெடுத்தான் வலி செற்றவன்' 'இலங்கையர் தலைவனை மண்பட வரைதனில் அடர்செய்தபைங்கழல், என்றெல்லாம் இராவணனின் அகந்தையை அடக்கிய இறைவனின் பெருமையைப் பாடு வர். இராவணன் சிவபத்தன், திருநீறு அணிபவன், அஞ்செழுத்து ஓதுபவன் என்ப தை 'இராவணன் மேலதுநீறு' 'இறைபயிலும் இராவணன்' 'அஞ்செழுத்துரைக்க அருளி னன்... நெடுவாள்' பண்டை இராவணன் பாடியுய்ந்தன அஞ்செழுத்துமே' முதலிய அடிகளில் ஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார். 'வண்டமரோதி மடந்தை பேணின...அஞ் செழுத்துமே' என இராவணன் மனைவியும் அஞ்செழுத்து ஓதி உய்ந்தமை குறிப்பிடப் பட்டுள்ளது.

இசைக்கருவிகளுள் இலங்கையின் வரலாற் றோடு பின்னிப் பிணைந்திருப்பது யாழ். இரா வணன் கையில் வைத்திருந்து இசை பாடிய தும் இவ் யாழே. அவன் பாடிய பாடலுக் கிரங்கி இறைவன் அருள் புரிந்து ஒரு வாள் கொடுத்தருளினார் என ஞான சம்பந்தர் கூறுவர். 'ஏழிசை யாழ இராவணனே' 'நீடியாழ் பாடவே... கருக்குவாள் அருள் செய்தான்' 'அவன் பாடல் பாடலும் கொடுத்தனர் கொற்றவாள்' 'இசை கேட் டிரங்கி ஒருவாள் நல்கி', 'கைந் நரம்பாற் பாடியபாடல், பண்ணூர்தரு பாடலுகந்தவர்' 'பண்ணின் பாடல் கைந் நரம்பாற் பாடிய பாடலைக் கேட்டு அண்ணலாய் அருள் செய்த அடிகள்', 'அவன்தன் நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்த தென்னே' 'அவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணன். இவ்வாறு ஏழிசைப் பண்ணூர் தரு பாடல் களினால் யாழ் வாசித்து இறைவனை மகிழ் வித்த இலங்கை வேந்தன் இராவணன் வாழ்ந்த காலம், அவனது தலைநகர் என்பன பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின் றன.

இராவணன் சீதையைச் சிறைவைத்த இடம் நுவரெலியாவுக்கு அண்மையிலுள்ள அசோக வனமாகும். இராவணன் மலை என்ற பெயருடன் ஒருமலை மகாவலி ஆற் றுக்கருகே கொத்மலைப் பிரதேசத்தில் இன் றும் உள்ளது. 'இராவண கொட்' என அது சிங்கள மொழியில் அழைக்கப்படுகி றது. வரலாற்றாசிரியர் கூறும் இலங்கையின் மிகப் பழைய மனிதர் வாழ்ந்த இடங்களி லொன்று சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள பலாங்கொடை என்பதாகும். எனவே புதை பொருள் ஆய்வு ஆரம்ப நிலையிலுள்ள இக்காலத்தில் இராவணனின் தலைநகர் நுவ ரெலியாவுக்கு மிக அண்மையிலுள்ள இடம் என்று கூறுவதைத் தவிரத் திட்டவட்ட மாகக் குறிப்பிடுதல் முடியாத காரியமாகும். ஆயினும் சமய புராணகாரர் திரிகோண மலையிலுள்ள சிவனை இராவணனின் இட்ட தெய்வமென்றும் அவன் அக்கோயிலைப் பல முறை தரிசித்தான் என்றுங் கூறுவர். இரா வணன் வழிபட்ட கோயில் இப்போ கட லுள் அமிழ்ந்திருக்கின்றதென்றும் அதன ருகே பிற்காலத்திற் கட்டப்பட்ட கோயிலே இன்றுள்ள கோயில் என்றும் கூறுவர். சிவனே பண்டைத் தமிழரின் பழம் பெருங் கடவுள். இலிங்க வடிவமே சிவனின் குறி யீடு. மொகெஞ்சதரோவிலுள்ள முத்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் ஆசனத்தில் வீற்றிருக்குங் கடவுளும் அவரைச் சுற்றி நான்கு மிருகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கடவுளே 'பசுபதி' என அழைக்கப்படும் சிவன் என சேர் யோன் மார்சல் விளக்கந்தருவர். இதன் காலம் ஏறக்குறைய கி. மு. 2700 வரையாகும். இதே காலத்தில் பண்டுதமிழர் குடியேறி வாழ்ந்ததாகக் கருதப்படும் பாரசீகக் குடாவிற் றோன்றி யழிந்த சுமேரிய நாட்டிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சிவ (Siba) என்ற கடவுட் பெயர் காணப்படுகின்றது. இச்சொல்லின் பொருள் எல்லா உயிர்களினதும் இறைவன் (Lord of oll beings) எனக் கூறப்பட்டுள்ளது. எனவே பண்டைய உலகில் சிவ வணக்கம் மிகப் பரந்திருந்ததென்பதும் இலங்கையிலுள்ள மூன்று பெரிய சிவத் தலங்களாகிய கோணேசுவரம், திருக்கேதீசுவரம், முன்னேசுவரம் ஆகியன இலங்கை வேந்தன் இராவணனால் வணங்கப்பட்டதெனப் பரம்பரை வரலாறு கூறுவதில் யாதொரு வியப்புமில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கன.

சிவபத்தன் இராவணன் வாழ்ந்த காலம் பற்றிப் பலவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. 'இலங்காவதார சூத்திரம்' என்னும் பௌத்த நூல் ஒன்றில் இராவணன் பெயர் வருகிறது. அதில் அவன் பெரும் தவவொழுக்கம் பூண்டவனாய் அறத்தில் பெரு விருப்புள்ளவனாய்ப் புத்தபிரானோடு உரையாடுகிறான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தபிரானின் காலம் கி. மு. ஆறும் நூற்றாண்டு. வட இந்தியாவில் சத்திரிய வமிசத்தினரின் செல்வாக்கு மிக ஓங்கியிருந்த காலம் அக்காலம். வடமொழியில் இராமாயணத்தை முதன் முதலில் எழுதிய வால்மீகி முனிவர் இராமனுடன் சமகாலத்தில் வாழ்ந்தவரென்றும் இராம இராவண யுத்தத்தை நேரில் பார்த்தவரென்றும் அவரே அந் நூலிற் கூறுகிறார். டுலகே என்பவர் வால் மீகி மூல ராமாயணத்தை கி. மு. 300 அளவில் செய்திருக்க வேண்டுமென்று கூறுகிறார். வேறுபலர் இராமாயண காலம் மிகப் பழையது என்பர். இராமாயணச் செய்திகள் பலவற்றையும் ஒருங்கு சேர ஆராயுமிடத்து இராம-இராவண யுத்தம் நடந்த காலம் கி மு. 600 வரை அல்லது அதற்கு முற்பட்ட காலம் எனவே கூறுதல் பொருந்தும்.

இலங்கை வேந்தன் இராவணன் பற்றி எழுதிய காவியஞ் செய்த புலவர்களாகிய வால்மீகி கம்பன், துளசி ஆகியோர் அவனது குணதிசயங்களைப் படைத்துக் காட்டுவதிற் கருத்தூன்றினரே தவிர வரலாற்று நிகழ்ச்சிகளின் உண்மை பொய் பற்றி யாதொரு செய்தியும் தர முற்படவில்லை. சைவ நாயனாராகிய ஞான சம்பந்தர் பாடிய பாடல்களிலிருந்தே இராவணன் (இரா + வண்ணன்) வண்டமரோதி (வண்டு + அமர் + ஓதி) என்னும் தமிழ்ப் பெயர்களின் காரணத்தை அறிய முடிந்தது. இராமாயணம் ஒரு புனைகதை அன்று உண்மையில் நடந்த கதையென்று சமயவாதிகளாலும் புராண இதிகாசகாரராலும் பல்வேறு தாக்குதல்களுக்குட்பட்டு இன்றுள்ள நிலையைப் பெற்றுள்ளது. ஆயினும் இலங்கைவள நாட்டில் இராவணன் பெயர் பல்வேறு இடங்களுடன் பொருத்தப்பட்டு உயிர்த்துடிப்புடையதாய் விளங்குகின்றது. இலங்கையில் வாழ்ந்துவரும் சைவசமயத்தவர்களாகிய பழங்குடித் தமிழ்மக்கள் சிவபத்தனாகிய இராவணனுடைய வரலாற்றை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய முற்பட வேண்டும். இதற்கு இலங்கையின் அகழ்வாய்வுகள், பண்டைய குடிப்பெயர் பற்றிய ஆய்வுகள், மக்கள் குடிபெயர்வுகள் பற்றிய ஆய்வுகள், மக்கள் குடிபெயர்வுகள் என்பன துணையாகக் கொள்ளப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதகம் பொறுக்காப் பாவலர்

— கலாநிதி சி. தில்லைநாதன்
பேராதனைப் பல்கலைக் கழகம்

''பாதகஞ் செய்பவரைக் கண்டால்
—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா— அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா''

என்ற பாடலைப் பாரதியார் பாடியிருக்க மாட்டார் என்றும், அவரது செய்யுளின் சொற்கள் வேறாயிருக்க வேண்டுமென்றும் ஒருவர் சில காலத்துக்குமுன் எழுதியிருந் தார். அதற்கு ஆதாரமாக அவர்,

''இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்
நாண
நன்னயம் செய்துவிடல்''

என்ற குறளினைக் காட்டியிருந்தார். அவ் வாறு கூறிய வள்ளுவர் பரம்பரையிலே தோன்றிய பாரதியார், பாதகஞ் செய்ப வரை மோதிமிதித்து அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு என்று சொல்லியிருக்கமாட் டார் என்பது அன்னாருடைய வாதமாயி ருந்தது. ஆனால் எவ்வேளையிலும் எவரிடத் தும் நாம் அன்பு பாலிப்பது சாத்தியமா குமா?

அயலவன் துன்புறுவதைக்கண்டு ஆனந் தப்படுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வர்மம் பிடித்தவர்கள்; மனிதருட் பதர்கள். பிறர் துன்புற்றபோது, உதவிக்கு முன்வர விரும்பாதவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் ... தப்பார்க்கும் நாம், சுயநலவாதிகள். நமக்கேன் வீண் வம்பும் தொல்லையும்'' என்ற விடைகாணமுடியாத வினாவை எழுப்பிவிட்டு மற்றவர்களுக்குப் பயனாகாத மனிதர்கள் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்வதால் யாருக்கும் பயனில்லை. அதனையே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,

''தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்
டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங்
கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய
வீணன்'' என்கிறார்.

ஒரு பாதகன் இன்னொருவனைச் சாட்டை யால் அடிக்கின்றான் என்று வைத்துக்கொள் வோம். அதைப்பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருப்பது முறையாகுமா? அடிப்பது பாவம் என்று எம்மனம் நினைக்கலாம். அடிப் பவனுக்கு நாம் ஒரு காருண்ய போதனையே புரியலாம். அதையெல்லாம் பொருட்படுத் தாமல் அவன் அடித்தால் நாம் என்ன செய் யமுடியும்? அடிபட்டவன் சுருண்டு விழுந்த பின் நாம் கண்ணீர் விடலாம். ஆனால் அக் கண்ணீரால் என்ன செய்யமுடியும்? அடிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்''

என்ற குறளை நினைத்துக்கொண்டு அமைதியாக இருக்கலாமா? அல்லது,

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

என்பதற்கேற்ப அடிக்கும் கொடியவனுக்கு இனியது செய்ய முடியுமா? ''ஒருகன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் கொடு'' என்றார் யேசுநாதர். இன்னா செய்தாரை ஒறுக்க நன்னயம் செய்யச்சொன்னார் திருவள்ளுவர். அப்படிச்சொல்கையில் அவர்கள் முக்கியமாகக் கருதியது கொடியன செய்வோரைத் திருத்துவதையே. அன்பால் அதைச் செய்யலாம் என்று அவர் கருதினர். பெரியார்சொற் பேணலென்பது அவர் கருத்துப்படி நடப்பதுவே. அன்பாகச் சொன்னாற் கேளாதவர்கள் இருக்கிறார்கள். தண்டியாமல் மன்னித்துவிட்டாற் பின்பு கூடக் கூடப் பாதகஞ் செய்பவர்கள் இருக்கிறார்கள், அவர்களை எப்படித்திருத்துவது? அவர்கள்செய்யும் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டிருப்பதால் நாம் அவரையும் கெடவிட்டு ஏனைய மக்களுக்கும் துன்பத்தை வரவழைக்கிறோம் அல்லவா?

சொன்னாலுங் கேட்காமற் சாட்டை கொண்டு அடிப்பவனை என்ன செய்யலாம்? பயமுறுத்தலாம், அதிலும் பயனில்லையென்று கண்டாற் சாட்டையைப் பறித்து அவனுக்கு நன்கு கொடுக்கலாம். அது முறைகெட்ட செயலாகாது. அதனால் நாம் அடிபடுபவனையும் காப்பாற்றி அடிப்பவனையும் திருத்த முடியலாம். எதற்கும் நாம் பேசியும் கண்ணீர்விட்டும் பயனில்லை. நெஞ்சிலுற்றது செய்கையில் நாட்டுதல் வேண்டும். அதுவே மறக்குல மாட்சி என்றார் பாரதிதாசனும்.

''கோழியும் தன் குஞ்சுதனைக்
கொல்லவரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவி''—

என்றார் பாரதிதாசன். அப்படிப்பட்ட புவியில் நம்மையோ அல்லது நம்மவரையோ யாரும் அநியாயமாய்த் துன்புறுத்தும் போது நாம் சூழ்ந்தெதிர்ப்பது தவறா? அவ்வண்ணம் எதிர்ப்பதை வள்ளுவர் விரும்பவில்லையா? பாதகஞ்செய்பவரை மோதித் தண்டிப்பதை வள்ளுவர் வெறுத்தாரா? என்ற கேள்விகள் எழுகின்றன. அதற்கு வள்ளுவரே விடைபகர்ந்திருக்கிறார்.

''சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோற்
கொல்லப் பயன்படும் கீழ்'' என்றார்

திருவள்ளுவர். ஆகவே, பாரதியார், வள்ளுவர் கருத்துக்கு முரணாக நல்லதல்லாததைக் கூறிவிட்டார் என்பதற்கில்லை.

கண்முன்னே அநியாயம் நடப்பதைக் கண்டும் நாம் ஏதும் செய்யாமற் சோம்பியிருப்போமாயின் நாம் கோழைகளே. பாரதிதாசன் 'புரட்சிக் கவி' யிலே

''............ தேச மக்கள்
கொடிதென்றார் கொடுவாளைப் பறித்தார்—அந்தக்
கொலையாளர் உயிர்தப்ப ஓடலானார்.''

இங்கு இலட்சியப் பண்புமிக்க தேசமக்களைக் காண்கிறோம். பாரதிதாசனின் இலட்சியம் நிறைவேறுகிறது. தேச மக்கள் நெஞ்சிலுற்றதைச் செய்கையில் நாட்டும் மறக்குல மாட்சிமையுடையவராய் இருக்கின்றார்கள். அவர்கள் பொறுத்தது போதுமெனப் பொங்கி எழுகின்றார்கள். அதனால் அவர்கள் இலட்சியம் நிறைவேறுகிறது. நாடும் நலனடைகிறது. அவர்கள் கொடுவாளைப் பறிக்காதிருந்தாற் கொடுமையும் துன்பமும் அவரை வாட்டியிருக்கும்.

பாதகங்கள் பல செய்யப்பட்டபோதிலும் நாம் பயந்து கிடக்கிறோம். அதனால், நாம் உரிமையிழந்து அடிமைகளாய்க் கீழ்நிலையடைந்து அல்லற் படுகிறோம். முக்கியமாக நமது பெண்கள் ஊமைகளாய், பயந்தாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிகளாய், எண்ணியதைச்சொல்லவோ செய்யவோ முடியாமல் வருந்தி மறிகிறுர் கள். அதனுல் அவர்களது வாழ்வு பல வேளை களிற் பாழாகிறது. அவர்களது ஆசைகள் மண்ணுகின்றன. நினைவுக் கோட்டைகள் பொடியாக்கப்படுகின்றன. ஆனுற் பாரதி தாசன் படைத்துக்காட்டும் எழுச்சியுற்ற பெண் என்ன செய்கிறுள்? தன் விருப்பத் துக்கு மாருகத் தன்னைத் திருமணம் செய்ய வரும் மனிதனை அவள் எதிர்த்துத்தள்ளும் விதம் நமக்குப் புத்து ணர்ச்சியையும் புத்து லகு படைக்கும் வீரத்தையும் தரவல்லது.

''அருகவளும் நெருங்கி வந்தாள்,
தன்மேல் வைத்த
ஆர்வந்தான் என நினைத்தான்,
இமைக்கு முன்னே
ஒருகையில் உடைவாளும் இடது கையில்
ஓடிப்போ என்னுமொரு குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி விழித்துச்
சொல்வாள்,
புனிதத்தால் என்காதல் பிறன்மேலென்று
பரிந்துரைத்தேன் மேற்சென்ருய்
தெளிந்த காதல்
படைதிரண்டு வந்தாலும்
சலியா தென்ருள்''

பரிந்துரைத்தும் பயனற்றுப் போகவே அவள் பொங்கி விழித்துரைக்கிருள். பொறுத்தி ருந்தால் அல்லது பயந்திருந்தால் அவள் காதலுக்குச் சமாதிகட்டப்பட்டு விடக்கூடும்.

நடிப்புச் சுதேசிகள் பற்றிப் பாரதியார் பாடும்பேது,

''மாதரைக் கற்பழித்து வன்கண்மை
பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே
பேணியிருந்தாரடி''

என்று கேலி செய்வது பாதகஞ் செய்ப வரைப் பார்த்தும் மோதி மிதித்து விடா மற்றமது உயிர் மேற்கொண்ட ஆசையாற் பேதையானவர் மீது அவர் கொண்ட வெறுப்புணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. பாதகஞ் செய்பவரை மோதி மிதித்து முகத் தில் உமிழ்ந்து விடாமல் இருந்த மக்கள் மீது பாரதி கொண்ட வெறுப்பும் ஆத்திர மும் கொஞ்சமல்ல. அது அவர் செய்த 'பாஞ்சாலி சபதத்திலே' மிகத் தெளிவாகப் புலனுகின்றது. திரௌபதி துயிலுரிவதைக் கண்டு விலங்கொத்த இளவரசனை மிதித்துத் தராதலத்திற் போக்கி அவளை அந்தப் புரத் திற் சேராது வெறுமனே 'என்ன கொடு மையிது' என்று பார்த்திருந்த ஊரவரை வீரமில்லாநாய்கள், நெட்டை மரங்கள் என்றெல்லாம் திட்டுகிறுர், அவர்களது புலம் பலைப் பெட்டைப் புலம்பல் எனப் பழித்து இகழ்கிறுர். ஊரவர் தங்கீழ்மை உரைக்குந் தரமாமோ என்கிறுர். பாரதியார் அதைச் சொல்லும் விதம் அவரது கருத்தை நமக்கு நன்கு புலப்படுத்துகிறது.

''நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றுன் வழிநெடுக
மொய்த்தவராய்
என்ன கொடுமையிது வென்று
பார்த்திருந்தார்
ஊரவர்தங் கீழ்மை உரைக்குந்
தரமாமோ
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற்
போக்கியே
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே
சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினுர்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத்
துணையாமோ''

இங்கு ஊர் மக்களைப் பாரதியார் குற்றம் சாட்டுவதும் ஏசி இகழ்வதும் எதற்காக? பாதகஞ் செய்வதனைக்கண்டும் அதைச் செய்தவனை மிதித்துத் தராதலத்திற் போக்காததற்காக.

''எதிரியிடம் தர்மம் இருக்குமட்டும், நமது பக்கம் நியாயம் இருக்குமட்டும், ஆத்ம பலத்தைக்கொண்டு உரிமை நாட்டு வோம், ஆனல் எதிரி, இவர்கள் சொத்தை அஹிம்சாவாதிகள் என்று எண்ணுமல் அர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனன், பீமன், ஹனுமன் முதலிய இதிகாச புருஷர்களைப் போன்ற பலவான்களாகவும் அசகாய சூரர்களாகவும் நம்மவர் இருக்க வேண்டும்.''

என்ற வ. வே. சு. ஐயரின் கூற்றும் அவ தானிக்கத் தக்கது. ஐயரைப் போலவே பாலகங்காதர திலகர்மீது மதிப்புக் கொண்ட பாரதியாரும் வ. வே. சு. ஐயரைப் போன்ற தொரு தீவிரவாதியாக விளங்கி விடுதலைப் போரினைத் தூண்டியமையையும் யாம் மறந்து விடக் கூடாது. பாரதி வழிவந்த பாரதிதாசனும், ''கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்பர்.

பாதகங்களை என்றும் நாம் பொறுத்தி ருந்தாற் கீழ் மக்களாய் அழிந்துபட வேண்டியதுதான். பாதகத்தை எதிர்த்து நல்லதற்காகப் போராடவேண்டியது எமது கடமை. அத்தகைய போராட்டத்தில் இறப் பதையும் சிறப்பாய்க் கருதும் மரபு உண்டு. கொடுமைகள் மேற்கொடுமைகளை யெல் லாம் பொறுத்துக் கொண்டிருப்பவர்கள் தமக்கு மட்டுமன்றித் தமது எதிர்காலச் சந்ததியாருக்கும் பாதகஞ் செய்பவராகி விடலாம். அடைய விரும்பும் முறையான இலட்சியத்தை அன்பு வழியால் அடைய முடியாதெனக்காணும்போது, இலட்சிய வாதிகள் வலிமையைத்தான் பிரயோகிக்கி றார்கள். அதற்குச் சம்மதம் தெரிவிப்பதா யுள்ளது பாரதிதாசனின் இந்தப் பாடல் :

''ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உடயப்ப ராகிவிட்டால்—ஓர்
நொடிக்குள்
ஓடப்ப ருயரப்ப ரெல்லாம் மாறி
ஒப்பப்ப ராய்விடுவா ருணரப்பா நீ''

---

யாதும் ஊரே யாவரும் கேளிர்.
தீதும் நன்றும் பிறர்தர வாரா.
நோதலும் தணிதலும் இவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்வை
இனிதென மகிழ்ந்தும் இலமே முனிவின்
இன்னா தென்றல் அதனிலும் இலமே.

கணியன் பூங்குன்றனார்

# English

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some reflections on past agricultural development in Vavuniya District

BY

**MANICKA IDAIKADAR**

former G. A., Vavuniya

It is quite fitting for me to contribute an article on the above subject for the Pandara Vanniyan volume on the occasion of the unveiling of the statue of this great Vanni hero.

It was in the year 1948 when I was A. G. A. Badulla I was appointed whether I would consider going to Vavuniya as A. G. A. (now G. A.) as the M. P. (Mr. C. Suntheralingam) required an energetic Civil Servant who would go all out to restore the many irrigation tanks, open new Roads to the farm hundred odd villages and give new life to a waning community. The challenge was accepted and I went there in May 1948.

It naturally took some time to know the district's problems so as to address one's mind to their solutions. It was then I visited Puthukulam village. There a respectable farmer Nagamuttu (I understand he is alive) said very crisply at the village meeting: "Our problem is simply this. When the dhoby comes home we give him paddy for his services. When the barber visits we give him also paddy, when the children need clothes and books we sell some of the paddy and at the end of all these, we haven't sufficient paddy for our consumption".

I got the message I started thinking on lines of development where the people could keep most of their paddy for their consumption and look for cash elsewhere, from other avenues such as from cash crops or from cottage industries.

It was during this period of thinking and looking around for a solution, I ran into a couple of farmers from the hill country who were cultivating some cash crops with lift irrigation within Vavuniya town limits. When I inquired about their cultivation they said if wells are constructed not far from the edge of the tank at full supply level (அலைகரை) they could depend on well water for cultivation, at least for a few months after the rainy season (January to March) They were then cultivating small extents of paddy, onions, chillies and vegetables from well water lifted with the aid of bullocks.

This knowledge was sufficient for a start. Getting the message to the people takes time. Some modest beginnings were made for constructing wells for highland cultivation.

With able assistance from my good friends Mr. S. Arumugam then Divisional Irrigation Engineer and Mr. S. Kanagaratnam then Divisional Agricultural Officer some broad agricultural developments plans were drawn for promoting paddy and highland cultivation namely:

(1) Improvement to existing tanks for providing additional water for cultivation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) Restoring old tanks.

(3) Encouraging construction of large wells for lift irrigation.

(4) Alienating government lands for paddy and highland cultivation.

(5) Providing the necessary infra structure such as Roadways, Stores etc. for agricultural and other purposes.

A Unique piece of work was done by preparing a complete list of all irrigation works to be restored and those to be improved with many details. The list was a model and for a couple of decades or more served the district without fresh investigations. The minor works were improved under the supervision of Cultivation Officers who were brought under the technical control of the D. I. E. There was no restriction in the release of the needed funds from Colombo and within a couple of years about 70 works received benefit from the minor irrigation funds. The major tanks were handled by the D. I. E. with great skill and speed.

Immediate more use in the area under paddy was bought about for Maha 1948 by adding 5 acres under each tank beyond the then existing cultivation. The jungle, if any, in this additional land was cleared earlier mainly from relief works. This simple process gave an additional 2,000 acres to the then existting 25,000 acres under paddy. Measuring and marking the land were done by the Village Headmen on the rough and ready method that 70 yards by 70 yards gave about an acre and 140 yards by 140 yards gave 4 acres. Subsequently the Survey Department was requested to survey the lands for proper alienation.

Land Kachcheries were held with great speed and virtually on a contineuous basis. For quicker results, some lands were given on temporary basis pending regularising them. There were some of the short cuts adopted to make a slow moving government machinery to speed up action.

A Subsidy scheme for constructing wells was started and some progress was made Greater progress was made later when the writer as Director of Food Production (Agrarion Services) formulated. a proper scheme of well subsidy for highland cultivation for the whole Island. As time went on, larger wells were sunk to meet the demand for more water.

Full use of relief works was made for earthwork as tank bunds and for opening new village roads and widening existing roads. No other district made such good use of relief works as Vavuniya in 1948–49

All these efforts could be discribed as a major break through after Independance on the agricultural front. Assured water supply, more water, more land for cultivation, construction of wells, providing some of the infra structure, a willing field service to provide technical assistance and above all the confidence given to the people that they were not a neglected lot could be mentioned as the **first phase** in Vauvniya agricultural development.

The 1958 riots and aftermath made many people living in the South consider taking lands in the District. Many took lands, however all did not succeed. The few who succeeded added strength to highland cultivation. Onions and chillies by now have become established in the district. By early sixties groundnut found its way among the crops cultivated on the highland. Pulses were gradually added. And today Vavuniya holds third place in groundnut cultivation among all districts of the Island; chillie cultivation holds the second place and red onions a high place surpassed only by Jaffna

In this decade lift irrigation with animal power was gradually replaced by pumps and now only pumps are in use. Perhaps other sources of power would have to be considered for the future in view of today's high prices of fuel.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is not out of place to mention that in promoting subsidiary crops. Muttu-Iyan-Kaddu Scheme played some part. This was the first scheme in the Island's recent history that when a tank was restored, its water was allowed for purposes other than for paddy cultivation. It was here that people from the peninsula came in reasonable members to do that type of cultivation specialized in the peninsula. When the performance was repeated in Muttu-Iyan-Kaddu. the Vanni people realized that they could themselves do this cultivation in their own lands equally. Mr. S. Kanagaratnam as Project Manager (a former Deputy Director of Agriculture) did yeoman service which the writer had occasion to witness in 1968 when he visited the scheme.

Though subsidiary food crops were gaining ground, paddy which is the most portant crop of the Vanni was getting a boast from successive governmentsand particularly under the Premiership of Dudley Senanayake (1965—1970). The average yield of paddy of about 25 bushels per acre in the early fifties had almost doubled in a quarter century after independence.

These achievements could be considered as the **second phase** of agricultural development of the district. These achievements are further treasures in the extents and yield rates of paddy, successful cultivation of subsidiary crops and way of life accomodating other cultivation besides the traditional paddy only cultivation.

What is the **next phase** in Vavuniya's agricultural development?

Our first thoughts go to paddy cultivation. We have a long way to go. The districts average yield is generally below the island's average. It holds a middle place among the 24 districts. There may be good reasons why thi is so. It is useful to know them equally we have to overcome them. It is here that agricultural researchers, extension officers and paddy farmers should get together to find the remedies. Should not we give this our first priority?

Next we have to push ahead with minor crops. Sri Lanka has a long way to go in this cultivation and Vavuniya can play its part The protein content of our food is below standared. Pulses could come to the rescue at least in part. This district has shown that pulses can be grown successfully. Let us go ahead.

I regularly meet in Kuala Lumpur a relation of mine, an expert on goats, working in the Malaysia's agricultural research institute. He has visited Vavuniya District. He considers it a very suitable district for goat rearing. I am sure agricultural planners in Sri Lanka would not have missed this point. Perhaps this activity could be considered seriously, if it has not already been done.

In America, it is started, that for one farmer who produces food directly, 2 others are needed in other agricultural and food services such as transportation, processing, storage etc. before reaching the food consumer. Perhaps 2 may not be the correct number for us; it is possibly one. On this basis we have some scope for activities related to agriculture after the producer stage. (I am loathe to use agro-industries as it may be misleading in our context). True there are rice mills and pulling plants in the district. May be there is scope for activities beyond these.

With so many specialists in agricultural planning, I am sure there are many other activities to be added for the future. These activities naturally have to be funded and executed—also on a continuing basis.

"Arise, awake and stop not till the goal is reached" says Tagore. If Mahaveeran Pandara-Vanniyan were alive he will possibly repeat this to us.

**Foot note:**

*Vavuniya District used in this article mainly refers to the former geographical district before division to Mullaitivu and Vavuniya districts.*

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Two celebrated reservoirs of the Vanni

**S. ARUMUGAM**
Former Deputy Dir. of Irrigation

History records Pandara Vanniyan as a semi-independant Prince of the Vanni, who ruled the Mullaitivu Region with valour and courage. His name and fame is treasured by the Vanni folks and the unveiling of a statue of him is a fitting tribute.

Two celebrated water storage reservoirs had watered this region for agricultural development from ancient days. However they had fallen into disrepair and been abandoned for some years.

I recall my association in opening them up and revealing them for commissioning once again. **Muthu Iyan Kaddu Kulam off Oddichuddan.**

In the year 1949. when I was working in Vavuniya, having heard of an ancient reservoir lying abandoned in the jungle, an effort was set afoot to locate it. The question was put to a group of elders, who had assembled at my request at the office of the Revenue Officer, on a saturday afternoon. As a result of the discussion that ensued the quest for the ancient reservoir was successful. Proceeding into the jungle the remnants of the stupendous earthen embankment of the ancient Muthu Rayan Kaddu Kulam were discerned. There it was with a broken up spillway and damaged sluice structure. We also fouud the remnants of a place of worship on the hill top at the flank. The broken massive Adukku Kallu ancient was discovered about half a mile below. All these were reputed to have been erected originally during the Kulakkoddan's Vanni regime. A peculiar feature was that the tank had two large breaches of about equal size, which is not usual, for flood waters escaping through the first breach cannot head up again for breaching at a second place. A double breach is usually attributed to wilful damage rather than natural calamity. An ancient way of damaging a rival's tank bund has been to drive a herd of cattle across the bund into the tank and back again several times, this would cause damage at two places of equal magnitude.

Steps were taken to open up the place for commencing restoration work, which was completed by 1959. Today it is a major colonisation project working more than 6000 acres.

**Thannimurippu Kulam near Mullaitivu.**

This is a celebrated reservoir of very ancient antiquity. The Naga stone still found near the sluice seem to indicate eras when the Nagas occupied the northern parts of the Island. Thannimurippu was not its original dor ancient name.

The celebrated reservoir that impounded the flow of the nayaru would have been the source of life to the ancient settlement and township of Kuruntanur, below Kuruntan malai and would therfore justly called Kuruntan Kulam. However a small tank perpetuates this name today. The term Thannimurippu only indicates where the waters breached the tank bund.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Found abandoned and breached, the work was opened up in 1949. A special feature that was noticed was the portions of the tank bund had been built up at two different levels. The tank had therefore functioned with different water levels during different eras. The later era was satisfied with a smaller tank. Actually this tank had functioned during three separate eras.

Steps taken to restore the work resulted in its completion in 1959. The reservoir now waters about 4000 acres.

To conclude, I would add that development growth and well—being of the area would be our best contribution today, to the memory of this valiant Prince of the Vanni.

On a law carriage carrying a ball of 1½ lb weight fifty five stan of arms, twelve pikes, two swords, two creeses, one bayonet one barrel, and two baskets of ammunition. Sixteen houses in which Pandara had stored his possessions were burnt, and his people were dispersed in different directions in the jungle and eventually driven out of Vanni. The power of the vanni chiefs was finally and effectually extinquishred.

Manuel of the vanni Districts
By J· P. Lewis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Adangapattu and Pandaravanniyan

By Dr. S. V. PARARAJASINGHAM
Member D. D. C. Vavuniya

Kulasegaram Vairamuttu PANDARA VANNIYAN-The last ruler of VANNI had been a person dreaded by the Britishers in the early part of the ninteenth century this is clearly understood from the inscriptions appearing on a 'Stone-Manuscript found at Katchilaimadu, a Village about three miles from ODDUSUDDAN, where the Historical SIVAN temple is situated. The name KATCHILAIMADU, is in itself means 'Stone-Manuscript' and most probably this village had been named with reference to this 'Manuscript'. The words inscribed are:-

"HERE ABOUTS CAPTAIN VON DRIEBERG DEFEATED PANDARA - VANNIYA 31ST OCT. 1803'

From the above inscription it could be seen that the English inspite of their advancements in armaments were very much concerned about the determined resistance of Pandaravanniyan and his men who were merely handling traditional weapons. The word 'DEFEATED' inscribed on the inscript cannot have been used by the English Captain if he arrested or took into custody an ordinary ruler with the least resistance. A reasonable grounds in assuring that the word 'DEFEAT' which is normally used to win over a battle had been inscribed by the Captain VON DRIEBERG who was proud of having overpowered a native Vanniyan Leader who was fighting with determination to drive away the English who were trying to disrespect the subrulers in their own land of birth.

Even though there is not much documentary evidence or historical records about this Vinniyan Prince PANDARA-VANNIYAN; the elders in and around this village has much to say about this courageous prince. He had his palace at Pandaraikkulam, situated about four miles from Oddusuddan on the Oddusuddan-Nedunkerni Road. This Prince being a bachelor had a lover at 'KATHALIAR SAMMALANKULAM, a village about two miles from Oddusuddan on the same road. The word 'KATHALIAR' means sweat-heart' hence the village had been called with that adjective. The name of Pandaravanniyan's lover was 'KURUVICHCHY' Vannichchy. The sister of Pandaravanniyan was NALLANACHCHAN Vannichchy who was married to KUMARASINGHE Vanniyan eldest son of Nuwara-Vanniyan of Kandy. This prince Kumarasinghe Vanniyan was shot by the Britishers in a battle at Mullaitteevu KURUVICHCHY Vannichchy on hearing the defeat of Pandaravanniyan with Pandaravanniyan's sister Nallanachchan had eaten a poisonous 'YAM' called 'Karthigai-Kilangu' and committed suicide by lying on a raw coconut leaf thatched-called 'Pannadai' near a river called KURUVICHCHY ARU' crossing the Oddusuddan-Nedunkerni road . This acts of the princess' are in accordance to the traditional customs of royal females who terminate their lives as their partners are killed in battle.

The young Vanniyan prince Pandaravanniyan, though a sub-ruler had been a person with daring dispositon and grim determination as understood from the following statements appearing in the book 'Yalpana Saritham ( As quoted by C. S. book 'Yalpana Saritham (As quoted by C. S. Navaratnam) 'PANDARAVANNIYAN of Mullaiteevu was a courageous and Independant prince. On one occasion the Dutch authorities forced him to supply with 'DYE ROOTS which request he flatly refused to carry out''

ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The character and qualities of this youngster is in direct confirmity of the character and qualities attributed to the Vanniyan Tribe who are said to be bold and courageous body-guards of 'CHOLA' kings called 'VELAPPADAI; which leaders would commit suicide in case of their kings being killed in battle. It is probably because of the sincerity of these Vanniyans that the 'CHOLA kings gave pride of place in their kingdom. Because of this quality of these tribes the CHOLA kings appointed them Sub-rulers to territories to their kingdom to prevent warriors gaining easy access to the capital kingdom. These Vanniyan sub-rulers were strong and reliable defenders , who cannot be easily overpowered by opponents.

The Vanni territory lies in the land bounded by Anuradhapur on the south, Trincomalee on the East, Mullaiteevu on the North, Mannar on the west and Pachchilappalli on the North-west. This Territory was called 'ADANKAPPATTU' meaning 'UNCONTROLLABLE Territory as the inhabitants of this area Vehimently opposed to domination of any form but very cordial and sacrifycing to friends. The above presumption is justifiable as the following statements from the 'Manual of Vanni' shows;

It is characteristic of the spirit of this people that the Dutch met nowhere a more determined resistance than from one of the native princess Vannichchy Maria Sampatte ( Nallanachiyar of Panankamam)

The Vanni Rulers were very cordial and attended annual conferences of the kings in Jaffna when the Jaffna kingdom was ruled by native kings such as Pararaja-sekara Maharaja (Singhai Ariyan), Chempakaperumal (Sappumal) and Sangiliyan a these kings respected these Vanniyan rulers and gave them pride of place in their courts. When the Portuguese, Dutch and the Britishers were adopting similar form of administration like the native kings, and summoned them for annual conferences called 'Durbar' and to pay Tribute, these Vanniyan rulers totally ignored and refrained from attending these conferences. This is substantiated from the following statements by a dutch Governor named THOMAS VAN RHEE;

"THE VANNI RULERS WERE STANDING WITH ONE FOOT ON THE COMPANY'S LAND AND THE OTHER FOOT ON THE KINGS TERRITORY, THEY WERE A CONTANT IRRITATION TO THE DUTCH AS THEY HAD BEEN TO THE PORTUGESE: THE CHIEFS WOULD NOT OFTEN PAY THEIR ANNUAL TRIBUTE OF ELEPHANTS AND THEIR LAND RENTS AND SOME OFTEN WOULD NOT APPEAR AT THE DURBAR WHEN THEY WERE SUMMONED BY GOVERNORS".

Two of the powerful rulers of Vanni who totally ignored the foreigners were KAILAIVANNIYAN of Panankamam and PANDARAVANNIYAN of Karunavalpattu-Mullaiwalai. Pandaravanniyan not only revolted against the English, but he had sent his men to strengthening the Kandiyan Army which defeated the English army sent by Governor NORTH. This had infuriarated the Britishers who sent a detachment of Army lead by Captain VON DRIEBERG on 25th August 1803 which was met with force by Pandaravanniyan, who in one attack had slain SIXTY British soldiers and drove them up to Mullaiteevu from there the Britishers escaped by sea to Jaffna in boats'.

On a subsequent occasion THREE Army detachments were sent one from Trincomallee headed by Captain EDWARD MADGE. Another from Jaffna lead by Leut. John JEWELL and a Third lead by Captain VON. DRIEGERG from Mannar with the connivance of Kakkai-vanniyan of Karukkaddu -Moolai near Mankulam suprised Pandaravanniyan at KATCHILAIMADU on 31st Oct. 1803 and defeated him after a sword-fight.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நன்றிகள்

இம்மலருக்குப் பொருத்தமான முறையில் அட்டைப்படம் வரைந்து தந்த ஓவியர் ரமணி அவர்களுக்கும், "புளொக்" தயாரித்துத் தந்த கொழும்பு ஸ்ருடியோ வினருக்கும் எமது நன்றிகள்.

இம்மலரினை அச்சிட்டுத் தருவதில் பெரும் அக்கறையும், ஆர்வமுங் கொண்டு செயல்புரிந்த புனித வளன் அச்சக நிர்வாகத்தினர், ஊழியர்களுக்கும் என்றும் எமது நன்றிகள்.

ஆ — ர்.

ஆக்கங்கள் அனைத்திற்கும்
ஆக்கியோரே பொறுப்பாவார்.

ஆ-ர்.

ARCHIVES
UNIVERSITY OF JAFFNA LIBRARY

அச்சிட்டோர் :
புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்

University of Jaffna
246021
Library
246021
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org